வட மாநிலங்களில் தமிழர்

ஆய்வு அறிக்கை

ஆசிரியர்

'சோமலெ'

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர்

ISBN : 81—7090—102—2

தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு : 85

திருவள்ளுவர் ஆண்டு 2019 பங்குனி : மார்ச் 1988

நூல் : வட மாநிலங்களில் தமிழர் ஆய்வு அறிக்கை

ஆசிரியர் : சோமலெ

விலை : உரூ. 25/-

பதிப்பு : முதற்பதிப்பு

அச்சு : அருட்பா அச்சகம்,
மதுரை - 10.

பதிப்புரை

தமிழ்ப் பல்கலைக் கழகம் மேற்கொள்ளும் ஆய்வுகள் பல துறையின; அவற்றுள்ளும் பல முனைகள் உள. தமிழ்க் குமுகாயம் பற்றிய பல்வகைக் கருத்துக்களில் வேற்று நிலத்தில் நிலையான கால்கொண்ட அல்லது அவ்வப்போதைய வாழ்வை மேற்கொண்ட கருத்துக்கள் ஆராயப்பட வேண்டியவை. இவ்வாய்வு தமிழ் மக்களுக்குச் செய்தியை அறிவிப்பதோடுமட்டுமன்றித் தம் இனத்தைப் பற்றிய உணர்வைக் கொள்ளவும் தமக்கு வேற்றுநில வாழ்வு அமையும்போது துணையாகவும் பயன்படும்.

இவ்வகையில் 'தமிழர் வாழும் அண்டை நாடுகளில் தமிழ்க் கல்வி' என்னும் தமிழ் நூலும் 'Dravidian Influence in Thai Culture' என்னும் ஆங்கில நூலும் தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்புகளாக வெளிவந்துள்ளன. 'Indians in South Africa' என வெளிவந்துள்ள ஆங்கில நூலும் ஆய்வளவில் மேற்கண்ட நூல்களோடு தொடர்புடையது. 'கேரளத் தமிழர்களும் அவர்களின் சிக்கல்களும்' என்னும் நூலும் பதிப்பில் உள்ளது.

'வட மாநிலங்களில் தமிழர் ஆய்வு அறிக்கை' என்னும் இந் நூல் விளக்கமாகவும் ஒழுங்காகவும் களஆய்வால் தொகுக்கப்பட்டது. ஆசிரியர் 'சோமலெ' அவர்கள் உலகம் சுற்றிய தமிழர். தமிழன் உணர்வோடு உலகம் சுற்றியவர். அவரது நூல்கள் சிறந்த முத்திரை நூல்கள். வடமாநிலங்களில் இக் களஆய்வை மேற்கொண்ட அவர் முறையாகவும் திறம்படவும் நிறைவேற்றியுள்ளார்.

இதனைப் பதிப்பிக்க, துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கனார் பணித்தார்கள். அவர்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலை நுண்ணாய்வு செய்து உதவிய தஞ்சை சரபோசிக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் க. இரத்தினம் அவர்களுக்கு நன்றிக் கடப்பாடுடையோம்.

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 1
25 - 2 - 88

கோவை இளஞ்சேரன்
துணை இயக்குநர்
பதிப்புத்துறை

பொருளடக்கம்

வட மாநிலங்களில் தமிழர்
ஆய்வு அறிக்கை

1. முன்னுரை

பணி

இந்தியாவின் வட பகுதிகளில் வாழும் பெருந் தொகையினரான தமிழருடைய வாழ்க்கை முறை, சமூகம், பண்பாட்டுச் சூழல்கள், அவர்கள் எந்த அளவுக்குத் தமிழ் மொழியுடனும் தமிழ் நாட்டுடனும் தொடர்பு கொண்டிருக்கின்றனர் என்பவற்றை நேரில் பார்த்து அறிக்கை வழங்குமாறு, தமிழ்ப்பல்கலைக் கழகம் எனக்குப் பணித்தது. மேற்கண்ட பணியின் விளைவாக இந்த அறிக்கை வழங்கப் பெறுகிறது.

சுற்றுப்பயணம்

சூன் 1 முதல் ஆகஸ்டு 16 வரை நான் கீழ்க்கண்ட பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்தேன்.

1. மராட்டிய மாநிலம் (மகாராஷ்டிரா)
2. மத்தியப் பிரதேசம்
3. குஜராத்
4. இராஜஸ்தான்
5. அரியானா
6. பஞ்சாப்

7. சண்டிகர்
8. தில்லி

மேலே சொன்ன மாநிலங்களிலும் மத்திய ஆட்சிப் பகுதிகளிலும் வாழும் தமிழரைப் பற்றிய அறிக்கை இது.

மக்கள் தொகை

ஒவ்வொரு மாநிலத்திலும் வாழும் தமிழர் தொகை இவ்வளவு என்று 1971-ஆம் ஆண்டில் எடுக்கப்பெற்ற மக்கள் தொகைக் கணிப்பு வெளியீடுகளிலிருந்து புள்ளி விவரங்களை இந்த அறிக்கையின் இணைப்பாகக் கொடுத்திருக்கிறேன். 1981 ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகைக் கணிப்பு வெளியீடுகள் இன்னும் அச்சாகவில்லை.

மேலும், அந்த அறிக்கையிலோ, தேர்தல்களுக்கான வாக்காளர்பட்டியல்களிலோ தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வடமாநிலத்தமிழரில் ஒரு பகுதியினர் முயலுவதும் இல்லை; விரும்புவதும் இல்லை. அவர்கள் செய்யும் வேலைகளும் வாழ்க்கைச் சூழலும் அத்தகையன.

கடந்த ஐந்து, ஆறு ஆண்டுகளுக்குள் பெரு நகரங்களில் மக்கள் தொகை, மிக விரைந்து வளர்ந்த வண்ணமாக உள்ளது. இந்த மககள் பெருக்கத்தில் தமிழரின் ஈவு மிகுதி, என்பதை வட மாநிலங்களின் பெருநகரங்களில் பத்து மணித்துளிகள் நடந்து சென்றால் கூட எவரும் எளிதில் ஏற்றுக் கொள்வர்.

இந்த அறிக்கை 1983-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் இருந்த நிலையைத் தெரிவிக்கிறது. அவ்வப்பகுதியில் தமிழர் தலைவராக நெடுங்காலமாக இருந்து பட்டறிவு உள்ளவர்கள்கூறும் தொகைகளைக் கூட்டிப்பார்த்ததில், வடமாநிலங்களில்மொத்தம்35 இலட்சம் தமிழர் வாழ்வதாகக் கருதுகிறேன். கோவா, அந்தமான், நிகோபார், தென்மாநிலங்கள் ஆகியவை நீங்கலாக ஏனைய மாநிலங்களில் வாழும் தமிழர் அனைவரும் இதில் அடங்குவர்.

இந்த 35 இலட்சத்தில் ஏறத்தாழ சரிபாதிப் பேர் மராட்டிய மாநிலத்தில் வாழ்கின்றனர். இதில் பம்பாய் நகர்த் தமிழர்கள் மட்டும் 12 இலட்சம் ஆவர். ஏனைய மாநிலங்களுக்குரிய தொகைகள் வருமாறு :

மத்தியப் பிரதேசம்	—	1, 10,000
குஜராத்	—	1, 50,000
இராஜஸ்தான்	—	30,000
அரியானா	—	10,000

பஞ்சாப்	—	20,000
சண்டிகர்	—	10,000
தில்லி	—	3,00,000

இருக்கும் இடங்கள்

மாநிலத் தலைநகரங்களிலும் தொழிற்சாலைகள் மிகுந்த நகரங்களிலும் தமிழர் பெருந் தொகையாக உள்ளனர். மாவட்டத் தலைநகர்களிலும் சிற்றூர்களிலும் வாழ்பவர் தொகை மிகவும் குறைவு. எல்லா மாநிலங்களிலுமே கிராமங்களின் உயிர்த் துடிப்பு நின்று விட்டது.

குடியேறிய காலம்

200 ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டை விட்டு வெளியேறிய சில குடும்பங்கள், வட மாநிலங்களில் வாழ்கிறார்கள். அவர்களுடைய வழித்தோன்றல்களின் தமிழ் அறிவு சொல்லுந்தரமன்று. நெடுந்தொலைவு சென்று பொருளீட்ட வேண்டும் என்ற ஆர்வத்தால் இவர்கள் உந்தப்பட்டுத் தமிழ்நாட்டை விட்டுப் புறப்பட்டவர்கள் என்று தெரிகிறது.

இரண்டாவது கூட்டத்தார் நூறு ஆண்டுகளுக்கு முன் இந்த மாநிலங்களுக்கு வந்த சில ஆயிரம் தமிழர், தமிழ்நாட்டில் தாது வருடப் பஞ்சம் ஏற்பட்ட போது அதனால் பாதிக்கப்பட்டவர்களில் சிலர், வடமாநிலங்களுக்கு வந்து குறிப்பிட்ட இரண்டொரு தொழில்களில் மட்டும் ஈடுபடலாயினர்.

மூன்றாவது கூட்டமாக வந்தவர்கள், அரசுத் துறைகளிலும் தனியார் நிறுவனங்களிலும் சுருக்கெழுத்தாளராகவும் அலுவலகப் பணியாளராகவும் வேலை தேடி வந்த, படித்த இளைஞர்கள். தமிழ்நாட்டில் நீதிக்கட்சியினர் அமல் செய்த சாதிவாரியான அரசு ஊழியர் நியமன முறையால் (Communal G.O.) பாதிக்கப் பட்ட பிராமணர்களையே நாம் இவ்வாறு கூறுகிறோம்.

நான்காவது கூட்டத்தார், இரண்டாம் உலகப்போரால் இந்திய அரசின் துறைகள் விரிந்த போது ஏற்பட்ட புதிய வேலை வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள வந்தவர்கள். சான்று : Defence Accounts Department.

ஐந்தாவது கூட்டத்தார், இலங்கையில் இருந்தும் பர்மாவில் இருந்தும் வந்த அகதிகள்; அல்லது அந்த நாடுகளில் அரசியல்

மாறுதல்களால் தங்கள் வருவாய் பாதிக்கப்பட்ட சிறு வணிகர்களும் தொழிலாளரும்.

ஆறாவது கூட்டத்தார், தொழில் நுட்ப அறிவு பெற்ற தமிழர். தங்கள் படிப்புக்கு ஏற்ற வேலைகள் தமிழ் நாட்டில் கிடைக்காமல்போனதால் அணு ஆராய்ச்சித்துறை, TATA Institute of Fundamental Research போன்ற ஏராளமான நிறுவனங்களில் வேலை தேடி வந்தவர்கள். தமிழ்நாட்டில் பொறியியல் போன்ற படிப்புப் படிக்க இடம் கிடைக்காமல் பிலாயியிலுள்ள பிர்லா கல்விக் கூட்டத்திலும் BITS - Birla Institute of Technology & Science) மற்றும் வடமாநிலங்களில் உள்ள ஐ.ஐ டி மண்டலப் பொறியியல் கல்லூரிகள், மாநில அரசு, தனியார் துறை ஆகியவை நடத்தும் பல்வேறு கல்லூரிகளிலும் சேர்ந்து பட்டம் பெற்ற பிறகு இங்கேயே தங்கிவிட்டவர்களும் உண்டு

ஏழாவது கூட்டத்தார், கடந்த பத்து ஆண்டுகளில் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் பருவமழை தவறியதால் வட மாநிலங்களின் வளமான பகுதிகளுக்குக் குடும்பத்துடன் குடியேறி யிருப்பவர்கள். இவர்கள் எவ்வித் தொழிற்பயிற்சியோ படிப்போ இல்லாதவர்கள். சமுதாயத்தின் அடிமட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

எட்டாவது கூட்டத்தார், பெட்ரோல் உற்பத்தியில் ஏற்றம் பெற்றுச்செல்வம் கொழிக்கும்மத்தியக்கிழக்கு நாடுகளுக்குச் சென்று திடீரென்று பணக்காரர் ஆகிவிட நினைத்தவர்கள். இவர்களில் இருவகையினர் உள்ளனர். முதலாவது வகையினர், அந்த நாடுகளுக்குச் சென்று பொருத்தமானவேலை கிடைக்காமல், தரகர்களால் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து பம்பாய்க்குத்திரும்பியவர்கள். இரண்டாவது வகையினர், அந்த நாடுகளுக்குச் செல்ல வேண்டுமென்ற நைப்பாசையால் உடைமைகள் அனைத்தையும் விற்றுக் காசாக்கிக் கொண்டு பம்பாய்க்கு வந்து, பலமாதங்கள் தங்கி, கடவுச் சீட்டு (Passport) பெறவும் அந்த நாடுகளில் வேலை தேடவும் தரகர்களை அணுகி, கைப்பொருள் அனைத்தையும் இழந்தவர்கள். இந்த இரு வகையினரும் தங்களுடைய அவல நிலையால் வெட்கப்பட்டு, தங்கள் தகுதிக்குப் பொருந்தாத வேலைகளைச் செய்து கொண்டு, குடும்பத்தாருடன் எவ்விதத் தொடர்பும் இன்றி, 'கட்டுண்டோம்; பொறுத்திருப்போம்; காலம் மாறும்', என்கிற நம்பிக்கையில் சில ஆண்டுகளாகப் பம்பாயில் வாழ்ந்து வருபவர்கள.

மற்றும் ஒரு கூட்டத்தாரைக் குறிப்பிடலாம். இந்திய அரசில் புதிய துறைகள் ஏற்பட்டும், பழைய துறைகள் விரிந்தும்

வருவதாலும், அரசுத் தொழில்கள் (Public Sector) பெருகி வருவதாலும், பாங்குகள் காப்பீட்டுக் கழகங்கள் ஆகியவை நாட்டுடைமை ஆக்கப் பட்டிருப்பதாலும் ஒருவகையில் தேசிய ஒருமைப்பாடு பரவி வருகிறது. எந்த மாநிலத்திலும் இந்தியாவின் ஏனைய மாநிலங்களைச் சேர்ந்த மக்களைப் பெருந் தொகையினராகக் காண முடிகிறது. தமிழர், பிற மாநிலங்களிலும் வட மாநிலத்தார் தமிழ் நாட்டிலும் வாழும் பின்னணி இதுவே.

மாவட்டப் பகுப்பு

நீலகிரி மாவட்டம் தவிர, தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களையும் சேர்ந்த மக்களை, வடமாநிலங்களில் காணலாம். கோவை, பெரியார் மாவட்டத்தாரை விரல் விட்டு எண்ணி விடலாம.

மாவட்ட வாரியாகப் பார்த்தால் திருநெல்வேலி மாவட்டத்தார் முதலிடம் வகிக்கின்றனர். சில வட்டங்களில் வறட்சி, கடலோரப் பகுதிகளிலிருந்து இலங்கைக்குப் போய் வந்தவர்களுக்கு அந்த வாய்ப்பு அடைப்பட்டது, முயற்சி உடையவராக இருத்தல் ஆகிய காரணங்களால் இவர்கள் உந்தப்பட்டிருக்கலாம்.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ஒவ்வொரு சிற்றூருக்கும் பம்பாயில் சங்கங்கள் உள்ளன. இதைப்பற்றித் தனிக் கட்டுரை, இந்த அறிக்கையில் அமையும்.

எண்ணிக்கையில் அடுத்தபடியாக இருப்பவர்கள். சேலம் மாவட்டத்தினர். தருமபுரி மாவட்டத்தினரும் தங்களைச் சேலம் மாவட்டத்தினர் என்றுதான் சொல்லிக் கொள்கிறார்கள். இவர்கள் பெங்களூர் வழியாக முதலில் பூனாவுக்கும் பிறகு பம்பாய்க்கும் போய்ச் சேர்ந்தவர்கள். இலங்கைக்குச் சென்று திரும்பியவர்களும் சிலர் உள்ளனர். தொடர்ந்து மழை இல்லாத பல பகுதிகளும் இந்த மாவட்டங்களில் இருக்கின்றன.

கன்னியாகுமரி மாவட்டம் ஏற்படுமுன் அப்பகுதியினர் தங்கள் மாநிலத் தலைநகரான திருவனந்தபுரத்திற்கு ஒருமணி நேரத்தில் சென்று, வேண்டும் செயல்களை எளிதில் முடித்துக் கொண்டனர். தமிழ்நாட்டுடன் அப்பகுதி இணைக்கப்பட்ட பிறகு நெடுந்தொலைவில் உள்ள தலைநகருக்குச் செல்லவும் புதிய சூழ்நிலையில் அணுகித் தங்கள் பிரச்சினைகளை ஆட்சியாளர்களுக்குப் புரியவைத்து அவற்றிற்குத் தீர்வு காணவும் நேர்ந்தது மக்கள் நெருக்கம், படிப்பு மிகுதி ஆகிய காரணங்களும் சேர்ந்துள்ளன. மாவட்டத்தின் மக்கள் தொகை ஈவுப்படி பார்த்தால்

வட மாநிலங்களில் இவர்கள் தொகை கணிசமானது. தூய்மைக் குறைவான தொழில்களில் இம்மாவட்டத்தார் ஈடுபடுவதில்லை.

புதுச்சேரி மாநிலத் தமிழர், குறிப்பாக ஆலைத்தொழிலில் அகமதாபாதிலும் பிற இடங்களில் அங்குமிங்குமாகவும் பணி செய்கின்றனர்.

ஆடவர் — பெண்டிர்

வட மாநிலங்களில் வேலை பார்க்கும் தமிழர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் குடும்பத்துடன் உள்ளனர். ஏனையோரில் சிலர், குடும்பத்தார் தொடர்ந்து தமிழ்நாட்டில் இருக்க, தாங்கள் மட்டும் வட மாநிலங்களில்வாழ்கின்றனர். பிறர், திருமணம் ஆகாதவர்கள்.

வட மாநிலங்களில் அகவிலை மிகுதி. வாடகைக்கு வீடு கிடைப்பதும் அரிதாக உள்ளது. இக்காரணங்கள் தவிர, தமிழ் நாட்டிலுள்ள தங்கள் நிலங்கள் முதலியவற்றைக் கவனித்துக் கொள்ளச் சொந்த ஊரில யாராவது இருக்க வேண்டிய இன்றியமையாமை குறிப்பிடத்தக்கது.

வடமாநிலத் தமிழரில் வேலை பார்ப்பவரில் 75% ஆடவர், பெண்டிர் 25% மட்டுமே என்பதை இப்போதைய நிலைமையாகக் குத்துமதிப்பாகக் கூறலாம். போகப்போக இந்த ஈவு மாறும். அங்கேயே பிறந்த தமிழ்ப் பெண்கள் அனைவரும் பகுதிநேர வேலை (Part-Time Jobs) பார்க்கத் தொடங்கி விட்டனர்.

முப்படைகளில் பணியாற்றுவோரில், உயர் அலுவலர் மட்டுமே குடும்பத்துடன் உள்ளனர்.

வெளியேறிய சூழ்நிலை

தமிழர் சிலர், தமிழ்நாட்டை விட்டு வெளியேறிய பின்னணி சுவையானது.

கிராமப் புறங்களில் சாதி உணர்வு மிகுதியாகி ஒட்டுமொத்தமாக ஒரு சாதியார் அந்த ஊர்களைக் காலி செய்தும் உள்ளனர். தாழ்த்தப்பட்ட மக்கள் சில நூறாயிரம் பேர் பம்பாயில் இருப்பதற்குக் காரணம் இதுவே.

தனிப்பட்ட ஒருவர் தகாச் செயல்களில் ஈடுபட்டு ஊர் மக்களாலோ, சாதிக் கூட்டங்களிலோ தள்ளி வைக்கப்பட்டு, அந்த அவமானம் தாங்காமல் வெளி மாநிலங்களுக்குச் சென்றவர் ஒரு நூறு பேரையாவது நான் சந்தித்து இருப்பேன். அவர்கள் வாழ்வில்

புதுத்திருப்பங்கள் ஏற்பட்டு அனைத்து நலன்களும் பெற்றுத் திகழ்கின்றனர். அவர்களைப் பொறுத்தவரை 'நடந்தது எல்லாம் நன்மைக்கே'.

குடும்பத்துப் பாகப்பிரிவினைகளில் ஏமாற்றப்பட்டவர்களும் உள்ளனர். குடும்பத்தின் தலைவர் குடிகாரராக அல்லது ஒழுக்கக் கேடு உள்ளவராக இருந்ததால், உறவினர் கூடி அவருடைய சொத்தை நெருங்கிய பங்காளி ஒருவர் பெயரால் எழுதி வைத்தனர். அந்தப்பெருமகனார்அதையும்சேர்த்துவிழுங்கிய நிகழ்ச்சிகள்சிலவற்றையும்கேள்விப்பட்டேன். இந்தச் சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட புதியதலைமுறையினர் வேறுவழியின்றி உடுத்திய ஆடையுடன் கணவனும் மனைவியுமாக அல்லற்பட்டுத்தமிழ்நாட்டைவிட்டுப்புறப்பட்டனர். இத்தகைய சூழ்நிலையில் வெளியேறிய 10/15 குடும்பத்தார் இப்போதுசெல்வத்தின் மேல்முகட்டில் உள்ளனர். அமெரிக்காவில் 'இளைஞன் மேலை நாட்டை நாடு' ('Go west young Man') என்று 19-ஆம் நூற்றாண்டில்வழங்கப் பெற்ற அறிவுரையை ஏற்றவர்கள் கலிபோர்னியா, டெக்ஸாஸ், கான்சாஸ் போன்ற மாநிலங்களுக்குச் சென்று குபேரரான குடும்பங்களுக்கும் இவர்களின் வாழ்க்கைப் பின்னணிக்கும் ஒற்றுமை உண்டு.

தொழிலும் வேலையும்

தமிழ் நாட்டிற்கு வந்துள்ள வட மாநிலத்தாரில் 16-ஆம் நூற்றாண்டில் வந்த சௌராட்டிரா மற்றும் மராட்டிய ஆட்சியில்வந்த மராட்டியர் ஆகியோரைத் தவிர 20 ஆம்நூற்றாண்டில் குறிப்பாகநாட்டு உரிமைபெற்றபிறகு தமிழ் நாட்டுக்கு வந்திருக்கும் வடமாநிலத்தாரை எடுத்துக் கொள்வோம். பஞ்சாப், குஜராத், இராஜஸ்தான் மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்திருப்பவர்கள் பெரும்பாலும் தொழில் அதிபர் அல்லது சொந்த வணிகராக உள்ளனர். இதற்குமுற்றிலும் மாறுபட்டது வடமாநிலத் தமிழரின் நிலை.

(அ) வணிகர்

நான் சென்ற மாநிலங்களில் தொழிற்சாலை, நடத்தும் தமிழர் ஐம்பது பேர் கூட இல்லை. இந்த அறிக்கையின் இறுதியில் ஓர்அட்டவணை கொடுப்பேன்.

வணிகர்களாக இருப்பவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள், இராமநாதபுரம் - திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த நாடார் சமூகத்தார். இவர்களுடைய கடினமான உழைப்பும் செயல் முறைகளும் அறிந்து பிற மாநிலத்தார் போற்றி வருவதை விரிவாகக் கூறுவேன்.

கட்டுமான வேலைகளை நிறைவேற்ற ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பவரின் கீழ், துணை ஒப்பந்தக்காரர்களாகத் (Sub-Contractors) தமிழர் சிலர் பொறுப்பேற்றுத் தமிழ்த் தொழிலாளர்களைக் கொண்டு வந்து சேர்க்கின்றனர்.

(ஆ) அலுவலகப் பணி

அரசு அலுவலகங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் எழுத்து வேலைகளை (White Collar Job) ஏராளமான தமிழர் பார்க்கின்றனர்.

இந்தப் பணிக்கு முதலில் சென்று, வழிகாட்டியவர்கள் பிராமணர் ஆவர். இவர்கள் திறமையுடன் வேலை செய்து நற்பெயர் ஈட்டியதால் இப்போது எந்தச் சாதியைச் சேர்ந்த தமிழருக்கும் இந்த வேலைகள் எளிதில் கிடைக்கின்றன.

(இ) தட்டச்சர்

அலுவலகப் பணியில் தமிழ்ப் பிராமணர், தட்டச்சராகவும் சுருக்கெழுத்தாளராகவும்தான் முதலில் நுழைந்தனர். வியக்கத் தக்க முறையில் அவர்கள் தங்கள் வேலைகளைச் செய்து தமிழ் நாட்டுக்குப்புகழும் பெருமையும் தேடியிருக்கின்றனர். படிப்படியாக முன்னேறி, இப்போது கோடிக்கணக்கான உருவா அளவிற்கு வரவு செலவு செய்யும் தொழில் நிறுவனங்களின் தலைவர்களாக ஒப் பாரும் மிக்காரும் இன்றி விளங்கும் தமிழர் பத்துப் பேர் உள்ளனர். இவர்களுடைய வரலாறு 'FROM LOG CABIN TO WHITE HOUSE' என்ற ஆபிரகாம் லிங்கனின் கதையை நினைவூட்டும்

சுருக்கெழுத்து - தட்டச்சுப் பணியில் தமிழர் சிறந்து விளங்குவதற்குக் காரணங்கள் இரண்டு :

(1) தமிழ் மொழியின் அமைப்பு

(2) ஆங்கில மொழி அறிவு

தமிழ்மொழி, பாட்டாகவே அமைந்து தமிழர் வாழ்க்கை பாடல் மயமாக மட்டுமே இருந்து வந்திருக்கிறது. குழந்தை பிறந்ததும் தாலாட்டு, விளையாடும் போது ஊசற்பாட்டு, மணவறையில் நலுங்குப் பாட்டும் மங்கல வாழ்த்தும், நாற்று நடுவதற்குப் பாட்டு, நெல்குத்தப் பாட்டு, பிச்சை எடுக்கப் பாட்டு, இறைவனை வழிபடப் பாட்டு, படகு ஓட்டுவதற்குப் பாட்டு, அம்மை நோயை நீக்க மாரியம்மனுக்குப் பாட்டு — இவ்வாறெல்லாம் எக்கருத்தையும் சுருக்கமாகவும் எதுகை மோனையுடனும் பாட் டாக நம் முன்னோர் அமைத்தனர். நீதி நூல்கள், வாய்பாடு, எண்சுவடி ஆகியவற்றையும் மனப்பாடம் செய்வது, கேட்டதை

நினைவில் வைத்துக் கொள்வது ஆகிய திறமைகள் தமிழர் இரத்தத்தில் ஊறிவிட்டன. பிற மாநிலத்தவரைவிட தமிழர் தட்டெழுத்திலும் சுருக்கெழுத்திலும் சிறந்து விளங்குவதற்குக் காரணம் இதுவே.

தமிழ் மக்களின் ஆங்கிலக் கல்வித் தரமும் அவர்கள் மேற்கொள்ளும் அலுவலகப் பணிக்கு உறுதுணையாக இருக்கிறது. இதுகுறித்து 'மும்மொழிக் கொள்கை' என்ற தனிக்கட்டுரையில் கவனிக்கப்படும். தமிழ்நாட்டிலும் பிற மாநிலங்களிலும் தமிழ் மொழிஎவ்வாறு வளர்ந்தது என்ற பின்னணியையும் தெரிவிப்பேன்.

பம்பாயில தமிழ்ச் சுருக்கெழுத்தாளர் எவ்வாறு வேலையில் சேர்ந்தனர் என்பதை மட்டும் இந்த இடத்தில் சொல்வேன்.

தங்கள் நிறுவனங்களுக்குச் சுருக்கெழுத்தாளர் தேவைப்பட்ட அலுவலகங்கள் ஏற்கெனவே வேலை பார்த்த கிருஷ்ணசாமியையும் குப்புசாமியையும் வெங்கட்டராமனையும் இராமமூர்த்தியையும் அணுகி, அவரவர் உறவினர்களையெல்லாம் வேலையில் சேர்த்துக் கொண்டனர். ஆனால், தேவையை நிரப்பப் போதிய ஆள்கள கிடைக்கவில்லை.

தமிழர் (மதராசி) யாராவது கிடைத்தால் அவரைக் கொண்டு வரச் சொல்லி, பம்பாயிலுள்ள வணிக நிறுவனங்கள் 1935-இல் தரகர்களை நியமித்தன. அந்தத் தரகர்கள் 'விக்டோரியா டெர்மினஸ்' இரயில் நிலையத்தில் காத்திருந்து சென்னையிலிருந்து வரும் ஒவ்வொரு இரயிலையும் எதிர்பார்த்தனர். இரயிலிலிருந்து இறங்கிய 20 வயதுப் பையன் யாராக இருந்தாலும் அவனைக் கடத்திக் கொண்டு சென்று ஏதாவது ஓர் அலுவலகத்தில் தட்டச்சராக நியமித்து விட்டனர். இவ்வாறு வேலை பெற்றவர்கள் 5000 பேராவது இருக்கக்கூடும்என்றுகேள்விப்பட்டேன். அவர்கள்பெரும்பாலும், பம்பாய்க்குச் சென்ற பிறகே சுருக்கெழுத்துக் கற்றனர். தட்டச்சுப் பயிற்சி பெற்றதற்குச் சான்றிதழ் கேட்கும் பழக்கம் இன்று கூட வடமாநிலங்களில் தனியார் நிறுவனங்களில் இல்லை. ஒரு மணிநேரம்வேலைபார்க்கச் சொல்லுவார்கள்; அதுதான்சான்றிதழ்.

(ஈ) கணக்கர்

அலுவலகங்களிலும் தொழிற்சாலைகளிலும் தமிழர்தான் பெரும்பாலும் கணக்கராக இருந்து வந்திருக்கிறார்கள் 'கால்குலேட்டர்'களும் 'கம்ப்யூட்டர்'களும் அங்கிங்கெனாதபடி எங்கும் பரவிவிட்டதால், இனி இந்த வேலைகளுக்கு அவ்வளவாகத் தமிழர்கள் தேவைப்பட மாட்டார்கள்.

(உ) தொழிலாளர்

எல்லா வகையான தொழிற்சாலைகளிலும் தமிழர், தொழிலாளர்களாக இருந்து வருகின்றனர். சாலை போடுவது, பல மாடிக் கட்டடம் கட்டுவது, துறைமுகம் வானவூர்தி நிலையம், துப்புரவுத் தொழில் ஆகியவற்றிலும் இவர்களைக் காண்கிறோம். தமிழர் பார்க்காத தொழில் என்று ஒரு தொழிலையும் சொல்ல முடியாது.

பயிர் செய்து வாழ்பவர்களும் உள்ளனர்; இவர்கள் விதிவிலக்கு.

வடமாநிலங்களில் கல் உடைக்கும் பல்லாயிரக்கணக்கான தமிழரைப் பற்றித் தனிக்கட்டுரையில் கூறுவேன்.

கனமான வாகனங்களை ஓட்டுநர்களாக இருப்பவர்களின் நிலையையும் எடுத்துச் சொல்லுவேன்.

சுருக்கமாகச் சொன்னால், மாநில அரசின் தலைமைச் செயலர் தொடங்கி, நடுக் கடலில் செய்ய வேண்டிய ஆபத்தான தொழிலிலும மற்றும் அருவெறுக்கத்தக்க வேலையிலும் உள்ள தமிழரை நான் சந்திக்க நேர்ந்தது.

பிச்சைக்காரர்களுக்கும் குறைவில்லை. வெறுக்கத்தக்க செயல்களில் தமிழரை ஈடுபடுத்துவதையே தொழிலாகக் கொண்டு நம் மொழியாளரே இருப்பதையும் நான் கேள்விப்பட்டேன்.

சிவப்பு விளக்குப் பகுதிகளுக்கு நான் செல்லவில்லை.

வருவாய்

வட மாநிலத் தமிழரில் நிலையான மிகப் பெரிய வருவாய் உடையவர்கள் சில ஆயிரம் பேர் உள்ளனர். பாதிக்கு மேற்பட்டவர் நடுத்தர வர்க்கத்தாரே ஆவர்.

ஏழ்மை நிலையில் அல்லது சூழலில் வாழ்பவரும் உள்ளனர். இவர்கள் தோற்றம் இவ்வாறு இருப்பினும், தொடர்ந்து பெரும் பொருள் ஈட்டி வருபவர்கள் இவர்களில் சிலர் உண்டு.

அன்றாடம் கணவனும் மனைவியும் குழந்தைகளும் ஏதாவது ஒரு வேலை பார்த்து வயிறு வளர்க்க வேண்டிய தமிழர் பல்லாயிரக் கணக்கானவர்கள். இவர்களுக்கு நிலையான வேலை இல்லை. பெருமழை அல்லது வேறு காரணங்களால் சிலசமயம் இரண்டு மூன்று மாதங்கள் தொடர்ந்து வேலை இல்லாமல்போகும். ஆயினும் அந்த இழப்பை ஈடு செய்யும் வகையில் இவர்களுக்கு விரைவில் வேலையும்வருமானமும் கிடைத்து விடுகின்றன. இவர்கள் பம்பாய்,

தில்லி, சண்டிகரை விட்டுத் தமிழ்நாட்டுக்கு வராமல் அங்கேயே தங்கி, இடைக்கால இன்னல்களைச் சமாளித்து விடுகின்றனர்.

தமிழ்நாட்டில் நெருங்கிய உறவினர் இல்லாதோர் தங்கள் வருவாயைத் தாங்கள் வாழும் மாநிலத்திலேயே முதலீடு செய்கின்றனர். ஏனையோர் தங்கள் வருவாயின் பெரும் பகுதியைத் தமிழ் நாட்டுக்கு அனுப்பி, தங்கள் ஊரில் புதிதாக நிலம் வாங்கவும் வீடுகட்டவும் அந்தப் பணத்தைப் பயன்படுத்துகின்றனர். சென்னையின் புறநகர்ப் பகுதிகளில் வீடு கட்டிக் கொண்டிருப்பவர்களும் உள்ளனர்.

தமிழக அரசு அல்லது ஊராட்சி ஒன்றியங்கள், செய்ய வேண்டிய பல பணிகள் பெரும்பாலும் வடமாநிலத் தமிழர் கூட்டாக முயன்று வசூலித்து அனுப்பும் பணத்தைக் கொண்டு அல்லது மலர்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் விளம்பர வருவாய் வாயிலாகத் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றன. இதற்கான ஏராளமான சான்றுகளைக் காணும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

வீட்டுவசதி

வடமாநிலத் தமிழரில் நூற்றுக்கு ஐந்து பேர் மட்டுமே சொந்த வீடு, அதாவது ஃபிளாட் (அடுக்கு மாடி வீட்டின் தனிப் பகுதி) உடையவர். ஏனையோர் வாடகை வீடுகளில் குடியிருக்கின்றனர். அன்றாடத் தொழிலாளர்களாக இருப்பவர்கள் இரு நூறாயிரம் பேர், தாங்கள் வேலைபார்க்கும் இடங்களுக்குஅருகில் அரசின் புறம்போக்கு நிலத்தில் அல்லது சாலையோரத்தில் சொந்தக் குடிசை போட்டுக் கொண்டு வாழ்கின்றனர். எத்துணை முறை காவல் துறையினராலும் மாநகராட்சியினராலும் இந்தக் குடிசைகள் அப்புறப் படுத்தப்பட்ட போதிலும், இவர்கள் மீண்டும் மீண்டும் அந்த இடங்களிலேயே புதுக்குடிசைகள் போட்டு வருகின்றனர். 'இந்தியா எங்கள் நாடு; எங்களை அப்புறப்படுத்த யாருக்கும் உரிமையில்லை' என்பதை ஒவ்வொரு மாநிலத்திலும் இவர்கள் நிலைநாட்டி வருகின்றனர். வழக்குத் தொடரவும் அடிதடிக்கும் இவர்கள் அஞ்சுவதில்லை.

சேரிகளில் வாழும் தமிழர்களில் தாராவி வாழ்தமிழர், தனிக் கவனத்திற்கு உரியவர். உலகத்திலேயே பெரிய சேரி என்றும் மோசமான சுற்றுப்புறச் சூழல் உடையது என்றும் உலகவங்கி இதைக் குறிப்பிட்டுள்ளது. இந்தச் சேரியில் வாழும் தமிழரைப் பற்றித் தனிக் கட்டுரையில் கூறுவேன்.

வாடகை வீடுகள்

வாடகைக்குத் தங்கள் வீட்டை விடும் வடமாநிலத்தார் இயன்றவரை தமிழர்களையே குடிவைக்க விரும்புகின்றனர். மாதச் சம்பளம் வாங்கும் தமிழர் மட்டுமே இதில் அடங்குவர். ஏனையோர் குடிசையில் வாழ்கின்றனர்.

தமிழரைக் குடிவைக்க விருப்புவதற்கான காரணங்கள் வருமாறு :

(1) வீட்டைத் தூய்மையாக வைத்துக் கொள்கின்றனர்.
(2) ஒப்புக்கொண்ட வாடகையை ஒழுங்காக, சம்பளம் வாங்கிய அன்றே செலுத்தி விடுகின்றனர்.
(3) வீட்டுக்காரனுடன் வம்புச் சண்டைக்குச் செல்ல மாட்டார்கள்.
(4) வீட்டுக்காரனுக்கு நியாயமான தேவையிலிருந்து வீட்டைக் காலி செய்யச் சொன்னால் தமிழர் மறுக்காது வேறுவீடு பார்த்துக் கொள்கின்றனர்.

இதனால் அலுவலகங்களிலும் தொழிற்சாலைகளிலும் வேலை பார்க்கும் தமிழர்களுக்கு மற்ற மொழியாளர்களை விட எளிதில் வாடகைவீடு கிடைக்கிறது.

இந்திய அரசு, மாநில அரசு ஊதியர்களும் பொதுத்துறைத் தொழிற்சாலை ஊழியர்களும், தனியார் துறையிலுள்ள பெரிய தொழிற்சாலைகளின் தொழிலாளர்களும் வசதியான குடியிருப்புகளில் வாழ்கின்றனர். அந்த நிறுவனங்களில் கடன்பெற்றுச் சொந்த வீடுகள் கட்டுவதிலும் சிலர் முனைந்துள்ளனர்.

பம்பாய்நகரில்கூட்டுறவுமுறையில்குடியிருப்பு ஃபிளாட்டுகள் உள்ள மூன்று அல்லது நான்கு அடுக்குக் கட்டடங்கள் உருவாக வழிகாட்டியவர் தமிழரே. இது குறிப்பிடத்தக்க ஒரு சாதனையாகும். இந்தியாவின் வீட்டு வசதி வாரியத்தில் இடம் பெறத்தக்க நிகழ்ச்சியாகும்.

தமிழ் மொழி

வட மாநிலங்களில் தமிழ் மொழியின் நிலை, தமிழ்க் கல்வி ஆகியவை பற்றியும் தமிழ்ச் சங்கங்கள் குறித்தும் விரிவாகத் தெரிந்து கொள்வது தமிழக அரசுக்கும் தமிழ் மக்களுக்கும் பயன் படும். இவைபற்றிய முழு விவரங்களையும் வடமாநிலத் தமிழர்களுக்குத் தோன்றியுள்ள பிரச்சனைகளையும் கூறுவேன்.

தமிழ்க் கலைகள்

தமிழ்நாட்டுக்குச் சிறப்பாக உள்ள இசைக்கலை வட மாநிலத் தமிழரில் ஒரு பகுதியினரிடம் நல்ல ஆதரவு பெற்று வருகிறது.

பம்பாயிலுள்ள 'சண்முகானந்தா அரங்கு' பேராசிரியர் ம. வி. இராமானுஜம் என்ற தமிழரின் அரிய சாதனையாக விளிருகிறது.

மதம், சாதி, மொழி என்ற வேறுபாடுகளின்றி, வட மாநிலத் தமிழர்கள் பரத நாட்டியக் கலையை இந்தியாவெங்கும் பரப்பியிருக்கிறார்கள். அதை உலகின் பல பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி யிருக்கிறார்கள்.

கடந்த சில ஆண்டுகளாக நாட்டுப்புறக் கலைகளுக்கும் ஆதரவு பெருகி வருகிறது.

கோயில்கள்

ஏராளமான சிவன் கோயில்களையும் ஒருசில பெருமாள் கோயில்களையும் முருகன் கோயில்களையும் தமிழர், வட மாநிலங்களில் கட்டியிருக்கின்றனர். திராவிடக் கட்டடக் கலையைப் பின்பற்றி வடநாட்டார் கட்டியுள்ள கோயில்களும் சில உள்ளன.

கடந்த பத்து ஆண்டுகளாக, மாரியம்மன் முதலிய கிராம தேவதைகளுக்கான கோயில்களின் எண்ணிக்கையும் பெருகியபடி உள்ளது.

இந்தத் தலைப்பில் ஒரு தனி நூலே எழுத இயலும். சிறப்புக் கூறுகள் மட்டும் இந்த அறிக்கைக்குப் போதுமானதாகும்.

பழக்க வழக்கங்கள்

தமிழ்நாட்டில் நிலவும் பழக்க வழக்கங்களை வட மாநிலத் தமிழர் எந்த அளவு பின்பற்றினர், எந்த அளவுக்குக் கைவிட்டிருக் கின்றனர் என்பதைத் தனிக் கட்டுரையில் தொகுத்துக் கூறுவேன்.

தமிழரும் பிற மாநிலத்தாரும்

தமிழர் சில இடங்களில் சாதிச் சங்கங்கள் வைத்துக் கொண் டிருக்கின்றனர். சாதிச் சண்டைகளும் எப்போதாவது திடீரென்று மூண்டிருக்கின்றன.

சாதி உணர்ச்சி அல்லது வெறி அமைப்புகளும் நன் முறையில் இயங்கி வருகின்றன. இவ்வகையில் தமிழர் பேரவை பற்றித் தனிக் கட்டுரையில் கூறுவேன்.

மனித சமுதாயம் என்ற உயர்ந்த இலட்சியத்தை வட மாநிலத் தமிழர் கடைப்பிடித்து, பாராட்டுக்கு உரியவர்களான நிகழ்ச்சிகளும் நடைபெற்றிருக்கின்றன.

தமிழரைப் பற்றிப் பிறமாநிலத்தார் என்ன நினைக்கின்றனர் என்று ஒட்டு மொத்தமாகச் சொல்ல இயலாது மாநிலத்துக்கு மாநிலம் கருத்து மாறுபடுகிறது. அந்தக் கருத்து, காலத்துக்குக் காலம் மாறுவதும் உண்டு.

மண்ணின் மைந்தர் (SONS OF THE SOIL)

தமிழரைத் தங்கள் மாநிலத்திலிருந்து விரட்ட வேண்டும் என்ற எண்ணம் எந்த இனத்தாருக்கும் இல்லை. பம்பாயில் தோன்றிய சிவசேனை இயக்கத்திற்கு மராட்டிய மக்களிடம் ஆதரவு கிடைக்கவில்லை.

இப்போது எல்லா மாநிலங்களிலும் மண்ணின் மைந்தருக்கு வேலை கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி வருகிறது. எங்கும் கல்வி பெருகி வருகிறது. மராட்டிய மாநிலத்தில் 1983-84 ஆம் கல்வியாண்டில் மட்டும் புதிதாக 34 பொறியியல் கல்லூரிகள் தகரக் கொட்டகைகளில் திறக்கப்பட்டுள்ளன.

இத்தகைய செயல்களின் எதிரொலி, வட மாநிலத் தமிழரை அல்லது புதிதாக வடமாநிலங்களில் வேலைக்குச் செல்ல வேண்டும் என்று விரும்பும் தமிழரை எந்த அளவுக்குப் பாதிக்கும் என்ற வினா பிறக்கிறது.

தனியார் துறையில் எப்போதும் போல, தமிழருக்கு வேலை கிடைக்கும். வடமாநிலத் தொழிற்சாலைகள் உற்பத்தி அளவில் மிகவும் பெருக்கியும் புதிய துறைகளுக்கும், புதிய மாநிலங்களுக்கும் விரித்தும வருகிறார்கள். அடுத்து 20 ஆண்டுகளுக்கு அவர்கள் தீட்டியிருக்கும் தொலை நோக்குத் திட்டத்தை நிறைவேற்ற, அந்தந்த மாநிலத்தில் கிடைக்கும் பட்டதாரிகள், தொழில் நுட்ப அறிஞர், தொழிலாளர் ஆகியோரால் இயலாது. தமிழர் செய்யும் வேலை மட்டுமே மேலாளருக்கு மனநிறைவு அளிக்கும். தனியார் துறையிலும் மண்ணின் மைந்தர் என்ற கொள்கை புகுத்தப்பட வேண்டும என்ற பேச்சு இருந்து வருகிறது.

அரசுத்துறை

பெரிய அளவில் மாநில அரசுகளும் ஓரளவுக்கு இந்திய அரசும் தங்கள் அலுவலகங்களிலும் தொழிற்சாலைகளிலும்

அந்தந்த மாநிலத்தாருக்கு இட ஒதுக்கீடு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும். அரசியல் காரணங்களால் இது தடுக்க இயலாது.

ஆனால், அவ்வாறு வேலைக்கு அமர்த்தப்படுபவர்களில் பலர் வேடிக்கை பார்த்துக் கொண்டு சம்பளம் பெறுபவர்களாக மட்டுமே இருப்பார்கள். அவர்களுக்குரிய வேலையைச் செய்யப் புதிதாகத்தமிழரையும் மலையாளிகளையும் நியமிக்கப்பெற நேரும்.

எந்த அடிப்படையில் நான் இவ்வாறு எதிர்பார்க்கிறேன் என்ற ஐயப்பாடு இந்த அறிக்கையைப் படிப்பவர்களுக்கு ஏற்படலாம்.

மத்தியக்கிழக்கு நாடுகளில் வங்கிகள், எண்ணெய்த் தூய்மிகள் (OIL REFINERIES), மற்றும் பெரிய அலுவலகங்கள் அனைத்திலும் தமிழர்களும் மலையாளிகளும் மட்டுமே வேலை செய்கின்றனர்.

வேலைகளின் எண்ணிக்கையில் குறிப்பிட்ட ஈவு உள்நாட்டினருக்கு ஒதுக்கப் பெற்றிருக்கிறது. அவர்கள் எந்த வேலையும் செய்யாது, வேலை பார்க்கும் தென்னிந்தியர்களுக்கு அருகே அமர்ந்திருக்கின்றனர். வடமாநிலங்களிலும் இந்த நிலையே ஏற்படக் கூடும். எனவே, விரிந்து பரந்த இந்தியப் பெரு நாடெங்கும் தொடர்ந்து வேலை வாய்ப்பு தமிழர்களுக்கு ஓரளவு நீடித்து வரும். தகுதியும் திறமையும் உள்ளவர்களுக்குப் பல வாய்ப்புகள் கிடைக்கும். எந்த ஒரு மாநிலத்து மக்களும், ஏனைய மாநிலங்களுக்குச் செல்லாமல், தாங்கள் பிறந்த மாநிலங்களின் எல்லைகளுக்குள் மட்டுமே வேலை தேடுவது என்பது இனி இயலாது என்ற உண்மையையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். ஒவ்வொன்றும் பலநூறு கோடி ரூபாய் முதலீட்டில் உருவாகியுள்ள புதிய கோயில்களான தொழிற்சாலைகள் யாவும் இந்திய ஒருமைப்பாட்டின் சின்னங்களாக விளங்குகின்றன.

o—o

2. 'மதராசி'

நூறு ஆண்டுகளுக்கு மேலாக வடமாநிலங்களின் மக்கள், தங்களிடையே வாழும் தமிழரை, 'மதராசி' என்று குறிப்பிட்டு வருகின்றனர்.

இந்தச் சொல் வழங்கப்படுவதற்கான வரலாற்றை இங்கே குறிப்பிடுவேன். இச்சொல்லைப் பரப்பியவர் மூவகையினர்.

1. வடமாநிலங்களில் வாழும் தமிழர்
2. நமது அண்டை மாநிலங்களிலிருந்து வடமாநிலங்களுக்குச் சென்றவர்கள்
3. வடமாநிலத்தார்

தஞ்சை மாவட்டம் சிவபுரத்திலிருந்தோ பெரியார் மாவட்டம் ஊததுக்குளியிலிருந்தோ பூனா அல்லது பரோடாவிற்குச் செல்லும் தமிழரை அவ்வூரினர், ''உங்கள் ஊர் எது?'' என்று கேட்டால்தமிழர், தங்களுடைய சிற்றூர்களைச் சொல்லுவதில்லை. அவற்றிற்கு அருகேயுள்ள கும்பகோணம், ஈரோடு ஆகிய நகரங்களைக் கூடக் குறிப்பதில்லை. மாநகரான சென்னையைச் சொன்னால்தான் மற்றவர்களுக்கு எளிதில் புலப்படும் என்றுகருதி ''மதராஸ்'' என்று சொல்லி விடுகிறார்கள்.

கருநாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் வடக்கே செல்லும்போது தங்களை மதராசி என்றே சொல்லிக்கொள்கிறார்கள். இதற்கு ஒரு காரணம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகள் பேசும் மக்களும் அடங்கிய சென்னை இராசதானி, (Madras Presidency) என்ற பொதுவான ஆட்சி அமைப்பு, (Composite State) கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக் காலம்முதல் 1956 வரை 200 ஆண்டுகள் நிலவியதாகும்.

எந்த ஒரு காலக்கட்டத்திலும் இந்தச் சென்னை இராசதானியில் அடங்கியிராத தெலுங்கானா பகுதியினர் சிலரை நான் 1983-ஜூன் திங்களில் அவுரங்கபாத் இரயில் நிலையத்தில் சந்தித்தேன். அவர்கள் அருகேயுள்ள அஜந்தா-எல்லோராச் சிற்பங்களைக் காண வந்தவர்கள். அவர்களும் தங்களை 'மதராசி' என்றுதான் சொல்லிக் கொண்டார்கள்.

50 ஆண்டுகளுக்கு முன் வரை தமிழ்நாட்டிலிருந்து வட மாநிலங்களுக்குச் சென்றவர்களில் 10 பேருக்கு ஒன்பது பேர் பிராமணரே ஆவர். அவர்கள், ஆன்மிக மற்றும் வைதிக காரியங்களுக்காக நமது அண்டை மாநிலத்தாரையும் சேர்த்துக் கொண்டு பெரிய நகரங்கள் எல்லாவற்றிலும் 'South Indian Association', 'மதராசி சமாஜ்,' 'பக்த ஜன சபா' என்பவற்றை அமைத்துக் கொண்டு அவற்றின் மூலமாகவும் 'மதராசி' என்ற பெயரை வடமாநிலங்களில் பரப்பி விட்டார்கள்.

வடமாநிலத்தார், தமிழரை 'மதராசி' என்று குறிப்பிடுவதற்கு ஒரு முக்கியமான காரணம் அவர்களுடைய கண்களுக்குத் திராவிட மொழிக் குடும்பத்தினர் எல்லோருமே ஒரே மாதிரியான தோற்றம் உடையவர்களாகத் தெரிவதுதான் ஒருவரைப்பார்த்த அளவில் இவர் தமிழர், இவர் மலையாளி, இவர் தெலுங்கர், இவர் கன்னடக்காரர் என்று அவர்களால் வேறுபடுத்த இயலவில்லை. மொழிகளுக்கு இடையே உள்ள வேறுபாடும், அவர்களில் பெரும பான்மையோருக்கு விளங்குவதில்லை. விளங்கிக்கொள்ள அவர்கள் முயற்சி செய்வதும் இல்லை.

மதராசி என்ற ஒரு மொழி இருப்பதாக அவர்கள் நினைத்த காலமும் உண்டு.

இந்தக்குறைபாடு வடமாநிலத்தாருக்கு மட்டும் உரியதாகச் சொல்ல முடியாது. தமிழ் மக்கள் பெரும்பாலோரால் குஜராத்தியரையும் மராட்டிய மொழிக்காரரையும் தனித்தனியே அடையாளம் காட்டமுடியாது. இவ்வாறே, யார் இராஜஸ்தான்காரர், யார் மத்தியப் பிரதேசத்துக்காரர் என்று நம்மில் எத்தனை பேரால் சொல்ல முடியும்?

சிங்கப்பூர் உவமை

சிங்கப்பூரில் வாழும் தமிழரும் சீனரும் அந்த நகரத்தில் உள்ள பஞ்சாபியரை வங்காளிகள் என்றுதான் சொல்லி வருகின்றனர். மலேசியாவிலும் நிலைமை இதுவே.

85 — 2

மலேசியாவிலோ, சிங்கப்பூரிலோ வங்க மொழியைப் பேசுகின்ற இந்தியர் எவரும் இல்லை. அவ்வாறிருக்க வங்காளிகள் என்ற பெயர் பஞ்சாபியருக்கு எப்படி ஏற்பட்டது?

கல்கத்தா துறைமுகத்தில் கப்பல் ஏறி மலேசியாவிற்கும், சிங்கப்பூருக்கும் வந்து சேர்ந்த எல்லோருக்கும் வங்காளிகள் என்ற பெயர் சூட்டப்பட்டது.

இதுபோலவே சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில் இரயில் ஏறி வடக்கே சென்ற எல்லோருக்கும் பம்பாயிலும், ஆமதாபாத்திலும், நாகபுரியிலும், தில்லியிலும் மதராசி என்ற பெயர் உண்டாகியிருக்க வேண்டும்.

1982-ஆம் ஆண்டு வரை கேரள, கருநாடக மக்கள் சென்னைக்கு வந்துதான் வடக்கே செல்லும் இரயில்களில் பயணம் செய்ய வேண்டியநிலை இருந்ததும் இங்கே கருதத்தக்கது.

'தமிழர்'', ''தமிழர்''

நாங்கள் மதராசிகள் இல்லை, தமிழர் என்பதை வட மாநிலங்களில் வாழும புதிய தலைமுறைத் தமிழர்கள் வற்புறுத்தி வருகிறார்கள். தமிழ்ச்சங்கங்களின் பணிகளும், தமிழ்த் திரைப் படங்களும் இந்தி எதிர்ப்பு இயக்கமும், தமிழர் என்ற பெயர் வட நாடெங்கும் தெரியச் செய்து வருகின்றன.

இலங்கைத் தமிழர் பிரச்சினை செய்தித் தாள்களிலும் வானொலியிலும் நாள் தவறாமல் இடம்பெற்று வருவதும் ''தமிழர் என்று ஓர் இனம் உண்டு. அவர்க்குத் தனியே ஒரு குணம் உண்டு'' என்பதை நிலைநாட்டிவருகின்றது.

பம்பாய்த் தமிழர் பேரவை, அதனுடைய செயல்களால் தமிழர் என்ற பெயரை மராட்டிய மக்களுக்கு அறிமுகப்படுத்தி வருகிறது.

திரைப்படங்களில் 'மதராசி'

1982-ஆம் ஆண்டில் சென்னையில் எடுக்கப்பட்ட சில தமிழ்ப் படங்களிலும் இந்திப் படங்களிலும் வசனத்திலும் பாட்டிலும் 'மதராசி' என்ற சொல் பயன்பட்டிருப்பதாகவும் இது நம்மைநாமே தாழ்வு செய்வதாகவும் வடமாநிலங்களில் உள்ள தமிழ் இளைஞர் மடலர் உணர்ச்சி பெருக என்னிடம் கூறினர்.

மதராசி என்றசொல் திரைப்படங்களில் பயன்படுத்தப்பட்டு வருவதைப் படஉற்பத்தியாளர்கள் தவிர்க்க வேண்டும். இந்தப்

பொறுப்பு திரைப்பட உற்பத்தியாளர் குழுவிடமும் (Film Producers' Guild) தென்இந்தியத் திரைப்பட வணிக நிறுவனத் திடமும் (South Indian Film Chamber of Commerce) ஒப் படைக்கப் படவேண்டும். தேவையான அறிவுரையை அவர்களுக்கு வழங்கும் கடமை தமிழக அரசின் திரைப்படத்துறைக்குப் பொறுப்பு வகிக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு உண்டு.

பாலக்காட்டுப் பிராமணர்

கேரள மாநிலத்துப் பாலக்காடு மாவட்டத்திலிருந்து இந்த அறிக்கையில் அடங்கிய மாநிலங்களுக்குச் சென்றிருப்பவர் தொகை மூன்று நூறாயிரம் ஆகும்.

இவர்கள் அனைவருமே தாங்கள் வேலைபார்க்கும் பம்பாய், தில்லி, அல்லது பிலாய் நகரத்திலேயே நிலையாக வாழ முடிவுசெய்திருப்பவர்கள். இவர்களுடைய மக்கள் ஒரு தென் னிந்திய மொழியைப் படிக்க நேர்ந்தால் அது தமிழ்மொழியாகவே இருந்துவருகிறது. இவர்களுடைய கொள்வினை, கொடுப்பு வினைகளும் தாங்கள் வாழும் நகரத்தில் உள்ள தமிழ்ப் பிராமணர் குடும்பங்களுடனேயே நடைபெற்று வருகின்றன.

தமிழ்ப் படிப்பைப் பொறுத்தவரை இதே போக்கு சிங்கப்பூரிலும் நிலவுவதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

சிங்கப்பூரில் ஆட்சி மொழியாகவும் பள்ளிகளில் கற் பிக்கப்படும் மொழியாகவும் உள்ள இந்திய மொழி, தமிழ் மட்டுமே ஆகும். இதன்விளைவாக அங்கு வாழும் மலையாளிகளும் பஞ்சாபி யரும் பள்ளிகளில் தங்கள் குழந்தைகள் தமிழ் மொழியைப் படிக்கச் செய்கின்றனர்.

தில்லி 'மதராசி' கல்விக் கழகம்

தில்லி வாழ் தமிழர், மதராசி கல்விக் கழகம் என்ற அமைப்பு ஏற்படுத்தி அதன் வழியாகப் பலபள்ளிகளை நடத்தி வந்தனர். தமிழ்நாடு அரசு,அந்தக்கழகத்திற்கு மானியங்கள்வழங்கி வந்தது. கலைஞர் மு. கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது 'மதராசி' என்ற சொல்லை நீக்கினால்தான் தமிழக அரசின் உதவி உண்டுஎன்று கூறிவிட்டார். அதனால், அந்த அமைப்பு அக்கால முதல் தில்லித் தமிழ்க் கல்விக் கழகம் (DTEA) என்ற பெயரில இயங்கி வருகிறது.

o—o

3. மூவகைத் தமிழர்

வட மாநிலத் தமிழரை மூந்நாறு வகைப்படுத்தலாம். எனினும் பிராமணர், நாடார், ஆதிதிராவிடர் என்ற மூவகையினரைப் பற்றி விரிவாகக் குறிப்பிடவேண்டியிருக்கிறது. சாதி அடிப்படையில் அன்று; வேறு சிறப்புக்களால் இந்த ஆய்வுக்கு இப்பகுதி இன்றியமையாதது. இம் மூன்று இனத்தாரிலும், வடமாநிலத் தமிழரில் மூன்றில் இரண்டு பங்கினர் அடங்கிவிடுவர்.

பிராமணர், இந்திய அரசிலும் மற்றும் பல்வேறு மாநில அரசுகளிலும் பெருந்தொகையினராகவும் நீண்ட காலமாகவும் பணியாற்றி வருகிறார்கள். வணிக நிறுவனங்களிலும், கூரிய அறிவு தேவைப்படும் அறிவியல் துறைகளிலும் இவர்கள் நிரம்பியிருக்கின்றனர். அலுவலகத் தமிழர் என்றும் இவர்களைக் கூறலாம். இப்போது இவர்களைப் போன்றே அழுக்குப்படாத (WHITE COLLAR) வேலைகளைப் பார்க்கிற பிற சாதியினர்க்கும் நாம் இங்கே கூறுவது பொருந்தும்.

இரண்டாவது வகை, வணிகராக உள்ள நாடார் சமூகத்தினர். சிறு அளவிலாவது வடமாநிலங்களில் வணிகம் செய்யும் தமிழர் இவர்கள் மட்டுமே ஆவர். இவர்களுடைய முயற்சியும் உறுதியும் நம் தனிக் கவனத்துக்கு உரியன.

மூன்றாவது வகையினர், சந்தர்ப்ப சூழ்நிலைகளாலும் தலைமுறை தலைமுறையாகப் புறக்கணிக்கப்பட்டதாலும் தூய்மைக் குறைவான பணிகளிலும் பிற இனத்தார் செய்ய முன்வராத வேலைகளிலும் வடமாநிலங்களில் ஈடுபட்டுள்ள தமிழ்நாட்டு ஆதிதிராவிடர்.

பிராமணர்

ஆங்கில ஆட்சி நம் நாட்டில் வேரூன்றி அதனால் ஏற்பட்ட ஆங்கிலக் கல்வியைக் கற்பதில் தமிழ்நாட்டுப் பிராமணர் முன்னின்றனர். அந்த முன்னேற்றத்தின் விளைவாக அரசாங்க வேலைகளில் அவர்கள் முன்னுரிமை பெற்றனர்.

இவ்வாறு இந்த இனத்தவர் பட்டறிவு பெற்ற வேலைகளில் தட்டச்சர் — சுருக்கெழுத்தர் வேலை மிகவும் குறிப்பிடத் தக்கது. இது தொடர்பாக, வழங்கும் கதை ஒன்றைக் கூறுவேன்.

வட இந்திய நகர் ஒன்றில் சாலை விபத்தில் ஒருவன் இறந்து விட்டான். இறந்தவன் ஒரு நிறுவனத்தில் சுருக்கெழுத்துத் தட்டச்சராக இருந்தவன் என்பது அவனுடைய சட்டைப் பைக்குள் கிடந்த அடையாளச் சீட்டிலிருந்து தெரிய வந்தது. அதைப் பார்த்து அந்தக் கணத்திலேயே மற்றொரு பிராமணன் சைக்கிளில் அஞ்சல் நிலையத்திற்குப் பஞ்சாய்ப் பறந்தான் "................ அலுவலகத்தில் சுருக்கெழுத்துத் தெரிந்த தட்டச்சர் வேலை காலியாக உள்ளது. உடனே புறப்பட்டுவா" என்று திருவரங்கத்தில் உள்ள தன் தம்பிக்குத் தந்தி அடித்தானாம். இதுகதை அன்று; நகைச் சுவைத் துணுக்கும் அன்று; இடையிடையே நிகழும் உண்மைச் சம்பவம்.

வட இந்தியாவுக்கு வந்த புதிதில் தமிழ்நாட்டுப் பிராமணர் எண்ணிக்கையில் குறைவாக இருந்ததால் பாலக்காட்டுப் பிராமணர், கன்னடப் பிராமணர், தெலுங்குப் பிராமணர் ஆகியோரையும் சேர்த்துக் கொண்டு ஒவ்வொரு நகரிலும் 'சவுத் இந்தியன் அசோசியேசன்', 'மெட்ராசி அசோசியேசன்' என்ற அமைப்புக்களை ஏற்படுத்திக் கொண்டனர். இவை பெரும்பாலும் பொழுது போக்கு மன்றங்களாகவும் ஓரளவு ஆன்மிகச் சடங்குகளுக்கு உதவுவனவாகவும் இயங்கின. இவற்றில் தமிழரே பெரும்பான்மையாக இருந்தனர்; ஏனைய மொழியினர் எண்ணிக்கையிலோ சங்கத்தின் ஆட்சியிலோ அவ்வளவாக இடம் பெறவில்லை.

இப்போது இந்த அமைப்புக்கள் எந்த நகரத்திலும் செயற்படுவதில்லை. அந்தச் சங்கங்களின் தேவையும் முக்கியத்துவமும் குறைந்து விட்டன. அவற்றுக்கு, ஏற்கெனவே சொந்தக் கட்டடம் இருந்தால் வாடகை வருகிறது.

வர வர எண்ணிக்கை மிகுந்ததால் பிராமணர் வைதீக காரியங்களுக்குத் தனி அமைப்பு ஏற்படுத்திக் கொண்டனர். 'தமிழ்ச் சங்கம்' என்ற பெயரிலும் பிராமணச் சங்கங்கள் உண்டாயின.

வடமாநிலங்களுக்குச் சென்ற பிராமணர் முந்தின தலைமுறை வரை தங்களுடைய இயற்பெயரை மறைத்தும் மறந்தும் வந்தனர். ஆர். ஏ. அய்யர், ஓ. பி. சர்மா, கே. எஸ் அய்யங்கார், பி. எம். சாஸ்திரி என்று சாதியின் உட்பிரிவையே தங்கள் பெயராகப் பதிந்துகொண்டனர். சாதிப் பெயரைப் போட்டுக் கொள்ளக் கூடாது என்ற உணர்ச்சி, கடந்த ஐந்தாறு ஆண்டுகளாகப் பரவி வருகிறது. மகாராட்டிர மாநில அரசின் கெசட்டில் வாரந்தோறும் பிராமணர் பலர் தங்களுடைய சாதிப்பெயர்களை நீக்கி, பெயர் மாற்ற அறிவிப்பு விளம்பரங்கள் வெளியிட்டு வருகின்றனர். இது ஒரு புதிய போக்கு; காலத்தால் ஏற்படும் மாற்றம்.

பிராமணரைப் பற்றிப் பொதுவாகத் தமிழ் நாட்டிலுள்ள ஏனைய சமூகத்தினரிடையே சில எண்ணங்கள் நெடுங்காலமாக நிலவுகின்றன. இதனால் சமுதாய வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் பெரியதொரு பூசலையும் தமிழ்நாட்டு அரசியலில் திருப்பத்தையும் உண்டாக்கிவிட்டன. இதற்கு அடிப்படைக் காரணங்கள் பலவாகும். ஒன்று, பிராமணர் தாங்கள் பிறப்பால் உயர்ந்தவர்களாகக் கருதுவது; இரண்டு, வடமொழி பிறமொழிகளை விட மேம்பட்டது என்ற கருத்தை அவர்கள் பரப்பி வருவது; மூன்று அவர்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தால் மற்றவர்களுக்கு அவர்கள் மீது ஏற்பட்டிருக்கும் பொறாமை.

இந்தப்போக்குகள் ஓரளவுக்கு மகாராட்டிர மாநிலத்திலும் காணப்படுகின்றன. அரியானாவிலும் தலைதூக்கி வருகின்றன மண்டல் குழுவின் அறிக்கை அமல் செய்யப்பட வேண்டும் என்ற கிளர்ச்சி வேகம் அடைந்து வருகிறது. அரிசனங்கள் இப்போது அரசின் உயர் பதவிகளுக்கு வந்து, திட்டமிட்டுப் பரப்பிவரும் உணர்ச்சிகளும் பலவாகும். இவற்றின் கூட்டுத்தாக்கமாகக் கடந்த முப்பது ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் படிப்படியாகப் பரவிய உணர்வுகள் இந்தியா வெங்கும் அசுர வேகத்தில் பரவக்கூடிய சூழ்நிலை உருவாகி விட்டது. இதை வடமாநிலங்களில் வாழும் தமிழ்ப் பிராமணர் உணரத்தொடங்கி விட்டனர்.

பிராமணர் தங்கள் இனத்தவர் மட்டுமே வேலைகளில் சேர உதவுவதாக அவர்கள்மீது குறை கூறப்பட்டு வருகிறது. புதிய இடத்தில், மாறுபட்ட சூழ்நிலையில் வாழும் எந்த இனத்தவரும் தங்களைச் சார்ந்தவர்களின் எண்ணிக்கை பெருகுவதுதங்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்று நினைப்பார்கள். இது உலகெங்கும் சிறுபான்மையினரிடம் காணப்படும் இயல்புதான். பிராமணர் மட்டும்இதற்கு விதிவிலக்காக இருக்கவேண்டும் என்று கருதுவதும்

அவர்களுக்குக் குறுகிய உள்நோக்கம் கற்பிப்பதும் தவறாகும். இது, மனித இனத்தின் குறைபாடுகளுள் ஒன்று என்பதே பொருந்தும்.

இன்று வட மாநிலங்களில் உயர் பதவிகளில் இருக்கும் பிராமணரல்லாத தமிழர் பலர், முதலில் எளிய நிலையில் பதவி பெற உறுதுணையாக இருந்தவர்கள் தமிழ்ப் பிராமணரே என்பதும் சிந்தனைக்கு உரியது.

பிராமணர் தமிழ்ப் பகைவர் என்றும் வடமொழியையே படித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் பிராமணரல்லாதார் பலர் முடிந்த முடிவுக்கு வந்திருக்கின்றனர். எந்த மொழியைப் படித்தால் உடனே பதவியும் பதவி உயர்வும் கிடைக்குமோ அந்த மொழிகளை அவர்கள் படிக்கிறார்கள். அவர்களுடைய குறிக்கோள் அதாவது பொருளாதார வசதிகளைப் பெருக்குவதற்காக வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்பதே. இந்தக் கொள்கை, பிராமணர் மட்டுமன்றி அலுவலகத் தமிழர் அனைவரையும் ஆட்டிப் படைக்கிறது. இதில் சாதிப் பிரச்சினை எதுவும் இல்லை வயிற்றுப் பிழைப்பே மேலோங்கி நிற்கிறது. தமிழ் நாட்டில் அங்கிங்கெனாதபடி மூலை முடுக்குகளிலும் காணப்படும் ஆங்கிலப் பயிற்சிமொழிப் பாலர் பள்ளிகளே இதற்குச் சான்று பகரும்.

எந்தப் பிராமண இளைஞனும் இப்போது வடமொழி பயில விரும்பவில்லை. கோயில் பூசைகள் செய்வதற்கு அடுத்த தலைமுறைப் பிராமணர் தயாராக இல்லை. வேறு வேலை பார்த்தால் கிடைக்கக்கூடிய வருமானத்தை வேதம் படிக்க விரும்பும் பிராமணச் சிறுவர்களுக்குக் கிடைப்பதற்கு உத்தரவாதம் அளிக்கும் திட்டத்தைக் காஞ்சி காமகோடி பீடம் ஆச்சாரிய சுவாமிகள், திருவரங்கம் ஆண்டவன் சுவாமிகள் முதலிய பெரியவர்கள் தீட்டியிருக்கிறார்கள். அதற்காகப் பெருந்தொகை வசூலித்து வைப்பு நிதியாகக் கொடுப்பதுடன் வட மாநிலத்துத் தமிழ்ப் பிராமணத் தலைவர்கள் தங்கள்கடமையை முடித்துக் கொள்ளுகின்றனர்.

இன்றையப் பிராமண இளைஞர் வடமாநிலங்களில் சூரிய நமஸ்காரம், சந்தியா வந்தனம் முதலியவற்றையும் ஆங்கிலத்திலேயே சொல்லி வருகின்றனர். அந்தப் பாடங்களை இந்தக் கட்டுரையில் இணைப்பாகக் கொடுத்திருக்கிறேன். புதிய தலைமுறையினர்க்கு இவற்றில் நம்பிக்கை குறைந்து வருகிறது.

பகுத்தறிவுப் போக்கும் வடமாநிலத் தமிழ்ப் பிராமணராகிய புதிய தலைமுறையினரிடம் சிலசமயம் காணப்படுகிறது. அவர்கள்

தங்கள் பெற்றோருடன் இருக்கும் நேரம், தூங்கும் நேரம் மட்டுமே ஆகும். எஞ்சியபொழுதெல்லாம் பிற மொழியாளருடனும் பிற இனத்தவருடனும் இரண்டறக் கலந்து பழகுகின்றனர்.

பிற சமூகத்தினரைப் பிராமணர் புறக்கணிக்கின்றனர் என்பதும் ஒரு பொதுவான குற்றச்சாட்டு. எல்லாச் சாதியினருக்கும் இந்தக் குற்றச்சாட்டு பொருந்தும். பம்பாயைப் பொறுத்தவரை, பிராமணர் சிலரின் செயல்களை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ள தமிழர் வாழும் தாராவியில் முதல் தடவையாகப் பம்பாய் மாநகராட்சி ஒரு பள்ளி தொடங்கக் காரணமாக இருந்தவர் காலஞ் சென்ற அறிஞர் திரு. எம். ஆர். சம்புநாதன். இவர் வேதங்களைத் தமிழில் மொழி பெயர்த்த பிராமண வித்தகர்.

தூய்மையான சுற்றுப்புறத்தை அமைத்துக் கொள்ளத் தாராவியில் வாழும் தமிழர்க்குத் தமிழில் அறிவுரை எழுதி, அதை ஆயிரக்கணக்கில் உருளச்சு செய்து வழங்கியவர் திரு. வெங்கட கிருஷ்ணன் என்பவர். இவர் சமுதாய நலச் சங்கம் (சிவிக் வெல்பேர் லீக்) என்ற அமைப்பைத் தாராவியில் உருவாக்கினார். திரு. வெங்கடகிருஷ்ணன் 1920-இல் பம்பாய் தென்னிந்தியச் சங்கத்தைத் தொடங்கியவர். மகாகனம் (Rt. Hon'ble) டாக்டர் எம்.ஆர். ஜெயக்கரின் தனிச் செயலராக இருந்தவர்.

பம்பாய் மாநகராட்சிக்குத் தங்கள் குறைகளை எழுதியனுப்புவதற்குரிய தாள்களை அச்சிட்டு வழங்கி, மேலே குறிப்பிட்ட திரு எம்.ஆர். சம்புநாதனும் பம்பாயில் திராவிட இயக்கத்தை முப்பதாண்டுகளுக்கும் மேலாக (இன்றளவும்) வளர்த்துவருபவருமான திரு. தொல்காப்பியனும் சேர்ந்தே வழிகாட்டினர்.

தாங்களாகவே கோயில்கள் அமைத்துக் கொள்ளும் வரை பம்பாய்த் தமிழ்ப் பிராமணர் அனைவரும் தாராவியில் ஆதிதிராவிடர் கட்டிய கணேசர் கோயிலில் வழிபட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது.

உணவு, உடைப் பழக்கங்களும் வட மாநிலத்திலேயே பிறந்து வளர்ந்த பிராமணரிடம் மாறி வருகின்றன. உடைகள் இவ்வாறு இருக்கவேண்டுமென்பதைத் தையற்கலைஞரும் நவநாகரிக இதழ்களும் (Fashion Magazine) முடிவு செய்கின்றன. உடையைப் பார்த்துப் பிராமணப் பையனையோ பெண்ணையோ அடையாளம் காண்பது எளிதன்று,

எல்லாச் சாதிகளிலும் சிலகுடும்பங்களிலும் உணவில் இரட்டை வேடம் நிலவுகிறது. வீட்டுக்குள் ஒருவகை உணவு, வெளியே பிறிதொரு வகை. வீட்டில் சமையல் செய்வதற்கு ஆகும் நேரமும் மிகக்குறைந்து கொண்டே வருகிறது. நாடார் பையன் விற்பனை செய்யும் இட்டலியை வரவழைப்பது சிக்கனமாகவும் உள்ளது.

மேலும், ஏனைய சாதியார் இல்லங்களில் சாப்பிடக்கூடாது என்ற பழைய தத்துவம் மறைந்து வருகிறது.

வடமாநிலங்களில் சிறு நகரங்களில் வேலை பார்க்கும் திருமணமாகாத பிராமண இளைஞர் பல்லாயிரம் பேர் ஆவர். அங் கெல்லாம் நான்கு இளைஞர் சேர்ந்து உள்ளூர்க்காரி யாரையாவது சமையல் செய்ய ஏற்பாடு செய்து அவள் சமைப்பதைச் சாப்பிடு கிறார்கள். அவள் எந்தச் சாதி என்று யாரும் விசாரித்துக் கொள் வதில்லை அலுவலக வேலையாகவோ வேறு காரணத்திற்கோ வெளியே செல்லும் போது, சாலை ஓரங்களில் உள்ளதும் தூய்மை என்பது சிறிதும் இல்லாததுமான சாயாக்கடைகளில் செய்யப்படும் எவ்வகையான தின்பண்டங்களையும் வாங்கிச் சாப்பிடுகிறார்கள்.

அதே இளைஞர்கள் தமிழ்நாட்டுக்கு வரும்போது நிலைமை என்ன? திருச்செந்தூர்க் கோயிலுக்கு வழிபாட்டுக்குச் செல்லு கிறார்கள். நெற்றி நிறைய நீறு பூசி, மண் பானையில் சுத்தமாகச் சமைத்து, துனி இலையில் உணவு பரிமாறும் வாழையடி வாழை யாகச் சைவப் பிள்ளைகள் நடத்தும் உணவு விடுதியில் அவர்கள் சாப்பிடுவதற்குத் தயார். ஆனால் அவர்களுடைய பெற்றோர்கள் அதைத் தடுத்து விடுவார்கள். பையன் இட்டார்சியிலோ, நாக புரியிலோ, பஸ்டாரிலோ, ஜலதாப்பூரிலோ, ஜபல்பூரிலோ எவ்வளவு ஆசாரமாகச் சாப்பிடுகிறான் என்பது கும்பகோணம் மடத்துத் தெருவில் மட்டும் வாழும் கிணற்றுத் தவளைகளுக்குத் தெரியாது.

கைலியும் லுங்கியும் பிராமணர் உட்பட அலுவலகத் தமிழர் அனைவர்க்கும் இரவு நேர உடையாகவும், நெடிய கால் சட்டை பகல் நேர உடையாகவும் ஆகிவிட்டன. பூணூலை அறுத்து விட்ட பிராமணரும் ஓரிருவர் உள்ளனர். அவர்களுடைய தகுதிக்கு ஏற்ற 'கிளப்' களிலும் பிரிட்ஜ் சீட்டாட்ட மன்றங்களிலும் உறுப்பினராக இருக்கின்றனர்.

இரயில்வே நிருவாகத்தில் பெரும் பொறுப்பு வகிக்கும் சிந்தனையாளரான பிராமணர் சிலருடன் இந்தப் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஹிப்பி

போல வாழும் இளைஞர்களும் உள்ளனர். இந்த நிலையில், பிறப்பால் தனிச் சலுகைகள் கேட்க பிராமணருக்கு உரிமை இல்லை என்று அவர்கள் கருதுவதாக என்னிடம் கூறினார். பல தலைமுறைகளாகத் தமிழ்நாட்டுப் பிராமணர் சிலர் ஏனைய இனத்தாரைப் பழித்த பாவத்தின் விளைவே இன்று தமிழ்நாட்டில் பிராமணருக்கு ஏற்பட்டுள்ள சூழ்நிலை என்று அவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள்.

''தமிழ் நாட்டில் பிராமணர் வசதியான சூழ்நிலைகளில் வாழ்ந்ததற்குக் காரணம் என்ன? கோயில்கள்கட்டி அவர்களுக்கு மரியாதையான வேலைகள் கொடுத்தவர்கள், அக்கிரகாரத்தில்வீடுகள் கட்டிக்கொடுத்தவர்கள், மாவட்டந்தோறும் வளமான நிலமானியங்களைவழங்கியவர்கள் யார்? வேதம் முதலிய படிப்பதற்கான வாய்ப்பு வசதிகளைச் செய்து கொடுத்தவர்கள் யார்? தமிழ்நாட்டு அரசர்கள், குறுநில மன்னர்கள்; பிற்காலத்தில் முதலியார்கள், தேவர்கள், நாட்டுக்கோட்டை நகரத்தார் ஆகிய பிராமணர் அல்லாதார்; சைவ மடங்களும் பிராமணரைப் பெரிதும் ஆதரித்திருக்கின்றன. அவர்களுக்கு நாங்கள் நன்றி செலுத்த வேண்டாமா'' என்றும் அந்தச் சிறு கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள் சொன்னார்கள்.

''தந்தை பெரியார் ஈ.வே.ரா. தம் இயக்கத்தைத் தொடங்கியிராவிட்டால் நாங்கள் சென்னைத் தலைமைச் செயலகத்துடனும் காவிரிக் கரை வாழ்க்கையோடும் திருப்தியடைந்திருப்போம். அமெரிக்கா வரை பரவியிருக்க மாட்டோம்'' என்றும் சிலர் கூறினர்

''நன்னிலத்து வில்வண்டி, கும்பகோணம் சீவல், அய்யம்பேட்டை வெற்றிலை - இவற்றைப் பயன்படுத்திய அளவில் ஆறுதலான அமைதியான வாழ்க்கையை மட்டும் அறிந்தவர்களாக இருந்திருப்போம்'' என்றனர்.

பிராமணர்க்கே உரிய சம்பிரதாயங்கள், ஆசாரங்கள் ஆகியவைஎன்று தமிழ்நாட்டில் நாம் கருதுபவற்றை வடமாநிலப் பிராமணர் எந்த அளவில் பின்பற்றுகின்றனர்? இவ் வினாவை நான் பலரிடம் வினவினேன்.

''We are individually integrated; but organizationally preserving outward symptoms of Tamil Brahminical tradition and British culture in our temples and allied institutions'' என்று ஒருவர் சொல்லிய பதில் பொருத்தமாகத் தோன்றுகிறது.

தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு பிராமணனும் அவன் வாழும்சூழ்நிலையின் ஒரு பகுதியாக,ஏனையோருடன் இரண்டறக் கலந்துவிடுகிறான். அதாவது ரிசர்வு பேங்கில் வேலை பார்க்கிறவர்கள் எல்லோரும் ஒருசாதியாக இருக்கின்றனர். தபால் - தந்தி ஊழியர் குடியிருப்பில் வாழ்பவர் அனைவரும் ஒருசாதி. இவை உட்சாதிகள் (Sub-Castes). மத்திய அரசு ஊழியர் என்பது இந்த உட்சாதிகளைக் கொண்ட பெரியசாதி! மாநில அரசு ஊழியர் சின்னச்சாதி !

ஆனால், பிராமணர் பலர் ஒன்று சேர்ந்து விட்டால், தங்களுடைய தனித்தன்மைகளை நிலை நாட்ட அல்லது அவற்றை ஒருவர்க்கொருவர் காட்டிக் கொள்ள விரும்புகின்றனர் குறிப்பாக இந்தப்போக்கு, தமிழ்நாட்டிலேயே இருந்து ஒய்வுபெற்ற பிறகு, வடக்கே வேலை பார்க்கும் தங்கள் குழந்தைகளின் தயவில் வாழ்க்கையின் கடைசிக் காலத்தைக் கழிக்கும் முதியோரிடம் காணப்படுகிறது இவர்கள் வீட்டுக்குள் இருக்கும் நேரத்தில், ஏனையோருடன் பேசுவதற்கு எந்தவிதமான பொதுவான பொருளும் (subject) இல்லை. தலைமுறைகளுக்கிடையே உள்ள இடைவெளியின் எதிரொலிப்பு (Impact of generation gap) பிற சாதியாரை நோக்க, பிராமணக்குடும்பங்களில் மிகவும் வெளிப்படையாகத் தெரிகிறது. ஏனையோரெல்லாம் ஒரு துருவமாகவும் வயது முதிர்ந்த நிலையில் தமிழ்நாட்டிலிருந்து வந்திருப்பவர்கள் எதிர்த் துருவமாகவும் உள்ளனர்.

முதியோருடைய பொழுதுபோக்கு இவரைப் போன்ற வயோதிகர்களுடன் பேசுவதே ஆகும். அதற்கு ஏற்ற இடம் ஆத்திக சமாசம முதலியன.

இங்கு இவர்கள் பேசும் பேச்சு பின்வருவது போல இருக்கும்.

''தமிழ்நாட்டில் கோயிலில் தமிழ் அர்ச்சனை பண்றானாமே?'' தமிழ் பக்திக்கு உரிய மொழி என்பதையும் கிறித்தவம் பரப்பவந்தவர்களே திருவாசகத்தைஆங்கிலத்திலும் மொழிபெயர்த்திருக்கிறார்கள் என்பதையும் இவர்கள் அறியவில்லை போலும்.

''சிதம்பரம் கோயிலை வீரப்பன் எடுத்துக்கிறானாமே'' என்று அடுத்த சாஸ்திரிகள்பேச்சை ஆரம்பிப்பார்,ஏதோ அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன், சிதம்பரம் கோயிலைப் பெயர்த்து எடுத்துத் தம் வீட்டுக்குத் தூக்கிக் கொண்டு போகிறது போல, அந்தப் பேச்சின் தொனி இருக்கும். சில நூறு ஆண்டுகளாக, மகந்து ஆட்சியில் இருந்த திருமலை திருப்பதி கோயிலில் அந்த

மகந்தின் பரம்பரை உரிமைகளை அகற்றி 1933-இல் ஆங்கிலேய ஆட்சி திருமலை திருப்பதி தேவத்தானத்தை உண்டாக்கியது இவர்களுக்குத் தெரியாது. தில்லைவாழ் தீட்சிதர்கள், கோயில் முறை (வருமானம்) பெற 10வயதுச் சிறுவனுக்குத் திருமணம் செய்விப்பதும் அவர்கள் வீடு தொறும் 11 வயதுள்ள விதவை இருப்பதும இவர்களுக்குத் தெரியாது.

இந்தக் கருத்துக்களெல்லாம் பிராமணரில் ஒரு சின்னஞ் சிறு பகுதியினரின் போக்கைப் பிரதிபலிப்பவையே இவற்றிற்கு மாறுபட்ட கருத்து உடையவர்களே மிகுதியாயிருக்கின்றனர்.

புதிய தலைமுறையினரான பிராமண இளைஞர் இவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை; பேசுவதுமில்லை. இவை குறித்து நினைக்கவும் அவர்களுக்கு நேரம் இல்லை. அவர்களுடைய சிந்தனை சாதிகட்கு அப்பாற்பட்டது; பொருள் வயப்பட்டது; அறிவு மயமானது. வேலை வாய்ப்புத் தகுதியைப் பெருக்கிக் கொள்ள "அடுத்தது என்ன?" (what next, what next) என்ற குறிக்கோளை அவர்கள் கொண்டிருக்கிறார்கள். ரஷ்யன் படிக்க லாமா? சப்பானியமொழி பயிலலாமா? சீனம் கற்று வெளிநாட்டு அமைச்சரவையில் சேரலாமா என்பதே அவர்கள் கனவு.

கிரஹாம் பெல், அயன்ஸ்டின், சி.வி. ராமன், இரவீந்திர நாததாகூர், கணிதமேதை இராமானுசம், சர்வபள்ளி இராதா கிருஷ்ணன் ஆகியோர் போலத் தாமும் ஏதாவது ஒரு துறையில் மேதையாக வரவேண்டும் என்பதே அவர்களுடைய இலட்சியம்.

ஓய்வு பெறும் வயதை நெருங்குபவர்களில் ஆச்சாரிய சுவாமிகளைப் பார்ப்பதற்குச் செல்லும் போது மட்டும் அணி வதற்காக வேட்டியும் துண்டும் வைத்துக் கொள்பவர் உள்ளனர்

யாகம், வேத யக்ஞம், பாராயணம் முதலியன சம்பந்தப் பட்ட சாப்பாட்டுக்குப் பிராமணர் அல்லாதாரை அழைக்கும்பழக்கம் தமிழ்நாட்டில் கிடையாது. அவர்களை உள்ளே விடமாட்டார்கள். வடமாநிலங்களில் இந்த விருந்துகள் சமபந்தி போஜனமாக நடை பெறுவதைப் பார்த்தேன். மார்வாடி அல்லது பஞ்சாபியரான முதலாளியிடம் நன்கொடை கேட்டிருப்பார்கள் அவர் 'மங்கள ஹாரத்தி' (முக்கியமான நாள்) எப்போது என்று கேட்டு அன்று குடும்பத்துடன் வருவார். அவருக்கு அனைத்து மரியாதைகளும் செய்யப்படுகின்றன.

பிராமணர் அனைவரும் ஒன்று சேர்ந்தோ ஒருமித்த கருத்து உடையவராகவோ இருக்கிறார்கள்என்றுஏனையத்தமிழர் நினைப்பது

உண்மை நிலைக்குப் புறம்பானது. அவர்களுக்குள்ளும் பலகுழுக்கள் உள்ளன. சிருங்கேரி/காமகோடி பக்தர்களுக்கிடையே பூசல்கள் அல்லது சலசலப்புகள் ஏற்படுகின்றன. எல்லாத் தமிழ்ச் சங்கங்களிலும், மாதுங்கா கூட்டுறவு நுகர்வோர் சங்கத்திலும் போட்டா போட்டிகளுக்குக் குறைவில்லை. வேதப்பாராயணம் சொல்லும் சாஸ்திரி, அடுத்த சாஸ்திரிக்குத் தம்மைவிடக் கூடுதலான வருமானம வந்து விடக் கூடாதே என்ற நினைவிலேயே இருக்கிறார்.

திதி (சிரார்த்தம்) கொடுக்காத பிராமணர்களும் உள்ளனர். அந்தச் சடங்குகளைச் செய்து வைக்க உரிமை பெற்ற வாத்திமார் வடமாநிலங்களில் பல பகுதிகளில் இல்லை. அங்கு வாழும் பிராமணர்இன்றியமையாத கிரிகைகளுக்குப் புஷ்கர், நாசிக், உஜ்ஜெயினி, ஹரித்வார், கயா, பிரயாகை அல்லது காசிக்குச் செலலுகின்றனர். பிற சடங்குகளைப் பெரும்பாலோர் கைவிட்டு விட்டனர் அமாவாசை அன்று வீடு தேடி வரும் சாஸ்திரிகளுக்குத் தட்சணைகொடுத்து அவரை உடனே அனுப்புவது சங்கல்பம் செய்ததற்குச் சமமாகக் கருதப் படுவதையும் பார்த்தேன்.

இதுபோன்ற வேறு ஒரு சூழ்நிலையை, தில்லியில் வாழும் எழுத்தாளர் ஒருவர்பின்வருமாறு படம் பிடித்துக்காட்டியிருக்கிறார்.

> ''ஜனக்புரி, தமிழ் ஸ்கூலிலும், ராமகிருஷ்ணாபுரம் வெங்கடேஸ்வரா மந்திரிலும், சரோஜினி நகர் வினாயகர் கோவிலின் அருகே பெரியபந்தல் போட்டும், மயூர் விஹார் பூஜா பார்க்கிலும், நேரு யூனிவர்சிடி அருகே உள்ள வைகுண்டநாதப் பெருமாள் கோவிலிலும் லோதிரோடு ஸ்ரீராம் மந்திரிலும் ஒவ்வொரு ஆவணி அவிட்டத்துக்கும் பார்க்க வேணும். பட்டு வேஷ்டி, பஞ்சகச்சம் இவைகளுடன், கையில் வெள்ளி டம்ளர், அரிசி எள்ளு 'கால்படி' போட்டு ஒரு பிளாஸ்டிக் பையில் ஆத்திலிருந்து மாமி அழகாகப் போட்டுத் தருவாள். அக்கம் பக்கத்து பிரும்மச்சாரி பசங்களையும் பியட், அம்பாசிடர் காரில் அழைத்துக் கொண்டு சில சீனியர் ஆபீஸர்கள் கோஷ்டி வரும்.
>
> ஆவணி அவிட்டத்தின் போதுதான் ஒவ்வொரு வைதீக கனபாடிகளும் கொஞ்சம் அதிகம்காசுபார்க்க முடியும். பொருளாதார சூழ்நிலையில்பின் தங்கிய வகுப்பில் இருக்கும் இது போன்றவர்களுக்கு மத்திய அரசின், மூன்றாவது நான்காவது சம்பளகமிஷன், பேன்பாயிண்ட்

டி.டி. என்ற விகிதங்களுக்குச் சம்பந்தம் உண்டா? ஏழு, எட்டு வருடம் அத்யயனம் செய்து குருகுலம் இருந்து வேதம் பயின்ற விற்பன்னர்கள் குறைந்து கொண்டே வருகிறார்கள்''.

வடமாநிலங்கள் எங்கும் பரவியுள்ள பிராமணர், முதலில் கால் கொண்ட நகரங்கள் இந்திய அரசின் தலைநகராக இருந்த கல்கத்தாவும் புதிய தலைநகராக உருவான தில்லியும் ஆகும். தலைநகர் மாறியபோது கல்கத்தாவிலிருந்து தில்லிக்குச் சென்றவர்களே மிகுதியாவர். அடுத்தப்படியாக அவர்கள் பெருகியது பம்பாயில்.

1920-இல் தான் முதல் தடவையாக பிராமணர் ஒரு சிலர் தமிழ் நாட்டிலிருந்து பம்பாய்க்குப் போய்ச் சேர்ந்தனர். 1931-இல் ஐயாயிரம் பேர் மட்டுமே இருந்தனர் (அப்போது பம்பாய் மாநகரின் மக்கள் தொகை 27லட்சம்; அதில் தமிழர் தொகை 27,000 ஆக இருந்தது. குடும்பத்தோடு பம்பாயில் பிராமணர் 500 பேர் மட்டுமே வாழ்ந்தனர்.)

குஜராத்தியர் வாழும் கல்பாதேவிப் பகுதியில் தங்கள் வாழ்க்கையைத் தொடங்கிய பிராமணர், பின்னர் மராத்தியர் வாழும் பரேல் பகுதிக்குக் குடிபெயர்ந்தனர்.

அடுத்த கட்டமாக மாதுங்காவில் குடும்பம் குடும்பமாக வாழத் தொடங்கினர். 'சவுத் இந்தியன் பிளாக்ஸ்' என்ற பெயர் வழங்கிய குடியிருப்புப் பகுதிகளில், வாடகைக் குடித்தனக்காரராகவோ ஏற்கெனவே வாடகைக்கு எடுத்திருந்தவரிடம் உள் குடித்தனமாகவோ (Sub-tenant) 'ஓர் அறைக்கு ஒரு குடும்பம்' என்ற கணக்கில் பொதுவான குளியலறை முதலியவற்றைப் பகிர்ந்து கொண்டு வாழ்ந்து வந்தனர். ''நமது வாழ்வும் வளமும் பம்பாய் மண்ணுடன் ஒட்டியவை'' என்ற உறுதியான முடிவுக்கு வந்து இங்கேயே நிலைத்துவிடத் திட்டம் தீட்டினர்,

இரண்டாம் உலகப் போர் மூண்டது. போர்ப் படைகளுக்கான செலவு பல மடங்காயிற்று. அந்தக் கணக்குகளை எழுதும் அலுவலகம் புனாவில், ஆயிரம்தலை நாகம் போலப் படர்ந்து விரிந்தது. திடீரென்று விரிவடைந்த இந்த அலுவலகம் (Defence Accounts Dept.) இன்றும் 'ஐயர் ஆபீஸ்' என்ற பெயராலேயே பாமர மக்களால் குறிப்பிடப் படுகிறது. இவ்வாறு மேற்கு இந்தியாவில் இவர்களுடைய இரண்டாவது கோட்டையாகப் புனா நகரம் உருவாயிற்று.

போர் முடிந்ததும், பம்பாயின் வாணிகம் பல துளியாய்ப் பெருவெள்ளமாய்ப்பெருகிற்று. ஒவ்வொருவணிகநிறுவனமும்புதிய தொழில் உத்திகளைக் கையாண்டது. உற்பத்தி முறைகளையும் அளவையும் பெருக்கிற்று. போட்டி போட்டுக் கொண்டு பூமாலை யுடன் தமிழ்ப் பிராமணரை அந்த நிறுவனங்கள் வரவேற்றன. இவர்களும் செல்வம் ஈட்டினர். ஆங்கிலேயர் வெளியேறியதால் காலியான இடங்கள் இவர்கள் காலடியில் வீழ்ந்தன.

காடாக இருந்த சயான் பகுதியை நாடாக்கி, மாதுங்காவி லிருந்த தமிழ்ப்பிராமணர், அங்கிருந்து சயானுக்குச் சென்றனர். இரண்டு அறைகளும் தனிப்பட்ட குளியலறையும் கொண்ட சிறு வீடுகளாக அமைந்த அடுக்கு மாடிப் பகுதிகளில் வாழ்வாராயினர். மலிவான விலைவாசியும் எளிதில் கிடைத்த கட்டுமானப் பொருள் களும் உறுதுணையாக இருந்தன.

அடுத்த கட்டமாக, கூட்டுறவு முறையில் பலர் சேர்ந்து அடுக்குமாடிக் கட்டடங்களைக்கட்டிக்கொள்ளும்முறையைத் தமிழ்ப் பிராமணர்கள் பம்பாய் மாநகருக்கு அறிமுகப்படுத்தினர். தமிழ் நாட்டில்தங்கள் குடும்பத்துக்கு இருந்த பூர்வீகமானசொத்துக்களை விற்றும் ஆயுள் பாதுகாப்புக்கழகத்திலிருந்தும் அலுவலகங்களிலிருந் தும் தங்களுக்குச் சேர வேண்டிய தொகைகளைவாங்கியும்ஃப்ளாட் கட்டிக்கொண்டனர். இத்தகைய முயற்சிகளால் இப்போது செம்பூர், திலக்நகர், முல்லண்டு, கோரேகான், டோம்பிலிவ்லி, வில்லிபார்லி, கல்யாண்போன்ற பம்பாயின் புறநகர்ப் பகுதிகள் பலவற்றிலும் சொந்த ஃப்ளாட்களில் பதினாயிரக்கணக்கில் வாழ்கின்றனர்.

சூரத், பரோடா, ஆமதாபாத், ஜெய்ப்பூர் போன்ற பழைய நகரங்களிலும் இந்தியாவின் புதிய தலங்களான மாபெரும் தொழிற்சாலைகள் உள்ள நகரங்களிலும் இவர்கள் தத்தம் ஆற்ற லுக்குஏற்பச்சிறிதோ பெரிதோ ஒரு வீட்டை வாங்கிக் கொண்டிருக் கிறார்கள் - அல்லது அரசு ஊழியர் / தொழிற்சாலை ஊழியர் ஆகியோருக்காகக் கட்டப்பெற்றுள்ள குடியிருப்புப் பகுதிகளில் வாழ்கின்றனர்.

ஒரு ஸ்கூட்டராவது வாங்க முயல்பவர்களும் உள்ளனர். தையல் இயந்திரம், தொலைபேசி, குளிர்சாதனப் பெட்டி, தொலைக் காட்சி, கட்டில், சோபா செட், டைனிங்டேபிள் முதலியமரம் அல்லது உருக்குச் செய்யப்படு பொருள்கள், சமையலுக்குத் தேவையான மின்கருவிகள் ஆகியவை பலர் இல்லங்களில் உள்ளன. நிலையான மாத வருவாய் இவர்களுக்குக் கிடைக்கிறது. மேலும், அரசு ஊழி

யர்க்குரியபலசலுகைகளையும் அனுபவிக்கிறார்கள். பொதுத்துறை, தனியார் துறை ஆகியவற்றில் இயங்கும் வணிக நிறுவனங்களில் பணி புரிபவர்களுக்கு அரசு ஊழியரினும் கூடுதலான வசதிகள் வழங்கப்படுகின்றன. வீடு, கார், பயணச் செலவு முதலிய ஏராளமாக சலுகைகள் (PERQUISITES) இதில் அடங்கும்.

சேமிப்புப் பழக்கமும் இவர்களிடையே நிலவுகிறது. மேலும் மேலும் படித்துத்தங்கள் தகுதியை வளர்த்துக்கொண்டு கூடுதலான வருவாய் பெறுகின்றனர். குடும்பத்திலுள்ள அனைவருமே மாதச் சம்பளம் பெறுபவராக உள்ளனர். குடும்பக் கட்டுப்பாட்டின் தேவையையேனையோரை விட இவர்கள் நன்றாக உணர்ந்துவருகின்றனர். பதவியால் வேறு இடங்களுக்கு மாற்றப் படக் கூடியவர்கள் (Transferable Jobs) தவிர ஏனைய பிராமணர் தாங்கள் வாழும் மாநிலத்தையே தங்கள் தாயகமாகக் கருதிவருவதால், பிராமணரல்லாதார்க்கு ஏற்படுவதுபோன்ற இருவகைச் செலவுகள் இவர்களுக்கு இல்லை. இதனால் வடமாநிலத்துப் பிராமணரைச் சுகவாசிகள் என்றும் மற்றவர்களைக் கடுமையாக உழைக்கும் வர்க்கம் என்றும் தமிழரை இருவகைப்படுத்திச் சிலர் குறிப்பிட்டுவருகின்றனர்.

அலுவலகப் பிராமணரை இருவகைப்படுத்தலாம். அடுத்தடுத்துக் கூடுதலான சம்பளம் கிடைக்கக்கூடிய நிறுவனங்களுக்கு மாறி, மேல் வேலை பெற்று உயர் நிலைக்கு வந்திருப்பவர்கள் ஒருவகை.

இன்னொரு வகையினர், 18 வயதில் சேர்ந்த நிறுவனத்திலேயே வாழ்நாள் முழுவதும் இருந்து, படிப்படியாக முன்னேற்றம் அடைந்து இமயத்தின் உச்சிக்கு அல்லது அதற்கடுத்த நிலைகளுக்கு வந்திருப்பவர்கள். 'ஏகபத்தினி விரதக் காரர்' என்று அந்த வட்டாரங்களில் இவர்களைக் குறிப்பிடுகிறார்கள்.

அறிவு, செல்வம் அல்லது அதிகாரம் படைத்தவர்களுடனேயே இவர்கள் பழகுவதால் எந்தச் செயலையும் சாதித்துக் கொள்ளும் செல்வாக்கு இவர்களுக்கு உண்டு. வட மாநிலங்களில் இவர்களால் ஒரு செயலைச் சாதிக்க முடியாவிட்டால் வேறுயாராலும் அது முடியாது.

இலக்கியமும் இசையும் நடனமும் இவர்களைப் பண்படுத்தி வருவதும் கண்கூடாகத் தெரிகின்றன.

இவர்கள் பால், பூ, பலசரக்குப்பொருள்கள், காய்கறி ஆகிய அனைத்தையும் தமிழரிடமே வாங்குகின்றனர். வீடு கட்டவும்

கோயில் கட்டவும், தமிழ்நாட்டுக் கல்தச்சர், மரத்தச்சர் பொத்தனார் ஆகியோரையே பயன்படுத்திக் கொள்ளுகின்றனர்.

மத்திய இரயில்வே, மேற்கத்திய இரயில்வே ஆகியவற்றில் பணிபுரிந்த தமிழர் அவற்றின் ஊழியர்கட்காக, நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்கினர். அவை இன்று பெரிய ஆலமரமாக வேரூன்றித் தழைத்துள்ளன. மாதுங்காவில் இத்தகைய சங்கம் ஒன்றை அமைத்து மராட்டிய மாநிலத்துக்கு வழிகாட்டிய பெருமையும் இவர்களுக்கு உரியது.

வடமாநிலங்களில் வாழும் தமிழ்ப் பிராமணர்க்கு எவ்விதப் பிரச்சினையும் இல்லை என்ற ஓர் எண்ணம் சிலரிடம் உருவாகி யிருக்கிறது. இதுவும் தவறானது. ஈமச்சடங்கு செய்ய 300 ரூபாய் கேட்கும் வாத்திமார்களிடம் அவர்கள் படும் பாடு சொல்லி முடியாது.

1983 இறுதியில் சில வடமாநிலங்களில் பல்கலைக் கழகப் பதவிகள், ஆய்வுக்கூட வேலைகள் ஆகியவற்றிலும் கூட 28 விழுக்காடு அரிசனங்களுக்கு ஒதுக்கப்படுவதாக மாநில அரசுகள் ஆணை பிறப்பித்துள்ளன. இதனால், தமிழ்ப்பிராமணர் படிப்படியாகப் பாதிக்கப் படுவர். எனினும் எந்தச் சூழ்நிலையிலும் எந்த நாட்டிலும் திறமை உள்ளவர்களால் பிழைத்துக் கொள்ள இயலும்.

'டாட்டா இன்ஸ்டிடியூட் ஆப் ஃபண்டமெண்டல் ரிசர்ச்' என்பது இந்திய அரசினர், நியூக்ளியர் அறிவியலுக்கும் உயர் கணிதத் திற்கும் பம்பாய் நகரில் கொலாபா பகுதியில் நடத்திவரும் தேசிய ஆராய்ச்சிநிறுவனம் ஆகும். உலகெங்கும் உள்ள இது போன்ற நிறுவனங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் அமைந்தது இதில் பௌதிகத் துறை அறிஞர் 300பேரில் தமிழர் தொகை 25. கணிதத்துறை மேதைகள் 75பேரில் தமிழர் 15 பேர். ஓரிருவர் தமிழர்; அனைவரும் பிராமணரே. யாருடைய பரிந்துரையும் இல்லாமல் தகுதியின் அடிப்படையிலேயே இந்தப் பதவிகளுக்கு இவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். பதவிகளைப் பெற்ற பிறகு பல விருதுகளை ஈட்டியிருக் கின்றனர். தங்களுடைய நுண்மாண் நுழைபுலத்தைத் தமிழிலும் படைக்க இவர்கள் ஆர்வமாக இருக்கிறார்கள் இதுபோலவே, அணு ஆராய்ச்சித் துறையிலும் அறிவியல் ஆராய்ச்சிக்கான பல நிறுவனங்களிலும், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கேந்திரங் களிலும், தேசியப் பால்வள ஆராய்ச்சி (NDRI) நிலையத்திலும், வானவூர்திப் போக்குவரத்து ஆராய்ச்சிக் கூடத்திலும் (Aviation Research Centre, Karnal) மற்றும் உருக்குஆலை முதலிய வற்றிலும் இவர்கள் சிறந்து விளங்குகிறார்கள்.

மத்திய அரசிலும், மாநில அரசுகள் பலவற்றிலும், அவற்றின வாரியங்களிலும், நூறுகோடிக்கணக்கில் பணம் புழங்கும் வணிக நிறுவனங்களிலும், மற்றும் பல்கலைக்கழகங்களிலும் உயர் பதவிவகித்துப் பெருஞ்சிறப்பு எய்திய பலர் இன்றும் உள்ளனர். தமிழ்நாட்டிற்குப் பெருமைதரும் இந்த மரபு தொடர்ந்து நீடித்து வருகிறது.

பம்பாய்த் தமிழ்ப் பெண் சோபா ஐயர், ஆசிய விளையாட்டுக்களில் கூடைப் பந்துக் குழுவில் இந்திய அணியில் இடம் பெற்றார். அனந்தலட்சுமி, வித்யா என்கிற பெண்களும் இந்த விளையாட்டில் குறிப்பிடத்தக்க ஆட்டக்காரர்களாயிருக்கிறார்கள்

டேபிள் டென்னிஸ் ஆட்டத்தில் உலகக் கோப்பை பெறுவதற்கான பந்தயத்தில் இந்தியப் பிரதிநிதியாகச் சென்ற தமிழர் பம்பாய்ப் பிராமணர் திரு. எ. ஸ்ரீராம்.

டென்னிஸ் ஆட்டத்தில் புகழ் பெற்றிருப்பவர்கள் திரு. ஹரி ஐயரும் 14 வயதுகூட நிரம்பாத செல்வி வைதேகி ஐயங்காரும்.

மாதுங்கா வாழ் தமிழ் இளைஞர் பலர் இந்தியன் ஜிம்கானாவில் பழகி, பல்வேறு ஆட்டங்களில் முன்னணியில் உள்ளனர்.

வடஇந்தியாவிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழ்கள் எல்லாவற்றிலும் ஆசிரியருக்கு அடுத்த பொறுப்புக்களில் (Duputy Editor, News Editor) தமிழ்ப் பிராமணர் இருக்கின்றனர்.

தாங்களே மிகச்சிறந்த தொழில் இதழ்களை நடத்தும் தமிழ்ப் பிராமணர்களும் ஏராளமானபேர் ஆவர். அந்த இதழ்களின் பட்டியலைக் கீழே தருவோம் :

Technical Journals

Color Publications : (Thiru. R. V. Raghavan)

Paint India
Popular Plastics
Pestisides
Chemical Times
Color Age
Computronics

Sevak Publications :

Chemical Weekly
Textile Dyer & Printer
Indian Chemical Journal

Chari Publications : (Thiru. S.T. Chari)

Electrical India
Industrial India
Textile Machinery Associates
MBIS Indian Industries Annual
Electronics Annual

Gautam Publications :

Chemisphere

Thiru. **Dr. P. Sankaran :**

Indian Journal of Homeopathic Medicine

பம்பாயில் வெளிவரும் ஆங்கில இதழ்கள் பலவற்றிலும் அங்கு வாழும் தமிழ்ப் பிராமணர்களின் படைப்புக்கள் ஒவ்வொரு இதழிலும் இடம் பெறுகின்றன. சான்றாக ஒரு சிறு பட்டியல் கொடுப்போம் :

எழுத்தாளர்		அவர் எழுதும் இதழ்
Raju Bharatan	—	Illustrated Weekly
R. V. Raghavan	—	Commerce
Grija Rajendran	—	Evening News
Bharathi	—	Star & Style
Krishna	—	Blitz
K. N. Subramaniam Gopalakrishnan	—	Film Fare
Jyothi Venkatesh		Cine Blitz Star & Style Femina Eve's Weekly Mid-Day

மகாராஷ்டிரா மாநில அரசின் தலைமைச் செயலகத்தில் ஐ. ஏ. எஸ். அலுவலர்களாகத் தமிழ்ப் பிராமணர் 27 பேர் உள்ளனர். ஒவ்வொரு மாநிலத்திலும் ஏறத்தாழ இதே நிலைமையையே காணுகிறோம்.

தலைமைச் செயலகங்கள் இவர்கள் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருப்பதால் எந்த அரசியல் கட்சி பதவிக்கு வருகிறது என்பதைப் பற்றி இவர்கள் கவலைப் படுவதே கிடையாது அமைச்சர்கள் உற்சவ விக்கிரகம் போல, அலங்காரம் செய்துகொண்டு நாடெங்கும் பவனி வருபவர்கள். ''புகைப்படம்'' எடுக்கப்படுபவர்கள். திருவிழா முடிந்ததும் சேர்க்கைக்குச் சென்று விடுவார்கள். அரசின் செயலர்களும் ஊழியர்களும் மூலவர்க்கு ஒப்பானவர்கள். மூலவர்க்கு அபிஷேகமும், காலம் தவறாத பூசையும் எப்போதும் இருந்து வரும்.

தாங்கள் வாழும் நகர்களில் தமிழ்ப் பண்பாடு என்று தாங்கள் நினைத்தவற்றைத் தமிழ்ப் புலமையும் தெளிவும் இல்லாத பிராமணர் சிலர் பரப்பியிருப்பதாக இவர்கள்மீது ஒரு குற்றச் சாட்டுக் கூறப்படுகிறது. தமிழின் தலைமையான தமிழ்ப்பண்புகள், குறிப்பாகச் சங்க இலக்கியம், சமயச் சார்பில்லாத வாழ்க்கை போன்றவை பிறமொழியாளரிடம் தக்கவாறு எடுத்துக்காட்டப் படாத குறை இப்போது நீங்கிவிட்டது. பிராமணர் சிலர் அலுவல் பார்ப்பதைக் கைவிட்டு, சிறுதொழில்களைத் தொடங்கியிருக்கிறார்கள். உணவுவிடுதிகள் நடத்துவதில் தமிழ்நாட்டுப் பிராமணர் வடமாநிலங்களில் உள்ள உடுப்பிக்காரர்களிடமும் மலையாளத்து நாயர்களிடமும் தோல்வியடைந்து விட்டனர்.

படித்துப் பட்டம் பெற்ற பிராமணரல்லாத தமிழர் அனைவரும், பிராமணரையே முன்மாதிரியாகக் கொண்டு அவர்கள் வகிக்கும் பதவிகளையே வகித்தும், வாழ்க்கையின் எல்லாக் கண்ணோட்டங்களிலும் அவர்களையே பின்பற்றியும் வருகின்றனர். எனவே பிராமணருடைய நிறைகுறைகள் யாவும் இவர்களுக்கும் பொருந்தும்.

இரு சாராருமே தங்கள் மக்கள் உயர்கல்வி பெறுவதில் கண்ணும் கருத்துமாக உள்ளனர். அதிலும் சில வேறுபாடுகளைக் கண்டேன்.

பிராமணர், தங்கள் பிள்ளைகள் ஆர்வத்துடன் படிக்க விரும்பும் படிப்புக்கு எவ்வளவு செலவு ஆகும்? அதற்குரிய ஆற்றல் (வசதி) தங்களுக்கு உளதா? என்பதைப் பற்றிக் கவலைப் பட மாட்டார்கள். படித்தால்தான் வாழ்வு என்பது அவர்கள் உடன்பிறந்த கொள்கை.

நேரம் இருப்பின், தாங்களே தங்கள் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். பிராமணப் பெற்றோர் சிலர், இதற்காகத் தங்கள் அறிவை வளர்த்துக் கொள்ள விரும்பி ஒருசில வகுப்புகளுக்குச் செல்லுகின்றனர். Coaching Class in New Mathematics for Parents என்பதைச் சான்றாகக் குறிப்பிடலாம்.

பிராமணரும் சரி, பிராமணரல்லாதாரும் சரி தேவையில்லாத ஐயப்பாடுகளைக் கைவிட்டு, வீண்சர்ச்சைகளை மறந்து, இணைந்து செயல்பட்டால், வடமாநிலங்கள் சிலவற்றில் ஏற்பட்டுள்ள மிகுதியான பொருளாதார வளர்ச்சியைத் தமிழ்நாடு விரைவிலும் எளிதிலும் அடைய இயலும்.

நாடார்

நாடார் சமூகத்தினர் 1930இற்கு முன் வடமாநிலங்களில் இருந்ததற்கு அறிகுறிகள் இல்லை.

1937-இல் மதுவிலக்குச் சட்டத்தை அன்றையச் சென்னை மாநில அரசு அமல் படுத்தியதால் இந்தச் சமூகத்தில் பனைமர மேறிகளாக இருந்த பல்லாயிரம்பேருடைய வாழ்க்கை பாதிக்கப் பட்டது. அவர்களில் சிலர் வடக்கே, குறிப்பாக பம்பாய்க்குச் சென்றனர்.

1941 திசம்பர் ஏழாம் நாளில் பேர்ல் ஹார்பரில் ஜப்பானியர் குண்டு வீசியதைத் தொடர்ந்து பர்மாவுக்கும் இரண்டாவது உலகப்போர் பரவிற்று. அங்கு சின்னஞ்சிறு ஊர்களிலும் வணிகம் செய்து வந்த நாடார்கள் கால்நடையாக இர்பால் வழியாகவும் மணிப்பூர் வழியாகவும் தாய்நாட்டுக்கு வந்து, பின்னர் வடமாநிலங்களைத் தங்கள் தொழிலுக்கு உரிய களமாகத் தேர்ந்தெடுத்தனர்

மூன்றாவது கட்டமாக, 1948 வரை இலங்கையில் வேலை பார்த்தோ, கடை வைத்தோ வருமானம் பெற்றுக்கொண்டிருந்த நாடார்கள் அடுத்த ஆண்டுமுதல் படிப்படியாக வட இந்தியாவை நோக்கிப் படையெடுத்தனர்.

சிவகாசி 1930-ஆம் ஆண்டு தொடங்கி, குட்டி சப்பான் போல உருவாயிற்று. மறுதோன்றி அச்சகங்கள், (Offset Press), கவின்கலை அச்சகங்கள் (Litho - Press), தீப்பெட்டித் தொழிற்சாலைகள், பட்டாசுத் தொழிற்சாலைகள் முதலியன அங்குப் பெருகின. சாத்தூரிலும் புதிய முறையில் சிறு தொழில்கள் 1950-இலிருந்து ஏற்பட்டன.

இவற்றின் உற்பத்திகளை வடமாநிலங்களில் விற்பனை செய்யவும், இவற்றுக்கு வேண்டிய மூலப் பொருள்களை வாங்கு வதற்கும 'ஆர்டர்கள்' சேகரிப்பதற்கும் வடமாநிலங்களில் நாடார் பலருக்குப் புதிய வாய்ப்புகள் உருவாயின.

மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு மேற்கண்ட தொழில்களை நடத்த வேண்டியிருப்பதால், தேவையான உரி மங்களைப் (லைசன்சு) பெறவும், கலால் வரிப் பிரச்சினைகளைச் சமாளிக்கவும், ஏற்றுமதி இறக்குமதி இசைவாணைகள் பெறவும் இந்தியத் தலைநகரில் சில நூறு பேர் தேவைப்பட்டனர்.

இவையாவும் சேர்ந்து, வடமாநிலங்களில் நாடார் சமூகத் தின் எண்ணிக்கை பெருக உறுதுணையாயின.

மாவட்ட வாரியாகப் பார்த்தால், வட மாநிலங்களில் பெரிய அளவில் திருநெல்வேலி மாவட்டத்தாரும் அதற்கு அடுத்த படியாக கன்னியாகுமரி, இராமநாதபுர மாவட்டத்து நாடார் களும் காணப்படுகின்றனர். பம்பாய் மாநகரில் உள்ள நாடார் களுள் 90 விழுக்காட்டினர் திருநெல்வேலி மாவட்டத்தினர் போல் தோன்றுகிறது. திருச்செந்தூர், நாங்குனேரி வட்டங் களில் ஒரு சிற்றூர் தவறாமல் அனைத்து ஊரினரும் வாழும் குட்டித் திருநெல்வேலி மாவட்டமாகப் பம்பாய்த் தமிழகம் திகழ்கிறது.

மஹாராஷ்டிர மாநிலத்தின் பிற நகர்களிலும்—குறிப்பாகப் பருப்பு வகைகள் விளையும் பகுதிகளிலும்—மற்றும் மத்தியப் பிர தேசம், பஞ்சாப் மாநிலங்களிலும் நாடார்கள் மிகுதியாக இருக் கின்றனர்.

இவ்வினத்தவரில் படித்துப் பட்டம் பெற்று அரசு அலுவல் பார்ப்பவர்கள் உள்ளனர். பம்பாய் மாநகராட்சியில் 300 பேர் ஆசிரியர்களாகப் பணி செய்கின்றனர். எனினும் வணிகர்களா கவே இவர்கள் புகழ் பெற்று விளங்குகின்றனர். இந்தியாவின் வணிகத் தலைநகரான பம்பாயில் இவர்கள் வேரூன்றியிருக்கின்ற னர். 100 ஆண்டுகளுக்கு முன் இந்நகரில் வணிகம் செய்த நாட்டுக்கோட்டை நகரத்தாரின் சுவடாக இப்போது தெரிவது அவர் நாசிக் மாவட்டத்தில் பஞ்சவடியில் அக்காலத்தில் கட்டிய தண்டாயுதபாணி கோயில் மட்டுமே ஆகும். இது போலவே, ஐம்பது ஆண்டுகளுக்கு முன் பம்பாயில் வணிகம் செய்த காஞ்சிபுரம் முதலியார்களும் இப்போது குறிப்பிடக்கூடிய முக்கியத்துவம் பெற வில்லை.

தமிழ்நாட்டைச் சேர்ந்த வணிகச் சமூகமாக இன்று வட மாநிலங்களில் திகழும் ஒரே இனத்தவர் நாடார்கள் மட்டுமே ஆவர் இவர்களுடைய கடுமையான உழைப்பும் வாழ்க்கை முறைகளும் வட மாநிலத்தாரைக் கவர்ந்துள்ளன. சிறு அளவில் வணிகம் தொடங்கிய நாடார்கள் பலர், குஜராத்தியப் பெருஞ் செல்வர்களின் மூலதனத்துடன் உற்பத்தித் துறைகளில் ஈடுபட்டிருப்பது தமிழ்நாட்டுக்கே பெருமை தருகிறது. இவர்களுடைய முன்னேற்றத்தைக் காணும் பிற மாநிலத்தார் இவர்களுக்கு மேன் மேலும் ஆதரவளிக்கத் தாங்களாகவே முன்வருகின்றனர்.

உணவுப் பொருள்கள், காய்கறி மற்றும் எரி பொருள்கள் ஆகிய வணிகங்களில் இவர்கள் ஈடுபட்டு வடமாநில வாழ்க்கையைத் தொடங்கினர். தொடர்ந்து அந்த வணிகங்களைச் செய்து வருகின்றனர். புதிதாக, எவர்சில்வர் பாத்திரங்களையும் அவை போன்ற பல பொருள்களையும் உற்பத்தி செய்தும் வருகிறார்கள். இந்தப் போக்கை எல்லா மாநிலங்களிலும் பார்க்க முடிகிறது.

மத்தியப் பிரதேசத்தில் நாடார் சிலர் விளைநிலங்கள் வாங்கி, காய்கறி பயிர் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

கழிவுக்காகிதம், பழைய காகிதம் வியாபாரக் கடைகளையும் அன்றாடப் பயன்படு பொருள்கள் அனைத்தையும் விற்கும் சிறு பெட்டிக் கடைகள் முதல் பெரிய டிப்பார்ட்மெண்டல் ஸ்டோர் வரையும் இவர்கள் நடத்துகிறார்கள்.

பிலாயில் இரஷ்யப் பொறியியல் ஆலோசகராயிருப்பவருக்கும் சரி, கூலி வேலை செய்பவனுக்கும் சரி, நாடார்களுடைய கடைக்குச் செல்லாமல் அவர்களுடைய வாழ்க்கை முழுமை அடையாது. அந்நகரில் உள்ள நாடார் சங்கத்தில் 250 உறுப்பினர் உள்ளனர்.

வட மாநிலங்களின் நாடார் சிலர், குறிப்பிட்ட சில பொருள்களில் மிகப் பெரிய அளவில் மொத்த வணிகம் செய்து வந்தனர் இந்திய அரசுக்குச் சொந்தமான 'ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேசன்' இந்த வணிகத்தைத் தன்னுடைய தனி உரிமை ஆக்கிக் கொண்டிருப்பதால், இவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். அதற்காக இவர்கள் 'குய்யோ முறையோ' என்று கூச்சல் போடவில்லை முயற்சியுடையாராக இருப்பதால், வேறு துறைகளுக்குச் சென்று அவற்றில் வெற்றி கண்டுள்ளனர்.

வட மாநிலத் தமிழர் அனைவர்க்கும்-புதிய தலைமுறையினர்க்கும்—தமிழ்நாட்டு வாழை இலை, வாழைத் தண்டு, வாழைக்

காய், அப்பளம், வடகம், முறுக்கு, வெற்றிலை, மூக்குப்பொடி, பெருங்காயம், பொழுதுபோக்கு இதழ்கள் ஆகியவை இன்றியமையாதன. அவை கிடைக்காவிட்டால் அவர்கள் சாம்பிக் கூம்பி, வாழ்க்கையை வெறுத்து விடுவார்கள். அவர்களுடைய தேவைகளான இந்தப் பொருள்களை வழங்கும் வணிகத்தில் நாடார்கள் வல்லமை பெற்றிருக்கின்றனர்.

வேர்க்கடலை மிட்டாய், முறுக்கு, சீடை முதலிய தின்பண்டங்கள், வற்றல் ஆகியவற்றைக் குடிசைத் தொழிலாக வட மாநிலங்கள் எல்லாவற்றிலும் நாடார்கள் செய்கிறார்கள்.

இறைச்சி உணவு விடுதிகள், பழைய இரும்புக்கடை ஆகியவற்றையும் நடத்துகிறார்கள். கமிசன் ஏஜண்டுகளாகவும், வாடகைக்கு வீடு ஏற்பாடு செய்து கொடுக்கும் தரகராகவும் சிலர் உள்ளனர்.

சைக்கிள் கடை வைத்தும், வீட்டில் இட்டலி அவித்துச் சைக்கிளில் கொண்டு போய் விற்றும் வாழ்க்கை நடத்துபவர்கள் இவர்களில் இருக்கின்றனர். உடல் உழைப்பே இவர்களுடைய பெரிய மூலதனமாகும். சோம்பல் என்பதை இவர்களிடம் மருந்துக்கும் பார்க்க முடியாது.

காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை இவர்களுடைய கடைகளுக்கு வேலைநேரம். இதற்கேற்பக் கீழே கடையும் மாடியில வீடு அல்லது பின்பக்கத்தில் வீடுமாக, சொந்தத்தில் எல்லா நகரங்களிலும் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அல்லும் பகலும் அறுபது நாழிகையும் வணிகத்திலேயே முனைந்திருப்பதால், இவர்களுக்குக் கலைகளில் அக்கறை கிடையாது என்று சொல்லலாம். இவர்களுடைய கடைகளில், இந்த இனத்தார் மட்டுமே வேலைக்கு வைத்துக் கொள்ளப்படுவதும் இவர்களுடைய மரபு.

வேறு எந்த சமூகத்தையும் காட்டிலும் இவர்கள் தமிழ்நாட்டு அரசியலில் ஆர்வம் உள்ளவர்களாகத் தென்படுகின்றனர்.

பம்பாயில் நாடார் சங்கங்கள் பல உள்ளன. குறிப்பிடத்தக்கவை : தென்னிந்திய நாடார் மகாசன சபை, தட்சிண மாற நாடார் சங்கம், நாடார் வர்த்தக சபை முதலியன.

தாராவியில் மட்டும் 8,000 நாடார்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இங்கு இவர்கள் நடத்தும் காமராஜ் நினைவு உயர்நிலைப் பள்ளியில், முதல் நான்கு வகுப்புகளில் தமிழ் பயிற்று மொழியாகவும் அதன் பிறகு தமிழ், மூன்றாவது மொழியாகவும் இடம்பெற்றிருக்கிறது.

வணிகர்களுக்குக் கடன் கொடுக்கவும், புதிதாக வருபவர்களுக்கு வேலை தேட உதவவும், அவசரமாக ஊருக்குப் போக வேண்டிய நிலை ஒருவர்க்கு உண்டாயின் அவருக்குத் தேவையான பணத்தை உடனே கொடுக்கவும் இவ்வினத்தில் முறையான ஏற்பாடுகள் நிலவுகின்றன.

நாடார்கள் வாழும் ஒவ்வொரு சிற்றூரின் வளர்ச்சிக்கு மகமைப் பணத்திலிருந்து உதவுவதும் குறிப்பிடத்தக்கது. திருநெல்வேலி மாவட்டத்தில் பல பள்ளிகள் பம்பாய் நாடார் வணிகரின் மூலதனத்தால் தொடங்கப் பெற்றுள்ளன.

தங்களுக்குள் உண்டாகும் சிக்கல்களைத் தீர்க்க, அந்தந்த நகரத்தில் தங்களுடைய பெரியவர்களையே நாட்டாண்மைக்காரராக நியமனம் செய்து அவர்களுடைய முடிவுக்குக் கட்டுப்படுவது இவர்களுடைய பாராட்டத்தக்க பண்பாடு எனலாம்.

மாதுங்காவாலா

மாதுங்கா என்பது பம்பாயில் குட்டித் தமிழ்நாடாக நீண்ட காலமாக உள்ள பகுதி. இங்குள்ள கடைகளில் சென்னை மாநகரில் கிடைக்கும் தமிழ்நாட்டுப் பொருள்கள் அனைத்தையும் வாங்க இயலும்.

மாதுங்காவில் விற்பனையாகும் பொருள்களை அவ்வப்போது வாங்க 50/60 மைல் தொலைவுக்குப் பரவியுள்ள மாநகரத்தின் எல்லாப் பகுதிகளிலும் வாழும் தமிழ்ப் பெண்கள் மாதுங்காவுக்குச் செல்ல இயலாது. இந்தக் குறையை நிறையாக்கும் நாடார் இளைஞர்கட்கு மாதுங்காவாலா என்று பெயர்.

மாதுங்காவாலாக்கள் பம்பாயில் 4000 பேராவது இருப்பார்கள். இவர்களுடைய மூலதனம்—சுறுசுறுப்பு, திறமை, உடல் உழைப்பு, இனிய முறையில் அனைவரிடமும் பழகும் பண்பு, சைக்கிள்.

பம்பாயின் நூற்றுக்கும் மேற்பட்ட புறநகர்ப் பகுதிகள் ஒவ்வொன்றுக்கும் 30 அல்லது 40 மாதுங்காவாலாக்கள் இருப்பார்கள். அந்தந்தப் பகுதியில் தமிழர் வாழும் வீடுகள், ஃப்ளாட்கள் எல்லாம் இவர்களுக்கு நன்கு அறிமுகமானவை. அந்த இல்லங்களுக்குக் குறிப்பிட்ட கிழமைகளில் சென்று அவர்களுக்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் வீட்டிலேயே கொண்டு போய்க்

கொடுப்பார்கள். மேலும், அவர்களுக்குத் தேவையானவை என்ன என்பதைக் கேட்டு எழுதிக் கொள்வார்கள்.

''ஊத்துக்குளி வெண்ணெய் புதிதாக வந்திருக்கிறது'' என்பான்.

''சரி, ஒரு கிலோ எழுதிக் கொள்''.

''மெட்ராஸ் புழுங்கல் அரிசி கேட்டீர்களே, மாமி''

''சின்ன வெங்காயம்...
எல். ஜி. பெருங்காயம்...
புதிதாக இடித்த சாம்பார்ப் பொடி...''

''திருக்கார்த்திகை இன்னும் 15 நாள்தானே இருக்கிறது; கார்த்திகை அவல் பொரி வேண்டாமா?''

''சரி, வழக்கம் போல கொண்டு வந்துவிடு''

''வியாழக்கிழமை அமாவாசை. புதன்கிழமை சாயந்திரம் வாழை இலை......''

மாமிக்கு மறந்துபோன அமாவாசையை இவன் நினை வூட்டுகிறான்.

''பங்குனி பொறந்தாச்சே. உங்களுக்குப் பஞ்சாங்கம் திருக்கணிதம் வேண்டுமா? இல்லை வாக்கியமா?''

ஆங்கிலப் பயிற்சிமொழிப்பள்ளியில் படித்த மாட்டுப்பெண், திருக்கணிதத்தைப் பற்றியோ வாக்கியப் பஞ்சாங்கம் பற்றியோ கேள்விப்பட்டதில்லை. மூன்றாவது வீட்டு அம்மாவைக் கேட்டுக் கொண்டு வந்து, ஆர்டர் கொடுக்கிறாள்.

வருஷப் பிறப்பு, தீபாவளி, பொங்கல் எந்தெந்தப் பண்டிகைக்கு எந்தெந்தச் சாதியாருக்கு எவ்வெத்தகைய பொருள்கள் தேவை என்பது மாதுங்காவாலாவுக்கு மனப்பாடம்.

பம்பாயில் யாருடைய முகவரியையும் சரியாகத் தெரிந்து கொண்டு சொல்ல இவர்களால் இயலும். தையற்காரனை வரச் சொல்ல வேண்டுமா?

தீபாவளி மலர்கள் பற்றிய விவரங்கள், புதிதாகத் திறக்கப் பட்டிருக்கும் காஞ்சிபுரம் பட்டுப் புடவைக் கடை...அனைத்துக் கேள்விகளுக்கும் பதில் சொல்லும் கம்ப்யூட்டர், மாதுங்காவாலா. மாதுங்காவாலாவின் வரலாற்றில் 'இல்லை' என்ற சொல் இல்லை. மாதுங்காவாலா இல்லாவிட்டால், அலுவலகத் தமிழ்ஆடவர்கள் நிம்மதியாகத் தங்கள் வேலைகளைக் கவனிக்க இயலாமல் அல்லற்படுவர்.

ஆதி திராவிடர்

தமிழ்நாட்டு ஆதி திராவிடர் வட மாநிலங்கள் பலவற்றில் உள்ளனர். எல்லா மாவட்டத்தினரும் இருந்த போதிலும், திருநெலவேலி வட ஆர்க்காடு, சேலம் மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே மிகுதியென்று ஊகிக்க வேண்டியுள்ளது.

19-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தாது வருஷப் பஞ்சத்தில் (1880) பாதிக்கப்பட்டு திருநெல்வேலி மாவட்டத்து ஆதிதிராவிடர் கழுதைமீது சவாரி செய்து கொச்சியை அடைந்து அங்கிருந்து கப்பலேறிப் பம்பாய்க்கு வந்து தோல் பதனிடு தொழிலாளராக வேலையில் அமர்ந்தனர். தாராவிப் பகுதியே இவர்கள் வேலைசெய்யும் இடமாக இருந்தது. 1900-ஆம் ஆண்டு அளவில் குடும்பத்தினரை இங்கு அழைத்து வந்தனர்.

கழிவறைகளைச் சுத்தம் செய்பவராக இவர்கள் பம்பாய் மாநகரிலும் தில்லியிலும் உள்ள பெரிய நிறுவனங்கள் அனைத்திலும் வேலை பார்க்கிறார்கள்.

கூலி வேலை செய்பவர்களும் தொழிற்சாலைகளில் வாரச் சம்பளம் வாங்குபவர்களும் இவர்களில் உள்ளனர்.

தோல் வணிகம் செய்தும், தோல் ஏற்றுமதி இறக்குமதி செய்தும் வசதியாக இருப்பவர்களும் உள்ளனர்.

பெரும்பாலோர் பழக்க வழக்கங்களாலும் வாழும் இடத்தின் மோசமான சுற்றுப்புறச் சூழ்நிலையாலும் வருவாய்க்கு ஏற்ற வாழ்க்கைத்தரம் உடையவர்களாக இல்லை. அரசின் சலுகைகளையும் பயன்படுத்திக் கொள்ளவும் இல்லை. தம் மக்களின் கல்விபற்றி இவர்கள் செலுத்தும் கவனம் போதியதாக இல்லை. அளவான குடும்பத்தின் பயனையும் இவர்கள் உணரவில்லை.

நாகபுரியிலும் மற்றும் விதர்ப்பா மாவட்டங்கள் எல்லாவற்றிலும் ஆதிதிராவிடர், ரிக்ஷா இழுப்பவராகவும் பல்வகையான கூலி வேலைகளைச் செய்பவர்களாகவும் உள்ளனர்.

தாராவியில் ஆதிதிராவிடர் வாழும் சூழ்நிலையை இந்த ஆய்வில் தாராவி என்ற கட்டுரையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

கொலாபா முனையில் கடலுக்கும் ஏரிக்கும் இடையே வால் போன்று உள்ள ஒரு திட்டில் குடிசைகள் கட்டிக் கொண்டு வாழ்கின்றனர். கடல் கொந்தளிப்பின் போது, அலைகள் குடிசைகளின் உயரத்திற்கு மேலும் எழுந்து குடிசைகளை வெள்ளத்தில் ஆழ்த்தும்.

தாராவியில் 30,000 பேர் உள்பட பம்பாய் மாநகர்ப் பகுதி முழுவதிலும் இரண்டு இலட்சம் பேரும் மகாராட்டிரத்தில் எஞ்சிய பகுதிகளில் ஒரு இலட்சம் பேரும் இருப்பதாகத் தெரிகிறது. குறிப்பாக இவர்கள் பூனாவின் சுற்றுப் புறத்தில் பெரிய அளவில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். எண்ணிக்கையின் அடிப்படையில் அப்பகுதியில் இவர்களுக்கு அரசியல் செல்வாக்கு இருந்து வருகிறது.

மத்தியப் பிரதேசத்தின் பல பகுதிகளில் 70,000 பேரும் தில்லியில் 30,000 பேரும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

அரியானா மாநிலத்து அம்பாலாவில் 90 குடும்பங்கள் கழிவுக் காகிதத்தைப் பொறுக்கி விற்று வாழ்ந்து வருகின்றன.

இவர்களுக்கு உரிய அமைப்புகளில் முக்கியமானது 'பம்பாய் தென் இந்திய ஆதிதிராவிட மகாசன சங்கம்'. சங்கத்தின் முகவரி :

10, அசேச வாடி,
தாராவி ; பம்பாய்-17
தொலை பேசி எண் : 482356

இந்தச் சங்கம் 1939-இல் தொடங்கப் பெற்று, தொடங்கிய காலம் முதல் சம்பளம் பெறும் செயலருடன் இயங்கி வருகிறது. கடைவாடகை வருவாயைக் கொண்டு சங்கத்துச் செலவுகள் ஈடுசெய்யப் படுகின்றன. இரவுப் பள்ளியையும் நூலகத்தையும் இச்சங்கம் நடத்தி வருகிறது.

அரசியல் கட்சிகளின் தலைவர் பலரையும் சங்கம் சந்தித்து, ஆதி திராவிடர்களின் பிரச்சினைகளை அவர்களுக்கு இந்த 45 ஆண்டுகாலமாகத் தெரிவித்து வந்திருக்கிறது.

ஆதி திராவிடர்களுக்குள்ளேயே சாதி உட்பிரிவுகள் இருப்பதைத் தொடர்ந்து மோதல்கள் நிகழ்கின்றன. தென் இந்திய தேவேந்திரர் தனிச் சங்கம் வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆதி திராவிடரின் பல பிரிவுகளும் தமிழ்நாடு அரசால் பட்டியல் போடப்பட்டுள்ளன. இந்தப் பட்டியலை மகாராட்டிர அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழ்நாடு அரசின் பட்டியலை மகாராட்டிர அரசு ஏற்கச் செய்ய, பாதுகாப்பு அமைச்சர் திரு. வெங்கடராமன் வாயிலாகப் பம்பாய், பூனா நகர்களிலுள்ள ஆதி திராவிட அமைப்புகள் பெரிதும் முயன்று வருகின்றன. திரு

முயற்சி 1984-இல் பயன்தரும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

தாராவியில் 1913-இல் கணேசர் கோயிலை, ஆதிதிராவிடர் கட்டினர். இக்கோயிலுக்கு ஆண்டுதோறும் பெரிய அளவில் திருவிழா நடைபெறுகிறது. கிராமியக் கலைஞர் பலர் அப்போது தமிழ்நாட்டிலிருந்து வரவழைக்கப்படுகின்றனர்.

இந்தக் கோயிலைப் புதிதாகக் கட்ட 95 நூறாயிரம் உரூபா அளவிற்கு ஒரு திட்டம் வரையப்பட்டுள்ளது.

மகாராட்டிர மாநிலத்து அரிசனங்களில் 100க்கு 90பேர் பௌத்த மதத்தில் சேர்ந்து விட்டனர். தமிழ்நாடு அரிசனங்களாகிய ஆதிதிராவிடரில் 15 குடும்பங்கள் மட்டுமே பௌத்த மதத்திற்கு மாறியிருக்கின்றனர். இந்துக்களாக இருப்பதால் இவர்கள் இப்போது பெற்றுவரும் சலுகைகளை இழக்கத் தயாராக இல்லை. இக்காரணத்திற்காகவே இவர்கள் பௌத்த மதத்தில் சேரவில்லை.

பம்பாய் நகரத்துக்கே இழிவு தரும் செயல்களில் ஈடுபடுவர் என்று (12-6-83 'சண்டே ஸ்டாண்டர்டு' முதலிய) இதழ்களில் கட்டுரைகள் வெளியிடப்படும் போது, தேவேந்திரரும் அவற்றில் குறிப்பிடப்படுகின்றனர்.

இந்தியக் குடியரசுக் கட்சியின் எல்லாப் பிரிவுகளிலும் ஆதிதிராவிடர் உள்ளனர். திராவிடக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் காங்கிரசை ஆதரிப்பவர்களும் இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டு ஆதிதிராவிடரான திரு. பாலகிருஷ்ணன், மகாராட்டிர சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்று, 15 சட்டசபை உறுப்பினர் கொண்ட இந்தியக் குடியரசுக் கட்சிக்குத் தலைவராகவும் ஐந்தாண்டுக் காலம் இருந்தார்.

ஆதிதிராவிடர் ஒரு சிலர் வளைகுடா நாடுகளுக்கும் சென்றுள்ளனர்.

விதர்பாவிலும் மத்தியப் பிரதேசத்திலும் உள்ள ஆதிதிராவிடர், ஓரளவு செல்வம் சேர்ந்த பிறகு, முதலியார் என்று சாதிப் பெயரைப் போட்டுக் கொண்டு முதலியார்களுடன் சம்பந்தமும் செய்து கொண்டிருக்கின்றனர்.

ESTD. 1981 Phone : 21364

(Recognised by the Govt.) Mah/964/Pune 82

POONA TAMIL SANGAM

76/1, Small Ghorpuri, Poona 411 001.

Office of the President

Ref. No. PTS/GEN/5/83 Date: 18-8-83

President
Thiru G. Babu

Vice-Presidents
Thiru D. Rathinam
Thiru K. Krishnan

Gen Secretary
Thiru B. Kannan

Secretary
Thiru C. N. Chinnaswamy

Treasurer
Thiru N. Chinna Tambi

To

The Professor
Somalay.
Sastrinagar,
Post Office Building
(Upstairs)
Adyar
Madras - 600 020.

Sub : Pune Tamil Sangam Inaugurated after advicing of.

Honoured Sir,

As per your honoured instructions that the Tamilians of Pune accumulated and started one Sangam named Pune Tamil Sangam in the year 1981, with 100 Members. At present we are having about 2000 Members. The Poona Tamil Sangam is working for the benefits of Tamilians only.

Recently in May '83 our General Secretary Shri.

B. Kannan and Joint Secretary Shri. C. N. Chinna Swamy had been to New Delhi to meet Prime Minister of India Bharatha Rathna Mrs. Indira Gandi, Shri. R. Venkataraman Defence Minister. and Communication Minister, Shri. V. N. Gadgil in connection to include the Tamil Adi Dravidans in the S. C. & S. T. C. list of Maharashtra Government. In this connection one Memorandum also was handed over to the above Hon ourable Prime Minister on 4-5-83 and etc.

On the Invitation of Pune Tamil Sangam the Honourable Union Defence Minister Shri. R. Venkataraman and Postal and Tele Communication Minister Honourable Shri. V. N. Gadgil visited our Pune Tamil Sangam on 10-7-83. The Pune Tamil Sangam felecitated Shri. R. Venkataraman as Kolghai vandan. During the speech our Honourable Defence Minister had praised the work and formation of Pune Tamil Sangam and appreciated the Executive Committee and praised our performance and stage arrangements which we arranged with in a short period. Further both the above Minister had promised that they will try their level best

to get the S. C. & S. T. C beneifits to the Adi Dravidans in Maharashtra state also as like other states.

Further I wish to inform your honour that we come to understand that this year the world Tamilians Conference will be held at Singapore. In this connection the Pune Tamil Sangam nominated our Gen. Secretary Shri B Kannan as a deligate to attend the above conference at Singapore. Kindly advice our General Secretary the procedure in details as he needs please.

In this connection our General Secretary, Joint Secretary, and other office bearers are coming to meet your honour on 1-9-83 at your residence. Kindly make convenience to attend our office bearers and do needful and oblige.

The above Committee is having some important subject with them to explain and discuss with your honour please

Excuse me for the trouble. Thanking you in anticipation,

Yours faithfully,

(Sd.) R. G. BABU

President.

சூரிய நமஸ்காரப் பாட்டு

Prostrations unto the maker of the day
The Sun who is the son of Rishi Khasyapa
Resplendent destroys darkess
Anahilates all sins.

நிலவை வணங்கும் பாட்டு

Adorations unto the Moon
Who is white like curd, conch or snow
Who was born in the milky ocean of Soma
Who adorns the head of Lord Siva.

4. வருவாய்த் துறைகள்

(Sources of Income)

வடமாநிலத் தமிழர் என்ன வேலைகள் பார்க்கின்றனர் என்பதை இந்தப் பகுதியில் ஆராயலாம்.

ஐந்து பேர்களில் இருவர், அதாவது 40%, இந்திய அரசு, மாநில அரசுகள், அவற்றின் வாரியங்கள் மற்றும் இவற்றுக்குச் சமமான அமைப்புக்களில் நிலையான வேலைகளில் அமர்ந்து வருவாய் பெறுகின்றனர்.

இந்திய அரசின் எல்லாத் துறைகளிலும் தமிழர் இடம் பெற்றிருக்கின்றனர். குறிப்பாக, நிதி அமைச்சகத்தின் வருமான வரித் துறை, தலைமைக் கணக்கர் அலுவலகங்கள், இரயில் அமைச்சகத்தின் பல்வேறுதுறைகள், அஞ்சல்-தந்தி-தொலைபேசித் துறைகள், கல்வி அமைச்சகத்தின் ஆய்வுக் கூடங்கள், வேளாண்மை அமைச்சகத்தின் ஏராளமான ஆராய்ச்சி நிலையங்கள், அணு சக்தி மற்றும் விண்வெளி ஆய்வுத் துறைகள், அணு மின் நிலையங்கள், வானிலை ஆராய்ச்சிக் கூடங்கள் ஆகியவற்றில் தமிழர் எல்லாச் சாதியினரும் எல்லா மதத்தினரும் பெருந்திரளாக உள்ளனர்.

ஆயுள் காப்பீட்டுக் கழகம், பொருள்கள் காப்பீட்டுக் கழகம், இந்திய ரிசர்வ் வங்கி, பாரத மாநில (ஸ்டேட்) வங்கிகள், மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், புவியியல் அளவாய்வு (சர்வே) G S I), தொல்லியல் துறை (A S I), எண்ணெய் மற்றும் இயற்கை எளவாரியம், இராஜஸ்தான் கால்வாய்ப் பணி, தண்டகாரணிய (அகதிகள் மறுவாழ்வுக்கான) வளர்ச்சி வாரியம் ஆகியவற்றிலும் தமிழர் மிகுதியாக இருக்கின்றனர்.

பக்ரநங்கல் அணை, இந்திய பெட்ரோ கெமிகல் கார்ப்பரேசன் (I P C C), எண்ணெய்த் தூய்மிகள் (REFINERIES), அரச உர ஆலைகள் ஆகியவற்றிலும் தமிழர் ஈவு குறிப்பிடத்தக்கது.

அரசு நடத்தும் பெரிய தொழிற்சாலைகளிலும் முதலிடம் பெறுவன உருக்காலைகள். ஒரு சான்றாக, பிலாய் உருக்காலையில் தமிழர் நிலைமையைக் கவனிக்கலாம்.

அலுவலர் 3500 பேரில் தமிழர் 200 பேர். தொழிலாளர் 65000 பேரில் தமிழர் 3,000, தட்டச்சர் எழுத்தர் மற்றும் தொழிற் பயிற்சி பெறுபவர் 400 பேர்.

உருக்கு ஆலைக்கு வேண்டும் உதிரிப் பொருள்கள், கருவிகள் உற்பத்தி செய்யும் துணைத் தொழிற்சாலைகள் 35 உள்ளன. பட்டறைகள், எந்திரக்கூடங்கள் முதலியன 100 இற்கு மேற்பட்டவை. இவை எல்லாவற்றிலும் சேர்ந்து வேலையில் இருக்கும் தமிழர் 7,000 பேர்கள் இருக்கலாம். இது தவிர எந்தவிதமான தொழிற் பயிற்சியோ படிப்போ இல்லாத தொழிலாளர்கள், சாலை போடுபவர்கள், கட்டடங்கள் கட்டுவதற்கு ஒப்பந்தம் செய்திருப்பவர்களிடம் வேலை பார்ப்பவர்கள், காய்கறி-பலசரக்கு வணிகர் ஆகிய நிலைகளிலும் தமிழர் இருக்கின்றனர். அனேகமாக எல்லோருமே குடும்பத்துடன் வாழ்கின்றனர்.

சிவில் வானவூர்திப் பணியில் தமிழர் நிலை, பம்பாயில் வானவூர்தி நிலையத்திலும் ஏர் இந்தியா இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனங்களிலும் பணியாற்றுபவர் கணக்கிலிருந்து தெரிய வருகிறது.

பம்பாயில் இந்த மூன்று நிறுவனங்களிலும் பணியாற்றும் தமிழர் எண்ணிக்கை வருமாறு :

அலுவலர் (Officers)	900
எழுத்தர்	600
தொழில் நுணுக்கப் பணியாளர்	500
சுமை தூக்கிகள், தூய்மைப் பணியாளர், வாகனங்களை ஓட்டுபவர், கடைநிலை ஊழியர்	1000

பெரும்பாலோர்க்கு வீட்டுவசதி செய்துகொடுக்கப்பட்டிருக்கிறது. குடும்பத்தினருடன் விமானப் பயணச் சலுகையும் இவர்கட்கு உண்டு.

ஏர் இந்திய மாடர்ன் ஸ்கூல், இந்தியன் ஏர் லைன்ஸ் பள்ளிகளில் தமிழ் கற்பிக்கப் படாததால், சனி — ஞாயிற்றுக் கிழமைகளில் அடிப்படைத் தமிழ் (Basic Tamil) கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

தமிழர் சிலர் இந்த நிறுவனங்களில் சில ஆண்டுகள் பணி செய்த பிறகு, வெளிநாட்டு ஆகாய விமான நிலையங்களின் பம்பாய்க் கிளைகளில் சேர்ந்திருக்கின்றனர்.

இராஜஸ்தானில் உள்ள ஏராளமான சுரங்கங்களிலும் ஒவ்வொன்றிலும் தமிழர் பல நிலைகளில் வேலை பார்க்கின்றனர்.*

மாநில அரசுகளின் பணிகளிலும் அவற்றின் வாரியங்களிலும் தமிழர் ஓரளவு உள்ளனர்.

தனியார் துறை தொழிற் சாலைகளிலும் வணிக நிறுவனங்களிலும் மிகப் பொறுப்பான பதவிகளிலும் தொழில் நுணுக்கக் கல்வி பெற்ற தொழிலாளராகவும் தமிழர் உள்ளனர். விக்ரோலியில் இயங்கும் காட்ரஜ் தொழிற்சாலைத் தொழிலாளரில் 25% தமிழரே ஆவர்.

தமிழர் சில நூறுபேர் சொந்தமாகச் சிறு அளவில் பொறியியல் தொழிற்சாலைகள், லேத்துப் பட்டறைகள் முதலியவற்றை வைத்திருக்கின்றனர்.

இவ்வாறு எல்லாத் துறையிலும் தமிழர்-எல்லாச் சாதியினரும் வட மாநிலங்களில் இருக்கின்றனர். புதுச்சேரித் தமிழரும் கருநாடக மாநிலத்துக் கோலார் மாவட்டத் தமிழரும் உள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சரகப் பணிகள்

இந்தியத் தரைப்படையிலும் வானவூர்திப் படையிலும் ஓரளவு தமிழர் உள்ளனர். ஆனால் கடற்படையில் தமிழர் எண்ணிக்கை மிகக் குறைவு. மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே கடல் வாணிபத்திலும் கப்பல் ஓட்டும் தொழிலிலும் சிறந்து விளங்கியவர் தமிழர். நீண்ட கடற்கரையை உடையது தமிழ்நாடு. கடற்படைத் தளம், கடற்படைப் பயிற்சிப் பள்ளி ஆகியவற்றைத் தமிழ்நாட்டில் அமைக்க வேண்டுமென்று இந்திய அரசைத் தமிழக அரசு வற்புறுத்த வேண்டும்.

* Hind Zinc
Rajasthan State Mines
Javan Mines

படைக்கலத் தொழிற்சாலைகள் பலவற்றிலும் தமிழர் எண்ணிக்கை மன நிறைவு தருகிறது. வெடி மருந்துத் தொழிற் சாலைகள் மற்றும் இராணுவத்தினருக்கான மருத்துவ உதவிப் பிரிவு, பொறியியல் பணிகள் (M.E.S.) என்பனவற்றிலும் தமிழர் சுவு குறிப்பிடத்தக்க அளவு உள்ளது.

கப்பற் படை

பம்பாய் நகரின் தலைமைப் பகுதியாக, பழமையான வரலாற்றுடன் விளங்குவது கோட்டைப் பகுதியாகும். இங்கு வாழ்கின்ற தமிழ் மக்களின் எண்ணிக்கை மிகக் குறைவே. பெரும்பாலோர் குசராத்தி மற்றும் பார்சி இனத்தைச் சேர்ந்தவர் களே ஆவர். வங்கிகள், வணிகத்துறை அலுவலகங்கள், பல நிறுவனங்களின் தலைமை அலுவலகங்கள் மட்டுமன்றி இந்தியக் கப்பற்படைத் தளமும் இப்பகுதியில் அமைந்திருக்கின்றன.

இந்தியக் கப்பற்படைத் தளம் (Naval Dockyard) பாது காப்புத் துறைக்குச் சொந்தமானதாகும். அனைத்துக் கப்பல்களும் பழுது பார்க்கப்பட்டு எந்த நேரத்திலும் போரைச் சந்திக்க ஆயத்தப்படுத்துகின்ற ஒரு தொழிலகம் எனலாம். இங்குப் பணியாற்றும் வேலையாட்கள், மேற்பார்வையாளர்கள், அதி காரிகள் ஆகியோரின் எண்ணிக்கை ஏறத்தாழ 22,000 என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களில் தமிழர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 500 இருக்கலாம் என்று மதிப்பிடப்படுகிறது.

கப்பற்படைத் தொழிற்பயிற்சிக் கூடம் ஒன்று இங்குள்ளது இந்தியாவெங்குமிருந்து தேர்வு செய்யப்பெற்றவர்களை இங்கு அழைத்துவந்து அவர்களுக்குப் பயிற்சியளிக்கின்றார்கள் இவர்களில் தமிழ் மாணவர் எண்ணிக்கை ஐந்து அல்லது ஆறு என்ற வகை யிலேதான் அமைகிறது. நமது அண்டை மாநிலமான கேரளத்தின் எண்ணிக்கை இதைப்போலப் பதினைந்து மடங்காகும். கப்பற் படையில் தமிழர் மிகுதியாகப் பணி புரியாமைக்குக் காரணம் தமிழகத்தில் தேர்வுமையங்கள் மிகக் குறைவு. கப்பற்படைத்தளப் பயிற்சி நிலையங்கள் தமிழ்நாட்டில் மிக அரிது. தமிழக அரசு இதில் கவனம் செலுத்தினால் மேலும் பல தமிழர்க்கு வேலை வாய்ப்பு உண்டாகும்.

போர்ப்படைகளும் அவற்றோடு இணைந்த அலுவலகங்களும்

1857ஆம் ஆண்டில் சிப்பாய்க் கலகம் நடைபெற்றது. அதன் விளைவாக ஆங்கிலேயர் ஆட்சி இந்தியாவில் போர் வீரர்களின் எண்ணிக்கையைப் பெருக்கிற்று. இந்தியப் படைக்கு

ஒருமையமாக (கேந்திரமாக) புனாவைத் தேர்ந்தெடுத்தது. புனாவின் ஒரு பகுதி தண்டு (கன்டோன்மென்ட்) ஆக்கப்பட்டது. தமிழ்நாட்டிலிருந்து பட்டாளத்திற்கு ஆயிரக்கணக்கில் ஆள்கள் சேர்க்கப்பட்டனர். பெரும்பாலும் வட ஆர்க்காடு, தருமபுரி மாவட்டங்ளைச் சேர்ந்தவர்கள் இவ்வாறு 19 ஆம் நூற்றாண்டில் புனாவுக்கு வந்து சேர்ந்தனர்.

இவ்வாறு வந்த தமிழருக்கு உதவுவதற்காகத் தமிழ்நாட்டிலிருந்து சமையல்காரர், உணவுபடைப்பவர் (பட்லர்), ஆயாக்காரிகள் வரவழைக்கப்பட்டனர்.

அடுத்துஓரளவு பொறியியல் படித்தவர்கள் இராணுவப்பொறியியல் பணிகளுக்கு (MILITARY ENGINEERING SERVICES) தமிழரே பெரும்பான்மையாகச் சேர்க்கப்பட்டனர். பாதுகாப்புத் துறையின் கணக்கு அலுவலகம் (Office of the Controller of Defence Accounts) பெரிய அளவில் தொடங்கப்பட்ட காலம் முதல் இந்த அலுவலகத்தில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் தமிழரே ஆவர். பொதுமக்கள் இந்த அலுவலகத்தை 'ஐயர் ஆபிஸ்' என்று சொல்கிறார்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்த பிராமணர் மட்டுமன்றி முதலியார், நாயுடு, பிள்ளைமார் போன்ற பலசாதியினரும் இங்குப் பணியாற்றிய போதிலும் ஐயர் ஆபிஸ் என்ற பெயரே நிலைத்து விட்டது. இரண்டாம் உலகப் போர் தொடங்கியதும் இந்த அலுவலகம் விரிவாக்கப்பட்டது.

முதலியார்கள்

வட மாநிலங்களுக்குச் சென்ற தமிழரில் காலத்தால் முந்திய முதல் இனம் வட ஆர்க்காடு மாவட்டத்து முதலியார்கள். ஆங்கிலேயர் ஆட்சிக்கு அடிகோலப்பட்ட போதே இவர்கள் பெங்களூர்க்குச் சென்றனர். ஆங்கிலேயரின் படைக்குப் புனா ஒரு 'கன்டோன்மன்'டாக்கப்பட்ட நாள்முதல் அவர்களுக்கு உதவும் பணிகளைச் செய்யப் புனாவுக்கு வந்து, முதலியார் சிலர் செல்வமும் செல்வாக்கும் பெற்றனர். புனாவில் இவர்கள் பல வீடுகளைக் கட்டி வாடகைக்கு விட்டிருக்கிறார்கள். சின்னாளப்பட்டி, காஞ்சிபுரம், கூறைநாடு (கொரநாட்டு) புடைவை வணிகத்திலும் மருந்து வணிகத்திலும் சிலர் ஈடுபட்டுளர்.

வேலூரிலிருந்து மத்திய மாநிலத்துப் பிலாசுபுர் மாவட்டத்திற்கு 70, 80 ஆண்டுகளுக்குமுன் வந்து குடியேறிய முதலியார்கள் இரயில் பாதை போடுவது முதலிய ஒப்பந்த வேலைகளில் 150 குடும்பத்தார் உள்ளனர். இரயில் ஊழியர் குடியிருப்பில்

தமிழ்நாட்டுப் பாணியில் பிள்ளையார் கோயில் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். கொச்சையான தமிழ் பேசுகின்றனர். நாகபுரியில் உள்ள தமிழ்நாட்டு முதலியார் குடும்பங்களுடன் சம்பந்தம் செய்து கொள்கின்றனர். இரயில் பணிகள் செய்து, ஓய்வுபெற்ற பிறகு பயிர்த் தொழில் செய்பவரும் உள்ளனர்

நாகபுரியில் முதலியார் குடும்பங்கள் 500 உள்ளன. தமிழை மறந்துவிட்டனர். 'மதராசி' என்று தங்களைக் குறிப்பிட்டுக் கொள்கின்றனர். திரைப்பட அரங்குகளை நடத்துவதில் அனுபவம் பெற்றுளர். அரசு ஊழியரும் உள்ளனர். கடைகள் வைத்திருப்பவர்களுக்கும் குறைவில்லை.

ராய்ப்பூர் மாவட்டத்தில் (மத்தியப் பிரதேசத்தில்) மலைப் பகுதிகளில் உள்ள கற்களை ஆதிவாசிக் கூலிகளைக் கொண்டு உடைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் தமிழ் மொழியை மறந்துவிட்ட தமிழ் முதலியார்கள் முனைந்துள்ளனர்.

திருக்கழுக்குன்றத்திலிருந்து வடபுலம் நோக்கிப் புறப்பட்ட முதலியார்கள் 200 ஆண்டுகளுக்குமுன் புனாவுக்குச் சென்று இப்போது சூரத்தில் அரசுப் பணிகளிலும் கல்விப் பணிகளிலும் அலுவலர்களாகவும் சிறுதொழில்களில் அதிபர்களாகவும் உள்ளனர். ஒரு சிலர் சென்னையிலும் வீடு கட்டி வருகின்றனர்.

முசுலிம்கள்

தமிழ் பேசும் முசுலிம்கள் பம்பாய் தாராவி, சீத்தா காம்ப், செம்பூர், மஸ்ஜித பந்தர், விக்ரோலி, அந்தேரி, கோரேகான் பாண்டுப் பகுதிகளில் 30,000 பேர் உள்ளனர். இவர்கள் திருநெல்வேலி, வ. ஆ. மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். 20பேர் பெரிய தோல் பதனிடு தொழிற் சாலைகளை நடத்துகின்றனர். 50பேர் மிகப் பெரிய செல்வராக உள்ளனர். கிராபோர்டு மார்க்கட் பகுதியில் எல்லா வணிகங்களையும்-குறிப்பாக இரும்பு வாணிகத்தைத் தமிழ் முசுலிம்கள் செய்கின்றனர்.

இவர்களுக்கென்று சில மசூதிகள் பம்பாயில் உள்ளன. தமிழக அரசின் ஹஜ் யாத்திரைக்குழு, பம்பாயில் ஒரு விடுதியை நடத்தி வருகிறது.*

* Madras Haj Committee of the Government of Tamilnadu-Guest House in Masjid Street, Bendi Bazaar, Bombay - 3.

ஆலைத் தொழிலாளர்

தமிழ்நாட்டில் கைத்தறி நெசவாளராக இருந்தவர்கள் அந்தத் தொழில் நசித்தபோது அல்லது தேவையான நூல் கிடைக்காமற் போனபோது, தாங்கள் வாழையடிவாழையாகச் செய்துவந்த தொழிலைக் கைவிட்டு, பம்பாய்க்குச் சென்றனர். சிலர் அங்கேயே நிலைத்தனர். பலர் வேறு நகரங்களுக்குக் குடி பெயர்ந்தனர்.

ஆமதாபாதில் அம்பிகா ஆலையிலும் கலிகோ ஆலையிலும் 5,000 தமிழ்த் தொழிலாளர் வேலை பார்க்கின்றனர். இவர்கள் புதுச்சேரி, தென் ஆர்க்காடு மாவட்டம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள். ஒரு சிலர் வ. ஆ., திருநெல்வேலி மாவட்டங்களிலிருந்து வந்திருக்கிறார்கள்.

பரோடாவிலுள்ள அம்பிகா ஆலை, நாடியாடில் உள்ள ஓர் ஆலை, மசேனா மாவட்டம் கலோடு பாரதவிஜய் ஆலை. சூரத்திலுள்ள பரோடா ரயான் ஆலை ஆகியவற்றில் பல்லாயிரம் தமிழர் வேலை பார்க்கிறார்கள்.

சூரத்தில் பரோடா ரயான் ஆலையில் வ. ஆ. மாவட்டம் செங்கை வட்டம் ராதாபுரம் திரு. கோவிந்தசாமி என்பவர் வேலை பார்க்கிறார். எழுதப்படிக்கத் தெரியாதவர். குடும்ப மனத் தாங்கலால் 1960-இல் சூரத்துக்குவந்து ஒரு வேலையில் சேர்ந்து பிறகு பரோடா ரயானில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இப்போது ஆலையில் இவருக்குக் குடியிருக்க வசதியான வீடும் மாதம் ரூ. 1800 சம்பளமும் 47% போனசும் கொடுக்கிறார்கள். சொந்தத்தில் வீடு கட்டியிருக்கிறார். நிலம் வாங்கியிருக்கிறார். "நீங்கள் தமிழ்நாட்டுக்குப் போய் South India Viscost - இல் வேலை பார்க்கலாமே?" என்று கேட்டேன். அவர் சொன்ன பதில்: "தமிழ்நாட்டில் எந்த வேலைக்குப் போனாலும் என்ன படித்திருக்கிறாய் என்று கேட்பார்கள். அந்தக் கேள்வி வட மாநிலங்களில் கேட்கமாட்டார்கள்."

மகாராட்டிர மாநிலத்தில் பம்பாய்ப் பெருநகரின் பகுதிகளான ஜோகேஷ்வரி, ஜாரிமணி, குர்லா, போரிவிலி, வடாலா ஆகியவற்றில் செயற்கைப்பட்டு ஆலைகளிலும், எந்திர மயமான தறிகளிலும் கோவை சேலம் மாவட்டத்துத் தேவாங்கர்களும் பிறரும் ஆயிரமாயிரமாக உள்ளனர். பம்பாய் ஆலைத் தொழிலாளர் தலைவரான டட்டா சமந்துக்கு அடுத்த நிலையில் ஐயாத்துரை என்ற தமிழர், ஆலைத் தொழிலாளர் தலைவராக இருக்கிறார்.

தில்லியில் மோடி ஆலை, டி. சி. எம். (Delhi Cloth Mills) ஆகியவற்றில் நாலாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ்த் தொழிலாளர் உள்ளனர்.

பஞ்சாப் மாநிலத்து லூதியானாவில் கம்பளிப் பொருள்கள் (WOOLLEN HOSIERY) உற்பத்தி ஆலைகளில் தமிழ்த் தொழிலாளர் பலர் கடந்த நான்கு — ஐந்து ஆண்டுகளில் சேர்ந்திருக்கிறார்கள்.

இவர்கள் நிலையான வருவாய் பெறுவதுடன் ஆலை ஆட்சியாளர் கட்டியுள்ள குடியிருப்புகளில் வாழும் வசதியையும் அடைகின்றனர். அப்பகுதிகளில் தமிழரே தையல்காரர், நாவிதர், பூக்காரராக உள்ளனர். பெரும்பாலோர் தங்கள் மக்களை ஆங்கிலப் பயிற்சி மொழிப் பள்ளிகளுக்கே அனுப்புகின்றனர்.

ஒரு சிலர், வளைகுடா நாடுகளுக்குச் சென்று பெரும் பொருள் ஈட்டியுள்ளனர். அந்தப் பணம் முழுவதையும் மக்கள் திருமணத்திற்குச் செலவிடுவது பெருமையான நாகரிக மரபாகப் பரவியிருக்கிறது.

சில தொழிலாளர்கள் கட்டும் செட்டுமாக வாழ்ந்து தமிழ்நாட்டில் நிலம் வாங்கியும் வீடுகட்டியும் வருகின்றனர். ஓய்வு பெற்ற பிறகு, மகன் அல்லது மருமகனுக்கு அதே ஆலையில் வேலை வாங்கிக் கொடுத்துவிட்டு, ஓய்வு பெற்றவர் தமிழ்நாட்டுக்கு வந்து விடுகிறார்.

ஆலைத் தொழில் மேன்மேலும் எந்திர மயமாக்கப்படுவதால், இனி வேலை வாய்ப்புக் குறையலாம்.

அருப்புக் கோட்டை, சின்னாளப்பட்டி, சேலம் முதலிய நெசவாளர் நகரங்களைச் சேர்ந்த பல்லாயிரம் குடும்பங்கள் கடந்த 10 ஆண்டுகளுக்குள் தில்லியை நோக்கிப் பெரும்படையெடுப்பு நடத்தியிருக்கின்றன. ஆடவர் சிலர் ஏதாவது ஓர் ஒப்பந்தம்—காண்டிராக்ட் எடுக்கின்றனர். வேறு சிலர் இடும்பன் போல் காவடி தூக்கி நகரங்களில் தண்ணீர் மொண்டு வீடுகளுக்கு வழங்குகின்றனர். பலர் எந்த வேலையும் செய்வதில்லை. பெண்டிரும் குழந்தைகளும் வீட்டு வேலை செய்தும் சாலைப் பணிகளில் ஈடுபட்டும் குடும்பச் செலவை ஈடு செய்கின்றனர். அரசுப் புறம்போக்கில் வாழ்கின்றனர். குழந்தைகளைப் படிக்க வைக்க வேண்டுமென்ற சிந்தனை அரிது.

வட ஆர்க்காடு மாவட்டம் வாணியம்பாடி, திருநெல்வேலி மாவட்டத்துக் காயல்பட்டினம் ஆகிய நகர்களைச் சேர்ந்த முசுலிம்கள் தங்கம் மற்றும் நவரத்தினக் கல் வணிகத்தில் திகழ்கின்றனர்.

கோரேகான் தொழில் பேட்டையில் அலுமினியம், பித்தளை ஆகியவற்றில் வளையல் செய்பவர்களும் காணப்படுகின்றனர்.

போலி —' இமிட்டேசன்' — நகைகளைச் செய்வதிலும் விற்பதிலும் இவர்களில் பலர் உள்ளனர்.

வளைகுடா நாடுகளுக்குச் சென்று வேலை பார்க்கும் தமிழ் முசுலிம்கள் நூற்றுக் கணக்கான பேர், தங்கள் குடும்பத்துடன் அடிக்கடி தொடர்பு கொள்ள வசதியாக, குடும்பத்தைப் பம்பாய் சீத்தா காம்ப், செம்பூர்ப் பகுதிகளில் குடிசை கட்டி அவற்றில் இருக்கச் செய்கின்றனர். இவர்களுடைய குழந்தைகள் செம்பூர் சரசுவதி வித்யாலயத்தில் தமிழ், இந்தி, ஆங்கிலம் பயில்வதோடு தனியாக அரபிக், உருது மொழிகளைக் கற்றுக் கொள்கின்றனர். இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலம், வளைகுடா நாடுகளிலிருந்து பணம் வந்த வண்ணமாக உள்ளது.

தென் ஆர்க்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடி முசுலிம்கள் குசராத் மாநிலத்தில் பெரிய அளவில் உப்பு வாணிகம் செய்கின்றனர்.

மகாராட்டிர இந்துக்கள் வாரத்தில் இரண்டு மூன்று நாள்கள் விரதம் இருப்பர். அந்த நாள்களில் முறுக்கு, மைசூர்ப் பாகு, கடலை மிட்டாய் போன்ற தின்பண்டங்களை மட்டுமே உண்பர். இவற்றைச் செய்து விற்பது அந்த மாநிலத்தின் பெரிய தொழில் (குறிப்பாக மேற்கு மகாராட்டிரத்தில்). புனா, சோளாப்பூர், கோல்ஹாப்பூர் மாவட்டங்களில் இந்தத் தொழிலின் பெரும் பகுதி இராமநாதபுர மாவட்டத்து முசுலிம்களிடமும் மதுரை மாவட்டத்து இந்துக்களிடமும் உள்ளது.

சௌராட்டிரர்

சௌராட்டிரத்திலிருந்து 350 ஆண்டுகளுக்குமுன் தமிழ்நாட்டிற்கு வந்த இவர்களில் 2,000 பேர் சௌராட்டிரத்திற்கு அருகேயுள்ள பம்பாய்க்குச் சென்று அச்சகங்கள் நடத்துகின்றனர். தோல் பைகள், பாலிதின் பைகள் போன்ற பலவகைப் பொருள்களை உற்பத்தி செய்தும் அவற்றில் அச்சிட்டுக் கொடுத்தும் வாழ்கின்றனர்.

உடல் உழைப்புப் பணிகள்

எந்த விதமான படிப்போ தொழிற் பயிற்சியோ இல்லாத தமிழர் பெருந்தொகையாக வடமாநிலங்களுக்கு — குறிப்பாகப் பம்பாய், தில்லி நகரங்களுக்குச் செல்லுகின்றனர். இவர்களால் வீட்டு வாடகை கொடுக்க இயலாது. அரசாங்கத்தின் புறம் போக்கு நிலங்களிலும் நெடுஞ்சாலைகளின் ஓரத்திலுள்ள நடைபாதைப பகுதிகளிலும குடிசை போட்டுக் கொண்டு ஆயிரக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் வாழ்கின்றன. இவர்களை அப்புறப் படுத்த அவ்வப்போது காவலரும் மாநகராட்சி அலுவலரும் வந்து பாத்திரம் பண்டம் ஆகியவற்றைச் சரக்கு உந்துகளில் (லாரி) அள்ளிச் செல்லுகின்றனர். என்ன செய்தாலும் சரி, இந்தத் தமிழர்கள் பயபபடுவதே இல்லை. கவலைப் படுவதும் கிடையாது. மறுபடியும அங்கேயே குடிசை போட்டுக் கொள்கின்றனர்.

தமிழ்நாட்டில் குடிசை போட்டு, அவற்றை அப்புறப் படுத்தத் தமிழக அரசின் காவலர் வந்தபோது காமராசர் நகர் என்றும பிறகு அந்த இடத்தையே கலைஞர் கருணாநிதி நகர் என்றும் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். குடியிருப்பு என்றும் பெயரிட்டுக கொண்டு வாழ்ந்து பழகியவர்கள் அல்லவா? திடீரென்று பம்பாயிலும் தில்லியிலும் தமிழர் குடிசைப் பகுதிகள் சஞ்சை காந்தி நகர், ராஜீவ் காந்தி நகர் என்று பெயர் பெற்றுவிடும்.

மழைக் காலத்தில் இந்தப் பகுதிகளின் நிலை எப்படி இருக்கும் என்பதை எழுத்தில் வடிக்க இயலாது.

பழைய காகிதம், பாட்டில், தகரம் முதலியவற்றைப் பொறுக்கி விற்பவர்களும் உள்ளனர். தங்கள் குழந்தைகளையும் இததொழிலில் பழக்குகின்றனர். ஒவ்வொரு குழந்தையும் நாள ஒன்றுக்கு 10 முதல 15 ரூபாய் ஈட்டுவதால், கூடுதலாகக் குழந்தை பெற விரும்புவதும் அவர்கள் பள்ளிக் கூடத்திற்குச் செலலவிடாமல் செய்வதும் வழக்கமாக உள்ளன.

அடுக்கு மாடிக் கட்டடங்கள் (High Rise Buildings), நெடுஞ்சாலை போடுவது ஆகியவற்றுக்கு ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பவரிடம் துணை ஒப்பந்தக்காரராக இருக்கும் தமிழர் இவர்களை அழைத்து வந்து இந்த வேலைகளில் ஈடு படுத்துகிறார்கள். ''நீங்கள் எப்போது பம்பாய்க்கு அல்லது பாட்டியாலாவுக்கு வந்தீர்கள்?'' என்று கேட்டால் ''சாலை போட்ட போது வந்தேன்'' என்று விடை கூறுவர்.

குறிப்பிட்ட வேலை முடிவடைந்ததும் சில சமயம் இவர்களுக்கு வேலை இராது. வருமானம் வரும்போது படம் பார்க்கவும், சூது ஆடவும், பரிசுச்சீட்டு வாங்கவும் அந்தப் பணத்தைப் பயன்படுத்தி விடுவார்கள். சேமிப்புப் பழக்கம் சிறிதும் கிடையாது.

வேலை இல்லாத நாள்களில் ஓரிருவர், தவறான வழிகளில் பணம் ஈட்ட முயற்சி செய்வது தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவர். எவனாவது சாக்கடை மூடிகளைத் திருடி, பழைய இரும்புவியாபாரியிடம் விற்றுவிட்டால், காவல் துறையினர் அப்பாவித் தமிழனை ஐயப்படுவர்.

வருமானம் இல்லாதபோது அரைப் பட்டினி கிடக்கும் தமிழர் எவ்வளவோ பேர் உள்ளனர். மிக மட்டமான கோதுமையில் செய்யப்பட்ட ரொட்டி அல்லது 'சா' அல்லது ஒரு வேளைக் கஞ்சியுடன் நாளைக் கடத்துவது இவர்களுக்குப் பழக்கமாகிவிட்டது.

இவர்கள் பெரும்பாலும் சேலம் தருமபுரி மாவட்டத்தாராக உள்ளனர். அங்குப் பருவமழை தவறி விடுகிறது. கூலி வேலையும் கிடைக்காது. சொந்தமான காடோ விளைநிலமோ இவர்களுக்கு இல்லை. பம்பாய் அல்லது தில்லிக்குப் போனால் எப்படியும் பிழைத்துக்கொள்ளலாம் என்று வந்து விட்டார்கள். இடையிடையே என்னதான் இடர்ப்பாடு ஏற்பட்டாலும், வட மாநிலங்களில் வாழலாம் என்ற நம்பிக்கையும் தமிழ்நாட்டில் இந்த அளவுகூட வருமானம் கிடைக்காது என்ற முடிவும் இவர்களிடம் காணப்படுகின்றன.

பம்பாயில் ஜுஹு கடற்கரையில் தின்பண்டங்கள். பொம்மைகள முதலியவற்றைத் தலைச் சுமையாக விற்பனை செய்யும் தமிழர்களும் கரும்புச் சாறு பிழிந்து விற்பவரான தமிழர்களும் எவ்வளவோ பேர்.

காலணிகளுக்கு மெருகு சேர்ப்பவர்களும் (Shoe-Shine Walla), கிளி சோதிடம் சொல்லுபவர், மத்தாடி (சரக்குஉந்துகளிலிருந்து பொருள்களைச் சுமந்து இறக்குபவர்) போன்ற வேலைகளிலும் தமிழ்நாட்டின் பல மாவட்டத்தினர்க்கும் பங்கு உண்டு.

மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், பஞ்சாப் நகர்களில் ரிக்ஷாக்காரர் பெரும்பாலும் தமிழராகவே உள்ளனர்.

சண்டிகர் நகரம் 25 பகுதிகளாக அமைக்கப்பட்டது. நகரமைப்பு வேலை முடிவடைந்ததும் தமிழ்த் தொழிலாளர் பலர் இமாச்சலப் பகுதிக்குச் சென்றனர். சிலர் லூதியானாவுக்கும் பாட்டியாலா

வுக்கும் சென்று அங்கே கிடைத்த வேலைகளைப் பார்த்தனர். சில ஆண்டுகளுக்குப் பிறகு சண்டிகரை மேலும் விரிவாக்கும் திட்டம் முடிவு செய்யப்பட்டு, இப்போது 26-ஆவது செக்டார் முதல் 50 ஆவது செக்டார் வரை உருவாகி வருகின்றனர். ஏற்கெனவே சண்டிகரில் இருந்தவர்கள் தங்கள் உறவினரைச் சேலத்திலிருந்தும் விருத்தாசலத்திலிருந்தும் வரவழைத்து சண்டிகர், இமாசலப் பிரதேசம், லூதியானா, பாட்டியாலா வேலைகளைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

பம்பாய் கோரேகானில் சவக்குழி வெட்டும் வெட்டியானாகவும் தமிழர் உள்ளனர். சண்டிகரில் காட்சிக்கு இனிய ராக் கார்டனிலும் (Rock Garden) தமிழ்த் தொழிலாளர் பலர் பணிபுரிகின்றனர்.

5. கல் உடைப்பவர்களும் ஏனைய தொழிலாளரும்

தமிழ்நாட்டின் கீழ்க்கண்ட பகுதிகளைச் சேர்ந்த நாயக்கமார். தலைமுறை தலைமுறையாகக் கல் உடைக்கும் தொழிலில் ஈடுபட்டு முப்பதாண்டுகளாக மத்திய மாநிலத்தில் உள்ளனர். ஆண்டு தோறும் இவர்களுடைய எண்ணிக்கை கூடுதலாகி வருகிறது.

1) சேலம் மாவட்டம் கொல்லி மலைப்பகுதி உப்பிலியபுரமும் சுற்று வட்டமும்
2) கோயம்புத்தூர் மாவட்டத்தில் சில ஊர்கள்
3) திருச்சி மாவட்டம் முசிறி-துறையூர்ச்சாலையில் கண்ணனூர் அருகேயுள்ள கிளியனூர்ப்பட்டி
4) திருச்சி மாவட்டம் மணப்பாறை
5) புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலை, மாத்தூர்
6) மதுரைமாவட்டம் திண்டுக்கல்

மத்திய மாநிலத்தில் இவர்கள் குடியிருக்கும் , வேலை செய்யும் பகுதிகள் : ஜான்சி மாவட்டம் 500 குடும்பங்கள்; பந்தா மாவட்டம் நார்ணி 400 குடும்பங்கள்; சந்திரப்பூர் மாவட்டம் 200 குடும்பங்கள்; ஜபல்பூர் நகரும் சுற்றுப்புறமும் 1000 குடும்பங்கள்; ஜபல்பூர் மாவட்டம் பர்கி அணைக்கட்டு 150 குடும்பங்கள்.

தாராபூர் அண்டு கோ என்ற ஒப்பந்தக்காரர்கள் அணைக்கட்டு வேலைகளுக்கு இவர்களைத் தங்களுடைய தரகர்கள் வாயிலாக வரவழைத்தனர். அந்த வேலையில்லாதபோது இவர்கள் மலைகளில் கல் உடைக்கின்றனர்.

சொந்தமாகக் கல் உடைப்பவர்களும் உள்ளனர். இவர்கள் கட்டடங்களுக்கு வேண்டிய பெரிய கற்களை உடைத்துக் கொடுக்கிறார்கள்.

உள் ஒப்பந்தக்காரர்களுக்காக நாள் கூலிக்கு வேலை செய்பவர்களும் உள்ளனர்.

இவர்களுடைய சராசரி வருமானம் நாளொன்றுக்கு ரூ. 25 இங்கேயே குடும்பச் செலவுக்குச் சரியாக இருப்பதாகச் சொல்லு கிறார்கள். (ஒரு சிலர் சாராயம் குடிக்கின்றனர். சராசரி செலவு அந்த வகையில ஏழு ரூபாய் என்று என்னிடம் ஒப்புக்கொண்டனர்).

ஜபல்பூரில் நாகபுரிச் சாலை ஓரமாக உள்ள மதன் மகாலைச் சேர்ந்த பகுதியில் அண்ணா நகர் என்ற பெயரில் இவர்கள் குடிசை கட்டிக் கொண்டு தொகுப்பாக வாழ்கின்றனர். வெடி மருந்து வைத்து, அந்த மலையில் கல் உடைக்கின்றனர்.

புறம்போக்கு இடத்தில் மத்திய மாநில அரசினரிடம் எவ்வித இசைவும் பெறாமல் இவர்கள் குடிசை கட்டிக் கொண்டிருப்பதால இவர்களை அப்புறப்படுத்தும் முயற்சிகளை ஜபல்பூர் மாவட்ட ஆட்சியாளரும் காவல் துறையினரும் மேற்கொள்ளுகின்றனர் என்ன நேர்ந்தாலும சரி, காலி செய்ய மாட்டோம் என்ற உறுதி யுடன் இவர்கள் போராடியும் வழக்கறிஞர்களைக் கொண்டு வாதாடியும் வருகின்றனர். ''இருபது ஆண்டுகளுக்கு மேலாக இங்கு இருந்து வருகிறோம்; நாங்கள் இந்த நாட்டுக் குடிமக்கள், எங்களை அப்புறப்படுத்த ஒருவர்க்கும் உரிமை இல்லை'' என்பது இவர்களுடைய போர்க்குரல்.

Bharatia Quarry Workers Co-op.
Society, Anna Nagar, Nagpur Road
Sada Chowke.
Premnagar P. O.
Jabalpur-482 001,

என்ற முகவரியுடன் கூட்டுறவுச் சங்கம் அமைத்துக் கல் உடைக்கும் உரிமை ஆணை பெற்றுள்ளனர். மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பித்துக் கொண்டால் ஐம்பது ஆண்டுக்காலத்துக்கு இந்த உரிமம் செல்லுமாம். ஆண்டுதோறும் புதுப்பிக்க வேண்டும் என்று சட்டம் திருத்தப்பட்டுள்ளதாம்.

இவர்களுடைய குழந்தைகள் ஒரு சிலர் மட்டுமே பள்ளிக்குச் செல்லுகின்றனர்.

ஓரிரு பெண்கள் வெற்றிலை பாக்குக் கடை வைத்திருக் கிறார்கள்.

ஒரு சிலர் மட்டுமே உணவுப் பங்கீட்டுச் சீட்டு வாங்கியுள்ளனர். வேறு சிலர், உ. ப. சீ. பெறாத காரணம் அடிக்கடி வேலை செய்யும் இடத்திற்குக் குடிசையை மாற்றுவதாகும்.

ஒப்பந்தக்காரர், இவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்த்து, தேர்தல்களில் அவருடைய ஆட்களுக்கு வாக்களிக்கச் செய்கிறாராம். ஆனால் மக்கள் கணக்கெடுப்பில் இவர்கள் சேர்க்கப்படவில்லை என்று கூறுகின்றனர்.

அரசு புறம்போக்கில் ஒரு முருகன் கோயிலை 1967-இல் கட்டி, தொடர்ந்து நடத்தி வருகின்றனர். இவர்களே பூசாரிகளாக உள்ளனர். பங்குனி உத்தரத்தன்று காவடி எடுக்கின்றனர்.

1) Ramji Vehicle Factory
2) Madhya Pradesh Electricity Board அலுவலகத்திற்கு அருகேயுள்ள ராம்பூர் ஆகிய பகுதிகளிலும் இவர்கள் உள்ளனர்.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த உள் குத்தகைதார் (Sub-Contractor) ஒருவர் தமிழர் சிலரைக் கொத்தடிமைகளாகக் கொண்டு வந்தார். அந்த 6 குடும்பங்களைத் தமிழ்நாடு அரசு அலுவலர்கள் 1983 சூன் மாதம் மீட்டுச் சென்றனர். வேறு எங்கும் கொத்தடிமைகள் இருப்பதும் உறுதிப்படவில்லை.

கல் உடைக்கும் தமிழர் மத்திய மாநிலத்தின் பிற பகுதிகளிலும், மகாராட்டிரத்தில் யோட்மால் மற்றும் ஆந்திர எல்லையிலுள்ள மாவட்டங்களிலும் உள்ளனர். அவர்கள் இக்கட்டுரையின் தொடக்கத்தில் நாம் குறிப்பிட்ட பகுதிகளைத் தவிர்த்த தமிழ்நாட்டின் பிறபகுதியினர் ஆவர்.

பிற தொழில்கள்

இதுபோன்ற வேறு வேலைகளில் ஈடுபடும் தமிழரும் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். தாங்கள் வழக்கமாகப் பார்த்துவரும் வேலைக்கு ஏதாவது இடையூறு ஏற்பட்டால், ஆந்திராவிலிருந்து பத்து மூடை அரிசியை ஒவ்வொரு இரயிலிலும் ஏற்றி மத்திய மாநிலத்தில் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர்.

சண்டிகர், லூதியானா, பாட்டியாலா ஆகிய நகர்களில் சாலை போடுவது போன்ற வேலைகளைத் தமிழர் ஆண், பெண், குழந்தைகள் ஆகிய அனைவரும் செய்கின்றனர்.

தில்லியில் வீட்டு வேலை முதலியன செய்யும் தமிழ்ப்பெண்கள் ஏறத்தாழ ஐம்பதாயிரம் பேர் ஆவர் வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி வாழ்ந்து அன்றாட வருவாயை அஞ்சல் அலுவலகத்துச் சேமிப்பு வங்கியில் போட்டுவிடுகின்றனர். ஆண்டுக்கு ஒரு முறை மூட்டை முடிச்சு எதுவுமின்றி தங்கள் சொந்த மாவட்டமான சேலத்திற்குச் செல்லுகின்றனர். அப்போது அந்த ஊர் அஞ்சல் நிலையத்திற்குத் தங்கள் கணக்கை மாற்றிக் கொண்டு விடுவார்கள். தில்லியிலிருந்து தொடர்ச்சியாக இவர்கள் பயணம் செய்வதில்லை. ஏழு அல்லது எட்டு நகரங்களில் இறங்கி ஆங்காங்கு ஓரிரு நாள் வேலை செய்து அடுத்த இரயிலில் ஏறித் தமிழ்நாட்டை நோக்கிப் பயணம் செய்வர்

நீண்ட நெடுங்காலமாக மகாராட்டிர மாநிலம் சோழாப்பூரிலும் கோல்ஹாப்பூரிலும் முறுக்கு முதலிய தின்பண்டங்கள் செய்து அவற்றை விற்றுப் பலநூறு தமிழ்க் குடும்பங்கள் வாழ்க்கை நடத்தி வருகின்றன. ஆண்டுதோறும் சித்திரைத் திருவிழாவுக்கு மட்டும் இவர்கள் மதுரைக்கு வந்து 15 நாளில் திரும்புகின்றனர். இது போன்ற பல கூட்டங்கள் வடமாநிலங்கள் எல்லாவற்றிலும் உள்ளன.

சூரத்தில் வைரம் அறுக்கும் வேலையில் 500 தமிழ்த் தொழிலாளர் உள்ளனர். பட்டு ஆலைகளிலும் பட்டறைகளிலும் பல்லாயிரம் தமிழர் வேலை பார்ப்பதையும் அந்த நகரத்தில் கண்டேன்.

எத்தனை வகையான தொழில்கள் உண்டோ அத்தனையிலும் தமிழர்களைப் பார்க்க இயலும். எனவே வகைப்படுத்தவும் தொகைப்படுத்தவும் இயலாது.

6. கோயில்கள்

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற பழமொழியை முதுமொழியாகக் கொண்ட தமிழர், வட மாநிலங்களெங்கிலும் தமிழ்நாட்டுத் தபதிகளைக் கொண்டும், திராவிடக் கட்டடக் கலை முறைப்படியும், தமிழ்நாட்டிலிருந்து விக்கிரகங்களைக் கொண்டு போயும் கோயில்கள் கட்டி, தமிழ்நாட்டு ஆலயங்களில் நிகழும் ஆகமப்படி நடத்தி வருகின்றனர். அவர்கள் ஈடுபட்டிருக்கின்ற வேறெந்தப் பணியையும் விட ஆலயப் பணியே சிறப்பாகத் தெரிகிறது.

கோயில்கள் அளவில் சிறியனவாக இருக்கும் இடங்களில் கூட தமிழ்நாட்டுக் கோயில்களில் இருப்பது போன்ற உணர்ச்சி உண்டாகிறது.

தமிழ்நாட்டிலிருந்து காஞ்சி காமகோடி பீடம் சுவாமிகளான பெரியவரும் புதுப் பெரியவரும் அகோபில மடத்து ஜீயரும் மற்றும் சைவ, வைணவ மடங்களின் தலைவர்களும் வள்ளலார் கொள்கைகளைப் பரப்புகிறவர்களும், கிருபானந்த வாரியார் சுவாமிகளும், கதா காலட்சேப விற்பன்னர்களும், பக்திப் பாடல் குழுவினரும் அடிக்கடி வட மாநில நகர்களுக்குச் சென்று அங்கு வாழ்பவர்களின் ஆன்மிக உணர்ச்சிகளை ஊக்குவித்து வருகிறார்கள்.

பலவகைக் கோயில்கள்

விநாயகர், முருகன், சிவபெருமான், அம்மன், மாரியம்மன் முதலிய எல்லாத் தெய்வங்களுக்கும் வட மாநிலங்களில் கோயில்கள் இருக்கின்றன. வைணவக் கோயில்களும் ஓரளவு உள்ளன.

மகாராட்டிர மாநிலம் :

பம்பாய் மாநகரம்

விநாயகர் வழிபாட்டுக்குப் புகழ்பெற்ற இந்த மாநிலத்தில் தாராவி, மாதுங்கா இரயில் நிலையம் கோலிவாடா, விக்ரோலி புதிய பம்பாய், சாந்தா குரூஸில் ஏர் இந்தியா குடியிருப்பு, பாண்டுப், கோரேகான் ஆகிய பகுதிகளில் விநாயகர் கோயில்களைத் தமிழர் கட்டியிருக்கின்றனர்.

விநாயக வழிபாடு, மராத்தியரும் தமிழரும் இணைந்து வாழப் பெரிதும் பயன்படுகிறது.

செம்பூரில் மிகப் பெரிய அளவில் முருகன் கோயில் தமிழரால் கட்டப்பட்டிருக்கிறது. திருமண மண்டபம் இருக்கிறது. ஏதாவது ஒரு நிகழ்ச்சி இங்கு எப்போதும் நடந்த வண்ணமாக உள்ளது. முருகனுக்குரிய திருவிழாக்கள் பெருஞ்சிறப்புடன் கொண்டாடப் படுகின்றன.

விக்ரோலி இரயில் நிலையத்திற்கு அருகில் தமிழர் கட்டியிருக்கும் சிவன் கோயிலில் வைகாசி விசாகம் பெரிய அளவில் நடைபெறுகிறது.

செம்பூரைச் சேர்ந்த திலக் நகரில் அம்மன் கோயில் ஒன்று உள்ளது.

கோலிவாடா — வரதராசநகர், தாராவி, செம்பூர் — கோவண்டி, கோரேகான், மாரியம்மன் கோயில்களும் பாண்டுப் கங்கையம்மன் கோயிலும் நன்முறையில் இயங்கி வருகின்றன. புதிதாக மாரியம்மன் கோயில்களைக் கட்டுவதில் பம்பாயில் ஒரு வேகம் ஏற்பட்டிருக்கிறது.

பம்பாயில் உள்ள வைணவக் கோயில்களுள் பெரும்புகழ் பெற்றது பனஸ்வாடி - சார்னி சாலையிலுள்ள வேங்கடேசலபதி கோயில். 1910-ஆம் ஆண்டில் காஞ்சிபுரத்திலிருந்து பிரதிவாதி பயங்கரம் அனந்தாச்சாரி சுவாமிகள் பம்பாய்க்கு வந்தார். வடமொழியிலும் இந்தியிலும் அவருக்கு இருந்த புலமையை வியந்து வட இந்தியர் ஆயிரக்கணக்கில் அவருடைய சீடராயினர். அவர் விரும்பியவாறே காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் கோயிலையும் ஸ்ரீரங்கத்திலும் திருப்பதியிலும் உள்ள கோயில்களை

யும் நினைவூட்டும்படியான பெரியதொரு கோயிலை இராசத் தானத்து மார்வாரிகள் திராவிடக் கட்டடக்கலை முறைப்படி கட்டி, காஞ்சிபுரத்திலிருந்து அர்ச்சகர்களை வரவழைத்துப் பூசைகளை நடத்திவருகிறார்கள்.

சோமானி என்ற மார்வாரிச் செல்வர்கள் அறங்காவலர்களாக உள்ளனர். சுவாமிகளின் மரபினர்க்கு இந்தக் கோயிலில் சிறப்பு மரியாதைகளும் சில உரிமைகளும் இருந்து வருகின்றன. தங்க வாகனமும் தங்கத் தேரும் சோழர் காலத்துச் சிற்பங்களும் உள்ள இந்தக் கோயிலின் மதிப்பு ஐந்து கோடி ரூபாயாகும்.

செம்பூரில் இலட்சுமி நரசிம்மர் கோயில் உள்ளது. சமூக நலனுக்குப் பயன்படும் வகையில் இந்தக் கோயில் இயங்குகிறது. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம நாளும் பாடப்படுகிறது.

பாண்டுப் தமிழர் தங்களுக்கு ஓர் அனுமார் கோயிலை அமைத்துக் கொண்டுள்ளனர்.

ஸ்ரீரங்கத்தில் திருமடம் கொண்டுள்ள ஆண்டவன் சுவாமிகள் முயற்சியால் டொம்பிவிலியில் வெங்கடாசலபதி (பாலாஜி) கோயில கட்டப்பட்டிருக்கிறது.

பம்பாயில் தமிழர் ஏராளமாக உள்ள ''வடாயா'' பகுதியில் டாட்டா குடியிருப்புக்கு எதிரே ஸ்ரீ வெங்கடேசுவரா பாலாஜி மந்திர் என்ற திருப்பதி வெங்கடேசப் பெருமாள் கோயில் இருக்கிறது. மார்கழிகடைசி பத்து நாள்களிலும் நாள்தோறும் இலட்சார்ச்சனை செய்யப்படுகிறது ஏராளமான திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

மாதுங்காவில் சங்கரமடம் பெருஞ் சிறப்புடன் கட்டப்பட்டு, நன்முறையில் வைதிக காரியங்கள் யாவும் நடத்தப்பெற்று வருகின்றன. வேதங்கள் பயிலவும், விட்டுணு ஆயிரம் நாமம், லலிதா ஆயிரம் நாமம், சௌந்தர்ய லகிரி, சண்டி ஹோமம் வகுப்புகளுக்கு அவற்றில் ஈடுபாடு உள்ளவர்கள் தொடர்ச்சியாக வந்து கலந்து கொள்கின்றனர்.

சங்கர மடத்திற்கு எதிரில் உள்ள தென்னிந்திய பஜனை சபையில் இராசராசேசுவரி திருவுருவம் நிறுவப்பட்டுள்ளது. விட்டுணு ஆயிர நாம பாராயணமும் நடைபெற்று வருகிறது.

மாதுங்காவில் உள்ள ஆத்திக சமாஜம், தொடக்கத்தில் இராமர் கோயிலாக ஏற்பட்டது. பின்னர் இராசகோபுரமும் அனுமார்

சந்நிதியும் உருவாயின. குருவாயூரப்பன், ஐயப்பன், முருகன், நவக்கிரகங்கள் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கின்றன.

கேரளத்துத் தந்திரிகள் குருவாயூரப்பனுக்குப் பூசை செய்வதால் இந்தக் கோயில் கொச்சு குருவாயூர் என்று குறிப்பிடப்படுகிறது.

தென்னிந்தியர் எல்லோருக்கும் பொதுவான 50இற்கு மேற்பட்ட சமாஜங்கள் பம்பாயில் இயங்குகின்றன.

சைவ சமயாச்சாரியாரான நால்வரை வழிபடும் பழக்கத்தைப் பம்பாயில் பரப்பியவர் திரு. ஏ. சுப்பராயன். இவர், கோவையிலிருந்து பம்பாய்க்கு வந்து 'கால்டெக்ஸ்' நிறுவனத்தில் பெரும் பொறுப்பு வகித்தவர். திருமுறை, பெரியபுராண வகுப்புகள் நடத்தியவர். திருச்சி-தென்னூர் திரு. ஜி. வன்மீக நாதம் இவருடைய மாணவராவார். திரு. சுப்பராயனுக்கு இப்பொழுது வயது 80.

கொலாபாவில் இந்திய இயல் பற்றிய அனந்தாச்சாரி ஆராய்ச்சி நிலையம், இந்தியப் பண்பாடு தத்துவம் பற்றிய ஆராய்ச்சி நிலையமாகப் பம்பாய்ப் பல்கலைக் கழகத்துடன் இணைந்திருக்கிறது.* இங்குள்ள 8000 நூல்களில் சைவ வைணவச் சமயத் தொடர்பான ஓராயிரம் தமிழ்நூல்கள் இடம் பெற்றுள்ளன. திவ்வியப் பிரபந்த விரிவுரை போன்ற தமிழ்நூல்களை இவர்கள் இந்தி, தெலுங்கு, வடமொழி போன்ற பிறமொழிகளில் மொழி பெயர்த்துள்ளனர். பல கருத்தரங்குகள் இங்கு நடைபெறுகின்றன.

இவர்களுடைய வெளியீடுகளும் இங்குள்ள ஓலைச்சுவடிகளின் விவரங்கள் உள்ள பட்டியலும் தமிழ்ப்பல்கலைக்கழகத்திற்கு அன்பளிக்கப் பெற்றுள்ளன.

தமிழர் இருவர் இந்த நிறுவனத்தின் வாயிலாக டாக்டர் பட்டம் பெற்றுள்ளனர். மேலும் 13 தமிழர் இந்தப் பட்டம் பெறுவதற்கான ஆராய்ச்சிக்குப் பயின்று கொண்டிருக்கின்றனர்.

---

* **K. K. A. Venkatachari, Ph.D.,** Founder Director & Professor, Ananthacharya Indological Research Institute, G. D. Somani Memorial School Blds., Cuffe Parade, BOMBAY – 5.

புனா

150 ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலேய இராணுவத்தாருக்குப் பல உதவிகள் செய்து புனாவுக்கு வந்து பெரும்புகழ் பெற்றுச் செல்வரானார் சர்தார் முதலியார் என்ற தமிழர். இவர் கட்டிய ஆஞ்சனேயர் கோயிலும் விட்டர் மந்திரும் மராட்டியரால் இப்போது நடத்தப் படுகின்றன. சர்தார் முதலியாரின் குடும்பத்தார் அறங் காவலர்களாக இருந்து வருகின்றனர்

நாகபுரி

இங்குச் சில ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டுப் பாணியில் சர்வேசுவர தேவாலயம் கட்டப்பட்டிருக்கிறது. விநாயகர், முருகன், சிவன், அம்பாள், அநுமான், இலட்சுமி நரசிம்மர், இராதாகிருட்டிணன், நவக்கிரக சிலைகள் உள்ளன.

நாகபுரியில் மாதர் சங்கத்தார் செவ்வாய்க் கிழமைகளிலும் சஷ்டி நாள்களிலும் திருப்புகழ் பாராயணம் செய்து வருகின்றனர்.

தைப் பூச விழா பெரிய அளவில் கொண்டாடப்படுகிறது. பிற மொழியாளரும் காவடி எடுக்கின்றனர்.

அலுவலகத் தமிழர் இராம நவமியைப் பெரிய அளவில் கொண்டாடுகின்றனர். கதை விரிவுரைகள் (கதா காலட்சேபங்கள்) தமிழில் நடக்கின்றன.

பகவத் பாதாள் சபா, ராம் நகரில் 50 ஆண்டுகளாக நடை பெறுகிறது. சொந்தக் கட்டடம் உண்டு. இராமநவமி, சீதா கலியாணம், இராதா கலியாணம் ஆகியவை உற்சவமாய்க் கொண்டாடப்படுகின்றன. அவற்றையொட்டிய சொற் பொழிவுகள் நடைபெறுகின்றன. சபாவும் சர்வேசுவரர் கோயிலும் இணைந்து செயல்படுகின்றன.

நாசிக்-பஞ்சவடி

ஜோதிர்லிங்கத் தலமாகிய திரியம்பகத்துக்கு வாயிலாக உளளது கோதாவரிக் கரையில் உள்ள பஞ்சவடி. இங்கு 1963இல், பம்பாயில் வாணிகம் செய்த நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் தண்டாயுதபாணி கோயில் கட்டினர். 1972இல் இக் கோயில் புதுப்பிக்கப் பெற்று, குடமுழுக்கு விழா நடைபெற்றது. தைப்பூசத்திற்குப் பம்பாயிலிருந்து 1000 இற்கும் மேற்பட்ட தமிழர் இங்கு வருகின்றனர்.

சதாரா

இங்கு நடராசர் கோயில் ஒன்று 50 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது கோடீசுவராராகிவிட்ட உடுப்பி உணவு விடுதி உரிமையாளர் ஒருவர், காஞ்சி காமகோடி பீடம் பெரியவர்கள் அருளாணைப்படி 10இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்க முன்வந்திருக்கிறார் எஞ்சிய தொகை பலரிடமும் வசூலிக்கப் பெற்று வருகிறது

இந்தக் கோயில் சிதம்பரம் நடராசர் கோயில் பாணியில் உருவாகும் தமிழ்நாட்டுத் தபதிகள் கட்டட வேலையைத் தொடங்கியிருக்கின்றனர்.

இராசத்தான்

புஷ்கரில் பிரதிவாதி பயங்கரம் அனந்தாச்சாரியாரின் பாட்டனார் கிருஷ்ணமாச்சாரியார் என்பவரின் சீடர்கள் தமிழ்நாட்டு முறைப்படி 'லட்சுமி நாராயணர்' கோயிலைக் கட்டியிருக்கிறார்கள்

கல்கத்தாவைச் சேர்ந்த பங்கூர் குடும்பத்தார் இந்தப் புஷ்கர் நகரத்திலேயே வடகலை சம்பிரதாயப்படி ஒரு கோயிலை அமைத்திருக்கிறார்கள்.

'ரோல்' (Role) என்னும் ஊரில் பிரதிவாதி பயங்கரம் அனந்தாச்சாரியார் கட்டிய பாலாஜி கோயில் இருக்கிறது

மத்திய மாநிலம்

ஆதி பராசக்தி மாரியம்மன் கோயில், Madras Line, Lal Metti Area. என்ற இடத்தில் ஜபல்பூர் இரயில் நிலையத்திலிருந்து 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது ஆங்கிலேயர் ஆட்சியின் தொடக்கத்திலிருந்து சென்னையில் இயங்கிவந்த துப்பாக்கிப் படையினரின் தொழிற்சாலை மூடப்பட்டு 1904இல் சபல்பூருக்கு மாற்றப்பட்டது. அப்போது வந்த தமிழர்களில் சிலர், 1906இல் ஒரு மரச்சிலையுடன் இந்தக் கோயிலை உண்டாக்கினர். 1930 இல் இச்சிலை நிறுவப்பட்டது. சில காரணங்களினால் முசுலீம்களும் மற்றும் ஆதிவாசிகளும் சேர்ந்து இவ்வாலயத்தின் சிலையையும் கட்டடத்தையும் சிதைத்து விட்டனர். பின்னர் அவர்கள் கடும் தொல்லைகளுக்கு ஆளாகி ஆதி பராசக்தி மாரியம்மனை வழி படுவதில் ஈடுபட்டனர்.

ஆலயத்தைப் புதுப்பித்த பின்னர் சலவைக் கல்லால் ஆன அம்மன் திருவுருவம் ஒன்று பூசைக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கோயிலைச் சேர்ந்த மண்டபத்தில் வியாழக்கிழமை தோறும சததிய சாயி பஜனை நடைபெறுகிறது.

ஆடி, தைத் திங்கள்களில் இலட்சார்ச்சனை நடைபெறுகிறது. பூசைகள் தென்னிந்திய முறைப்படி, இந்தி மொழியாளர் ஒருவரால் செய்யப்படுகின்றன.

பிலாய்-ரூபா பாண்டு என்னும் குடியிருப்புப் பகுதியில் வாழும் பிலாய் எஃகு ஆலைத் தொழிலாளர்களாகிய தமிழர் மாரியம்மன் கோயில் கட்டியிருக்கின்றனர். சித்திரை மாதத்தில் காவடி எடுத்து அலகு குத்திக் கொள்கின்றனர்.

குசரத்

பரோடா நகரில் புகழ்மிக்க ஒரு கோயிலைத் தமிழர் நடத்தி வருகின்றனர். அந்தக் கோயிலின் ஆட்சி குறித்து தமிழர்க்கிடையே கட்சிகள் உள்ளன.

ஆமதாபாத்தில் தமிழர் கோயில்கள் மூன்று. அரிகாலனியில் முத்துமாரியம்மன் கோயில் உள்ளது. ஏனைய இரண்டுகோயில்களை ஆலைத் தொழிலாளர் அவர்கள் வாழும் கோக்ரா பகுதியில் கட்டியிருக்கின்றனர்.

பாலமுருகன் கோயில், ஒரு குசரத்தியரின் வீட்டில் வேல் ஊன்றித் தொடங்கப் பெற்றது. இப்போது இந்தக் கோயில் வழிபாட்டிற்கு ஒவ்வொரு கார்த்திகைக்கும் ஆறு வெள்ளிக்கிழமைகளிலும் தமிழரும் பிறமொழியாளரும் வருகின்றனர்.

தேவாரப் பாடல்களும், அபிராமி அந்தாதியும், நாதசுரமும் எப்போதும் உண்டு. தைப்பூசத்திற்கும் பங்குனி உத்திரத்திற்கும் 20,000 மக்கள் கூடுகின்றனர்.

மாரியம்மன் கோயில் 1934ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. ஆலைகளும், திருநெல்வேலி மாவட்டத்துத் தேவர் ஒருவரும் வழங்கிய நன்கொடைகளைக் கொண்டு இக்கோயில் 1971இல் புதுப்பிக்கப்பட்டது.

ஆமதாபாத் நகர்ப் பகுதியில் வைதிக சமாஜமும் ஆஸ்திக சமாஜமும் நடைபெறுகின்றன. வைதிக சமாஜத்தில் ஆன்மிக

நிழ்ச்சிகளும், கலைநிகழ்ச்சிகளும் நிகழும். ஆஸ்திக சமாஜத்தில் கதா காலட்சேபம், உபன்யாசம், ருத்ர பூசை நடைபெறும்.

சூரத்தில் குசரத்தியர் வழிபடும் கடவுளரையே தமிழர் வழிபடுகின்றனர். தமிழர்க்குத் தனிக் கோயில்கள் இல்லாதது காரணமாக இருக்கலாம்.

சண்டிகர்

இங்கு விமானப் படையில் பணிபுரிபவர் ஹைகிரவுண்டு பகுதியில முருகன் கோயிலைக் கட்டியிருக்கிறார்கள்.

31 D செக்டரில் மாஸ்டர் வாரண்ட் ஆபீசர் திரு. சுந்தரம் இல்லத்தில ஹரி பஜனை சங்கம் இயங்குகிறது. வடமொழி நூல்களும் முருகவழிபாடு பற்றிய தமிழ்நூல்களும் இங்கு உள்ளன. சனிக்கிழமைகளிலும், திருக்கார்த்திகை, இராமநவமி, ஜென்மாஷ்டமி நாட்களிலும் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. தில்லி, கான்பூர், சென்னை நகரங்களிலிருந்து விற்பன்னர்களை வரவழைத்து, சீதா கல்யாணம், இராதா கல்யாணம் முதலிய விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

தில்லி

பம்பாயைப் போல் இங்கும் எராளமான கோயில்களைத் தமிழர் கட்டியிருக்கின்றனர். சரோஜினி நகர் ஏ பி. அவென்யூவில் இர்வின் சாலை பிள்ளையார் கோயில், பெருந்தலைவர் காமராசர், நாடாளுமன்ற உறுப்பினர் நாகப்ப செட்டியார் ஆகியோர் முயற்சியில் 1953 அளவில் கட்டப்பட்டது.

இந்நகரில் உள்ள கோயில்களில் மிகவும் புகழ் பெற்றது இராமகிருஷ்ணாபுரத்தில் உள்ள உத்தரசுவாமி கோயில். தமிழ்நாட்டில்உளள முருகன்கோயிலை நினைவுபடுத்தும் வகையில் கட்டப்பட்டு சுவாமிநாத சாமி சேவா சமாஜத்தால் நடத்தப்படுகிறது. திருப்பனந்தாள் காசிமடத்து ஓதுவார் இக்கோயிலில் நாள்தோறும் திருப்புகழும் தேவாரமும் ஓதுகிறார். கந்தர்சஷ்டி விழா பெரிய அளவில் நடைபெறுகிறது. இசை நிகழ்ச்சியும் நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகளும் அவ்விழாவின் முக்கியக் கூறுகளாகும்.

சப்தசுரமண்டபம் மதுரை மீனாட்சியம்மன் கோயிலை நினைவுபடுத்தும்.

இந்திரபுரியில் தண்டாயுதபாணி கோயில் அரைகுறையாக் உள்ளது. இப்பகுதிக்கு அருகே உள்ள ஜே ஜே காலனியில் தொழி

லாளர்கள் ஒரு மாரியம்மன் கோயிலையும், ஜனக்புரியில் அலுவலகத் தமிழர் இராசராசேசுவரி கோயிலையும் கட்டியிருக்கின்றனர்.

இராமகிருஷ்ணபுரத்தில் உள்ள வெங்கடேசப் பெருமாள் கோயில் என்ற பாலாஜி கோயில் செல்வச் செழிப்புடையது. நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், திருப்பாவை பாராயணப் போட்டிகள் நடைபெறுகின்றன.

சவகர்லால் நேரு பல்கலைக் கழகத்திற்கு எதிரில் பேல்சராப் என்னுமிடத்தில் ''நின்றான் இருந்தான் கிடந்தான்'' என்ற தத்துவத்தை விளக்கும் வகையில் வைகுண்ட நாதர் கோயில் கட்டப்பட்டிருக்கிறது.

லோடி காலனியில் இன்ஸ்டிடியூஷன் ஏரியாப் பகுதியில் இராமர் கோயில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. உருவச்சிலை பிரதிட்டை செய்யப்படவில்லை.

தமிழரே நடத்தும் ஐயப்பன் கோயில் ஒன்றும் தில்லியில் உள்ளது.

இரமணாசிரமம், சங்கரமடம், சுத்த சன்மார்க்க சபை, இராமலிங்க சமாஜம், பஜனை சமாஜம் முதலிய அமைப்புகளுக்குக் குறைவில்லை.

தருமபுரம் ஆதீனத்தார் மற்றும் கிருபானந்த வாரியார் சுவாமிகள் ஆதரவுடன் 1962இல் தொடங்கப் பெற்ற சைவப் பேரவை சைவச் சமயாச்சாரியார் விழாக்களை நடத்தியும் திருமுறைகளைப் பரப்பியும் வருகிறது.

வட மாநிலங்களில் தமிழர் வாழும் எல்லாப் பகுதிகளிலும் வரலட்சுமி நோன்பு, கோகுலாஷ்டமி, நவராத்திரி, கந்தர் சஷ்டி, பங்குனி உத்தர விழாக்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. பொங்கல் விழாவிற்கு அவ்வளவு சிறப்பு கிடையாது. இந்தக் குறையை நீக்க தமிழக அரசு, வடமாநிலங்களில் மாறிமாறிப் பொங்கல் விழாவை நடத்த வேண்டுமென்று தமிழர் தலைவர் சிலர் விரும்புகின்றனர்.

ஆண்டுதோறும் தில்லியில் நடைபெறும் குடியரசு நாள் விழாவிற்குத் தமிழ்நாட்டிலிருந்து செல்லும் நாட்டுப்புறக் கலைஞர்களைத் தில்லித்தமிழர்கள் பயன்படுத்தி, தமிழ்நாட்டிற்குரிய பழங்கலைகளைக் கண்டு மகிழ்கின்றனர். விழா முடிந்து திரும்பி வரும்போது இந்தக் கலைஞர்கள் வேறு சில மாநிலங்களுக்குச் சென்றுவரும் ஏற்பாடு பயனுடையதாக இருக்கும்.

ஏனைய மதத்தினர்

எல்லா நகரங்களிலும் தமிழ்நாட்டுக் கிறித்தவர்கள் உள்ளனர். அவர்களுக்காகத் தமிழில் வழிபாடு நடைபெறும் தேவாலயங்கள, செவன்த் டே அட்வென்டிஸ்ட், ரோமன் கத்தோலிக்கம், தென்னிந்திய திருச்சபை, மெத்தாடிஸ்ட் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த தேவாலயங்கள் எல்லா நகரங்களிலும் பல பகுதிகளில் உள்ளன. கிறித்தவ மத வெளியீடுகளும் தமிழில் அச்சிடப்படுகின்றன. தமிழ்நாட்டு முசுலிம்கள் வழிபடும் மசூதிகள் பம்பாயில் சில இடங்களில் உள்ளன. பகுத்தறிவாளர் பல்லாயிரம் பேர் பம்பாயிலும் தில்லியிலும் புனாவிலும் இருக்கின்றனர்.

திருப்பதி தேவத்தானத்தின் அலுவலகங்கள்

தில்லி, பம்பாய், நாகபுரி முதலிய வட மாநில நகரங்கள் பலவற்றில், திருமலை-திருப்பதி தேவத்தானம் தகவல் நிலையங்களை வைத்திருக்கிறது. அந்த நிலையங்களில் திருப்பதி கோயிலைப்பற்றிய நூல்கள் விற்பனை செய்யப்படுகின்றன. திருப்பதி கோயிலுக்குச் செல்லத் தேவையான எல்லாத் தகவல்களும் அறிமுகக் கடிதங்களும் கொடுக்கப்படுகின்றன. கருங்கல்லால் ஆன வெங்கடாசலபதியின் திருவுருவமும் உண்டியல் பெட்டியும் வைக்கப் பெற்றிருக்கின்றன. இந்தத் தகவல் நிலையங்கள் நிகர வருமானத்தை ஈட்டுகின்றன.

நாகபுரி இப்போது மகாராட்டிர மாநிலத்தில் ஒரு மாவட்டத் தலைநகராகவும் விதர்ப்பா என்ற பகுதி அடங்கிய பல மாவட்டங்களுக்குத் தலைநகராகவும் ஆண்டுக்கொருமுறை மகாராட்டிர சட்டப் பேரவை கூடும் நகராகவும் இருக்கிறது. 1960வரை இந்த நகரத்தைத் தலைநகராகக் கொண்டு ‘Central Provinces and Berar’ என்ற பேரில் ஒரு மாநிலம் இருந்தது. அந்த மாநிலத்தின் ஆளுநராக டாக்டர் பட்டாபி சீதாராமையா என்ற ஆந்திரர் நியமிக்கப்பட்டார். அங்குப் பல்லாயிரம் ஆந்திரர் இருந்த போதும் தமக்கு ஏன் வரவேற்பு கொடுக்கப்படவில்லை என்று அவர் கேட்டார். ஆந்திரருக்கு ஒரு சங்கமும் இல்லை என்று அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

‘அரசு இடம் கொடுத்தால் கட்டடம் கட்டிக் கொள்வீர்களா?’ என்று ஆளுநர் பட்டாபி சீதாராமையா நாகபுரி ஆந்திரரைக் கேட்டார். அவர்கள் தங்களுடைய ஆற்றாமையை அவரிடம் கூறினர். உடனே அவர் திருப்பதி தேவத்தானத்துடன் தொடர்பு

கொண்டு தேவத்தானச் செலவிலேயே தகவல் நிலையக் கட்டடம் பெரிய அளவில் கட்டவும், அதில் பெரும்பகுதியை வாடகையில்லாமல் ஆந்திர சங்கம் என்றென்றும் பயன்படுத்திக் கொள்ளவும் ஏற்பாடு செய்தார்.

இராமேசுவரத்தையும் கன்னியாகுமரியையும் பற்றிக் கேள்விப்படாத இந்தியர் எவரும் இல்லை. அடுத்தபடியாக மதுரைக் கோயிலும் ஸ்ரீரங்கம் கோயிலும் காஞ்சிபுரத்திலுள்ள கோயில்களும் வடமாநிலங்களெங்கும் அறிமுகமாகியிருக்கின்றன. இந்தக் கோயில்களுக்குத் திருப்பதி தேவத்தான தகவல் நிலைய அடிப்படையில் மாநிலத் தலைநகரங்களில் அலுவலகங்களை அமைத்தால் இந்திய ஒருமைப்பாட்டுக்கு உதவுவதோடு, நமது கோயில்களுக்கு வருவாயையும் பெருக்கிக் கொள்ள இயலும்.

வட மாநிலங்களில் சிறு நகரங்களில் உள்ள கோயில்களுக்கு மட்டும் நிதிப்பற்றாக்குறை உள்ளது. இந்துசமய அற நிலையத் துறையினர் இரண்டு ஆண்டுகளுக்கு மட்டும் ஆணையருடைய நிதியிலிருந்து 25,000 ரூபாய்வரை வழங்கி அதனுடைய பயனைச் சீர்தூக்கிப் பார்க்கலாம்.

0——0

7. தமிழ்க் கல்வி

பிற மொழியின் ஊடுருவல்களுக்கிடையே வட மாநிலங்களில் தமிழர் வாழ்கின்றனர். வயதானவர்கள் தமிழ்நாட்டில் படித்து, அங்கு வேலை தேடிச் சென்றவர்கள். வட மாநிலங்களிலேயே பிறந்து வளர்ந்த புதிய தலைமுறைத் தமிழர் நிலை முற்றிலும் மாறுபட்டது.

வடமாநிலங்களில் வாழும் தமிழ் இளைஞரின் செவிகளில் அல்லும் பகலும் பல்வேறு மொழிகள் ஒலிக்கின்றன. அவர்கள் பேசி உறவாடும் நண்பர்களின் தாய்மொழி தமிழ் அன்று. அவர்களுடைய குடும்பங்கள் வாழும் பகுதிகளிலும் தமிழ்மொழிச் சூழல் கிடையாது. பம்பாய் மாநகரத்தில் நாட்கூலியாக வேலை பார்க்கும் தமிழர் தொகுப்பாக வாழும் பகுதிகள் மட்டும், இந்த விதிக்கு விலக்கானவை.

பெரும்பாலான தமிழ்க் குடும்பங்களில் அண்ணனும் தங்கையும் ஆங்கிலத்திலும் இந்தியிலும் ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டுக் கொள்வதும் அந்த மொழிகளைத் தெரியாத தாய், தமிழில் பேசி அவர்களைச் சமாதானப்படுத்துவதும் நாள்தோறும் நடைமுறை நிகழ்ச்சிகளாக உள்ளன.

'ஓ, சாரி எனக்குத் தமிழ் படிக்க வராது' என்று சொல்லும் தமிழன்பர்கள் எண்ணிக்கை ஆண்டுதோறும் பெருகிவருகிறது.

35 பைசா என்று சொன்னால் புரியாமல் 'தற்டிபைஸ்' என்று சொன்னதும் புரிந்து கொள்ளும் தமிழ்க் குழந்தைகளுக்குக் குறைவே இல்லை.

''முஃப்தாவா குடுக்கிறான்? ... அவன் மர்ஜிப்படி செய்துட்டுப் போறான்'' என்றெல்லாம் தில்லித் தமிழர் மிகச் சாதாரணமாகப் பேசுவார்கள். 'முஃப்த்' என்றால் இனாம் அல்லது

அன்பளிப்பு என்று பொருள்; 'மர்ஜி' என்றால் 'அவனுடைய விருப்பம் போல' என்று பொருள். இவ்வாறு பஞ்சாபி, உருது போன்ற சொற்களெல்லாம் தமிழ்ப் பேச்சில் அவ்வப் பகுதித் தமிழரிடையே மிகுந்து காணப்படுகின்றன.

ஆங்கிலோ இந்தியர் என்ற பெயரில் ஓர் இனம் நிலவுவதைப் போலத் தமிழ்மொழியைப் பேசக்கூடத் தெரியாத ஒரு புதிய தலைமுறை தமிழ்க் குடும்பங்களில் இப்போது உள்ளது. இவர்கள் நிலையே இப்படி எனின், இவர்களுடைய மக்கள் தமிழ்மொழியைப் படிப்பார்கள் என்று நாம் எவ்வாறு எதிர்பார்க்க இயலும்?

தமிழ்மொழியைப்பேசுபவர்களுடைய எண்ணிக்கை குறைந்து வருவதைத் தடுக்கத் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் இன்றியமையாதன என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர்.

ஐந்து வகைகள்

இந்தக் கட்டுரையில் வட மாநிலங்களின் தமிழ்க் கல்வி நிலையை ஐந்து வகைகளாகப் படம்பிடித்துக் காட்டுவோம்.

(1) தமிழ்க் குழந்தைகள் தமிழ் படிக்க ஏற்பட்ட பள்ளிகள்.

(அ) முறையான பள்ளிகள்

1. தமிழ் பயிற்சி மொழியாக உள்ள பள்ளிகள்
2. ஆங்கிலப் பயிற்சி மொழிப் பள்ளிகள்
3. பம்பாய் மாநகராட்சிப் பள்ளிகளின் பிரச்சினைகள்.

(ஆ) பகுதிநேரப் பள்ளிகள்

தில்லியிலும் பம்பாயிலும் பல பள்ளிகளில் தகுதி நிறைந்த தமிழ் ஆசிரியர்களும் உள்ளனர். 'ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை' என்பது போல ஏதோ தமிழ் படித்த உள்ளூர் அன்பரை ஆசிரியராக வைத்துக் கொண்டு தமிழ் கற்பிக்கும் பள்ளிகளும் உள்ளன.

(2) தமிழ்ப் புலவர் பட்டம் பெற நடத்தப்படும் பள்ளிகள்

(3) அஞ்சல்வழிக் கல்வி பயிலும் வடமாநிலத் தமிழர்களுக்கு உண்டாகும் சிக்கல்கள்

(4) தமிழ் இலக்கிய நயங்களைச் சுவைக்க விரும்பும் முதியோருக்காகவே நடத்தப்பெறும் வகுப்புகள்

(5) ஏனைய மொழியினருக்குத் தமிழ் கற்பிக்கும் முயற்சிகள்.

இவற்றை மாநில வாரியாக ஆராயலாம்.

மகாராட்டிரம்

பம்பாய் மாநகரத்தில் சிறந்த முறையில் தமிழ்க்கல்வி பெறுவதற்குரிய பள்ளியாக இருப்பது திருவள்ளுவர் மன்றம், பாண்டுப் (Bandup) பகுதியில் நடத்திவரும் பிரைட் பள்ளி (Brite School). இப்பள்ளியின் ஆட்சிக்குழுவிற் தப்புரவலராக இருப்பவர் முத்தமிழ்க் காவலர் டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம் ஆவார். இப்பள்ளி 1970-இல் தொடங்கப் பெற்றது. கிண்டர் கார்டன் முதல் பத்தாம் வகுப்பு வரை உள்ளது. ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாகக் கொண்டு 1100 மாணவரும், தமிழைப் பயிற்சி மொழியாகக்கொண்டு 8, 9, 10 வகுப்புகளில் 100 மாணவரும் படிக்கின்றனர். எல்லா வகுப்புகளிலும் தமிழ்ப்பயிற்சிமொழி உளது.

இப்பள்ளி, பம்பாய்த் தமிழர் பேரவையின் ஆதரவை இப்போது பெற்றிருக்கிறது. ஏற்கெனவே பெரிய இடமும் ஓரளவு கட்டடமும் இருப்பதால் இப்பள்ளிக்குச் சிறந்த எதிர்காலம் உண்டு.

வள்ளல் மு. வரதராசனார் பெயரால் அம்பர்நாத்தில் இயங்கும் பள்ளி, தாராவியில் இயங்கும் மக்கள் நலக் கல்விக் கழகத்தின் பள்ளி, கோரேகான் மேற்குப் பகுதில் கோட்பந்தர் சாலையில் உள்ள விவேக் வித்தியாலய உயர்நிலைப்பள்ளி, மேற்கு முல்லண்டிலுள்ள வாணி வித்தியாலயா உயர்நிலைப்பள்ளி, செம்பூரிலுள்ள சரசுவதி வித்தியாலயம், மேற்கு அந்தேரியில் ஸ்ரீராம் நகரிலுள்ள ஸ்ரீராம் வெல்பேர் உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றில் தமிழ் ஒரு மொழிப் பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. தமிழருக்கான பல பள்ளிகளை மேன்மேலும் தொடங்க பம்பாய்த் தமிழர் பேரவை திட்டமிட்டு வருகிறது.

வடலா பகுதியிலுள்ள South Indian Welfare Society அதனுடைய வடாலா பள்ளியில் 1981வரை தமிழ்ப் பயிற்சி வகுப்புகளை நடத்தி வந்தது, பிறகு அது கைவிடப்பட்டிருக்கிறது. தமிழ்ப் பயிற்சி வகுப்பை ஆங்கிலப்பயிற்சி வகுப்பாக மாற்றினால், ஒவ்வொரு வகுப்பிற்கும் (Section) ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,30,000 கூடுதலான வருமானம் கிடைப்பதே காரணம். கல்வி நிலையங்கள் வணிக நிலையங்கள் என்பது வெளிப்படை.

தனியார் பள்ளிகளில் தமிழ் படிக்கும் 8,000 பேர், பம்பாய் மாநகராட்சிப் பள்ளிகளில் படிக்கும் 16,000 பேர் ஆக 24,000

தமிழ் மாணவர்களுக்குப் பம்பாய்த் தமிழர் பேரவை தமிழ்நாடு அரசின் பாடநூல் நிறுவனம் வெளியிடும் தமிழ்ப்பாட நூலை வாங்கி அன்பளிப்பாக வழங்குகின்றது.

மாணவர்களுக்குத் தேவைப்படும் குறிப்பேடுகளைப் பம்பாய்த் தமிழர் பேரவை நூறாயிரக்கணக்கில் அச்சிட்டு அடக்க விலைக்குக் கொடுத்து வருகிறது.

பம்பாய் மாநகராட்சிப் பள்ளிகள்

பம்பாய் மாநகராட்சி நடத்தும் பள்ளிகளில் 7 ஆம் வகுப்பு வரை தமிழ் ஒரு பயிற்சி மொழியாக இருந்து வருகிறது. 8 ஆம் வகுப்பில் தமிழ்ப் பயிற்சி மூலம் படிக்க விரும்புபவர்கள் பாண்டுப் பிரைட் மேல்நிலைப்பள்ளிக்கு மட்டுமே செல்ல வேண்டியிருக்கிறது. நெடுந்தொலைவுக்கு அப்பாலிருந்து மாணவர்கள் வருவார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

மாநகராட்சிப் பள்ளிகளில் தமிழ்ப் பாடத்திற்குத் தமிழகப் பள்ளிகள் பயன்படுத்தும் பாடநூல்கள் ஏற்றுக் கொள்ளப்பெற்றிருக்கின்றன.

கணிதம், அறிவியல், வரலாறு போன்ற பிற பாடங்களைத் தமிழ்ப் பயிற்சி மொழி வாயிலாகப் படிக்கும் மாணவர், மகாராட்டிர அரசின் பாட நூல்களையே பயிலவேண்டும். அந்த நூல்களைத் தமிழில கற்பிக்கும் ஆசிரியர்கள் அவற்றைத் தாங்களே மொழி பெயர்த்துக் கையால் எழுதியிருக்கின்றனர். இந்தப் பாடங்களை மாநகராட்சியினர் 'ரோட்டா பிரிண்ட்' செய்து கொடுக்கின்றனர். இது ஒருவகையான சைக்ளோஸ்டைல்.

இவ்வாறு வழங்கப்படும் தமிழ் நூல் ஒன்றை நான் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு 7-9-1983இல் வழங்கியிருக்கிறேன். இந்தத் தாள்கள் ஒரு மாதத்திற்குள் கிழிந்து விடுவதால் தமிழ்ப் பயிற்சி மாணவர் அரும்பாடுபடுகின்றனர். மூன்றாவது மாதத்திற்குப்பிறகு எந்தக் குழந்தையிடமும் இந்தப் புத்தகங்கள் இருப்பதில்லை. ஆசிரியர்கள் நாள்தோறும் கரும்பலகையிலேயே எழுதிப்போடுகிறார்கள்.

இந்தக்குறையை நீக்க, தமிழ்ப் பல்கலைக் கழகம் நடவடிக்கை எடுக்கலாம். ஒவ்வொரு வகுப்புக்கும் பயன்படுத்தப் பெறும் நூல்களை வரவழைத்து அவற்றை அச்சிடலாம். பம்பாய் மாநகரத்தினரே அவற்றை விலைக்கு வாங்கி மாணவர்களுக்கு

அன்பளிப்பாக வழங்க (பம்பாய் மாநகராட்சியினர்) முன் வருவார்கள் என்று நம்பகமாகத் தெரிகிறது.

இது தொடர்பாகப் பம்பாய் மாநகராட்சியின் தமிழ்ப் பள்ளிக்கூடங்களுக்கான கல்வி அலுவலருடனும் பம்பாய்த் தமிழர் பேரவையுடனும் உடனடியாகத் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பது நன்று.

ஆசிரியர்கள் பிரச்சினை

மாநகராட்சிப்பள்ளிகளில் பணிபுரியத் தகுதி நிறைந்த தமிழ் ஆசிரியர்களை அனுப்ப வேண்டும் என்று 1982இல் தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு திரு. அரங்கநாயகம் பம்பாய்க்குச் சென்றிருந்தபோது அவரிடம் தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்த நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

தமிழ்ப் புலவர் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்குத் தமிழக அரசு பி.இ.டி. (B.Ed.) பட்டம் பெற்றவர்களுக்கு உரிய ஊதியம் வழங்குகிறது. மகாராட்டிர மாநில அரசு தமிழ்ப் புலவர் பட்டத்தை பி.இ.டிக்குச் சமமானதாக ஏற்றுக்கொள்ளவில்லை.

பகுதி நேர வகுப்புகள்

பம்பாய்த் தமிழ்ச் சங்கம் ஞாயிறு தோறும் பிற்பகலில் இந்த வகுப்புகளை இலவசமாக நடத்தி வருகிறது. ஆங்கிலப் பள்ளிகளில் படிக்கும் தமிழ்க்குழந்தைகளுக்காக முதல் வகுப்பும் இரண்டாம் வகுப்பும் நடைபெற்றுவருகின்றன. தமிழ்நாட்டுப் பாடநூல்களை வாங்கி, பம்பாய்த் தமிழ்ச் சங்கம் அன்பளிப்பாகக் கொடுக்கிறது. மொத்தம் 25 மாணவர் படிக்கின்றனர். ஆர்வம் நிறைந்த தமிழன்பர் இருவர் இந்த வகுப்புகளில் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

தமிழ்ப் புலவர் வகுப்பு

பம்பாய்த் தமிழ்ச் சங்கம் 25 ஆண்டுகளாக இந்த வகுப்புகளை நடத்தி வருகிறது, இங்குப் பயின்ற மாணவர் அறுவர் தேர்வு எழுதிப் புலவர் பட்டம் பெற்றுள்ளனர்.

வயது வந்தவர் அனைவரும் தமிழ்ப் புலவர் தேர்வு எழுதலாம் என்று ஏற்கெனவே இருக்கிற விதியைத் தமிழகப் பல்கலைக்கழகம் மீண்டும் அமல் செய்ய வேண்டும் என்று இங்குள்ளவர்கள் விரும்புகின்றனர்.

இப்போது இரண்டு மாணவர்கள் இவ்வகுப்புகளுக்கு வருகின்றனர். அந்தந்த இலக்கியங்களை ஆழமாகப் படித்த தமிழறிஞர்கள் உரிய பாடங்களைச் சொல்லிக் கொடுக்கின்றனர். தமிழ்ச்சங்க நூலகத்தை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

தமிழ்க் குழந்தைகளுக்கான கல்வி-புனாவில்

புனாவில் தமிழ்க் குழந்தைகள் தாய்மொழி கற்றுக்கொள்ள வசதி செய்யும் பள்ளிகளில் குறிப்பிடத்தக்கது சரசுவதி வித்தியாலயா யூனியன் பள்ளி. இங்கு ஒரு மொழிப்பாடமாகவும் பயிற்சி மொழியாகவும் தமிழ் இடம் பெற்றுள்ளது. முன்னர் ஏழாவது வகுப்புவரை, தமிழ் பயிற்சி மொழியாக இருந்தது. அதற்கு ஆதரவு இல்லாததால், இப்போது நான்காம் வகுப்புடன் தமிழ்ப் பயிற்சி முடிவடைகிறது.

கோர்ப்புரியிலுள்ள புனாத் தமிழ்ச் சங்கம் 1954இல் இலவசத் தமிழ் ஆரம்பப் பள்ளியைத் தொடங்கிற்று. 1966இல் தமிழர் கழகம் தொடங்கிய உயர்நிலைப் பள்ளியில் இப்போது தமிழ் என்ற மணமே இல்லாதபடி, முற்றிலும் தமிழ்ப் படிப்பு நீக்கப் பெற்று விட்டது. இரவுப் பள்ளியில் தமிழ் எழுதப் படிக்க மட்டும் கற்பிக்கப் பெறுகிறது.

பிம்பிரியில் உள்ள தமிழ்ச் சங்கங்கள், தமிழ்ப் பள்ளி எதுவும் நடத்தவில்லை.

பம்பாய் மாநகராட்சியில் கற்பிக்கப் பெறுவது போல, புனா மாநகராட்சிப் பள்ளிகளில் தமிழ்மொழி இடம் பெறவில்லை. அத்தகைய எந்த வேண்டுகோள் கூடத் தமிழர் அமைப்புகளிலிருந்து இதுவரை அனுப்பப் பெறவில்லை.

கிர்க்கியில் 50 ஆண்டுகளுக்குமுன் பகுத்தறிவு இயக்கத்தினர் தொடங்கிய சுகிர்த விலாச சபா தொடக்கப்பள்ளி 1980இல் உயர்நிலைப்பள்ளி ஆகியிருக்கிறது. தமிழ் ஒரு மொழியாக மட்டும் கற்பிக்கப் பெறுகிறது.

எரவாடா சிறைச் சாலையில் தமிழ்க் கைதிகள்

தண்டனை அடைந்து இங்கு வைக்கப் பெற்ற நான்கு தமிழர், தமிழ்ப் புலவர் பட்டம் பெற்றிருக்கின்றனர். மகாராட்டிர அரசின் கல்வித்துறை இணை இயக்குநராக இருந்த திரு. சிவராம கிருஷ்ணன், (இ. அ. பெ.) சிறைகளின் தலைமைக்

கண்காணிப்பாளராக இருந்தபோது அவர் கொடுத்த ஊக்கமும் ஆதரவும் இதற்குக் காரணம் என்று கைதிகள் என்னிடம் கூறினர்.

இலக்கிய வகுப்புகள்

பட்டம் பெறவும் தேர்வு எழுதவும் படிப்பவர் ஒருபுறம் இருக்க, தங்களுடைய ஆர்வத்தின் காரணமாகக் குறிப்பிட்ட தமிழ் இலக்கியங்களின் நயங்களைத் தக்கவர் வாயிலாகக் கேட்டு மகிழ விரும்பும் தமிழர் சிலர் பம்பாயில் உள்ளனர். இவர்கள் இந்திய ஆட்சிப்பணி அலுவலர் (ஐ. ஏ. எஸ்.) மற்றும் தொழில் அதிபர்கள். பல நூறு கோடி ரூபாய் வரவு செலவு செய்யும் நிறுவனங்களுக்குப் பொறுப்பாக உள்ளவர்கள்; சுருங்கச் சொன்னால் மூச்சுவிடக்கூட நேரம் இல்லாதவர்கள்.

இவர்களுக்காக, ஞாயிற்றுக் கிழமைகளில் மகாலட்சுமி கோயில் வட்டாரத்திலுள்ள வார்டன் சாலையில் திருமதி கமலா சங்கர், தமிழ் இலக்கியங்கள் பலவற்றை ஞாயிற்றுக்கிழமைகளில் பாடமாக நடத்தி வருகிறார். இவர் 'கலா நிலையம்' என்ற சிறந்த இலக்கிய இதழைப் பல்லாண்டுகள் இனிது பதிப்பித்த தமிழ் அறிஞர் டி. என். சேஷாசலம் மகளார் ஆவார். திருமதி காலா சங்கர் பல நூல்களும் எழுதியுள்ளார். தமிழ்ப் பணியையே தமக்கு மகிழ்ச்சி தரும் பொழுது போக்காகக் கொண்டிருக்கிறார்.

நாகபுரி

சரசுவதி வித்தியாலயம், மிகப் பழமையான உயர்நிலைப் பள்ளியாகும் பல்கலைக் கழகப் பகுதியில் அமைந்து தமிழரால் நடத்தப்படுகிறது. இங்கு முதல் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை 500 மாணவர்கள் தமிழை ஒரு மொழியாகப் படிக்கிறார்கள்.

குசரத்

குசரத் அரசு உதவியோடு ஆமதாபாத், தமிழர் ஏழு தொடக்கப்பள்ளிகளைத் தமிழ் பயிற்றுமொழிப் பள்ளிகளாக நடத்தி வருகின்றனர்.

ஆமதாபாத் உயர்நிலைப்பள்ளி

இந்நகர் வாழ் தமிழர் நிதி திரட்டி, 1971ஆம் ஆண்டில் இதைத் தொடங்கினர். மூன்றாண்டுகளுக்குப் பிறகு இப்பள்ளி, மொழிவழிச் சிறுபான்மையினர் என்ற சலுகைப்படி குசராத் அரசின் முழுமானிய உதவி பெற்று வருகிறது.

இப்பள்ளியில் தமிழே பயிற்று மொழியாகும். இந்தி, குசராத்தி, ஆங்கில மொழிகளும் கற்பிக்கப்படுகின்றன. 1982-முதல் மேல்நிலை வகுப்புகள் ஆங்கிலப் பயிற்சி மொழி மூலம் நடத்தப் படுகின்றன. 110 சிறுமியரும் 200 சிறுவர்களும் படிக்கின்றனர். நூலகத்தில் 800 தமிழ் நூல்கள் உள்ளன.

ஓர் முருகா ஆங்கிலப் பள்ளி, அகமதாபாத்

இது கோக்ரா பகுதியில் தமிழர்களால் நடத்தப்படுகிறது. தமிழர்பால் என்றும் அன்பு கொண்ட முன்னாள் தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாசுபட்வாரி 1983 சூன் திங்கள் 14 ஆம் நாள் இந்தக் கிண்டர் கார்டன் பள்ளியைத் தொடங்கி வைத்தார். குசராத் மாநிலக் கல்வித்துறையின் ஆதரவோடு பள்ளி இயங்கி வருகிறது

இனம், மொழி, மாநிலம் ஆகிய வேறுபாடின்றி அனைவர்க்கும் இடம் அளிக்கப்படுகிறது. தமிழும் ஒரு மொழியாகக் கற்பிக்கப் படுகிறது. பயிற்சி மொழி ஆங்கிலம். ஆலைத் தொழிலாளரான தமிழரின் குழந்தைகளே இப்பள்ளி மாணவரில் 90 விழுக்காடு ஆவர்.

ஆசியா பள்ளி

ஆசியா (ASIA) என்பது ஆமதாபாத் சவுத் இந்தியன் அசோசியேசன் என்பதன் சுருக்கமாகும். இது, மிகப்பெரும்பாலான தமிழரையும், ஏனைய தென் மாநிலத்தார் ஒரு சிலரையும் சேர்த்துக் கொண்டு அரசு அலுவலகத்தாருக்காக 1955இல் தொடங்கப் பெற்றது.

இச் சங்கத்தார் இப்போது ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாகக் கொண்ட உயர்நிலைப் பள்ளி நடத்தி வருகின்றனர். இப் பள்ளிக்கென்று சொந்தமாகக் கட்டடமும் கட்டப்பெற்றிருக்கிறது. தமிழ் மொழிக்கு இப் பள்ளியில் எவ்வித இடமும் இல்லை.

பரோடா, சூரத்

பரோடாவிலும் சூரத்திலும் உள்ள தமிழ்ச் சங்கங்கள் தமிழ்ப் பள்ளி நடத்த ஆர்வமாக இருக்கின்றன. ஆனால் அதற்கு வேண்டிய இடவசதி கிடைக்கவில்லை. சொந்தக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான நிதியை இந்தச் சங்கங்கள் தாமாகவே திரட்டுவது கடினமே.

இராசத்தான்

இராசத்தான் மாநிலத்தின் தலைநகரான செய்ப்பூரில் தமிழ்ப் பள்ளி தொடங்க செய்ப்பூர்த் தமிழ்ச்சங்கம் முயன்று வருகிறது.

இடம் வழங்க இராசத்தான் அரசு ஏற்றுக் கொண்டுள்ள ஒரு திட்டத்தை இச் சங்கமும் தமிழக அரசும் சேர்ந்து நிறைவேற்றக் கூடிய சூழ்நிலை உருவாகி வருகிறது.

தில்லி

மொழிச் சிறுபான்மையினர் என்ற உரிமையைப் பயன் படுத்திக் கொண்டு தில்லி மாநகரில் தமிழ்ப் பிள்ளைகளுக்காக, தமிழரே நடத்தும் ஏழு மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன.

ஆயினும் தில்லியில் வாழுகின்ற சாதாரணத் தமிழர் இதன் பயனை முழு அளவிற் பெறவில்லை. பத்துத் தேய்த்தல் என்னும் வீட்டு வேலை செய்தும் கூலி வேலை செய்தும் வாழும் பல்லாயிரம் எளிய தமிழரின் மழலைச் செல்வங்கள் கட்டணமின்றி, தில்லி நக ராண்மைக் கழகத்தார் அமைத்துள்ள தொடக்கத் தமிழ்ப் பள்ளி களுக்கே செல்லுகின்றனர்.

பெற்றோர் இருவருமே குழந்தைகள் தூங்கிக் கொண்டிருக் கும்போது வேலைக்குச் சென்றுவிடுவதால் முறைப்படி உரிய நேரத்திற்கு அவர்களைப் பள்ளிக்கு அனுப்பி வைக்க வீட்டில் ஒருவரும் இல்லை. அதற்கேற்ற சூழ்நிலையும் அந்தக் குடும்பங்கள் பலவற்றில் இல்லை.

தில்லி தமிழ்க் கல்விக்கழகத்தார் நடத்தும் கல்வி நிலை யங்களில் முதல் வகுப்பு தொடங்கி பன்னிரண்டாம் வகுப்பு வரை உள்ளன. தமிழ்ப்பயிற்சி வகுப்புகளில் மாணவர்கள் சேர்க்கை மிகவும் குறைவாக உள்ளது.

இந்தப் பள்ளிகளில் மொத்தம் 8,000 பேர் படிக்கின்றனர். இவர்களில் 85 விழுக்காடு தமிழர் என்றும் 15 விழுக்காடு பிற மொழியினர் என்றும் பள்ளியில் சேரும் அனைவருக்கும் ஆறாம் வகுப்புவரை தமிழ்மொழி கட்டாயமாகக் கற்பிக்கப்படுகிறது என்றும் இக்கல்விக் கழகத்தின் தலைவர் திரு. இராமமூர்த்தி (நாடாளுமன்ற உறுப்பினர்) என்னிடம் கூறினார்.

இந்தி பயிற்சிமொழியாக உள்ள வகுப்புகளுக்கு மட்டும் பஞ்சாபி, இந்தி ஆகிய மொழிக்காரர்கள் ஆசிரியராக நியமிக்கப் பட்டிருக்கின்றனர். தகுதியான தமிழ் ஆசிரியர்கள் தில்லியில் கிடைக்காவிட்டால் தமிழ்நாட்டுச் செய்தித்தாள்களில் விளம்பரம் கொடுத்து ஆசிரியர்கள் சேர்க்கப்படுகின்றனர். 1977இற்குப் பிறகு இப்பள்ளிகளுக்குத் தமிழக அரசு எவ்வித உதவியும் கொடுக்கவில்லை. சம்பளச் செலவில் 90 விழுக்காடு தில்லி மாநில

அரசால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. கூலி வேலை செய்பவர்கள் குழந்தைகள் இப்பள்ளிகளில் 45 விழுக்காடு என்றும் அவர்களிடம் சம்பளம் வசூலிக்க இயலாததால் நாடகங்கள் நடத்தி அந்த இழப்பை ஈடுசெய்வதாகவும், சில கோடி ரூபாய் மதிப்புள்ள கட்டடங்களையும் பிற பொருள்களையும் கொடுத்து 10 இலட்சம் ரூபாய் கடனுடன் இந்தக் கல்விக்கழகம் இயங்கிவருவதாகவும் தெரிகிறது.

மத்திய மாநிலம் :

(1) பிலாய்

பிலாய் உருக்கு ஆலை தன்னுடைய நகரமைப்பில் ஆறு இடங்களில் கேந்திரிய வித்தியாலயங்களை நடத்துகிறது. இவற்றில் இந்தியும் ஆங்கிலமும் கற்பிக்கப்படுகின்றன. இந்த மொழிகளே பயிற்சி மொழிகளாகவும் இருந்து வருகின்றன.

தமிழை, ஒரு மொழிப்பாடமாக இந்தப் பள்ளிகளில் கற்பிக்க வேண்டும் என்று தமிழர் விரும்புகின்றனர். எந்தப் பள்ளியிலாவது ஒவ்வொரு வகுப்பிலும் அந்த மொழியைப் படிக்க 30 குழந்தைகள் முன்வந்தால் தமிழ் ஆசிரியரை நியமிப்பதாக எஃகு ஆலையினர் கூறினராம். எந்த ஒரு பள்ளியின் எல்லைக்குள்ளும் முதல் வகுப்பில் 30 தமிழ்க் குழந்தைகளும் இரண்டாம் வகுப்பில் 30 தமிழ்க் குழந்தைகளும் என்ற கணக்கில் மாணவர் எண்ணிக்கை இராது. ஒரு குறிப்பிட்ட குடியிருப்புப் பகுதியில் (Sector) மட்டுமன்றி எல்லா Sector களிலும் தமிழர் பரவலாக வாழ்கின்றனர்.

இதே காரணத்தைக் காட்டி இந்தி தவிர வேறு எந்த இந்திய மொழியும் கற்பிக்கப்படவில்லை. ஆண்டுதோறும் பத்தாயிரம் கோடி ரூபாய் வரவு செலவு செய்யும் உருக்கு ஆலை, ஊழியர்களின் குழந்தைகள் தங்கள் தாய்மொழியைப் படிப்பதற்குச் சில நூறு ஆயிரம் ரூபாய் செலவிடத் தயங்குவது விந்தையே.

(2) பிலாய் திருவள்ளுவர் பாடசாலை

பிலாய் உருக்கு ஆலை நகரில் ஐந்தாவது Sector 38வது சாலை 7A என்ற இலக்கம், திரு. டி. ஆர். சுப்பிரமணியம் என்பவருடைய வீடு. இவர் பிலாய் உருக்காலையின் தண்ணீர் வசதிப் பிரிவில் பொறியியல் அலுவலராக உள்ளார். இவருடைய முயற்சியால் இந்த வீட்டிலும் வேறு இரண்டு இடங்களிலும் ஞாயிற்றுக் கிழமைமட்டும் முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை. தமிழ்க் குழந்தைகளுக்கு $1\frac{1}{2}$ மணி நேரத்திற்குத் தமிழ் கற்பிக்கப்படுகிறது.

ஆர்வம் மிக்க தமிழர் ஊக்கத்தோடு நடத்திவரும் இந்த முயற்சி போற்றத்தக்கது. மைசூரில் உள்ள இந்திய மொழிகளுக்கான மத்தியக் கல்வி நிறுவனத்தார் எட்டாம் வகுப்பு தமிழ்த் தேர்விற்குப் பிலாயை ஒரு மையமாக அமைத்தால் இந்தக் குழந்தைகள் அந்தத் தேர்வை எழுத வசதியாக இருக்கும் என்று இப்பாடசாலையின் அமைப்பாளர் என்னிடம் கூறினார். இது சிந்திக்கத்தக்கது.

பொங்கல் விழாவும், பாரதி விழாவும் இப்பள்ளியில் சிறப்பாக நடத்தப்படுகின்றன.

முதல் ஐந்து வகுப்புகள் கொண்ட முறையான ஒரு பள்ளிக் கூடத்தை நடத்த வேண்டும் என்பதும் தமிழ், இந்தி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் அதில் கற்பிக்க வேண்டும் என்பதும், இந்தப் பள்ளியின் அமைப்பாளர்களுடைய திட்டம்.

கட்டடம் கட்டுவதற்கான வரைபடங்களும் திட்டங்களும் அனுப்பித் தங்களுக்கு இடம் ஒதுக்கும்படி இவர்கள் பிலாய் உருக்காலை ஆட்சியினரைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். விரைவில் இடம் ஒதுக்கப்படக்கூடும். கட்டடம் கட்ட, தமிழ்நாடு அரசின் உதவியும் தேவைப்படும். தமிழ் நூலகம், படிப்பகம் ஆகிய வையும் இக்கட்டடத்தில் அமையும் என்று தெரிகிறது.

(3) பிலாய் தமிழ் மன்றம், பிலாய்

இந்தத் தமிழ் மன்றத்தின் பணிகளில் முதலாவது, மிகப் பெரிய விநாயகர் கோயிலைக் கட்டியிருப்பது. இரண்டாவது சாதனை: உறுப்பினர் குடும்பங்களில் பத்தாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படிப்பவர்களுக்கு மாதம் 40/-ரூபாய் வாங்கிக்கொண்டு உயர் கணிதம், அறிவியல் பாடங்களை நடத்தி ஆங்கிலப்பயிற்சி மொழித் தேர்வில் மிகுதியான மதிப்பெண் வாங்க உதவுவது.

(4) சபல்பூர்

படைக்கலத் தொழிற்சாலையில் பணிபுரியும் கமரியா தமிழர் பல்லாயிரம் பேர் ஆவார். இவர்கள் சபல்பூர் தமிழ் மன்றம் என்ற அமைப்பை 1965இல் தொடங்கினர் இந்நகரில் உள்ள தமிழ்க் குழந்தைகள் வீட்டிலும் இந்தி பேசுவதால் அவர்களுக்குத் தமிழ் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணம் உதயமாயிற்று. தமிழ்க் குடும்பங்கள் மிகுதியாக இருந்த கீழ் நிலத்தில் ஒரு வீட்டில் 1965 - முதல் 1968 வரை பகுதிநேரத் தமிழ் வகுப்புகள் நடத்தப்

பெற்றன. இந்தி அல்லது ஆங்கிலத்தின் மூலம் மாணவர்களுக்குத் தமிழ் பயிற்றுவிக்கப்பட்டது. இவ்வாறு பயின்றவர்கள் தமிழ்ப் பத்திரிகைகளைப் படிக்கும் தகுதியையும் தமிழ் நாடகங்களில் நடிக்கும் ஆற்றலையும் கைவரப் பெற்றனர்.

1970ஆம் ஆண்டு சனவரி 26ஆம் நாள் கீழ் நிலத்தில் ஒரு பள்ளியே தொடங்கப் பெற்றது. இப்பள்ளியில் மிகுதியாகத் தமிழ் மாணவர்களே சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இந்தியைப் பயிற்று மொழியாகக் கொண்டு மூன்றாம் வகுப்பு வரை பள்ளி நடத்தப்பட்டது. தமிழும் ஒரு பாடமாக இருந்து வந்தது. மாண வரின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்ததால் 1975இல் இப்பள்ளி மூடப்பட்டது.

கமரியாவை அடுத்து மேற்கில் இருக்கும் 'இராஞ்சி' எனும் இடத்தில் குறைந்த வருமானம் பெறும் தமிழர் வசித்துவரும் 'மதராஸ் லைன்' குடியிருப்புப் பகுதியில் பகுதிநேரத் தமிழ் வகுப்பு 1974இல் தொடங்கப் பெற்றது. நாளாக நாளாகக் குழந்தை களின் எண்ணிக்கை குறைந்தவுடன் 1977இல் அப்பள்ளியும் மூடப்பட்டது.

இடையிடையே பகுதிநேரத் தமிழ் வகுப்புகள் மேல் நிலத் திலும் நடத்தப்பட்டன.

சண்டிகர்

தொழிலாளர் குடியிருப்புத் தமிழ்ப்பள்ளி,
சண்டிகர்

சண்டிகரை எழில்மிகு நகராக்க உதவிய கூலித் தமிழர், தாய் மொழியாகிய தமிழை மறக்கவில்லை.

சாலை, கட்டட அமைப்புப் பணிகளில் ஈடுபட்டு, சண்டிகர் நகரத்தை அமைக்கத் தொடங்கிய 1949ஆம் ஆண்டு முதலே பணி புரிவோரில் தமிழரும் உள்ளனர். பெரும்பாலோர் ஏழைகள். நகரின் மூன்று இடங்களில இவர்கள் வாழ்கின்றனர். ஏறக்குறைய 1500 பேர் தங்கள் பணியின் பொருட்டுக் காலை ஆறு மணி அளவில் இல்லத்தை விட்டுச் சென்றால் மாலை ஆறு மணிக்குத்தான் வீடு திரும்ப இயலுகிறது.

அவர்கள் தங்கள் குழந்தைகளை வீட்டிலேயே விட்டுச் செல்வதால், குழந்தைகளை நன்கு கவனித்துக் கொள்ள முடிய வில்லை. அவர்களுக்கென்று ஒரு தமிழ்ப் பள்ளி நடத்தப்பட்டது. அதில் நிறைய சிறுவர்களும் சிறுமியரும் தமிழ் பயின்றனர்; பயன்

அடைந்தனர். பள்ளி நன்கு நடைபெறவே சண்டிகர் நிருவாகம் அதனைத் தன் பொறுப்பில் ஏற்றுக் கொண்டு அரசின் பள்ளிகளுள் ஒரு பகுதியாக ஆக்கிக் கொண்டது. அங்குத் தமிழிலேயே பிள்ளைகள் பாடங்கள் கற்கின்றனர்.

சண்டிகர் அரசு அவர்களுக்குச் சீருடையும் மதிய உணவும் அளிக்கிறது.

ஆயின் பெற்றோர் ஏழைகளானதால் பிள்ளைகளுக்கு ஒழுங்காக நூல்கள் வாங்கிக் கொடுப்பதில்லை. எனவே, தமிழக அரசு எல்லாப் பிள்ளைகளுக்கும் ஆண்டுதோறும் எல்லாப் பாடநூல்களையும் குறிப்பேடுகளையும் அன்பளிப்பாக அளித்தால் பெற்றோரின் சுமை குறையும். பிள்ளைகளும் ஒழுங்காக நூல்களோடு பள்ளிக்குச் செல்வர். தமிழிலேயே பாடங்கள் பயில்வர்.

1-8-1983இல் மாணவர் எண்ணிக்கை, முதல் ஐந்து வகுப்புகளிலும் 48. பள்ளிக்கூடத்திற்குச் செல்லாத குழந்தைகள் இவர்களைப் போல் பத்து மடங்கினர் இருக்கலாம்.

1982-83இல் பாடநூல்கள் தமிழக அரசால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

அஞ்சல்வழிக் கல்வி

தமிழகப் பல்கலைக் கழகங்களில் அஞ்சல்வழிக் கல்வி மூலம் பயின்று வரும் தமிழக மாணவர்கட்கும், வெளி மாநில மாணவர்கட்கும் ஒரு சில நடைமுறைச் சிக்கல்கள், வேறுபாடுகள் உள்ளன.

மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் மட்டும் சுமார் 1200 மாணவர்கள் நான் சென்ற வட மாநிலங்களிலிருந்து பயின்று வருகின்றனர் என்று அறிந்தேன்.

பல்கலைக் கழகத்திலிருந்து அனுப்பப்படும் பாடங்கள் மிகவும் தாமதமாகவே வந்து சேருகின்றன. பாடங்கள் அனுப்பப்பட்டு சுமார் 20 நாள்களுக்குள்ளாக அதனோடு இணைக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைகள் எழுதி அனுப்ப வேண்டுமென்ற விதியைப் பின்பற்ற இயலவில்லை என்று என்னிடம் பலர் கூறினர்.

நேர்முக வகுப்புகளில் (contact classes) வெளி மாநில மாணவர்கள் கலந்து கொள்ள, செலவு ஏராளமாக ஆவதால் அவர்களின் ஐயப்பாடுகள் தீர்க்கப்படாமலே நின்று விடுகின்றன.

வானொலி மூலம் வகுப்புகள் நடத்தப் பெறுவது உண்மையெனினும் திருச்சி வானொலி நிலைய ஒலி பரப்பை மகாராட்டிர, குசராத் மாநிலங்களில் தெளிவாகக் கேட்க இயலவில்லை.

பயிற்சிக் கட்டணம், தேர்வுக்கட்டணம் ஆகியவற்றைத் தமிழகத்தில் உள்ள மாணவர்கள் வங்கி மூலம் எளிமையாகச் செலுத்துவது போன்று வெளி மாநிலத் தமிழர் செலுத்த இயலாமற் போகின்றது. இவ்வசதி அவர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்று விருப்புகின்றனர்.

கட்டணங்கள் செலுத்துவதில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டால் அவற்றைத் தபால் மூலமே தொடர்பு கொண்டு தீர்வு காண்பதில் நீண்ட காலதாமதம் ஏற்படுகின்றது.

வெளி மாநிலங்களிலிருந்து பயின்று வரும் மாணவர் எண்ணிக்கையைக் கவனத்தில் கொண்டு தேர்வு மையங்களையும் நேர்முகவகுப்புகளையும் வட மாநிலத் தலைநகரங்களிலும் பெரு நகரங்களிலும் அமைப்பது மாணவர்கட்குப் பணச்செலவைத் தவிர்க்கும்.

வெளி மாநிலத்திலிருந்து தமிழகம் வந்து தேர்வு எழுதும் மாணவர்கட்குப் பல்கலைக் கழக / கல்லூரி விடுதிகளில் தங்கும் வசதியை ஏற்படுத்தித் தருவது பெரிதும் உதவியாயிருக்கும்.

உதவித் தொகை பற்றிய தெளிவான விளக்கங்களைப் பெற முடிவதில்லை `என்று பலர் என்னிடம் குறைபட்டுக் கொண்டனர்.

தேர்வு மையங்கள் தமிழகத்திலேயே அமைக்கப்பட்டு, பம்பாய், அமதாபாத் முதலான நகரங்களிலிருந்து மாணவர்கள் புறப்பட்டு வருவதில் இடையூறுகள் உள்ளன. பொதுவாகவே பணிபுரிவோர் பலருக்கு விடுப்பு கிடைப்பதும் அரிது. பயணத்திற்கு ஆகும் நாள்கள் விரையமாவதைத் தடுக்க, வடமாநிலங்களில் தேர்வு மையங்கள் அமைப்பது நன்று.

தேர்வுக்கால அட்டவணை மற்றும் தேர்வு நுழைவு அனுமதிச் சீட்டு ஆகியவை மூன்று நாள்களுக்கு முன்பு அந்தந்தத் தேர்வு மையங்களில் தருவது வெளிமாநில மாணவர்கட்கு அல்லல் தருகிறது.

பட்டப் படிப்புத் தேர்வுகள் ஒன்றுக்கொன்று ஒரு வார காலத்திற்கும் கூடுதலான இடைவெளி வைத்திருக்கிறார்கள்.

இதனால் மாணவர்களின் தங்கல், மற்றும் உணவு விடுதிச் செலவுகள் மிகுதியாகின்றன. நீண்ட காலஅளவு பயனற்றதாகவே அமைகிறது.

இது போன்ற சிக்கல்களுக்குத் தீர்வு கண்டால் பெரு வாரியான வடமாநிலத் தமிழர் தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களைப் பயன்படுத்திக் கொள்ள முன்வருவர்.

பிற மொழியாளர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் முயற்சிகள்

பம்பாயில் இந்தப் பணியைத் தொடங்கி வைத்த பெருமை பம்பாய்த் தமிழ்ச் சங்கத்துக்கு உரியது.

செம்பூர்த் தமிழ்ச் சங்கம், பம்பாய் - 71

1970 முதல் 1976 வரை வகுப்புகள் நல்ல முறையில் இச்சங்கத்தில் 'தமிழ் பயில்விக்கும் குழு'வினரால் நடத்தப்பட்டு வந்துள்ளன பிறகு ஆள் பலமும், பணபலமும் குறைந்த நிலையில் இவ்வகுப்புகள் தொடரப்படவில்லை. மீண்டும் புதுப் பிக்கும் முயற்சி நடைபெறுகிறது.

தமிழ்மொழி பயிலும் பிறமொழி அன்பர் நலனைக் கருதி, சங்க 'தமிழ் பயில்விக்கும் குழு'வினரால் Graded Modern Tamil (நிலைவாரியான நவீன தமிழ்) என்ற நூல் வரிசையில் முதல் மூன்று நிலைப் புத்தகங்கள் வெளியிட்டுள்ளன. தமிழ் கூறும் நல்லுலகில் யாருமே செய்திராத முன்னோடியே இல்லாத இத்துறையில் செம்பூர்த் தமிழ்ச் சங்கத்தினர் முன்வந்து செய்துள்ளது, இச்சங்கத்தின் சாதனை எனலாம். இந்த வெளியீடு தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு வழங்கப் பெற்றுள்ளது

நாகபுரி

தமிழ் அன்பர் செஞ்சி திரு. பி. அண்ணாமலை இப்போது மத்திய மாநிலத்தில் துர்க் இரயில் சந்திப்பில் இரயில்வே போக்குவரத்துக் கணக்கு ஆய்வாளராக இருந்து வருகிறார். இவர் 1964இல் நாகபுரியில் பணி செய்தார். அப்போது மராத்தி மொழிக்காரருக்குத் தமிழ் வகுப்புகள் நடத்தினார். படிப்பவர் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்ததால் வகுப்பைக் கைவிட நேர்ந்தது. 'ஞெ' போன்ற எழுத்துக்களை எழுதுவதற்குப் பிற மொழியாளர் துன்பப்பட்டதாகவும் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம், பிற மொழியாளர் தமிழைப் பயில்வதற்குள்ள இடர்ப்பாட்டைப் போக்கும் என்றும் இவர் தம் அனுபவத்தை என்னிடம் கூறினார்.

பம்பாயில் பாராட்டத்தக்க ஒரு முயற்சி

பம்பாயில் 1972 முதல் பிற மொழியாளருக்குத் தமிழ் கற்பிக்கும் பணி மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இந்தத் தொண்டினைச் செய்து வருபவர், இந்தியைத் தாய் மொழியாகக் கொண்ட ஓர் அன்பர் ஆவார். இவர் பெங்களூரில் பல ஆண்டுகள் வாழ்ந்தபோது தமிழ் இலக்கண இலக்கியங்களை செய்கோன் காசிப்பிள்ளை என்றதமிழறிஞரிடம்பயின்றவர். எந்திரப் பொறியியல் பட்டம் பெற்றுச் சிறு தொழிற்சாலைகளின் உரிமையாளராக இருக்கும் இவருடைய முகவரி :

Thiru S. N. Sharma, B. E. (Mech.),
Sri Ganesh Nagar Industrial Estate,
Mohul Road, CHEMBUR,
BOMBAY-74.

இவர் பொழுதுபோக்காகத் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி, வங்காளி, செர்மன், இத்தாலியன், சப்பானிய மொழிகளைக் கற்றிருக்கிறார். இதுவரை நூறுபேரைத் தமிழ்ப்பேச வைத்திருக்கிறார். எவ்விதமான பயனையும் கருதாமல் இவர் இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறார்.

தமிழரல்லாதவர் தமிழ் கற்க முன்வருவது ஏன்? என்று நான் இவரைக் கேட்டேன். இவர் கூறிய பதில் வருமாறு :

1) எனது பத்து ஆண்டு அனுபவத்தில் பல வகுப்பினர், அதாவது மராட்டி, குசராத்தி, பஞ்சாபி, இந்தி, பெங்காலி, கச்சி, சிந்தி மொழியினர் தமிழ் கற்கும் ஆவலுடன் இருக்கிறார்கள்.

2) தற்சமயம் 100 இந்தி திரைப்படங்களுக்கு எதிராக 105 தமிழ்த் திரைப்படங்கள் காட்டப்படுகின்றன. பம்பாய் மற்றும் வட இந்திய நகரங்களில் கணிசமான தமிழர்கள் வசித்து வருவதால் திரைப்படம் காட்டும் அரங்குகள் இருக்கின்றன. அதை வடநாட்டினரும் பார்க்கின்றனர்.

மேலும், தமிழ் நடிகர்கள், நடிகைகள் இந்திப்படத்திலும் தோன்ற ஆரம்பித்தது, மற்றொரு காரணம்.

3) சில வடநாட்டினர் தமிழ்ப்பெண்களை மணம் செய்து வருகின்றனர். அதேபோல மராட்டியப் பெண்களும் பிறமொழிப் பெண்களும் தமிழ் ஆடவரை மணம் செய்து கொள்கின்றனர்.

4) மத்திய அரசு இலக்காக்களில், குறிப்பாகத் தணிக்கை (Audit Department) இலாகா, வங்கிகள் (Banks), வானவூர்தித்துறை (Airlines), வானொலி, தொலைக்காட்சி, பொதுப்பணித் துறைகளில் பணிபுரிவோர் ஊருக்கு ஊர் வேலைமாற்றல் ஆகும் போது மொழிப் பிரச்சினை வருகிறது, அதுவும் ஒரு காரணம்.
5) வடநாட்டுப் பெண்கள் தற்பொழுது பரதநாட்டியமும் கற்றுக் கொள்கிறார்கள். அதில் பாட்டும் தாளமும் இருப்பதால் தமிழ் கற்க வேண்டிய அவசியம் உள்ளது.
6) இட்லி, தோசை, மிளகாய்ப்பொடி நாகரிகம் எல்லோரையும் ஈர்த்துவிட்டிருக்கிறது. இந்தச் சமையல் கலையை அறியவும் ஆர்வத்தில் தமிழ் கற்க விரும்புகிறார்கள்.

இவருடைய வகுப்புகள் பம்பாய், மதுங்கா, கிங்ஸ் சர்க்கிள் அருகிலுள்ள ரபி அகமது கித்வாய் சாலையில் உள்ள அமுலக் அமைச்சந்த் பள்ளியில் ஞாயிற்றுக்கிழமைகளில் 2.30 முதல் 4.30 வரை நடைபெறுகின்றன. இவர் எழுதியுள்ள தமிழ்ப்பாடநூலை விலைக்கு வாங்கித் தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்குச் சேர்ப்பித்துள்ளேன்.

பல்கலைக் கழகங்களில் தமிழ்க்கல்வி

பிற மொழியாளர் ஓரளவு தமிழ் பயின்று பகுதி நேரச் சான்றிதழ் (Part-time Diploma) பெறுவதற்காக, தமிழக அரசு பல பல்கலைக் கழகங்களுக்கு ஆண்டுதோறும் ரூ. 15 ஆயிரம் வழங்கும் திட்டம் ஒன்றை நிறைவேற்றி வருகிறது.

தொடர்ச்சியாகப் பணம் வருவதில்லை என்று சில இடங்களில் என்னிடம் கூறினர்.

மரத்வாடாப் பல்கலைக்கழகம், அவுரங்காபாத்

மகாராட்டிர மாநிலத்தின் மரத்வாடாப் பகுதியின் தலைநகராக உள்ள அவுரங்காபாத்திலுள்ள பல்கலைக்கழகம், தமிழக அரசின் இவ்வித நிதி உதவி பெறும் பல்கலைக்கழகங்களில் ஒன்று. அங்கு நான் போய்ப் பல்கலைக்கழக ஆசிரியர்களான தென்னிந்தியர் பலரைச் சந்தித்தேன. மற்றும் தமிழ்ச் சங்கத்தினரையும் விசாரித்தேன். அரசு அலுவலரான பிற மொழியாளர் பலரையும் நானே நேரடியாகவும் மகாராட்டிர மாநில அரசின் ஒரு துறையினர் வாயிலாகவும் துருவிக் கேட்டேன். இத்தகைய வகுப்புகள் நடப்பதாக ஒருவருக்கும் தெரியவில்லை. பல்கலைக் கழக அறிக்கையில் இதைப்பற்றிய தகவல்கள் ஏதும் இல்லையென்றும் கேள்விப்பட்டேன்.

பர்பாய்ப் பல்கலைக் கழகம்

இங்குத் தமிழ்த்துறை ஏற்படுத்த பல ஆண்டுகளுக்கு முன் பம்பாய்த் தமிழர் விரும்பி, வேண்டுகோள் விடுத்தனர். ஆனால் அதைப் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பவில்லை. இந்த முயற்சியில் முன்னின்ற திரு. குருஜி கல்யாண சுந்தரம் முதல் கையெழுத் திட்ட வேண்டுகோள் தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு நான் இப்போது வழங்கியுள்ள கோப்புகளில் உள்ளது.

தமிழ்நாட்டில் ஒரு பல்கலைக் கழகத்தில் மராத்தி மொழிக்கு ஒரு துறை ஏற்பட்டால்தான், பர்பாயில் தமிழ்க்துறை தொடங்க இசைவு கிடைக்கும் என்பது இப்போதைய நிலை.

பம்பாய்ப் பல்கலைக்கழக நூலகத்தில் தமிழ்ப் பகுதிபற்றி இந்த அறிக்கையில் வேறு ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளேன்.

சர்தார் வல்லபாய் பட்டேல் பல்கலைக்கழகம், ஆனந்த், (குசரத்)

இப் பல்கலைக் கழகத்திற்கும் தமிழக அரசு ரூ 15 ஆயிரம் வழங்கியிருக்கிறது.

மனையியல் கல்லூரி முதல்வராக உள்ள அம்மையார் இவ்வகுப்புகளைத் தம் கல்லூரியில் நடத்தி வருகிறார். இவர் சில ஆண்டுகளுக்குமுன் பரோடாவில் இத்தகைய வகுப்பு நடத்தி அனுபவம் பெற்றவர். பரோடாவில் பல்லாயிரம் தமிழர் உள்ளனர். இங்குத் தமிழர் பத்துப் பேர் கூட இல்லை. எனவே தமிழ் படிப்பவர்கள் தமிழ் ஒலியைக் கேட்க வாய்ப்பு இல்லை என்பது பெரிய குறையாக இருப்பதாக இவர்கள் என்னிடம் கூறினார்கள்.

பல்கலைக் கழகத்தார் இந்தப் படிப்புப் பற்றிய அறிவிப்பை அக்டோபர் திங்களில்தான் வெளியிடுவார்கள் என்றும் நவம்பர் முதல் பிப்ரவரி வரை வாரம் இருமுறை வகுப்பு நடைபெறும் என்றும் கூறினார். தமிழ்நாடு பாடநூல் வாரியத்தின் நூல்கள் பயன்படுத்தப் பெறுகின்றன. குமுதம், ஆனந்தவிகடன் இதழ் களிலுள்ள கொட்டை எழுத்துக்களைப் படிக்கச் சொல்லி, மாண வர்கள் பழக்கப்படுத்தப் பெறுகின்றனர் பல்கலைக்கழகச் செலவில் இந்த மாணவர்களைப் பரோடாவுக்கு அழைத்துச் சென்று தமிழ்த் திரைப்படம் ஒன்றைப் பார்க்க ஏற்பாடு செய்ததாகவும் ஆசிரியர் என்னிடம் கூறினார்.

பெயரளவுக்குத் தமக்கு ஊதியம் வழங்கப் பெறுவதாகவும் அதுவும் அந்த நான்கு மாதங்களுக்கு மட்டுமே என்றும் ஆசிரியர் கூறினார். பயனுள்ள முறையில் இவ்வகுப்புகளை நடத்துவதற்கு உதவி கேட்டால், குறிப்பிட்ட திட்டத்தில் வழங்கப்பெற்ற நிதி தீர்ந்துவிட்டதாகப் பல்கலைக் கழகத்தார் கூறுகின்றனராம். கணக்குகளும் அறிக்கைகளும் அவ்வப்போது தமிழக அரசுக்கு அனுப்பப் பெறுவதாகப் பதிவாளர் என்னிடம் கூறினார்.

இந்தத் திட்டத்தால் எதிர்பார்த்த பலன் எந்தப் பல்கலைக் கழகத்திலும் கிடைக்கவில்லை என்று உறுதியாகச் சொல்லலாம்.

குருச் சேத்திரா பல்கலைக் கழகம்
குருச்சேத்திரம், ஹரியானா

இப் பல்கலைக் கழகத்திற்கு 1978 - முதல் ஆண்டுதோறும் தமிழக அரசு ரூ. 15 ஆயிரம் வழங்கி வருகிறது.

தகுதி நிறைந்த ஆசிரியர் உள்ளனர். ஆனால் அவருக்கு ஆண்டு முழுவதும் ஊதியம் கொடுக்கப் பெறவில்லை. அவ்வப்போது சில மாதங்களுக்கு மட்டும் நியமன ஆணை பிறப்பிக்கப் பெறுகிறது. பயிற்சி பெற்று, தேர்வு எழுதிய மாணவரின் சராசரி எண்ணிக்கை நான்கு.

விரிவான அறிக்கை இணைக்கப் பெற்றிருக்கிறது.

பஞ்சாபிப் பல்கலைக் கழகம், பாட்டியாலா

இப் பல்கலைக்கழகத்தின் தொல்ஆய்வு மொழியியல் துறையுடன் தமிழ்த் துறையும் இணைக்கப்பெற்று ஒரு பேராசிரியர் நியமனம் செய்யப் பெற்றிருக்கிறார்.

இந்தப் பேராசிரியர் கட்டிலைத் தமிழ்நாடு அரசு 1970இல் நிறுவி அதற்கான நிதியையும் தாராளமாக வழங்கிற்று. பஞ்சாப் மாநிலத்தில் தமிழ்மொழி அறிமுகப்படுத்த வேண்டும் எனக் கருதி இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

1971 முதல் இங்குத் துணைப் பேராசிரியராக இருந்து இப்போது பேராசிரியராக இருப்பவர் டாக்டர் வைத்தியநாதன் என்பவர். இவர் தமிழ்க்கல்விப் பட்டம் எதுவும் பெறாவிடினும் சங்க இலக்கியங்களை நன்கு பயின்றவர் என்றும் ஏற்கெனவே, சிக்காக்கோ பல்கலைக் கழகத்தில் அயல் மொழியினருக்குத்

தமிழ் கற்பித்து அனுபவம் பெற்றவர் என்றும் அந்த அடிப்படைத் தகுதியில் இங்கு நியமிக்கப் பெற்றார் என்றும் அறிந்தேன்.

சான்றிதழ்ப் படிப்பு இங்கே கிடையாது.

பஞ்சாபியர் ஆயிரக்கணக்கில் சிங்கப்பூரில் உள்ளனர். அவர்கள் அங்கு போகும் முன்னரோ, போய் வந்த பின்னரோ தமிழ் படிக்க இப் பல்கலைக் கழகத்தில் வாய்ப்பு இருக்க வேண்டுமென்று விரும்புகின்றனர்.

தமிழ்த்துறை, மொழியியல் துறையின் ஒரு கூறாக இருப்பதாலும் ஏனைய ஆசிரியருக்கும் தமிழ்ப் பேராசிரியருக்கும் இடையே ஓயாத பூசல்கள் நிலவுவதாலும் பல சிக்கல்கள் உண்டாயிருக்கின்றன. தமிழுக்குத் தனியே ஒரு துறை இருந்து மேலும் ஓரிரு ஆசிரியர்கள் நியமிக்கப் பெற்றால், பயன் விளையும்.

இப்போது எம்.பில். படிப்பில் தமிழ் மொழியியலுக்கு ஒரு தேர்வுத்தாள் உள்ளது.

பஞ்சாபி-தமிழ் ஒலி முறைகள், பஞ்சாபி-தமிழ்ப் பண்டுகளில் திருமணச் சடங்குகள், பஞ்சாபியரும் தமிழரும் குழந்தை பிறந்தவுடன் செய்யும் சடங்குகள் போன்ற ஆய்வுகள் செய்து தம் மாணவர்கள் எம். பில். பட்டம் பெற்றிருப்பதாக டாக்டர் வைத்தியநாதன் கூறினார்.

திராவிட மொழியியல் சங்கத்தினரின் இதழில் டாக்டர் பணிக்கர், டாக்டர் கோதண்டராமன் ஆகியோர் இங்கு வருகை புரிந்தபோது 1974ஆம் ஆண்டில் தொகுத்த அறிக்கை அச்சிடப் பட்டுள்ளது.

தமிழை இரண்டாவது மொழியாகப் பயிலும் பத்து மாணவர்கள் எம்.ஏ. மொழியியல் பாடம் படிப்பதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

1953இல் நிலைமை என்னவென்றால், தமிழ் ஒரு மொழியாகக் கற்பிக்கப்பெறவில்லை. பழங்கால இந்தியாவில் தமிழ் மொழியியல் என்ற படிப்புக்கே முதலிடம் கொடுக்கப் பெற்றிருக்கிறது.

தமிழ் பயிலும் பிற மொழியாளருக்குச் சான்றிதழ் வழங்குவதற்கான படிப்பு விரைவில் தொடங்கப் பெறும் என்று தாம் எதிர்பார்ப்பதாக டாக்டர் வைத்தியநாதன் கூறினார்என்று 1974இல் டாக்டர் பணிக்கர், டாக்டர் கோதண்டராமன் அறிக்கையில் குறிப்பிடப் பெற்றிருக்கிறது. இந்தப் பத்து ஆண்டுகளில் இந்தத்

திட்டம் கிடப்பில் போடப்பட்டு விட்டது. இதற்குக் காரணம் யார் என்பதுபற்றி மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

பஞ்சாபி மொழிக்கு முதல் முறையாக உலக மாநாடு 1983இல் பாங்காக்கில் நடைபெற்றது. அம்மாநாட்டுக்குச் செல்ல இப் பல்கலைக் கழகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் உலகத் தமிழ் மாநாடுகள் பற்றிய வெளியீடுகளைக் காண விரும்பினர். பல்கலைக் கழக நூலகத்தில் தமிழில் அல்லது தமிழ் தொடர்பான பிற மொழிகளில் வெளிவந்திருக்கும் நூல்கள் இடம் பெறச் செய்ய, தமிழ்ப் பேராசிரியர் இதுவரை எந்த ஒரு சிறு முயற்சி யையும் மேற்கொள்ளவில்லை.

தமிழ்ப் பேராசிரியர் பதிப்பித்து வெளிவந்துள்ள இரு தொகுதிகளைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு வழங்கியுள்ளேன்.

பஞ்சாபுப் பல்கலைக் கழகம், சண்டிகர்

கவின்மிகு சண்டிகரில் பஞ்சாபுப் பல்கலைக் கழகம் அமைந்துள்ளது.

இப் பல்கலைக்கழகத்தார் தாங்களாக 1967ஆம் ஆண்டு முதல் 'தென்னிந்திய மொழிகள் துறை' என்று தனியாகச் செயல் படுத்தி வருகின்றனர். திரு. கு. இராமகிருட்டிணன் பணியேற் றதும் இத்துறை செயல்படத் தொடங்கிற்று. முதலில் தமிழ்ச் சான்றிதழ் வகுப்பும் (Certificate Course in Tamil) பின்பு தமிழ் மேற்சான்றிதழ் வகுப்பும் (Diploma Course in Tamil) 1979 முதல் உயர் மேற்சான்றிதழ் வகுப்பும் (Advanced Diploma Course in Tamil) தொடங்கப் பெற்று நடைபெறுகின்றன. முதலிரண்டு வகுப்புகளிலும் பஞ்சாபு, ஹரியானா மாநிலங்களைச் சேர்ந்த பல மாணவர்களும் சில வெளிநாட்டு மாணவர்களும் தமிழ் கற்றனர். தமிழ்விழிப்புணர்ச்சி ஓரளவு ஏற்பட்டுள்ளது. தமிழ்ப்பண்பாடு, தமிழ்க்கலைகள், தமிழ்நாட்டின் தனித்தன்மைகள் பற்றி இந்தியாவில் வடகோடியில் வாழும் மக்களுக்கும் சண்டிகர் தமிழருக்கும் தமிழ்ப் பேராசிரியர் எடுத்துக்கூறி வருகிறார்.

தமிழக அரசு தமிழ் வளர்ச்சி நெறியாளர் வழியாக (ஆணை எண் பி-2/17593/74 நாள் 26-4-1974) 1976-77ஆம் ஆண்டு ரூ. 6730/-இத்துறையில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு ஊக்கு விப்புத் தொகை அளித்தது. அவ்வாண்டும் அடுத்த ஆண்டும்

அத்தொகை மாணவர்களுக்கு அளிக்கப்பட்டது. 1981-82இலும் அவ்வாறே தமிழக அரசு உதவியுள்ளது. தொடர்ந்து இவ்வகையான ஊக்குவிப்பு ஆண்டுதோறும் வழங்கப்பெறவேண்டும்.

பலவாறாக ஏறத்தாழ 100 மாணவர்கள் இந்தத் துறையால் பயனடைகின்றனர்.

பஞ்சாப், ஹரியானா, இமாச்சலம், ஜம்மு, காஷ்மீர் மாநிலங்களுக்கு மைய நகராக இருப்பதால் சண்டிகரில் உள்ள தமிழ்த்துறை-இப்பல்கலைக் கழகத்தார் தாங்களாகவே நடத்தி வரும் தமிழ்த் துறையை ஊக்குவிப்பது தமிழக அரசின் கடமையாகும்.

இந்தியாவிலுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் திருவள்ளுவர் பெயரால் தமிழகஅரசு அறக்கட்டளை நிறுவ விரும்புவதாக 15-3-1974இல் தமிழ் வளர்ச்சி நெறியாளர் கடிதம் எழுதினார். இதை ஏற்றுக் கொள்வதாக இப் பல்கலைக்கழகம் தெரிவித்தது. தொடர்ந்து தமிழக அரசிடமிருந்து எவ்விதத் தகவலும் வரவில்லையாம்.

தில்லிப் பல்கலைக் கழகம்

தலைநகரிலுள்ள பல்கலைக் கழகத்தில் இந்தியநாட்டு மொழிகள் பலவும் கற்பிக்கப்படவேண்டும் என்ற திட்டத்தைத் துணைவேந்தர் டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் கொண்டுவந்தார். அதன் விளைவாக 1959இல் டாக்டர் சாலை இளந்திரையன், விரிவுரையாளராக நியமிக்கப் பெற்று இத் தமிழ்த் துறை பிறந்தது. இந்த 25 ஆண்டுக் காலத்தில் இந்தத் துறை பெரிதும் வளர்ச்சி பெற்று, தில்லி மாநகரின் பல்வேறு சூழல்கள் ஒவ்வொன்றிலும் தமிழ் உணர்வு பெருகப் பெரிதும் காரணமாக இருந்திருக்கிறது. ஒரு துணைப்பேராசிரியரும் மூன்று விரிவுரையாளர்களும் இப்போது உள்ளனர்.

நான்கு கல்லூரிகளில் தமிழ்கற்பிக்கப் பெறுகிறது. மாணவர் தொகை குறிப்பிட்ட அளவிலே இருப்பதால், இந்தக் கல்லூரிகளின் தமிழ்த் துறைகள் இனியும் விரிவடைய வாய்ப்பு இல்லை.

தில்லிப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பயிற்சி தொடங்கிய காலத்திலேயே, பிறமொழியினருக்குத் தமிழ் பயிற்றும் ஓராண்டு சான்றிதழ் (சர்டிபிகேட்) வகுப்பு ஏற்பட்டது. அத்துடன் இந்தி முதுகலை (எம். ஏ.) வகுப்பில் தமிழை ஒரு பாடமாகப் பயிலவும் வசதி செய்யப்பட்டது. இந்த வகுப்பிலே பயின்று இந்தி எம். ஏ. பட்டம் பெற்ற மாணவர்கள் தமிழ் இலக்கியத்தையும் இந்தி இலக்கியத்தையும் ஒப்பிட்டு ஆய்ந்து எம். லிட். பட்டங்களும், முனைவர் பட்டங்களும் பெற்றார்கள். இந்தியிலும் தமிழிலும் நீதி நூல்கள்,

இந்தியிலும் தமிழிலும் உள்ள கண்ணன் கதைகள், தமிழ்ச் சிலப்பதிகாரமும் இந்திப் பத்மாவதி சரித்திரமும் முதலான பொருள்களில் ஒப்பியல் ஆய்வு நிகழ்த்தி இவர்கள் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்கள். ஆயினும் இந்த வகுப்பு இப்போது நடைபெறவில்லை. பிற மொழியினருக்குச் சான்றிதழ் (தமிழ்) வகுப்பு மட்டுமே நடைபெறுகிறது. இந்திய இலக்கியத்தில் எம். பில். ஆய்வுப் பட்டத்துக்குப் பயில்வோரும், சிலபோது தமிழ் பயில்வது உண்டு.

தில்லிப் பல்கலைக் கழகத்தில் தமிழியற் கல்வி ஏற்பட்ட 1959ஆம் ஆண்டு தொடங்கியே தமிழில் முனைவர் (டாக்டர்) பட்டத்துக்கு ஆய்வு செய்யப்பெறுகிறது.

1978ஆம் கல்வியாண்டிலிருந்து இங்கே தமிழ் முதுகலைப் பட்ட வகுப்பும் நடந்து வருகிறது. எனவே, முதல் வகுப்பு தொடங்கி முனைவர் பட்டம் வரை தொடர்ந்து தமிழ் படிக்க இப்போது தில்லியில் முழுமையான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தில்லிப் பல்கலைக்கழக எம்.ஏ. வகுப்பில், இலங்கை மற்றும் மலேசிய தமிழ் இலக்கியம், நாட்டுப்புறவியல் ஆகியவையும் சிறப்புப்பாடமாகக் கற்பிக்கப்படுகின்றன.

இப் பல்கலைக் கழகத்திலுள்ள சிலராவது, அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் பல துறைகளின் நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு, தமிழின் தொன்மையையும் சமயச்சார்பற்ற அதன் சங்க இலக்கியச் சீர்மையையும் பிற மொழியாளர்களுக்குச் சொற்பொழிவு/கலந்துரையாடல்கள் வாயிலாக விளக்குவதிலும் இவர்கள் கணிசமான வெற்றியைப் பெற்றுள்ளார்கள். தமிழைப் பற்றி இங்கே நிலவும் சில தவறான எண்ணங்களையும் இவர்கள் மாற்றியுள்ளார்கள்.

கவிஞர், திறனாய்வாளர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், பகுத்தறிவுச் சிந்தனைகளைப் பரப்புபவர் என்ற பல்வேறு நிலைகளில் இப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர்கள் தங்களுடைய தமிழ்ப் பணிகளைச் செய்துகொண்டு வருவதை எல்லோரும் அறிவர்.

குறிப்பாக நீண்ட காலமாக இங்கு இருந்து வரும் முனைவர் சாலை இளந்திரையன் தம்பதியரும் துறைத் தலைவர் முனைவர் ஆறுமுகமும் தில்லி மாநகரில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் தமிழுக்கு முறையான பங்கு பெற முயன்றுள்ளனர்.

இப்போது இங்குள்ள தமிழ்த்துறை, பல்கலைக்கழகத்தின் இந்திய மொழித்துறையின் ஓர் உட்பகுதியாக இருக்கிறது. தமிழ்த் துறைத் தலைவர், பல்கலைக் கழகத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள இயலாது. இந்திய மொழித்துறைத் தலைவர் வாயிலாகவே அணுக வேண்டும் என்ற நிலை மாறவேண்டும். அதற்கு வழி, தமிழ்த்துறைத் தலைவருக்குப் 'பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்' என்ற பதவித் தகுதி உண்டாக்கப்பட வேண்டும். தமிழக அரசு இது குறித்துச் சிந்தித்து ஆவன செய்தால், தலைநகரில பல வகைகளிலும் தமிழ் வளர்ச்சிக்குப் புதிய வாய்ப்புக்கள் உண்டாக லாம்.

இப் பல்கலைக் கழகத்து நூலகத்தில் தமிழ் நூற் பகுதி முழுமை யானதாக இருப்பது மன நிறைவு தருவதாகும்.






முதல் வகுப்பு தேர்வுத் தாள்
பப்பாய்த் தமிழ்ச் சங்கம்
இலவச ஆரம்பகல்வி வகுப்பு

மதிப்பெண்கள் : 80

பெயர்:-

நேரம் : $1\frac{1}{2}$ மணி

I படங்களைப் பார்த்து பெயர்களை எழுது. (10)

II கோடிட்ட இடத்தில் தகுந்த எழுத்துகளை எழுது. [10]

(1) ப—தல் (6) தி—பதி

(2) ஓ—ன் (7) க—தை

(3) —யுதம் (8) கு—வி

(4) கண்—ர் (9) ம—த்மா

(5) —யாண்டி (10) வே—ம்

III தகுந்த வார்த்தையால் பூர்த்தி செய் :- [10]

1) மன்னர் ____________

2) கடல் ____________

3) ____________ உதித்தது

4) ____________ தின்றான்

5) வாழை ____________ தா

IV விடப்பட்ட எழுத்துக்களை எழுது. [5]

கே, —, சே, —, டே, —, தே, —,

பே, —, மே, —, ரே, —, வே, —, ளே, —.

V. விடப்பட்ட இடத்தில் தகுந்த வார்த்தையை எழுது. [10]

(1) கொக்கின் நிறம்——————

(2) —————— நீரில் நீந்தும்

(3) குயில்——————

(4) குதிரை——————

(5) நரி——————

VI. ஆத்திச் சூடியில் 5 செய்யுட்களை எழுது. [10]

(1)

(2)

(3)

(4)

(5)

VII. ஒரே வார்த்தையில் விடை எழுது. [10]

(1) நாம் எவற்றால் நடக்கிறோம்?——————
(2) நாம் எதனால் கேட்கிறோம்?——————
(3) எது ஊரக் கல்லும் தேயும்?——————
(4) எது சோறு போடும்?——————
(5) எது உயர்வு தரும்?——————
(6) எந்தப்பூ நீரில் பூக்கும்?——————
(7) கொடியில் பூக்கும் பூ எது?——————
(8) சாமந்திப் பூ என்ன நிறம்?——————
(9) எது காட்டில் வாழும்?——————
(10) நமது நாட்டின் தந்தை யார்?

VIII. வாக்கியத்தில் பதில் எழுது. [15]

(1) தாமரைப் பூவில் எத்தனை வகை உண்டு?

(2) உனக்கு என்ன பழம் பிடிக்கும்?

(3) பௌர்ணமி என்றால் என்ன?

(4) நம் முதல் பிரதமர் யார்?

(5) எது சிறந்த வலிமை?

Phone : 31905

SARASWATI VIDYALAYA

Shankarnagar Square, NAGPUR - 440 010.

Shri Dr. G. Bagavant
President

Shri N. Krishnamurthy
Secretary

Miss Ghosh
Head Mistress

Ref. .

Date : 7 - 7 - 83

No. of Tamil Students offering Tamil Subjects in our School from Class I to X about 500 students.

(Sd.) × × ×

Head Mistress
Saraswati Vidyalaya
Shankarnagar,
Nagpur-10.

A History of the Panjab University,
Chandigarh 1947-1967.
by
R. R. Sethi
J. L. Mehta

First Edition, December 1968. Published by the Secretary, Publication Bureau, Panjab University, Chandigarh.

xix DEPARTMENT OF SOUTH INDIAN LANGUAGES

Pages 291, 292.

The Department of South Indian Languages is the youngest of all the Language Departments of the University.

It came into existence in June 1967 with the appointment of Shri K. Ramakrishnan as Lecturer in Tamil.

Four students were admitted for one year Certificate Course in Tamil in the session 1967—68. There is also a proposal to start Diploma Course in Tamil from the next academic year. It may be added here that Tamil is taught as one of the optional subjects in the Higher Secondary, Pre - University, Pre - Engineering, Pre - Medical, B. A., and B. Sc., Courses of this University.

பம்பாய்த் தமிழ்ச் சங்கம்
சயான் ரோடு, பம்பாய்-400 022

ஆரம்ப தமிழ்க் கல்வி இலவச வகுப்பு

நமது பம்பாய்த் தமிழ்ச் சங்கம் — பள்ளியில் பயிலும் தமிழ் சிறுவர், சிறுமியர்களுக்கு வரும் கோடை விடுமுறையில் (Summer Vacation) ஆரம்ப தமிழ்க் கல்வி இலவச வகுப்புக்கள் நடத்த திட்டமிட்டுள்ளது. மேற்படி வகுப்புக்கள் சங்க மணி மண்டபத்தில் வரும் தமிழ் புத்தாண்டு நாளில் (ஏப்ரல் 14ந் தேதி) தொடங்கும்.

சங்க அங்கத்தினர்களும் அவர்களுடைய நண்பர்களும் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு, தங்கள் குழந்தைகளுக்கு தமிழ் கற்பிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

வகுப்புக்கள் வாரம் இரு முறை சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும். பங்கு பெற விரும்புவோர் தங்கள் குழந்தைகளின் பெயர், விலாசம் ஆகியவற்றை வரும் ஏப்ரல் மாதம் 8 ந் தேதிக்குள் சங்க அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

இப்படிக்கு,
ஒ. கே. சுப்பராயலு
எஸ். இராமதாஸ்
செயலாளர்கள்

Semalay's visit to Kurukshetra on Monday 8th Aug. 1983
Report on Certificate Course in Tamil at Kurukshetra University:

1. The course was started in 1978 on the basis of an offer from Tamil Nadu Govt. of a grant of Rs. 15,000/- for this purpose. The course continued in 1979—80 and 1980—81 sessions, discontinued in the 1981—82 session and again offered in the 1982—83 session.

2. The course is included in the University's prospectus and advertised in the newspapers along with other courses.

Academic Year	No. of students admitted	Drop outs	No. of students taking the Cert. examination
1978-79	30	24	4
1979-80	10	9	1
1980-81	10	8	2
1982-83	9	5	4

3. All those who attended the classes were regular students of other courses of the University. No information is available as to how the certificate holders made use of their knowledge of Tamil acquired at Kurukshetra.

4. Tamil books of value approx. Rs. 600/- have been purchased and added to the collection of the University library.

5. The classes were held in the evenings for 1½ hours a day for four days a week in the University's Arts Faculty Bldg. Second Std. textbooks of the Tamil Nadu Govt. schools were purchased by the teacher and sold to the students.

M. Shanmugam Pillai's Spoken Tamil Vol. 1 & 2 were used by the teacher as a reference book. The students were asked to buy copies of this book but the book was out of print.

Tamil Primer for Europeans by Narayanaswami & Kerlaske, Christian Literature Society, Madras Publication, was also used as a reference book As no Tamil film is shown in Kurukshetra or nearby the teacher could not take the students to any tamil cinema as is done in Sardar Patel Univ Anand. (Please see my reports on Tamil Course in that University). But the students are encouraged to see Tamil programmes featured in the National programme of Delhi T. V.

6. The grant of Rs. 15 000/- was received from Tamil Nadu Govt, in 1978. As on date this amount has not been entirely utilised / and a balance of approximately Rs. 4,500/- remains unutilised, after having paid to library books refered to above and after having paid to Dr. Mrs. R. Srinivasan a remuneration @ Rs 400/- for 6-8 months each year from 1978 to 1980 Dec. The salary for 1982-83 session is still due to be paid to her since there is a dispute on two counts.

i) the appointment is made at commencement of every academic year after a lapse of four months and terminated after the certificate exam. is over. The teaeher demands that this should be a permanent appointment entitling her to receive a remuneration all the year round.

ii) the University is offering Rs. 400/- while the teacher is claiming Rs.900/- for part time work.

7. The Tamil Nadu is said to have stipulated the appointment of a full time lecturer if the University wants to receive grants. This position was accepted and a post of full time lecturer was duly created by the Kurukshetra University's Academic Council and Executive Council in June-Aug.1982. The post was advertised in Aug. 1982 and again in May 1983. But no interview has been held so far and post remains unfilled.

The course has been included in the 1983-84 prospectus also but no teacher has been appointed

8. It is learnt front the University's office that the Kurukshetra University approached the Tamil Nadu Govt.'s Directorate of Tamil Development for additional funds to meet the expenditure involved. No reply is said to have been received.

9. It is learnt that Dr. V. I. Subramoniam, Vice-Chancellor, Tamil University came to Kurukshetra University in June 1982 to participate in a Summer Institute in Linguistics and the position, as it obtained at that time was explained to him.

Bio data of Dr. Mrs. R. Srinivasan who teaches the Tamil Course at Kurukshetra University :

1. M.A. in Tamil - Annamalai University (1962)
2. M.A. in Linguistics - Kurukshetra University (1967)
3. M.A. in Linguistics - University of Illinois at Chicago Circle, U.S A. (1969)
4. Ph.D. in Linguistics - Kurukshetra (1978)
   M.A. in Univ. of Illinois is partly by dissertation and partly by course work. Both this dissertation and her Ph.D. thesis relate to linguistic analysis of Tamil grammar.

Experience :

1. Lecturer in Tamil, Auxilium College, Katpadi, Tamil Nadu 1960-63.
2. Research Asstt. Univ. of Illinois. U.S A., 1968-69
3. Research Fellow, Kurukshetra University, 1971-74
4. Part time Lecturer in Tamil, Kurukshetra University, Sep. 1978-Dec. 1980
5. U.G.C. Post Doctoral Fellow, Linguistics Dept. K.U. Dec. 1980-Dec. 1982
6. Part time Lecturer in Tamil, Kurukshetra, Dec. 1982-March 1983

DEPARTMENT GF SOUTH INDIAN LANGUAGES
PANJAB UNIVERSITY

K. RAMAKRISHNAN
HEAD OF THE DEPARTMENT

CHANDIGARH-160014 (India)
No................/SIL/
Dated 11—8—1983

1. Rs. 6730/- received by Draft No F 641697 dated 27-3-1981 from the Director of Tamil Development (vide letter No. B4/18338/78, Dated 30-3-1981) as grant to be utilised for the year 1978—79.

2. Our letter No 37/SIL/15 dated 16-2-1982, to the Director of Tamil Development to accord sanction to utilise the grant (Rs. 6730) for the year 1978—79 and after wards for which necessary utilisation. Certificate will be sent after utilisation. (no reply)

3. 4048/A dated 26-2-1982 from this Panjab University Registrar as above to the Director of Tamil Development but no reply.

4. Our Reminder letter No. 64/SIL/15, dated 16-3-83 but no reply.

5. Our Reminder lettter No. 115/SIL/15, dated 23-4-82 but no reply.

6. Our Reminder (III) 181/SIL/15 dated 19-7-1982.

7. Letter No. 15370/A dated 29-7-1982 from the Registrar to the Director of Tamil Development for sanction of permission to utilise the grant for 1978—79 and onwards but no reply.

8. Reminder letter No. 21873/A dated 31-2-1982 from the Registrar to the Director of Tamil Development for sanction of permission to utilise the grnt for 1978—79 and onward but no reply.

9. Letter B2/18388/78, dated 3-3-1983 from the Director of Tamil Development to the Registrar asking for same informations.

10. Our letter No. 110/SIL/15 dated 9-3-83 to the Director of Tamil Development giving all the information in response to his letter No. B2/18380/78 dated 3-3-83.

11. Letter No. 8989/A dated 5-4-83 from the Registrar of Panjab University to the Director of Tamil Development giving all the informations in response to his letter No. B2/18388/78, dated 3-3-83.

12. Our letter No. 150/SIL/5 dated 8-4-83 to the Director of Tamil Development for permission to utilise the grant of Rs. 6,730 for the year 1978—79 and onwards (no reply)

13. Our letter No. 336/SIL/15 dated 4-8-1983 to the Director of Tamil Development for permission to utilise the grant of Rs. 6,730 during this academic year (1983—84) (no reply till now).

o—o

DEPARTMENT OF SOUTH INDIAN LANGUAGES,
PANJAB UNIVERSITY, CHANDIGARH - 160014.

Telephone No. 23263 (P.P)
No. 212-312/SIL/16/PU/DS
Admission Buletin Dated 15-7-1983.

1. **Location :** Room No. 11, Old Correspondence Course Building (Near State Bank of India), Sector-14. P. U. Chandigarh-160014.

2. **Courses :**

I. **Certificate Course in Tamil :** One year duration. Tamil is taught from alphabet through English to non-Tamils.

Eligibility : Higher Secondary on Pre-University or equivalent.

II **Diploma Course in Tamil :** One year duration.

Eligibility : Certificate in Tamil or equivalent.

III **Advanced Diploma Course in Tamil :**

Eligibility : Diploma Course in Tamil or equivalent.

3. **Time :** The classes are usually held in the evenings after 5 30 p.m. (According to the suitability of regular students and teachers from other Departments and Colleges and others who are in job.)

4. **Admission Form :-** Application on the prescribed admission form obtainable from the University Cashier on Payment of Rs. 2.00 should reach the Department together with the following:-

(a) Copy of each certificate/degree (b) Character Certificate (c) Migration Certificate (if passed the lower, examination from other University) (d) No objection Certificate (e) Photo to be affixed on the admission form.

The candidates should bring their original certificates / degrees etc. with themselves at the time of interview.

5. **Eligibility Certificate :** Obtainable from the Panjab University (RS) Branch (Applicable for those who passed their lower examination from other University.)

6 **Tuition Fee :** (a) Students/Teacher / Research Scholars Rs. 12/-per quarter.

b) Others ....Rs. 30/-per quarter. For other fees see the University Teaching Departments '*Hand Book of Information, 1983.*'

7. **Dates of Admission :**

a) Normal Admission .... 1-3-1983 to 10-8-1983.

b) Late admission with late fee of Rs. 15/-to be allowed by the Chairman/Head of the Department ... 11 - 8 - 1983 to 23 - 8 - 1983.

Note : 1. Incomplete forms shall not be entertained.

2 A few freeships and stipends @ Rs. 25/-p.m. and Rs. 50/=p.m. may be available to deserving students of the Tamil Courses.

3. The undersigned can also be contacted at E 41, Panjab University Campus, Sector-14, Chandigarh.

(ஒ-ம்.) கு. இராமகிருஷ்ணன்
(K Ramakrishnan)
Chairman of the Department of
South Indian Languages. P U.
Chandigarh - 160014.

For favour of
Notice Board

Tel. No. 3261-Ext. 24

PUNJABI UNIVERSITY LIBRARY
PATIALA (INDIA) - 147002

No. 4445

Dated 10 - 8 - 83

With reference to your personal talk today the 10th August, 1983 I am to inform you as under:

This University Library has seven books in English on Tamil Linguistics and a total of about 40 books (in both Hindi and English) relating to Tamil published by Sahitya Academy/Bharathy Jubilee Committee/ National Biography Series of Publication Division, Government of India and translations by A. K. Ramanujan. There are very few books about Tamil Culture / Language / Literature and Tamil Nadu. We have no books written in Tamil.

(Sd.) R.L. Mittal

(Dr. R. L. Mittal)
Chief Librarian.

Mr. Somalay,
Sastrinagar Post Office Building,
Adyar,
Madras-600 020.

8. மும்மொழிக் கொள்கை

"மாநில மொழி, தேசிய மொழி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் படிக்க அரசினர் உதவி பெறும் பள்ளிகளில் அல்லது அரசு நடத்தும் கல்வி நிலையங்களில் வாய்ப்பு இருக்கவேண்டும்; மாநில மொழியும் தேசிய மொழியும் ஒன்றாக உள்ள இந்தி பேசப் படும் மாநிலங்களில், ஏனைய இந்திய மொழிகளில் ஒன்று கட்டாய மாகக் கற்பிக்கப்பட வேண்டும்" என்பதைத் தேசிய ஒருமைப்பாட் டைக் கருத்திற் கொண்டு இந்திய அரசு வலியுறுத்தி வருகிறது. இந்தக் கொள்கை நடைமுறையில் எவ்வாறு இயங்குகிறது என்பதை இங்கு ஆராயலாம்.

இந்தி மாநிலங்கள்

இராசத்தான், மத்திய மாநிலம், தில்லி ஆகிய மாநிலங்களில் தேசிய மொழியான இந்தியே மாநில மொழியாகவும் இருக்கிறது. அங்கு எவரும் மூன்றாவது மொழியைக் கற்றுக் கொள்ளவில்லை. அதற்குரிய வசதியும் செய்யப்படவில்லை பிற மொழிகள் கற்க வசதி தேவையெனின், அந்தந்தப் பள்ளிகளில் ஒவ்வொரு வகுப் பிலும் குறைந்தது 20 மாணவராவது குறிப்பிட்ட ஒரு மொழியைக் கற்க முன் வரவேண்டும் என்று வகுத்துள்ளனர். நகர்களின் சுற்றுப் புறங்களில் உள்ள ஏராளமான பகுதிகளில் மொழிச் சிறுபான்மை யினர் சிதறிக் கிடப்பதால் நடைமுறையில் இதைச் செயல்படுத்து வதில் இன்னல்கள் உள்ளன.

தமிழர் தங்கள் குழந்தைகளுக்காக நடத்திவரும் பள்ளிகள் பற்றி, இந்த அறிக்கையில் 'தமிழ்க்கல்வி' என்ற தலைப்பில் தனிக் கட்டுரையில் கூறுவேன்.

அரியானா

அரியானா மாநிலத்தில் ஆட்சிமொழியாக இந்தி உள்ளது. பள்ளிகளில் இந்தியும் ஆங்கிலமும் கற்பிக்கப்படுகின்றன. மூன்றாவது மொழியாக ஒரு தென்னிந்திய மொழியைக் கற்பிப்பது, ஒருமைப்பாட்டுக்கு உதவும் என்று இந்தியத் தலைமை அமைச்சர் கூறிவருவதற்கு இணங்க அவருடைய கட்சி ஆட்சியிலிருக்கும் அரியானா அரசு, சில ஆண்டுகளுக்குமுன் மாநில அரசுப் பள்ளிகளில் தெலுங்கு மொழி கற்பிக்கப்படும் என்று அறிவித்தது. அதைத் தொடர்ந்து 52 ஆசிரியர்களை அரியானா அரசு மைசூரிலுள்ள இந்திய மொழிகளுக்கான மத்தியப் பள்ளிக்கு (CIIL) அனுப்பி அவர்கள் தெலுங்கு கற்றுக் கொள்ள ஏற்பாடு செய்தது. பயிற்சியின் முடிவில் அந்த ஆசிரியர்கள் அரியானா அரசின் உயர்நிலைப்பள்ளிகளில் தெலுங்கு ஆசிரியராக நியமிக்கப்பட்டனர். இரண்டாண்டுகளுக்குப் பிறகு 'தெலுங்கு மொழியைக் கற்றுக் கொள்ள, போதிய அளவு மாணவர்கள் முன் வராததால் தெலுங்கு மொழி ஆசிரியர் அனைவரும் இந்திமொழி ஆசிரியராக நியமிக்கப்படுகின்றனர்' என்று அரியானா அரசு ஆணை பிறப்பித்தது.

இதெல்லாம் அரசியல் சாணக்கியமே தவிர வேறு ஒன்றும் இல்லை. மற்றொரு நிகழ்ச்சியும் குறிப்பிடத்தக்கது.

1983 மே இறுதியில் 'அரியானா மாநிலத்தின் இரண்டாவது ஆட்சி மொழியாகத் தமிழ் இருந்து வரும் என்று அந்த மாநில முதலமைச்சர் நிருபர்கள் மாநாட்டில் கூறினார். செய்தித் தாள்களில் அந்த அறிவிப்பு வெளிவந்தது. அரியானா அரசின் செயலர் சிலரைச் சந்தித்து இது குறித்து நான் கேட்டேன் ''நாங்களும் செய்தித் தாள்களில் படித்தோம். அரசு எவ்வித முடிவும் செய்யவில்லை. தலைமைச் செயலகத்தில் இது குறித்த கோப்பு எதுவும் இல்லை'' என்று கூறினர்.

பஞ்சாபி மொழி பேசும் அகாலியர் பஞ்சாபியை, அரியானா மாநில இரண்டாவது ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததாகவும் அதற்கு ஒரு பதிலடியாக முதலமைச்சர் இவ்வாறு அறிவித்திருக்கக் கூடும் என்று அரசியல் வட்டாரங்கள் கருதின.

இந்தி மொழி

மகாராட்டிரம், குசராத் ஆகிய மாநிலங்களில் மாநில ஆட்சி மொழியாக மராத்தியும் குசராத்தியும் உள்ளன. எனினும் அந்த

மாநிலங்களின் தலைநகர்களிலுள்ள கடைகளிலும் பொது இடங்களிலும் இந்தி மொழிதான் கொடிகட்டிப் பறக்கிறது. உள்ளூர்க்காரர்களுங்கூட, இந்தி தெரியாவிட்டால் கிணற்றை விட்டுச் சில வினாடிகளுக்கு முன் வெளியேற்றப்பட்ட மீனைப் போலத் துடிக்க வேண்டிய நிலை உளது.

அந்த மாநிலங்களின் பிற நகர்களிலும், இந்தி மொழி அவர்கள் செவிகளில் ஒலித்தவாறாக உள்ளது. அவர்கள் விரும்புகிற அளவுக்கு அவரவர் தாய் மொழியில் திரைப்படங்கள் வெளிவருவதில்லை. பெரும்பாலும் இந்திப் படங்கள் மட்டுமே பார்க்கின்றனர். எனவே, தென் மாநில மக்களுக்குத் தோன்றுவது போல அவர்களுக்கு இந்தி ஒரு வேற்று மொழியாக இல்லை. படித்துத் தீர வேண்டிய மொழியாக உள்ளது. எழுதப் படிக்கத் தெரியாவிட்டாலும், பேசுவதற்கு மட்டுமாவது இந்தி மொழியைத் தெரிந்து கொண்டுள்ளார்கள் இந்தி மொழியைப் பேசத் தெரிந்து கொள்வதில் எந்த மொழியினர்க்கும் அவ்வளவு இடர்ப்பாடு இல்லை என்று கூறவேண்டும். வட மாநிலங்களில் வழங்கும் மொழிகளில் பஞ்சாபி, உருது தவிர ஏனைய மொழிகள் எல்லாவற்றிற்கும் இந்தி மொழிக்கும் தேவ நகரி வரி வடிவ ஒற்றுமை உண்டு.

வட மாநிலங்களில் வாழும் தமிழர் சில மாதங்களில் இந்தியை ஓரளவு பேசக் கற்றுக்கொண்டு விடுகின்றனர். எனவே இந்தியைப் பற்றி, தமிழ்நாட்டின் கண்ணோட்டத்திலும் வட மாநிலங்களில் இந்தி அல்லாத மாநிலங்களின் கண்ணோட்டத்திலும் வேறுபாடு உள்ளது

சில சிக்கல்கள்

தமிழ்நாட்டில் இந்தி படிக்காமல் வடமாநிலங்களுக்குப் போகிறவர்கள் ஏராளமாக இருக்கின்றனர். அவர்களில் ஒருசிலர் போய்ச் சேர்ந்த சில திங்கள்களுக்கு அல்லற்படுகின்றனர். குறிப்பாக, சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ளவர்கள் அல்லது அத்தகைய வேலைகளில் ஈடுபடுகின்றவர்கள் தவறான செயல்களைச் செய்தாலோ அவ்வாறு செய்ததாகக் காவல்துறையினரால் ஐயப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டாலோ அவர்கள் சைகை மூலம் பேச முடிகிறதே தவிர, காவல் நிலையத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள அவர்களால் இயலவில்லை.

மிகக் கனமான வாகனங்களை (Trucks) ஓட்டுபவர்கள் மத்தியக் கிழக்கு நாடுகளுக்குச் சென்று விட்டதால் பர்பாயில் இந்த வேலைக்குப் பல்லாயிரம் பேர் மேன்மேலும் தேவைப்படுகின்றனர்.

இவர்களுக்கு மாதம் மூவாயிரம் ரூபாய்க்குக் குறையாத ஊதியம் கிடைக்கிறது. மத்திய மாநிலத்து உழவர்கள் தங்களுடைய பயிர்த் தொழில் புரியும் காலத்தை நீக்கி, எஞ்சிய எட்டு மாதங்கள் இந்தவேலையில் ஈடுபடுகின்றனர். தமிழ்நாட்டிலிருந்து இந்த வேலைக்கு வருபவர்கள், மனத்துணிவு இன்மையாலும் இந்தி மொழி தெரியாததாலும் பம்பாய்கு வந்து இரண்டு மாதங்களி லேயே தப்பித்தோம் பிழைத்தோம் என்று தமிழ்நாட்டுக்குத் திரும்பி விடுகின்றனர்.

பஞ்சாபும் அரியானாவும் நீர் வளமும் நில வளமும் மிக்கவை. இந்த இரண்டு மாநிலங்களின் வேளாண்மைப் பல்கலைக்கழகங் களும் போட்டி போட்டுக் கொண்டு உலகத்தார் அனைவரும் மூக்கின்மேல் விரலை வைத்துக்கொண்டு வியப்படையும் வண்ணம் பசுமைப் புரட்சியைத் தொடர்ந்து ஏற்படுத்தியவாறாக உள்ளன. ஆனால் அந்த மாநிலங்களில் தேவையான அளவுக்கு உழவுத் தொழில்களுக்கு ஆள்கள் இல்லை. ஆண்டுதோறும் மூன்று, நான்கு மாதங்களுக்கு நூறாயிரக்கணக்கான மக்கள் உத்தர மாநிலத் திலிருந்து வந்து செல்கின்றனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக இதில் சில இடர்ப்பாடுகள் உண்டாகி இருக்கின்றன. ஈராயிரம் இந்திச் சொற்களை மட்டும் பேசத் தெரிந்து, குளிரையும் சற்றுப் பொறுத்துக் கொள்ளக் கூடிய தமிழர்கள் சில நூறாயிரம் பேர் ஆண்டுதோறும் இந்த மாநிலங்களுக்குச் செல்ல வாய்ப்பு உள்ளது. அவர்களில் நூற்றுக்கு ஐந்து பேராவது புத்துணர்ச்சி பெற்று, தமிழ்நாட்டின் வேளாண்மைக்கு வலுவும் வனப்பும் ஊட்டுவர் என்று எதிர்பார்க்கலாம். தமிழரும், பஞ்சாபியரும் ஒருவருடன் ஒருவர் ஒத்துப் போகக் கூடியவர்கள் என்பதும் இங்குக் கருத்தில் கொள்ளத்தக்கது.

தமிழ் இளைஞர் கருத்து

வட மாநிலங்களிலேயே பிறந்து அங்கேயே வளர்ந்து, அங்கேயே படித்துப் பட்டம் பெற்றுள்ள தமிழ் இளைஞர் சில நூறுபேர் என்னிடம் பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

(1) தொடர்ந்து, ஆங்கிலமும் இந்தியாவின் ஆட்சிமொழியாக இருந்து வரவேண்டும்.

(2) இந்தி தெரியாத மக்களுக்கு வேலை வாய்ப்பை அல்லது பதவி உயர்வைத் தடுக்கும் முயற்சிகள் இப்பொழுது அவ்வளவு கடுமையாக இல்லை.

(3) இந்தியை ஒரே ஆட்சி மொழியாகத் திணிக்க மேற்கொள்ளப் பெறும் முயற்சிகளைக் கடுமையாக எதிர்க்க வேண்டும். அவ் வகையில் விழிப்பு உணர்ச்சி தேவை.

(4) ஏற்கெனவே ஐதராபாத்தில் தொடங்கி வடமாநிலங்களில் எங்கும் அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய மொழியாக (Lingua Franca) இந்தி இருந்து வரும் உண்மையை நாம் உணரவேண்டும்.

(5) மேற்கண்டவற்றுக்கு ஏற்பத் தமிழ்மக்கள், தமிழக அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஆகியோருடைய இந்தி எதிர்ப்பு அமையுமானால் பல மாநிலங்களிலும் இந்த எதிர்ப்புக்கு ஆதரவுகிடைக்கும். தென் மொழிகளை விட, வடமாநிலங்களில் பேசப்படும் இந்தி அல்லாத மொழிகளுக்குத்தான் இந்தியால் ஆபத்து மிகுதி என்ற அச்சம் பல மொழியினருக்கும் உள்ளது.

இந்தி நாளிதழ்கள்

இந்தி மொழியில் வெளிவரும் நாளிதழ்களால் மட்டுமே வட இந்திய மக்களுடைய சிந்தனைகளை நாம் அறிய இயலும் ஆங்கில மொழியில் வெளிவரும் இதழ்கள் செல்வர்களுக்கு உட்பட்ட ஒரு கூட்டத்தாரால் பல பதிப்புகளாக (Chain) வெளியிடப்படுகின்றன. அவை அந்தந்த மாநிலத்தாரால் நடத்தப்படவில்லை.

1977இல் நடைபெற்ற தேர்தல் வாயிலாக வடமாநிலத்தார் அறிவித்த அரசியல் உணர்ச்சி தென் மாநிலங்களில் எதிரொலிக்க வில்லை.

தென் மாநில மக்கள் அல்லது அரசியல் தலைவர்கள் அல்லது அவர்கள் சார்பாக ஒரு சிலராவது இந்தி மொழி நாளிதழ்களைப் படித்திருந்தால் அந்த மக்களுடைய உணர்ச்சிகளும் உள்ளக்கிடக்கை களும் தெற்கே தெரிந்திருக்கும். அவற்றைக் கவனிக்காமல் போன தால் தேசிய நீரோட்டத்திலிருந்து விலகி, தென்மாநிலங்கள் தனித் தீவுகளாயின என்று கருதப்படுகிறது.

சப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் நடப்பவற்றையும் நடக்கப் போவதையும் அறிவதில் நாம் காட்டும் ஆர்வம் அல்லது அக்கறை வட மாநிலங்களைப் பற்றி நமக்குக் கிடையாது. அங்கே நிலவும் சூழ்நிலையும் அங்கு நடைபெறும் வளர்ச்சியும்கூட நமக்குத் தெரியவில்லை.

தமிழ்நாடு அரசு, இந்தி படிக்கத் தெரிந்த தமிழர் சிலரைக் கொண்ட ஓர் அலுவலகத்தை அதன் தலைமைச் செயலகத்தில் உருவாக்கி, இநதி மாநிலங்களின் நிலைமையை இந்தி நாளிதழ்களின் வாயிலாக அறிந்து கொள்ள ஏற்பாடு செய்து கொள்வதுசாலச் சிறந்தது.

குசராத்தி, மராத்தி, பஞ்சாபி, வங்காளி மொழி இதழ்களையும் இவ்வாறே படித்து, பொதுவான போக்குகளை அறிந்துகொள்வதும் பயன் தரும்.

கட்சியும் மக்கள் நலனும்

''எங்கள் கட்சி ஆட்சியில் இருக்கும் வரை பள்ளிகளில் இந்தியைத் திணிக்க விடமாட்டோம்'' என்று தமிழ்நாட்டில் அரசியல் தலைவர்கள் அவ்வப்போது கூறும் செய்திகள் இந்தி இதழ்களில் கொட்டை எழுத்தில் வெளியிடப்படுகின்றன இத்தகைய பேச்சுக்களால் தங்களுக்குத் தீமை ஏற்படுத்துவதாக வட மாநிலங்களில் வாழும் தமிழர் சிலர் என்னிடம் கூறினர் எந்த ஒரு மொழியையும் படிக்க யாராவது விரும்பினால், விரும்புபவர்கள் தங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள அரசு குறுக்கிடக் கூடாது என்றும் அவர்கள் கூறுகின்றனர். அவ்வாறு குறுக்கிடுவதும் மாறிவரும் சூழ்நிலைக்கு ஏற்ப பழைய கொள்கைகளை மாற்றிக் கொள்ளாததும் மக்களுடைய வாழ்க்கையோடு சூதாடுவதற்குச் சமமாகும் என்றும் சிலர் கருத்துத் தெரிவித்தனர்.

ஆங்கில மொழி

ஆங்கில மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டியதும் அதில் ஓரளவு புலமை பெறுவதும் பயன்தரும் என்பதை எல்லா மாநிலத்தாரும் இப்போது உணருகின்றனர். ஆனால், இந்தி பேசப்படும் மாநிலங்களில் அரசினர் நடத்தும் பள்ளிகளில் இந்தி மொழி மட்டுமே கற்பிக்கப்படுகிறது என்று பொதுப்படையாகக் கூறலாம். பெயரளவுக்கு ஐந்தாம் வகுப்பிலிருந்து மொழிப் பாடமாக மட்டும் ஆங்கிலம் கற்பிககப்படுகிறது. அதை நன்றாகக் கற்றுக்கொடுக்கக் கூடிய ஆசிரியர்களோ, ஆங்கிலத்தை நன்றாகக் கற்றுக் கொள்ள வேண்டும என்ற அவா மிக்க மாணவர்களோ அப்பள்ளியில் இல்லை.

அந்த மாநிலங்களில் ஓரளவு ஆங்கிலப் புலமை பெற வேண்டும் என்று விரும்புபவர்கள் (1) அரசியல் தலைவர்கள் (2) முன்னாள் அரசர்கள் (3) பிராமணர்கள் ஆகிய மூவகைக் குடும்பத்தினர் மட்டுமே ஆவர். அவர்கள் அனைவரும் ஆங்கிலத்தைப் பயிற்சி

மொழியாகக் கொண்ட பள்ளிகளுக்குத் தங்கள் குழந்தைகளை அனுப்புகின்றனர். இந்தப் பள்ளிகள் தில்லியிலுள்ள மத்திய மேல் நிலைக் கல்வி வாரியத்துடன் இணைக்கப் பெற்றுத் தனியாரால் நடத்தப்படுகின்றன.

இந்தி மாநிலங்கள் பலவகைகளிலும் பின்தங்கியவை. அங்குள்ள பெரும்பாலான மக்கள் இப்போதுதான் பள்ளிக்கூடத்தையே எட்டிப் பார்க்கிறார்கள். தாய்மொழியைத் தவிர வேறு எந்த மொழியையும் அவர்கள் கற்றுக் கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை.

சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மாநிலத் தலை நகர்களை மையமாக வைத்தே ஆங்கில ஆட்சி இந்தியாவில் தோன்றியது. அந்த ஆட்சிக்குத தேவைப்பட்ட அரசு ஊழியர்களை உற்பத்தி செய்தற்கான கல்வித் திட்டம் அந்தத் தலைநகரங்களை ஒட்டிய மாநிலங்களில் மட்டும் வேர் கொண்டது.

கிறித்தவ சமயம் பரவிய கடலோர நகரங்களிலும் ஆங்கிலேயர்களுடைய தொழிற் சாலைகள் ஏற்பட்ட ஒரு சில பகுதிகளிலும் ஆங்கில மோகம் மக்களை ஈர்த்தது. ஆங்கிலத்தைச் சிறப்பாகக் கற்பிக்கும் தரமான கல்வி நிலையங்கள் அங்குமட்டுமே தோன்றின.

இந்தி பேசும் மாநிலங்கள் நாம் மேலே சுட்டிக்காட்டிய நிகழ்ச்சிகளால் தாக்கப்படவில்லை. எனவே, அங்கு ஆங்கிலக் கல்வி அரிதாகவே இருக்கிறது.

மகாராட்டிரத்திலும், தில்லியிலும் ஆங்கிலக் கல்வி மேம்பட்டதாக இருக்கிறது. ஆங்கிலப் பயிற்சி மொழி வகுப்புகளுக்கு அந்த மாநில அரசுகள் வெளியிடும் பாட நூல்களைப் பார்க்கும் போது, இது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெரிகிறது.

இராசத்தான் மாநிலத்தில் சுற்றுலாத் தலங்கள் ஏராளமாக உள்ளன மேலை நாட்டார் நாள்தோறும் பெருந்தொகையாகச் சுற்றுலா வந்து பணத்தைக் கொட்டுகின்றனர். நகரங்கள் தோறும் உள்ள நட்சத்திர விடுதிகளை (ஓட்டல்களை) எண்ணி முடியாது. சுற்றுலா வருபவர்களுக்காக, எந்த இடத்திலும் அறிவிப்புப் பலகைகளில் ஆங்கில மொழிககு முதன்மை கொடுக்கப் பெற்றிருக்கிறது. நகரப் புறங்களில் ஆங்கிலக் கல்வியின் தேவை நன்கு உணரப்படுகிறது

குசராத்திலும் இந்த நிலை ஓரளவு நிலவுகிறது. மத்திய மாநிலத்தைப் போல, குசரத் மக்களிலும் பெரும்பாலோர் ஆங்கிலம் பேசவோ எழுதவோ எவ்வளவு தான் முயன்றாலும் அவர்களுக்கு அது எளிதில் ஏவில்லை. பெரிய வணிக நிறுவனங்கள் யாவும் தங்களுடைய ஆங்கிலப் பேச்சு, எழுத்துத் தேவைக்குத் தமிழரையும் மலையாளிகளையுமே நம்பியிருக்கின்றன.

குசரத்தின் மேற்குப் பகுதி, இராசத்தான், மத்தியமாநிலம் ஆகிய மாநிலங்களில் ஏராளமான சிற்றரசுகள் இருந்தன. அவை இந்தியாவுடன் இணைந்து, ஒழுங்கான ஆட்சி என்ற கட்டுக் கோப்பை இப்போதுதான் முதன் முறையாக உணரத் தொடங்கி இருக்கின்றன. புதுக்கோட்டை என்ற மிகச் சிறிய தனி அரசு மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக, தமிழ்நாடு முழுவதும் 200 ஆண்டுகளாக ஒரே சீரான அமைதியான ஆட்சியில் இருந்து வந்திருக்கிறது. இதனால் அந்த மாநிலங்களின் சிக்கல்களையும் அவற்றுக்கு அடிப்படையான வரலாற்றுப் பின்னணியையும் நம்மால் புரிந்துகொள்ள இயலவில்லை.

சிற்றரசர்கள் ஆண்டுவந்த சின்னஞ்சிறு திட்டுக்கள் சர்தார் வல்லபாய் பட்டேலின் இரும்புக்கரத்தால் ஒருங்கிணைக்கப்பட்ட போது அதனால் பாதிக்கப்படாத ஒரே மாநிலம் தமிழ்நாடு தான்!

பஞ்சாப் மாநிலம், பாட்டியாலா, நபா, பார்டிகோட் போன்ற ஏராளமான பழைய சிற்றரசுகள் கொண்டது. மேலும், இன்றைய பஞ்சாப்பில் வாழும் மக்களின் பெரும்பாலோர் பாக்கிஸ்தானிலிருந்து உடுத்திய உடையுடன் ஓடிவந்து, புதிதாகச்சிலஇடங்களைப் பயிர் செய்தவர்கள். இவர்களில் ஒரு பகுதியினர் பாக்கிஸ்தானிலிருந்து அகதிகளாக வந்து இன்றைய அரியானாவை வளப்படுத்தியவர்கள். இந்திய மாநிலமாக 1947-முதல் இருந்த (கிழக்கு) பஞ்சாப் 10 ஆண்டுகளுக்கு முன் பஞ்சாப் என்றும், அரியானா என்றும் மேலும் இரண்டாகப் பிரிக்கப்பட்டபோது, அரியானாவில் தாங்கள் வளப்படுத்திய நிலங்களை விற்று விட்டு, மொழிவாரி மாநிலமான பஞ்சாபின் உள்நாட்டுப் பகுதிகளில் புதிய நிலங்கள் வாங்கி அவற்றை மேலும் பல மடங்கு வளப்படுத்தி வருகின்றனர்.

குசராத்தில் ஆங்கிலக் கல்வியில் பரோடாப் பகுதியின் நிலை தனித்தன்மை உடையது. உயர்கல்வியில் ஆர்வம் கொண்ட முன்னாள் மன்னர் சயாசிராவ் கேயிக்வாட் முயற்சியால் கல்வியிலும் தொழிலிலும் அங்குப் பெரிய முன்னேற்றம் காணப்படுகிறது.

மேலை நாடுகளில் அல்லது ஆப்பிரிக்கா பெருநிலப்பரப்பில் அடங்கிய கீன்யா, உகண்டா நாடுகளில் வாழ்ந்த அல்லது குடும்பத் தொடர்புடைய பட்டேல் இனத்தவராக உள்ள குசராத்தியர் மட்டுமே (பரோடா மாவட்டம் தவிர குசராத்தில் எஞ்சிய பகுதிகளில்) ஆங்கிலத்தைச் சரளமாகப் பேசக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

பஞ்சாபியர் உலகெங்கும் பரவி இருப்பதால் அவர்களுக்கு ஆங்கிலம் அயல்மொழியாக இல்லை.

நான் சென்ற எல்லா மாநிலங்களிலும் பட்ட மேற்படிப்பும். பொறியியல், மருத்துவம், வேளாண்மை முதலிய தொழில் படிப்புகளும் ஆங்கிலத்தில்தான் இப்போது கற்பிக்கப்படுகின்றன. விரைவில் அவை அந்தந்த மாநில மொழிகளின் வாயிலாகப் புகட்டப்படும் என்பதற்கான அறிகுறிகள் இல்லை.

எம்.எஸ்.சி. வேளாண்மைப் படிப்பு முதலிய உயர்படிப்புகளில் படிப்பு நேரத்தில் ஒரு பகுதி ஆங்கில மொழிப்பயிற்சிக்கு இப்போது ஒதுக்கப்படுவதாக, குசரத்தில் கேள்விப்பட்டேன்.

உலக வங்கி போன்ற சிலவற்றின் நிபுணர் குழுக்கள், சில மாநிலங்களுக்கு வரும்போது அவர்களுடன் பேசுவதற்கு அல்லது அறிக்கை தயாரிப்பதற்கு, அங்குள்ள தமிழர், சிறப்பாகப் பயன் படுத்தப்பட்டிருப்பதையும் அறிந்தேன்.

நம் மாநிலத்தில் கடந்த 25 ஆண்டுகளில் ஆங்கிலப் படிப்பின் தரம் படிப்படியாகக் குறைந்து கடந்த 5, 6 ஆண்டுகளில் மீண்டும் தரத்தை உயர்த்த முயன்று வருகிறோம். ஆங்கில மொழித் தகுதியிருந்தால் தமிழர் எத்தனை ஆயிரம்பேருக்கும் வடமாநிலங்களில் வேலை வாய்ப்பு இன்றும் என்றும் உள்ளது.

மாநில மொழிகள்

மாநில அரசுகளின் தலைமைச் செயலகங்களில், அந்தந்த மொழியைப் பேசினால் விரும்பும் செயல்களை எளிதில் சாதித்துக் கொள்ள முடிகிறது.

நான் சென்ற மாநிலங்கள் எல்லாவற்றிலும் மாநில அரசின் தலைமைச் செயலர் அல்லது அரசுச் செயலர், மாவட்ட ஆட்சித் தலைவர், மின்வாரியத் தலைவர், நீர்ப்பாசன வாரியத்தலைவர் போன்ற பெரிய பதவிகளில் தமிழர் உள்ளனர். சுருக்கெழுத்தராயும்

தமிழர் உள்ளனர். இவர்கள் அனைவரும் மிகவிரைவில் அந்தந்த மொழிகளைக் கற்றுக்கொண்டுவிடுகின்றனர். எனவே அலுவலர்களுக்கு எவ்வித இடர்ப்பாடும் ஏற்படவில்லை.

மராத்தி

குறிப்பாக மராத்தி மொழியை மற்ற மொழியினரைவிட தமிழர் சிலர் கரைத்துக் குடித்து மிகவும் நன்றாகப் பள்ளிகளில் இம்மொழியைக் கற்பிக்கின்றனர். சங்கத் தமிழுக்கு மதுரைபோல மராத்திய மொழிக்குத் தாயகமாக விளங்கும் புனாவில், தமிழர் சிலர் தங்களுக்குள்ளும் மராத்தியில் பேசிக் கொள்வதைக் கேட்கலாம், காணலாம்

குசரத்

1959-அளவில் பழைய பம்பாய் மாநிலத்திலிருந்து பிரிந்து குசரத் ஒரு தனி மாநிலமாக ஏற்பட்டது. அப்போது முதலமைச்சர் திரு. இதேந்திரதேசாய், ஐ.ஏ.எஸ். அலுவலர்களைச் சந்தித்தார். முதிர்ந்த அலுவலர் பலர் தமிழராக இருப்பதை அறிந்து, 'தமிழைக் குசரத்தின் ஆட்சி மொழியாக அறிவித்து விடலாம் போலிருக்கிறது'' என்றாராம்.

தலைமைக் கணக்கர் அலுவலகத்தின் எல்லா நிலைப் பதவிகளிலும் மற்றும் வட்ட ஆட்சியர் (தாசில்தார்), தட்டச்சர், சுருக்கெழுத்தர் இவ்வாறு குசரத் அரசில் ஆயிரக்கணக்கான தமிழர் பணி புரிகின்றனர். ஏற்கெனவே ஒருங்கிணைந்த பம்பாய் மாநிலத்தில் பணியாற்றிய தமிழர், கன்னடர் ஆகியோரின் ஒரு பகுதியினர் மகாராட்டிரத்தில் சிவசேனை இயக்கம் தலைதூக்கும் என்று அஞ்சி அமைதியான குசரத் என்ற புது மாநிலத்தில் பணியாற்ற விருப்பம் (opt) தெரிவித்தனர்.

கூட்டங்களில் அந்தந்த மொழியில் பேசக் கூடிய தமிழரும் உள்ளனர். ஆனால் இவர்கள் எண்ணிக்கை மிகக் குறைவு. ஒவ்வொருவர்க்கும் அவரவர் தேவைக்கேற்ற அளவு மட்டுமே குசரத் மொழி அறிவு உண்டு. குசரத்திய மொழியைச் சரளமாகப் பேசி. தொழிலாளர் தலைவராக விளங்கும் தமிழர் சிலர் உள்ளனர். ஆங்கிலத்தை மட்டும் தெரிந்து கொண்டு காலத்தை ஓட்டும் தமிழர்களும் தமிழ் கூடச் சரியாக எழுதப்படிக்கத் தெரியாத தொழிலாளர்களும் உள்ளனர். ஆனால் அனைவரும் தமிழ், இந்தி, குசராத்தி ஆங்கில மொழிகளைத் தங்கள் மக்களுக்குக் கற்பித்து வருகின்றனர்.

மும் மொழிக் கல்வி

மகாராட்டிர மாநிலத்தில் மும்மொழிக் கொள்கை கல்வி நிலையங்களில் கீழ்க்கண்டவாறு பின்பற்றப்படுகிறது.

ஆரம்ப வகுப்பு முதல் நான்காம் வகுப்பு வரை

1) மராத்தி பயிற்சி மொழி வகுப்பு
மராத்தி மொழி கட்டாயம்
இரண்டாவது மொழியாக ஆங்கிலம்
அல்லது இந்தி மொழி.
இவற்றுள் ஏதாவது ஒன்றை அவர்கள் விருப்பம் போல் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

2) தமிழ் பயிற்சி மொழி வகுப்பு
தமிழ் மொழி கட்டாயம்
இரண்டாவது மொழியாக ஆங்கிலம்
அல்லது இந்தி
மூன்று நான்காம் வகுப்புகளில் மராத்திமொழி கட்டாயம்.

ஐந்து முதல் எட்டாம் வகுப்பு வரை

முதன் மொழி தமிழ்
இரண்டாவது மொழி இந்தி
மூன்றாவது மொழி ஆங்கிலம்
மராத்தி மொழியில், தேர்வில் ஒருதாள் உண்டு.
ஆனால் அதில் எடுக்கும் மதிப்பெண், மேல் வகுப்புக்குச் செல்வதற்குத்தடையாக இராது.

ஒன்பதாவது பத்தாவது வகுப்புகளில் தமிழ்க் குழந்தைகள் மராத்தி படிக்கத் தேவையில்லை.

மேலே கண்ட ஏற்பாடு 1983 ஜுன் மாதத்தில்தான் அமலுக்கு வந்திருக்கிறது.

தேர்வில் இந்தி வினாத்தாள்கள் 100 மதிப்பெண்கள் கொண்டதாக இருக்கும். இதுவரை விருப்பப்பாடமாக இருந்து வந்த இந்தி, கட்டாயப்பாடமாக மாற்றியமைக்கப்படுவதால்

ஏனைய விருப்பப்பாடங்களான வடமொழி, பாரசீகம், அரபு, பாலி, அர்த்த மகாடி ஆகிய மொழிகள் பள்ளிகளில் போதிக்கப் படுவது நிறுத்தப்படும்.

ஆனால், இந்த மொழிகளை விருப்பப்பாடமாக முன் வகுப்புகளில் எடுத்துக்கொண்டவர்களுக்கு வசதியாக ஆண்டு இறுதித் தேர்வில் இந்த மொழிகளில் வினாத்தாள் தயாரிக்கப்பட்டுத் தேர்வு நடத்தப்படுவது இன்னும் ஓர் ஆண்டுக்கு மட்டும் நீடிக்கப் பட்டுள்ளது. (1983-84 கல்வியாண்டு)

மாணவர் இந்த மொழிகளில் தேர்வு எழுதினாலும் புதிய திட்டப்படி இந்தியையும் கட்டாயமாகப் படிக்க வேண்டும்.

இதுவரை இருந்த பாடத்திட்டத்தின்படி 8, 9, 10ஆம் வகுப்பு மாணவர்கள் இந்தி மொழி, மேற்குறிப்பிடப்பட்ட ஐந்து மொழிகள் ஆகிய ஆறுமொழிகளில் ஏதாவது ஒன்றை விருப்பப் பாடமாக எடுத்துப்படிக்க மகாராட்டிர அரசு வழி செய்திருந்தது

பஞ்சாபில் ஆங்கிலமும் பஞ்சாபியும் கட்டாய மொழிகள். விருப்பப்பாடமாக இந்தி உள்ளது.

அரியானாவில் ஆங்கிலமும் இந்தியும் கட்டாயமான மொழிப் பாடங்களாக உள்ளன. மூன்றாவது மொழியாகப் பஞ்சாபி, உருது அல்லது வடமொழியைப் பயிலலாம்.

தமிழ்நாட்டிலிருந்து சென்று தில்லியில் பட்டப்படிப்பில் சேர விரும்புபவர்கள் ஓரளவாவது இந்தி மொழியில் தேர்ச்சி பெற்றிருந்தால்தான் (Lower Hindi) தில்லிப் பல்கலைக் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

9. தமிழ்ச் சங்கங்கள்

நகரங்களில் எல்லாம் தமிழ்ச் சங்கங்கள் உள்ளன. பெரு நகரங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட சங்கங்களும் இயங்குகின்றன. அரசு அலுவலகங்களிலும் அவை போன்ற நிறுவனங்களான வாரியங்களிலும் தனியார் துறையிலுள்ள வணிக அலுவலகங்களிலும் வேலை பார்க்கும் தமிழர் இந்தச் சங்கங்களைத் தொடங்கியுள்ளனர்.

தொழிலாளர், அன்றாடக் கூலிகள் ஆகியோர் இந்தச் சங்கங்களில் சேர்வதில்லை. அவர்களுக்கு நேரம் இல்லை; ஈடுபாடும் இல்லை.

தமிழ்ச் சங்கங்கள் தொடங்கப் பெற்ற நோக்கங்கள் பின் வருவன : (1) பல்வேறு அலுவலகங்களில் வேலை பார்க்கும் தமிழர் சந்தித்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படுத்துவது. (2) தமிழ் நூல்கள், இதழ்கள் படிக்க உதவியாக நூலகமும் படிப்பகமும் அமைத்துக் கொள்வது. (3) தமிழில் பேசவும் எழுதவும் பயிற்சி பெற ஒரு சூழ்நிலையை உண்டாக்கிக் கொள்வது. (4) தமிழ்நாட்டிலிருந்து வரும் அறிஞர்களையோ செல்வாக்குள்ள தமிழரையோ வரவேற்று அவர்களுக்கு மரியாதை செய்வது.

இந்த நோக்கங்களில் அக்கறையுள்ள, தமிழ் அன்பர்கள் மட்டுமே தமிழ்ச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்தனர். சங்கத் தேர்தல்களில் தங்களுக்கு வாக்களிப்பதற்காக வற்புறுத்திச் சேர்க்கப்பட்டவர்கள் தேர்தல் நாள் தவிர மற்ற நேரங்களில் சங்கத்தின் பக்கம் ஒண்டவுமில்லை; தொடர்ந்து உறுப்பினர் கட்டணம் செலுத்தவுமில்லை.

சொந்தக் கட்டடம் ஏற்படும் வரை பல்லாண்டுகளுக்குச் சங்கங்களைக் கட்டிக்காப்பது எளிய செயல் அன்று. பெரும்பாலும்

ஆர்வமுள்ள யாராவது இரண்டுபேர் மட்டும் அவர்களுடைய ஓய்வு நேரத்தையும் செல்வாக்கையும் கைப்பொருளையும் பயன்படுத்திச் சங்கத்தை வளர்க்கின்றனர். சங்கங்களுக்கு முழு நேர அல்லது பகுதிநேரச் சம்பளம் கொடுத்து ஊழியர் சேர்க்கவும் வசதி இராது.

இந்த நிலையில் பொது நல ஆர்வத்தால் சங்கப் பணிகளைப் பார்த்து வந்த ஓரிரு அன்பர்கள் வேறு ஊர்களுக்கு மாற்றப்பட்டால் சங்கத்தின் செயல்கள் யாவும் படிப்படியாகக் குறைந்து விடுவது நடைமுறையாகும்.

யாராவது ஒரு குறிப்பிடத்தக்க விருந்தினர் அந்த நகரத்திற்கு வந்தால் செயற்குழுவைக் கேளாமல் விழா நடத்திவிட்டார் என்றும் தலைவர், செயலர் மீது கண்டன அம்புகள் எய்யப்படும். போட்டிக்கு. வேறு ஒருவருக்கும் வரவேற்புத் தரவேண்டும் என்று கோரிக்கை எழுவதும் இதன் விளைவாக ஒரு சங்கம் இரண்டு சங்கங்களாகவும் மூன்று சங்கங்களாகவும் குட்டி போடுவதும் சங்கங்களின் வரலாற்றை ஆராய்கையில் தெரிய வருகிறது.

அரசியல் கருத்து வேறுபாடுகளும் சாதிச் சார்புகளும் சங்கத்தின் நிதியைப் பயன்படுத்துவது பற்றிய மாறுபட்ட கண்ணோட்டங்களும் சங்கத்தின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கின்றன. சில சங்கங்கள் கோயில் கட்டும் வேலையில் ஈடுபடுவதால் அந்தப் பணிக்கே முன்னுரிமை கொடுக்கப் பெற்று மொழிக்கோ மக்களுக்கோ கொடுக்கப்படவேண்டிய முதன்மை மறந்துவிடப் படுகிறது.

சங்கங்கள் செம்மையாக நடப்பதற்குத் தேவையான கட்டடம் அமைய முதற் கட்டமாக அந்தந்த மாநில அரசினரின் தயவால் அன்பளிப்பாகவோ சலுகை விலையிலோ இடம் பெற முயல்கின்றனர். இந்த முயற்சியில் வெற்றி பெறுவது எளிதன்று. அடுத்த கட்டமாகத் தமிழக அரசின் மானியத்தையும் எதிர் பார்க்கின்றனர். சில பொதுவான கொள்கைகளைத் தமிழக அரசு வரையறை செய்து மானியம் வழங்குவதை விரைவுபடுத்தலாம்.

இந்த இரண்டு கட்டங்களையும் தாண்டி விட்டால், அந்தந்த நகரங்களில் ஓரளவு நன்கொடை திரட்டியும், வங்கிகளில் கடன் வாங்கியும் சங்கங்களால் கட்டடம் கட்ட முடியும். கட்டடத்தில் ஒரு பகுதியைத் திருமணங்களுக்கு வாடகை விட்டும் மற்றொரு பகுதியில் தமிழ்ப் பள்ளிகள் நடத்திவரவும் சங்கங்கள் விரும்புகின்றன. கட்டடத்தின் எஞ்சிய பகுதி, சங்க அலுவலகம், நூலகம், கூட்டங்கள் நடத்துவதற்கான மண்டபம் ஆகியவற்றுக்குத் தேவைப் படும்.

கட்டடம் இல்லாத சங்கம் எந்த வகையிலும் செயல்பட இயலாமல் தவிக்கிறது. தலைவர் அல்லது செயலாளரின் வீடே சங்க அலுவலகமாக இருக்கிறது. தலைவரும் செயலாளரும் மாறமாற, சங்கத்தின் முகவரியும் மாறுகிறது தொலைபேசி மூலம் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும் இயலவில்லை.

உறுப்பினர் கட்டணத்தைக் கொண்டு சங்கங்களால் ஒரு நூல்நிலையத்தைக் கூட நடத்த இயலவில்லை மலர் வெளியிட்டு விளம்பர வருமானம் ஈட்டுவது மட்டுமே நிதி சேர்ப்பதற்கு வழியாக இருந்து வருகிறது. மலர் வெளியிடுவதற்கு ஒரு காரணம் கற்பித்தாக வேண்டும். அதற்காக மூன்று நாள் விழா நடத்திப் பல்லாயிரம் ரூபாய் செலவு செய்த சங்கங்கள் உள்ளன. அடுத்த இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு அவை இருந்த இடமே தெரிவதில்லை.

திறந்த வெளியில் பெரும் செலவு செய்து பந்தல் போட்டு ஒரு நகரில் தமிழர் அமைப்பு ஒன்று விழா நடத்திற்று. விழா முடிந்து மூன்று ஆண்டுகள் ஆகியும் பந்தல் போட்டுக் கொடுத்த 'மண்டபவாலா'வுக்குப் பணம் கொடுக்கப்படவில்லையாம். அதன்பிறகு அந்த அமைப்பு செயல்படவில்லை.

இதுவரை நாம் கூறியது போன்ற ஏராளமான இக்கட்டுகளுக்கிடையேயும் தமிழ்ச் சங்கங்களை விடா முயற்சியுடன் வடமாநிலத் தமிழர் நடத்தி வருவதும், தமிழ் மக்களிடையே மொழியுணர்ச்சியை ஊட்டி வருவதும் சிறந்த சாதனைகளாகும். இவர்களுடைய உணர்ச்சிகளை மதித்து, தமிழ்நாடு அரசும் மக்களும் தமிழ்நாட்டிலுள்ள அமைப்புகளும் ஒல்லும் வகைகளிலெல்லாம் உதவ முன் வரவேண்டும். அப்படி நாம் செய்யத் தவறினால், முப்பது ஆண்டுகளுக்குள் வடமாநிலத் தமிழர் அனைவரும் ஆங்கிலோ இந்தியர் போன்று தனி இனமாகி விடுவர்.

சென்ற ஆண்டில் பாரதியார் நூற்றாண்டு விழா நடைபெற்றது, வட மாநிலத் தமிழ்ச் சங்கங்களுக்கு ஒரு புதிய தெம்பையும் ஊட்டிற்று.

பம்பாய்த் தமிழ்ச் சங்கம்

40 ஆண்டுகளாக இந்தச் சங்கம் நடைபெற்று வருகிறது. இச் சங்கத்தின் புகழ் இந்திய நாடெங்கும் மட்டுமன்றி அப்பாலும் பரவியுள்ளது. சங்கத்திற்குச் சொந்தக் கட்டடமும் உண்டு. இந்தக்

கட்டடம் பம்பாயின் மையப் பகுதியிலும் தமிழர் மிகுதியாக வாழும் இடங்களுக்கு நடுவேயும் அமைந்திருப்பதால எளிதில் எல்லோரும் சங்கத்திற்கு வர இயலுகிறது.

கட்டடத்தின் ஒரு பகுதியில்கிடைக்கும் வாடகை வருமானமே சங்கச் செலவுகளை ஈடு செய்கிறது.

இச் சங்கத்தார் தமிழ் வகுப்புகள் நடத்துவதையும் பெரிய தொரு நூல்நிலையம இருப்பதையும் ஆண்டுதோறும் நாடக விழாக்கள நடததுவதையும் ஒரு முறை புத்தகக் கண்காட்சி ஏற்பாடு செய்ததையும் இந்த ஆய்வின் பிற பகுதிகளில் விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன்.

இச் சங்கம் பல வெளியீடுகளையும் வெளியிட்டிருக்கிறது. அவற்றில குறிப்பிடத்தக்கவை : (1) அணுவைப் பற்றி (2) பாரதிக்குப்பின் சிறுகதை.

ஞாயிற்றுக் கிழமை தோறும் கூட்டங்கள் நடைபெறுகின்றன. தமிழ்நாட்டிலிருந்து வரும் அறிஞர் பலருக்கும் இங்கு வரவேற்புக் கொடுக்கப்படுகிறது. பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தாரால் அழைக்கப் படுவதை ஒரு பெருமையாகவே தமிழ் இலக்கிய உலகம் மதிககிறது.

சங்கம, 'மும்பயி மராத்தியர் சாகித்திய சபா'வுடன் சேர்ந்து ஞாயிற்றுக கிழமைகளில் மராத்தி மொழி வகுப்பு நடத்தி வருகிறது. இதனால தமிழர் பலர் மராத்தி மொழி பேசும் தகுதியைப் பெற்றிருக் கின்றனர்.

இச் சங்கத்தின் தொடக்கக் காலத்தில் அரும்பாடு பட்டு இதை வளர்த்தவர்கள், இன்றைய சங்கத்தின் பீடு நிலையைக் காணு முன்னரே காலமாகி விட்டனர். எஞ்சியிருக்கும் ஒரு சிலருள் திரு. ரெ. முருகையா குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

தொடர்ந்து சங்கத்தின் பணியைச் செய்து வருபவர்களில் திரு. கந்தசாமியும், திரு. ஆதிலட்சுமணனும் ஆற்றி வரும் பங்கு மிகப் பெரிது.

இச் சங்கத்தின் கட்டடத்தை விரிவாக்கத் திட்டமிடப்பட்டிருக் கிறது. கட்டுமான வேலை 1984இல் தொடங்கப்படக் கூடும்.

பம்பாய்த் தமிழ்ச் சங்கத்திற்கு இருக்கும் நிதிவசதியும் வாய்ப்பும் வரலாற்றுப் பெருமையும் வேறு எந்தச் சங்கத்திற்கும்

இல்லை. இந்த வளங்களைப் பயன்படுத்திக் கொண்டு பம்பாயி லுள்ள எல்லாத் தமிழ்ச் சங்கங்களையும் இதனுடைய கிளைச் சங்கங்களாக இயங்கச் செய்யலாம் அல்லது எல்லாச் சங்கங்களையும் சேர்ந்த ஒரு கூட்டமைப்பை உருவாக்கலாம் என்று கருதப்பட்டது. அந்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை. இருந்த போதிலும் மீண்டும் முயலுவது நன்று.

பாரதி கலா மன்றம்

சயான் பகுதியில் (பம்பாய்-22), சுனாபட்டி இரயில் நிலை யத்திற்கு எதிரில் இந்தச் சங்கத்திற்குச் சொந்தமான மூன்று மாடிக் கட்டடம் இருக்கிறது.

பாரதி அன்பர் சிலர் 1962இல் கூடி, பாரதியாரின் கொள்கைகளைப்பரப்பஇந்தமன்றத்தைஏற்படுத்தினார்கள். ஆண்டு தோறும் டிசம்பர்த் திங்களில் பாரதி விழா நடத்தப்படுகிறது. மன்றத்திற்கு மராட்டிய அரசு தாராளமாக இடம் வழங்கிற்று. திரு. சிவாஜி கணேசன் நாடகங்கள் நடத்திப் பணம் வசூலித்துக் கொடுத்தார். இந்தியன் எக்ஸ்பிரஸ் நிர்வாகி திரு. ரங்கநாதனும் மன்றச் செயலர் திரு. ராமனும் பெரிதும் முயன்று கட்டடத்தைக் கட்டி முடித்தனர்.

கோரேகான் தமிழ்ச் சங்கம்

1952 முதல் இச் சங்கம் இயங்கி வருகிறது சங்கம் பல மலர்களை வெளியிட்டிருக்கிறது. இதன் வெள்ளிவிழா மிகச் சிறப் பாகக் கொண்டாடப்பட்டது. ஆர்வம் நிறைந்த உறுப்பினர் பலர் உள்ளனர். சொந்தக் கட்டடம் வாங்க முயன்று வருகின்றனர் கையிருப்பு நிதி அதற்குப் போதுமானதாக இல்லை. தமிழகத்தின் உதவியை எதிர்பார்க்கிறது.

செம்பூர் தமிழ்ச் சங்கம்

இச்சங்கம் 1955இல் தொடங்கப் பெற்றது. இலக்கிய நிகழ்ச்சிகள், விழாக்கள், கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள், திறனாய்வு நிகழ்ச்சிகள் ஆகியவற்றை இயல் துறையிலும், இசை நிகழ்ச்சிகள், இசை வகுப்புகள், கவியரங்கங்கள், கவிதைப் போட்டிகள் ஆகியவற்றை இசைத் துறையிலும் ஏற்பாடு செய்திருக்கிறது. நாடகவிழாக்களை நடத்தியிருக்கிறது.

'மும்பயி மராத்தி சாகித்ய சங்க்'கின் (கிர்காம்) கூட்டு முயற்சி யுடன் சங்கம் சென்ற 9 ஆண்டுகளாக மராத்தி வகுப்புகள் நடத்தி வருகின்றது. 'செம்பூர் ஜெனரல் எஜுகேஷன் அகாதமி'யினரின் ஆதரவுடன் அவர்கள் பள்ளியில் நடந்து வரும் இவ்வகுப்புகளில் சுமார் 1000 பேர்கள் பயன் பெற்றுள்ளார்கள்.

மராத்தி மொழிப்பயிற்சியில் 4 நிலை வகுப்புகளும், மராத்தி சாஹித்யப் பயிற்சியில் 4 நிலைகளும் நடைபெற்று வருகின்றன. மிகத் தேர்ந்த அறிஞர்கள் வகுப்புகளை நடத்தி வருகிறார்கள்

திருக்குறள் பேரவை

1981 முதல் இந்த அமைப்பைத் திரு. இரா. மா. சண்முக ராசன் நடத்தி வருகிறார். ஒரு வாரம்கூடத் தவறாமல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் குறள்நெறிக் கூட்டங்கள் நிகழ்கின்றன.

சஹார் தமிழ்ச் சங்கம்

இச் சங்கம் வெளிநாடுகளுக்குச் செல்லும் விமான நிலையப் பகுதியில், அங்குள்ள தொழிலாளர் தலைவர் திரு. பன்னீர் செல்வம் என்பவரின் ஊக்கததால் நடைபெறுகிறது. சங்கத்திற்கு இடம் உள்ளது. மராட்டிய மாநிலத் தமிழ் மாநாடு நடத்தத் திட்ட மிட்டுள்ளனர்.

புதிய பம்பாய்த் தமிழ் சங்கம்

இது 1976இல் தொடங்கப் பெற்றது. பம்பாய் மாநகரில் உள்ள இட நெருக்கடியைக் குறைக்க, புனாவுக்குச் செல்லும் நெடுஞ் சாலை அருகே புதிய பம்பாய் என்னும் பெருநகர் உருவாக்கப்பட்டு வருகிறது. அங்கு 5000 தமிழர் வாழ்கின்றனர். இவர்கள் அனை வரும் சொந்த 'ப்ளாட' உள்ளவர்கள். 200 பேர் சங்கத்தில் சேர்ந் துள்ளனர் 350 நூல்கள் கொண்ட நூலகம் உளளது செக்டர் 9இல் 500 ச. மீ. (5000 ச. அடி) பரப்புள்ள இடத்தை மராட்டிய மாநிலச் சிறு தொழில் வாரியத்தினரிடமிருந்து மலிவு விலையான ரூ. 30,000இற்குச் சங்கத்திற்காக வாங்கியிருக்கின்றனர். கட்டடம் கட்டத் திட்டமிடப் பட்டுள்ளது.

கோட்டைத் தமிழ்ச் சங்கம்

இது ஏனைய தமிழ்ச் சங்கங்களிலிருந்து மாறுபட்டது. இங்கே இந்தியக் கப்பற்படையில் பயிற்சி பெறும் தமிழ் இளை ஞரிடையே ஒற்றுமை உணர்வும் தமிழ் இலக்கிய ஆர்வமும் உண்டாகக ஆது ஏற்பட்டது. இச் சங்கத்தில் 250 உறுப்பினர் உள்ளனர். அலுவலகம் இல்லை. பொதுப்பேரவை மற்றும் சிறப்புக் கூட்டங்கள் பம்பாய் கோட்டைப் பகுதியில் வாடகை அரங்குகளிலும் செயற்குழுக் கூட்டங்கள் பூங்கர்க்களிலும் நடை பெறுகின்றன. அவசரகாலங்களில் நிதி உதவி செய்வதும் தமிழ்த் தொழிலாளர்களுக்குக் கடனுதவி வழங்குவதும் இச் சங்கத்தின்

முக்கியப் பணிகள். உறுப்பினர் குழந்தைகளின் கல்வித் தரத்தை உயர்த்த ஊக்கப்பரிசு, கடைநிலை ஊழியர்க்குத் தொழிற் பயிற்சி முதலிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. பொங்கல் விழாவைக் கலைவிழாவாகக் கொண்டாடுகிறது.

பாபாய்த் தமிழ் அகாடெமி

சாந்தா குரூஸ் பகுதியில் உள்ள தொழிலாளர் மற்றும் சேரிகளில் குடியிருப்பவர்கள் உள்பட சாதிமத வேறுபாடின்றி தமிழர் அனைவருடைய மேம்பாட்டுக்கும் பாடுபட இந்தச் சங்கம் நான்கு ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டு திரு இராமச் சந்திரன் தலைமையில் அந்தப் பணிகளை ஓரளவு செய்து வருகிறது. 1982இல் இலங்கைத் தமிழர்க்கு இந்த அகாடெமி நிதி அனுப்பிற்று சங்கத்தின் ஆண்டுவிழா ஒன்று. டாக்டர் கலைஞர் மு. கருணாநிதியைச் சிறப்பு விருந்தினராகக் கொண்டு நடத்தப்பட்டது.

ஆர். சி. எப். ஊழியர் பொங்கல் விழாக்குழு

இந்திய அரசின் மிகப்பெரிய இரசாயன உர ஆலை செம்பூரில் இயங்குகிறது. இங்குப் பணிபுரியும் தமிழர் ஆண்டு தோறும் பொங்கல்விழா கொண்டாடவும் இசை நாடக விழாக்கள் நடத்தவும் இந்த நிறுவனம் 1973ஆம் ஆண்டின் இறுதியில் தொடங்கப் பெற்றது. ஆண்டுதோறும் பொங்கல் விழா மலர் வெளியிடுகின்றனர்.

பூனா

இந்தப் பெருநகரில் தமிழர் முதலில் தங்கிய பகுதி ராஸ்தா பேட்டை. அது நகரின் மையப் பகுதியும் ஆகும். தமிழ்க் கூட்டங்களுக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரேயே 600 பேர் வரை வந்தனர். இது படிப்படியாகக் குறைந்து 1981இற்குப் பிறகு எந்தத் தமிழ்க் கூட்டமும் நடைபெறவில்லை.

கோர்புரியில் 1981 முதல் புனா தமிழ்ச் சங்கம் 500உறுப்பினர்களுடன் நடைபெற்று வருகிறது பொங்கல் விழாவும் தமிழ்ப் புத்தாண்டுவிழாவும் கொண்டாடப்படுகின்றன.

கர்கியில் முத்தமிழ்ச் சங்கமும் பிம்பிரியில் ஒரு தமிழ்ச் சங்கமும் உள்ளன. அவ்வப்போது தோன்றி மறையும் அமைப்புகளும் உள்ளன.

சங்கங்களின் எண்ணிக்கை பெருகியிருக்கிறது. நடவடிக்கைகள் குறிப்பிடத் தக்கனவாக இல்லை.

நாகபுரி

கல்கத்தாவிலிருந்து திரு. கி.சி ரா. கிருஷ்ணன் இங்கு 1964 ஆகஸ்டில் வேலை மாற்றப்பட்டு வந்தார். அந்த ஆண்டு அக்டோபர் திங்களிலேயே 'பாரதி தமிழ்ச் சங்கம்' என்ற பெயரில் 20 உறுப்பினர்களுடன் சங்கத்தைத் தொடங்கினார். தமிழ்நாட்டில் இருந்து பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் பலரையும் வரவழைத்து விழாக்கள் நடத்தினார். சிறிய அளவிலோ பெரிய அளவிலோ நன்கொடைகளைத் தமிழ்நாட்டு அமைப்புகளுக்கும் தமிழ் அறிஞர் மணிவிழாக்களுக்கும் அனுப்பிய வண்ணமாக இருந்தார். தமிழ் வெளியீடுகளுக்கும் சிறுசிறு நன்கொடைகள் அனுப்பினார்.

நாகபுரியில் கம்பன்விழா, பட்டிமன்றம், வழக்காடுமன்றம், தமிழிசைப் போட்டி, பாரதிபாடல் போட்டி முதலியன நடத்தினார். தமிழ்ச் சான்றோர்களைப் பற்றி நாகபுரியில் வரும் ஆங்கில இதழில் கட்டுரை வரச் செய்தார். பாரதியார் படங்கள் 400 வாங்கி இங்குள்ள குடும்பங்களுக்கு அன்பளிப்பாக வழங்கினார். தமிழறிஞர் பெருமக்கள் படங்களைத் தென்னிந்தியச் சங்கத்தில் திறக்கச் செய்தார். பிறமொழியாளருக்குத் தமிழ்வகுப்புகள் சிலகாலம் நடத்தப்பட்டன.

நாகபுரி வானொலியில் திருவள்ளுவரைப் பற்றி இந்தியில் தொடர் சொற்பொழிவுகள் நிகழச் செய்தார்.

தமிழர் நடத்தும கோயில்களிலும் பிற அமைப்புகளிலும் அறிக்கைகள் வெளிவரச் செய்தார்.

சரசுவதி வித்தியாலயத்தின் தமிழ்க் குழந்தைகளுக்குக் கட்டுரைப் போட்டிகளைச் சங்கத்தின் ஆதரவில் நடத்தினார்.

18 ஆண்டுகள் இவ்வாறு அரிய பணிகளைச் செய்த பிறகும் ஆதரவு கிடைக்காததால் சங்கத்தை மூடிவிட்டார். எடுத்து நடத்த ஒருவரும் முன்வரவில்லை.

நாகபுரி-அம்பாஜாரி பாதுகாப்புத் திட்டம் என்ற பகுதியில் அம்பாஜாரித் தமிழ்ச் சங்கம் இயங்கி வருகிறது. ஆண்டுதோறும் வள்ளுவர் நாளும் பொங்கல் கலைவிழாவும் நடைபெறுகின்றன. உறுப்பினர் எண்ணிக்கை நூறுக்கும் குறைவு.

இராசத்தான்

செய்ப்பூர், சோத்பூர், உதயப்பூர், பிக்கானீர், கோட்டா, பிலானி ஆகிய நகர்களில் தமிழ்ச்சங்கங்கள் உள்ளன. இந்த மாநிலம் பம்பாய்,

தில்லி நகரங்களுக்கு அப்பாற்பட்டு ஒதுங்கி அமைந்திருப்பதாலும் தமிழர் எண்ணிக்கை குறைவாலும் சங்கங்களின் எண்ணிக்கை குறைவு. ஒன்றுக்கொன்று தொடர்பும் இல்லை.

செய்ப்பூர்த் தமிழ்ச் சங்கம் 1969இல் தொடங்கப்பெற்று. தமிழ்த்திரைப்படங்கள், இசைநாடக நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

இந்தச் சங்கம் ஒரு தமிழ்ப்பள்ளியை செய்ப்பூரில் நடத்த விரும்பி, இடம் வாங்கி, கட்டடம் கட்ட முயன்று வருகிறது சலுகை விலையில் இராசத்தான் அரசு இடம் கொடுக்க முன்வந்திருக்கிறது.

மேற்கண்ட இடத்தில் சங்கத்திற்குக் கட்டடவும் கட்டவும் அதில் தமிழ்ப்பள்ளி நடத்தி வரவும் சங்கத்தார் தமிழக அரசின் உதவியை வேண்டினர்.

மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் என்ற படத்தில் நடிக்க இன்றைய தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். செய்ப்பூருக்குச் சென்றது முதல், தொடர்ந்து செய்ப்பூர் வாழ் தமிழர் சிலருக்கு அவர் அறிமுகமாகியிருப்பதால், சங்கத்தார் மாண்புமிகு முதல்வரைச் சந்தித்தனர்.

(1) கட்டடம், தமிழக அரசுக்கும் செய்ப்பூர்த் தமிழ்ச் சங்கத்திற்கும் பொதுச் சொத்தாக இருக்க வேண்டும். (2) தமிழ்ப் பள்ளியை எப்போது வேண்டுமானாலும் தமிழக அரசு தன் பொறுப்பில் எடுத்து நடத்திக் கொள்ளலாம். (3) தேவையானால் சங்கத்தின் அலுவலர்களை நீக்கும் உரிமை தமிழக அரசுக்கு உண்டு-என்ற மூன்று நிபந்தனைகளைத் தமிழக அரசு விதித்தது. செய்ப்பூர்த் தமிழ்ச் சங்கம் இந்த நிபந்தனைகளை ஒப்புக்கொண்டது.

தமிழ் வளர்ச்சியே சங்கத்தின் குறிக்கோளாக இருப்பதால் சங்கத்திற்கு நிலம் ஒதுக்கும்படியும் எல்லாச் செலவுகளையும் தமிழக அரசு ஏற்கும் என்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் 18-6-1982இல் மாண்புமிகு இராசத்தான் முதல்வருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

இந்த ஏற்பாடு விரைவில் நிறைவேறினால் செய்ப்பூர்த் தமிழ்ச் சங்கம் சிறந்த முறையில் பணி புரியவும் அது ஏற்கெனவே செய்துவரும் பல பணிகளை விரிவாக்கவும் இயலும்.

இந்த ஏற்பாட்டை ஒரு முன் மாதிரியாகக் கொண்டு வட மாநிலங்களில் பல தமிழ்ச் சங்கங்களுக்குக் கட்டடம் கட்டவும் தமிழ்ப்பள்ளிகள் நடைபெறவும் நடவடிக்கை எடுப்பது சாலப் பொருத்தமானதாக இருக்கும்.

குசராத்

சூரத் தமிழ்ச் சங்கம்

சூரத் நகரில் சில ஆண்டுகளாக ஒரு தமிழ்ச் சங்கம் நன் முறையில் நடந்து வருகிறது. பல தலைப்புகளில் கட்டுரைகள் அடங்கிய கையெழுத்து இதழ்களை வெளியிட்டுள்ளது. தமிழ்ப் பட்டங்களையும் கலை நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகிறது. தமிழை மறந்து வீட்டிலும குசராத்தி மொழியே பேசும் தமிழர் பெருவாரி யாக வாழுகின்ற நகரில் தங்கள் தங்கள் துறைகளைப் பற்றி எழுத வேண்டும் என்ற ஆர்வம் நிறைந்தவர்களும் இருக்கிறார்கள்.

சங்கத்திற்குக் கட்டடம் கிடையாது. கைவசம் இருக்கும் நிதி இடம வாங்குவதற்குக்கூடப் போதியதாக இல்லை. இந்தக் குறைகளை நீக்கத் தமிழக அரசின் உதவியைச் சூரத் தமிழர் வேண்டுகின்றனர்.

பரோடா தமிழ்ச் சங்கம்

சென்னைக்கும் ஆமதாபாத்துக்கும் நேர் இரயில் போக்கு வரத்துத் தொடங்கிய நாளில் 6 4-1978இல் இந்தச்சங்கம் தொடங்கப்பட்டது. பல கலை நிகழ்ச்சிகள் நடத்தியும் திருவிழாக்கள் நடத்தியும் பரோடாத் தமிழர் அடிக்கடி சந்தித்துக் கொள்ள இந்தச்சங்கம் உதவியிருக்கிறது.

உள்ளூர்த் தமிழர் கலை நிகழ்ச்சிகளில் பங்கு பெறவும் அவர்களுக்கு வாய்ப்பு நல்கப்படுகிறது. பரோடா நகரில் ஓராயிரம் தமிழ்க் குடும்பங்கள் இருக்கின்றன. இந்நகரில் வாழ்கின்ற தமிழர் பெரிய தொழிற்சாலைகளில் கடைநிலையிலிருந்து உயர்நிலை வரையில் பணியாற்றுகின்றனர். வணிகரும் உள்ளனர். 400 பேர் உறுப்பினராகச் சேர்ந்திருக்கிறார்கள்.

சங்கத்தின் திட்டங்கள் வருமாறு, (1) திராவிடக் கட்டடக் கலைப்பாணியில் முருகன் கோயில் கட்டுவது. (2) தமிழ்ப்பள்ளி நடத்துவது. (3) தமிழ் நூல்நிலையம் அமைப்பது. (4) திருமண மண்டபம கட்டுவது. (5) தமிழர் சொந்தமாக வீடு கட்டிக் கொள் ளக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் அமைப்பது.

சங்கத்தின் இந்தத் திட்டங்களுக்குத் தமிழக அரசிட மிருந்தும் தமிழ்நாட்டு நிறுவனங்களிடமிருந்தும் உதவியை எதிர்பார்க்கிறார்கள்.

நாடியட் தமிழ்ச் சங்கம்

நாடியட் என்னும் நகரத்தில் 1967 முதல் 1971 வரை இந்தச் சங்கம சிறப்பாக நடைபெற்றது. சங்கத்தின் அச்சாணி யாக இருந்தவர் ஆபரிக்கா சென்றதும் சங்கம் செயல்படவில்லை.

ஆமதாபாத் தமிழ்ச் சங்கம்

இச்சங்கம் 1966ஆம் ஆண்டு மிகச் சாதாரணமாக ஆரம்பிக்கப்பட்டது இங்குள்ள தமிழர்களின் குழந்தைகளுக்குத் தமிழில் பயிற்சி அளிப்பதையே தன்னுடைய குறிக்கோளாகக் கொண்டு, சங்கம் அதில் வெற்றியும் கண்டுள்ளது. இச்சங்கம் ஆரம்பித்த தமிழ் உயர்நிலைப் பள்ளியானது இன்று அதற்கென அமைக்கப்பட்டுள்ள ஒரு குழுவால், தமிழையும் பிறமொழிகளை யும் பயில்வித்துச் சிறப்பாக நடத்தப்படுகின்றது.

கோக்ரா பகுதியில் ஒரு 'பால் மந்திர்' அமைத்ததற்கும் தமிழ்ச் சங்கத்தின் பெருமுயற்சியே காரணம். சமூக சேவைகள், முதியோர் கல்வி, சுருக்கெழுத்து மற்றும் இலவச ஆங்கில வகுப்புகள் இவற்றைத் தமிழ்ச் சங்கம் நடத்தி வந்துள்ளது. சில இளைஞர்களுக்குச் சங்கம் வேலை தேடித் தந்திருக்கிறது. பட்டிமன்றங்கள், சொற்பொழிவுகள், நாடகங்கள் முதலியன நடத்தப்பட்டுள்ளன. சங்க விழாக்களில் குசராத் ஆளுநரும் அமைச்சர்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆமதாபாத்துக்கும் சென்னைக்கும் இடையே 'நவஜீவன் எக்ஸ்பிரஸ்' இரயில் வண்டி விடுவதற்கு இச்சங்கம் பெருமுயற்சி எடுத்துக்கொண்டது.

மத்திய மாநிலம்

பிலாய்த் தமிழ் மன்றம்

இந்த மன்றத்தின் பெரிய சாதனை, வியக்கத்தக்க அளவில் ஒரு கோயிலைக் கட்டியிருப்பதாகும்.

அந்தப் பணி அருமையாகவும் திறமையாகவும் நிறை வேற்றப்பட்டு விட்டதால் இனி ஏனைய பணிகளில் ஈடுபடும் என எதிர்பார்க்கலாம்.

பாரதி தமிழ்ச் சங்கம் - சபல்பூர் - 9.

இச் சங்கம் 1972இல் தொடங்கப்பட்டது. சங்கத்திற்குரிய சிறு கட்டடத்தில் நூலகம் உள்ளது 110 உறுப்பினர் உள்ளனர். கோடைவிடுமுறையில் மட்டும் சங்க உறுப்பினர்கள் தமிழ்ப்பள்ளி நடத்துகின்றனர்.

சங்கம் தமிழ்க் கட்டுரை, கவிதை, இசைப் போட்டிகளை நடத்தி வருகிறது. மாதம் மூன்று முறை திரைப்படங்களைக் காட்டுகிறது. சுற்றுலாக்களை ஏற்பாடு செய்கிறது. இவர்களுடைய தேவைகள் : (1) சமுதாயக் கூடம் (2) தமிழாசிரியர் (3) தமிழ் நூல்களின் அன்பளிப்பு (4) கைத்தறி வாரியத்தின் கிளை.

முதல் மூன்று திட்டங்களுக்கும் தமிழக அரசின் உதவியை வேண்டுகின்றனர்.

கேரள, ஆந்திர மாநில அரசுகளின் விற்பனைக் கூடங்கள் இந்நகரில் இயங்குவதால் தமிழ்நாடு கைத்தறிக் கூட்டுறவு வாரியத்தின் கவினுறு பொருள்கள் விற்பனையாக வாய்ப்பு உள்ளதாகக் கூறுகின்றனர்.

கமேரியா தமிழ் மன்றம்

சபல்பூர் நகரின் கமேரியாப் பகுதியில் 1942இல் படைக்கலத் தொழிற்சாலை தொடங்கப்பட்டது. புனாவில் கர்க்கி என்னு மிடத்தில் இத்தகைய தொழிற்சாலையில் பணிபுரிந்த தமிழர் சிலர் புதிய தொழிற்சாலைக்கு - கமேரியாவுக்கு மாற்றப்பட்டனர். 1965இல் இந்த மன்றம் தொடங்கப்பட்டது.

COD/OFK/Army Unit 506ஐச் சேர்ந்த 200 பேர் இச் சங்கத்தில் உறுப்பினராக உள்ளனர். சங்க நூல் நிலையத்தில் 250 நூல்கள் இருக்கின்றன. திரைப்படம் காட்டுகின்றனர். இசை யரங்கு நடத்துகின்றனர். இசைப்போட்டி, திருக்குறள் ஒப்பித்தல் போட்டி முதலியன ஏற்பாடு செய்யப்படுகின்றன. சில ஆண்டுகள் தமிழ்வகுப்பு நடந்தது. தொடர்ந்து நடத்த ஆசிரியர் கிடைக்காத தால் அது கைவிடப்பட்டது

புகழ்பெற்ற எழுத்தாளர்கள் எழுதிய நாடகங்களையும் மன்ற உறுப்பினர் எழுதிய நாடகங்களையும் நடிக்கின்றனர். ஆண்டு விழாக்களில் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

காந்தி நூற்றாண்டு விழாவும், பாரதி நூற்றாண்டு விழாவும் சிறப்பாக நடத்தப்பட்டன. ஆண்டுதோறும் திருவள்ளுவர் விழாவும் பொங்கல் விழாவும் நிகழ்கின்றன.

1973 முதல் ஒவ்வொரு ஆண்டும் நாள் காட்டியைத் தமிழர் மன்றம் அச்சிட்டு, மன்ற உறுப்பினர்க்கு இலவசமாக வழங்கி வருகிறது.

சண்டிகர்

தமிழ் மன்றம்

160 உறுப்பினர்கள் உள்ளனர். அரசு ஊழியர் மற்றும் தனியார் அலுவலகங்களில் பணியாற்றுபவர்கள் இந்த மன்றத்தின் மூலம் தமிழ் உணர்ச்சி பெற்று வருகின்றனர். பல விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. சங்கத்தின் அலுவலர்கள் பஞ்சாப், அரியானா, சண்டிகர் யூனியன் பகுதி ஆகியவற்றின் அரசுகளில் பெரும் செல்வாக்கைப் பெற்றவர்கள். எனவே சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான இவர்கள் திட்டம் விரைவில் நிறைவேறும்.

முத்தமிழ் மன்றம்

விமானப் படையினர் அமைத்துக் கொண்டிருக்கும் மூன்று மன்றங்களில் இதுவும் ஒன்று. தமிழ் நூலகம் உள்ளது. ஏனைய சங்கங்களுடன் சேர்ந்து கலை நிகழ்ச்சிகளை நடத்துகிறார்கள். தமிழக வெள்ள நிவாரணத்திற்கு இச்சங்கம் உதவியுள்ளது.

உரியவர்களின் இசைவு பெற்று, விமானத்தளப் பகுதியிலேயே முருகன் கோயில் கட்டி அதை நடத்தி வருகின்றனர்.

திருவள்ளுவர் மன்றம்

இது 1965இல் தொடங்கப் பெற்றது. கலை நிகழ்ச்சிகளும் நகைச்சுவை நாடகங்களும்பொய்க்கால் குதிரையாட்டமும்பொங்கல் சுற்றுலாவும் தமிழ்ப் புத்தாண்டு விழாவும் குறிப்பிடத்தக்கன. 1500 நூல்கள் கொண்ட நூலகம் உள்ளது. பாரதியார் விழா முத்தமிழ் விழாவாகக் கொண்டாடப்பட்டது.

'படைவீரனுக்குப் பெண் கொடுக்கலாமா? கூடாதா?' என்ற தலைப்பில் பெண்களே ஒரு பட்டிமன்றம் நடத்தினர்.

விமானப்படைத் தமிழ் மன்றம்

இது 'ஸ்குவாட்ரன்' யூனிட்டுக்காக ஏற்பட்டது. இந்த விமானிகள் சண்டிகாருக்கு வரும்போது ஏனைய சங்கங்களின் நிகழ்ச்சிகளை அறிந்து அவர்களுடன் இணைந்து செயல்படுவர்.

மேலே கூறப்பட்ட மூன்று மன்றத்தாரும் சேர்ந்து 'மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி அம்மன் வார வழிபாட்டு மன்றம்'

அமைத்து, செவ்வாய் - வெள்ளிக் கிழமைகளில் தமிழில் கூட்டு வழிபாடு நடத்துகின்றனர்.

உலக நன்மைக்காக குத்துவிளக்கு, கலச பூசை வேள்விகள் நடத்துகின்றனர். ஏழைகளுக்கு உணவும் உடையும் வழங்குகின்றனர்.

தொழிலாளர் சிலர் இந்த வழிபாடுகளில் கலந்து கொண்டு. கெட்டவழிகளைக் கைவிட்டு, ஆன்மிக நெறிகளில் திருந்தியுள்ளனர்.

தில்லித் தமிழ்ச் சங்கம்

இந்தச் சங்கம் புது டில்லி நகரின் மையப் பகுதியான பாராளுமன்றத் தெரு தொடங்கும் இடத்தில் 'கனாட் பிளேசில்' ஒரு கட்டடத்தில் 30 ஆண்டுகளுக்கு முன் தொடங்கி இனிது நடைபெற்று வருகிறது. அந்தக் காலம் முதல் பெரிய நூலகம் இருந்து வருகிறது.

இலக்கிய நிகழ்ச்சிகளுக்கும் ஏராளமான வெளியீடுகளுக்கும் தமிழ் வகுப்புகளுக்கும் இந்தச் சங்கம் பெரும் புகழ் பெற்றது.

டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் தலைவராக இருந்த போது தமிழ்விழா, இச்சங்கத்தின் ஆதரவில் வியக்கத்தக்க வகையில் கொண்டாடப் பெற்றது.

நெடுந்தொலைவில் உள்ள இராம கிருஷ்ண புரத்தில் சங்கத்திற்கென்று ஒருகோடி ரூபாய் செலவில் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது கட்டடம் கட்டும் பணிக்கு முன்னுரிமை கொடுத்து வருகின்றனர்

சங்கத்தின் வெள்ளி விழா, சில ஆண்டுகளுக்கு முன் கொண்டாடப்பட்டது. வெள்ளி விழா மலர் சிறந்ததொரு இலக்கியப் பேழை ஆகும்.

தில்லித் தமிழ் இலக்கிய மன்றம்

தலைநகரில் தமிழர் மிகுதியாக வாழும் கரோல்பாக் பகுதியில் உள்ளவர்களுக்குப் பயன்படும் வகையில் இந்தப் புதிய அமைப்பு 1983இல் தொடங்கப் பெற்றிருக்கிறது. பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் தமிழ்ப்பணி புரிபவர்களும் அவர்களுக்கு உறுதுணையாயிருப்பவர்களும் பெரும் பொறுப்பு ஏற்றிருப்பதால், இம்மன்றத்திற்குச் சிறந்த எதிர்காலம் இருக்கும்.

தமிழக அரசின் கடமை

வட மாநிலங்களில் உள்ள தமிழ்ச் சங்கங்கள் தமிழக அரசிட மிருந்து உதவி எதிர்பார்ப்பது தேவையா? அவர்களுடைய வேண்டு கோள் நியாயமானதா என்ற கேள்விகள் எழக் கூடும், பிரித்தானிய அரசாங்கம், உலகெங்கும் கோடிக்கணக்கான பவுன் செலவில் 'பிரிட்டிஷ் கவுன்சில்' என்ற அமைப்பை ஏற்படுத்தி அதன் வாயி லாக ஆங்கில இலக்கியம் மற்றும் ஆங்கில மொழி நூல்கள் அடங்கிய நூல் நிலையங்களை ஏற்படுத்தியும், ஆங்கில மொழியைக் கற்பிப் பதற்குத் தக்கவர்களை அனுப்பியும் செய்த முயற்சி இங்கு நினைவு கூரத் தக்கது அந்த முயற்சி எல்லா நாடுகளிலும் வெற்றியடைந்த பிறகு இந்தத் தலைப்பில் அவர்கள் செய்துவந்த செயலைக் குறைத்துக் கொண்டிருக்கின்றனர்.

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டுதோறும் தமிழக அரசு, வட மாநிலத் தமிழ்ச் சங்கங்களின் வளர்ச்சிக்காக ஆண்டுக்கு 15 இலட்சம் ஒதுக்குமானால் தமிழ்மொழியும் தமிழ்ப்பண்பாடும் வடமாநிலங்களில் நிலைக்கப் பெருந்துணையாகும். இந்தத் தொகையைக் கடனுதவியாகவேகூட வழங்கலாம். ஒரு சில ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் சக்தியைத் தமிழ்ச் சங்கங்கள் பெற்றுவிடும். ஆந்திர மாநில அரசு 1971இல் திருப்பதி தேவத் தானம் மூலமாகப் பெருந்தொகையை வட அமெரிக்காவிலுள்ள இந்துக் கோயில்கள் சங்கத்திற்கு அளித்தது. அந்தத் தொகை வட்டியும் முதலுமாக நன்கொடைகள் மூலமாகவும் புதிய தொழில் திறமைகளின் வாயிலாகவும ஆந்திர மாநிலத்திற்குத் திரும்ப வந்து கொண்டிருக்கிறது என்பதை இங்கு நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

வட மாநிலங்களில் உள்ள தமிழ்ச் சங்கங்களை இணைக்கும் அமைப்பாக ஒருதுறை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இயங்குவது குறித்தும் சிந்திக்கலாம். இந்தத்துறை ஓரளவிற்குப் 'பிரிட்டிஷ் கவுன்சில்' போல இயங்கி, தமிழ் நூல்களையும் தமிழாசிரியர் களையும் வட மாநிலங்களுக்கு அனுப்பலாம்.

ஒரு நகரத்திற்கு மட்டும் ஒரு தமிழாசிரியர் இருந்தால் அவருக்கு அவ்வளவாக வேலை இராது. சான்றாக சூரத், பரோடா, ஆமதாபாத் ஆகிய மூன்று நகரங்களுக்கும் ஒரு தமிழாசிரியரே போதுமானவர்.

தமிழ்வளர்ச்சி ஒன்றே குறிக்கோளாய் நம் தமிழக அரசு, தமிழ் மாநாடுகள் நடத்தவும் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைக்கவும்,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொடங்கவும், தமிழ்க் கலைகள் வளரவும் கோடிக்கணக்கில் மனமுவந்து வாரிவழங்கித் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்று வருகிறது. மேலும் சில இலட்சங் களை வட மாநிலங்களுக்காகச் செலவு செய்வது சுமையாகாது; அது வீண்செலவும் அன்று.

இத்திட்டத்தால் புத்துணர்ச்சியும் மறுமலர்ச்சியும் பெறும். வடமாநிலத்தில் உள்ள புதிய தலைமுறையினரான தமிழ் இளைஞர் உலகெலாம் தமிழ் முழக்கம் செய்வார்களென்பது உறுதி.

தமிழ்ச் சங்கங்களின் முகவரிகள் இணைக்கப்பட்டுள்ளன.

M G. RAMACHANDRAN,
Chief Minister,
Government of Tamil Nadu

Fort St. George
Madras-600 009

EDUCATION, SCIENCE AND TECHNOLOGY DEPARTMENT

D. O. No 29560/TD:/31-1, Dated 18-6-1982

Dear Thiru Machur.

Sub : Tamil Development-Tamil Sangam at Jaipur Land for running a Tamil School.

A registered body by name 'Tamil Sangam' at E. 22. Gokhle Marg, C. Scheme at Jaipur wants to start a Tamil School at Jaipur and for that purpose, it wants to purchase a site at Jaipur with the financial assistance from this Government. A copy of the letter from the Sangam is enclosed.

2. As this Government is extending financial assistance to organisations and reputed bodies which undertake spreading of Tamil in other States, the request of this Sangam was carefully examined, and the Sangam was informed, that while this Government is prepared to extend financial assistance for the purpose desired, this Government would urge, that the land on which the building is to be constructed, should be the property of this Government or the Sangam should hand it over to this Government and that this Government should also have the power to remove the office-bearers of the Sangam if necessary, or to run the institution by the representatives of this Government, should such a contingency arise. The Jaipur Tamil Sangam has agreed to these conditions and it has requested this Government to secure a suitable piece of land at Jaipur through your good offices, as acquiring of land apart from its cost is very difficult.

3. Since the proposal of the Sangam is primarily to promote Tamil, this Government feels, that the request of the Sangam deserves consideration and necessary support. I would, therefore, request you, kindly to use your good offices for the allotment of a suitable piece of land at Jaipur for the Tamil Sangam so that it could proceed to take further steps for the construction of buildings for housing a Tamil school at Jaipur. I shall be grateful to you if necessary orders are issued early.

Thankig you.

With regards,

Yours sincerely.

(Sd)

[எம்.ஜி. ராமசந்திரன்]
Chief Minister.
Government of Tamil Nadu

To

Shri Shiv Charan Mathur.
Chief Minister of Rajasthan.
Jaipur (w. e.)

சங்கங்களின் முகவரிகள்

(1) **The Bombay Tamil Sangham,**
Plot No: 215 - Sion Road,
Bombay - 400 022.
Phone : 475521. Grams : Muthamizh Bombay - Sion

(2) **Chembur Tamil Sangham**
Off : C/o. Thiru S. R. Subramanian (Alias) Rajamani,
Asst. Managar (MR),
Rashtriya Chemicals & Fertilizers Ltd.,
Chembur, Bombay - 400 074.
Phone : 521451 - 5511741

Resi : Type - B - 4/25 R. C. F. Colony.
Chembur Camp.

(3) **Kottai Tamil Sangham**
Off : C/o Thiru S. Kumanarajan,
Secretary, Fort Tamil Sangam,
Refit Planning & Co-ordination Dept.,
Naval Dockyard,
Liongate, Bombay - 400 023. Phone : 295350
Extn : 461

Resi : R. No. 24, 2nd Floor,
M S/R B/I/46
C. Railway Quarters,
Sion, Bombay - 400 022.

4) **New Bombay Tamil Sangham**
E. 7-0-3 - Sector 1,
Vashi - New Bombay - 400 703.

(5) **R. C. F. Employees Pongal Festival Committee**
Type II 9/190. R. C. F. Colony,
Chembur, Bombay - 74.

(6) **Kovandi Tamil Sangham**

15/K 8, Shivaji Nagar,
Bombay - 43.

(7) **Thirukkural Peravai**

Tamil Nenjam,
1, Mahabeer Chawl,
Sion - Bandra Link Road,
Bombay - 17.

(8) **தமிழ்க் கவிஞர் மன்றம்**

Maharashtra Tamil Poets Association,
4317 Jumna Sait North Chowk,
Kalakilla, Bombay - 17.

(9) **Bombay Tamil Academy**

B/4/Emerald Society,
Vidyanagar (University Campus)
Bombay - 400 098. Phone : 548275

(10) **அறிவு வளர்ச்சி மன்றம்**

Knowledge Improvement Centre,
B/D, 1 - 11-Cheeta Camp,
Trombay - Bombay - 400 088.

(11) **Barathi Kala Manram**

Opp : Chunabatti Railway Station,
Bombay - 22.

(12) **Goregan Tamil Sangham**

C/o Thriu. K. Narasimhan, B.A., A. C. S., Secretary
Levka Private Ltd,
20G - Sleater Road,
Bombay - 400 007.

Off : Phone : 377431-32

Resi : Phone : 687291

(13) **Thiruvalluvar Manram**
Village Road,
Bandup, Bombay.
(President : Thiru P. Rajapandyan)
(Phone : 585332)

(14) **Sahar Tamil Sangham**
C/o Thiru. Panneer Selvam, Trade Union Leader,
Air - India, International Airport,
Sahar, Bombay.

(15) **Muthamil Manram**
Off : C/o Nadippu Isai Thilagam S.R. Sabapathy, Secrtary.
S. V. Union High School,
414 - Somwar Peth,
Poona - 411 011. Phone : 23672
Resi : 517A, Rastha Peth,
Poona - 11. Phone : 33369

(16) **Bharathi Tamil Sangam**
C/o Thiru. K. S. R. Krishnan,
Off : Divisional A/cs Office
S. E. Railway,
Nagpur - 440 001.
Resi : 33/3, S. E. Railway Quarters,
Vanjari Nagar Ajni,
Nagpur - 440 003.

(17) **Ambajari Tamil Sangam**
C/o Thiru J. Rajaraman,
1/162 - Type IV,
Ambajari Defence Project,
Nagur - 440 021.

(18) **Tamil Sangham**
E - 22, Gokhale Marg,
'C' *Scheme*, JAIPUR - 302 001.
Rajasthan

(19) **Surat Tamil Sangam**

115, Jayanthi Park Housing Society,
Near Kailash Nagar,
Surat - 395 001.

(Founder - President)

Thiru. L. R. Jambunathan, B.sc , AMIET LTI
Cotton Consultant,
D-4, Vaishali Apartments,
Bhaya Mohollo,
Nanpura, Surat - 395 001.

Secretary :

Thiru. V. R. Veeramani, System Analist,
Baroda Rayon Corporation,
Udhna,
(Via) Surat - 395 001.

Joint Secretary :

Thiru. A. Ramanathan,
307, Sree Apartment,
Nanpura, Surat - 395 001.

(20) **Baroda Tamil Sangam**

Priya Nivas, 112, Santoshi Nagar,
Nizampura. Baroda - 390 002.

President :

Thiru. K. Kannan
Ravi Enterprises, Reva Sadan,
Damelia Bazaar, Baroda - 1. Phone : 54880

Secretary :

Thiru. M. G. Devarajan, Systems Manager,
Alembic Computer Services,
Alembic Chemical Works Co. Ltd.,
Baroda - 390 003. Phone : 82651 - 82551

Treasurer :

Thiru. A. L. Periakaruppan,
Bank of Madura Ltd.,
Phone : 52318

ஆமதாபாத் தமிழ்ச் சங்கம்

Ahmedabad Tamil Sangam

A. R. Abdul Aziz
Secretary

Resi :
Chhana Sheth Chawl
Hautkeshwar Mahadev
Khokhra
Ahmedabad - 380 026
Date

ஆமதாபாத் தமிழர்களின் அமைப்புகள்

1. பஜனை மடம், ஜமால்பூர்.
2. முத்துமாரியம்மன் கோயில், அரிகாலனி, மணிநகர், ஆமதாபாத்-380 026.
3. ஸ்ரீ கிருஷ்ணா தமிழ் வித்யாலயம், மணிநகர், ஆமதாபாத்-380 008.
4. ஸ்ரீ பாலமுருகன் தேவஸ்தானம், சூரியநகர், கோக்ரா, ஆமதாபாத்-380026.
5. ஆமதாபாத் தமிழ்ச்சங்கம், C/o சணா சேட் சால், கோக்ரா, ஆமதாபாத்-380 026.
6. தி சௌத் இன்டியன் அசோசியேஷன், நவ்ரங்பூரா.
7. பாபுநகர்முத்துமாரியம்மன்கோயில்,பாபுநகர்,ஆமதாபாத்-23.
8. பைப்பூரா மாரியம்மன் கோயில், பைப்பூரா, ஆமதாபாத்-26.
9 மோத்திநகர் மாரியம்மன் கோயில், மோத்திநகர், ஆமதாபாத்-26.
10 வள்ளலார் சமரச சன்மார்க்க சங்கம், கோபால்நகர், ஆமதாபாத்-26.
11. பாரதி வாசக சாலை, ஜமால்பூர், ஆமதாபாத்-22.
12. சிவாஜிரசிகர் மன்றம், கோக்ரா, ஆமதாபாத்-26
13. தாணிலிம்டா முத்தமிழ் வாசகசாலை, ஜமால்பூர், ஆமதாபாத்-22.
14. எம். ஜி. ஆர். மன்றம், அரிகாலனி, ஆமதாபாத் 380 008
15. இளைஞர் நண்பர்க்குழு, அரிகாலனி, ஆமதாபாத்-380 008.

16. நரோடா கிருஷ்ணன் கோயில், நரோடா, ஆமதாபாத்-380025

17. கலைவாணி ஆர்ட்ஸ், அரிகாலனி, ஆமதாபாத்-380 008.

18. சரவணபவா, M. N. சீனிவாசன் குழு, ஷாஹ்பூர்.

19. முத்தமிழ் கலைக்குழு, ஜமால்பூர், ஆமதாபாத்-380 022.

20. P. சிதம்பரம், மிஸ்ரா : குஜராத் மஜ்தூர் பஞ்சாயத்-ஓடவ்.

21. A. R. அப்துல் அஜீஸ், C. S. ஜெயராமன் : குஜராத் மஜ்தூர் ஜெனரல் யூனியன், மிர்ஜாபூர்.

22. N. N. நாயுடு : டேக்ஸி லக்சுரி டூரிஸ்ட் கோ ஆப்பரேட்டிவ் சர்வீஸ், மிர்ஜாபூர்.

23. பாரதி கலை மன்றம், ஷாஹேற-ஆலம் டோல்நாக்கா, ஆமதாபாத்.

24. அன்னை கலைக்குழு, கோக்ரா, ஆமதாபாத்-380 026.

25. திருவள்ளுவர் படிப்பகம், பாப்புநகர்.

26. அண்ணா நாடக மன்றம், பாப்புநகர்.

27. பாரதிதாசன் மன்றம். அமரைவாடி, ஆமதாபாத் - 380026.

28. லெனின் மன்றம், அமரைவாடி, ஆமதாபாத்-380 026.

29. பாக்கியராஜ் மன்றம், அரிகாலனி, ஆமதாபாத்–380 008.

30. ஆமதாபாத் உயர்நிலைப்பள்ளி, கோக்ரா, மணிநகர் ஆமதாபாத்-380 008.

31. ஓம் முருகா ஆங்கிலப்பள்ளி, கோக்ரா, ஹாட்கேஷ்வர், ஆமதாபாத்-380 026.

32 கலைவாணர் கலைக்குழு, கோக்ரா.

33. தி. மு. கழகம், அரிகாலனி.

34. அ. இ. அ தி. மு. கழகம், அரிகாலனி.

35. முற்போக்கு வாலிபர் சங்கம், மணிநகர்.

36. ஜனநாயக வாலிபர் சங்கம், கோக்ரா.

37. V. கலியன் குழுவினர் (நாதஸ்வரம்)* கோக்கரா, ஆமதாபாத்-26.

38. கீத்தாஞ்சலி, நவ்ரங்பூரா.

39. சாபர்மதி முருகன் கோயில், சாபர்மதி.

40. சாபர்மதி அய்யப்பன் கோயில், சாபர்மதி.

41. சாபர்மதி அம்மன் கோயில், சாபர்மதி.

42. வைதிக சமாஜம், நவ்ரங்பூரா.

43. தர்பனா குழுவினர் (மிர்லானிபோன்) உஸ்மான்பூரா.

44. அண்ணா அச்சகம் அரிகாலனி, ஆமதாபாத்-26.

45. பாரதி அச்சகம், ஜமால்பூர், ஆமதாபாத்-1.

(21) Ahmedabad Tamil Sangam

C/o Thiru. A. R. Abdul Aziz, Secretary,
Chhana Sheth Chawl,
Hautkeshwar Mahadev, Khokhra,
Ahmedabad - 380 026.

(22) Bhilai Tamil Manram

C/o Thiru. A. G. Rama Rao, President,
Supt., Rolling Mill Design,
1 - A Street 1,
Sector - 9,
Bhilai, Madhya Pradesh.

(23) Bharathi Tamil Sangam

3009, Vehicle Estate.
Jabalpur - 9. (M. P) 482 009.
(Secretary - Thiru. A. Ramajayam)

(1967 முதல் தமிழகத்திலிருந்து வந்து தங்கிவிட்டனர்.)

(24) Khamaria Tamil Mandram

Ordinance Factory,
Khamaria, Jabalpur.

General Secretary :

R. Gurumurthy,
91, West High Land,
Khamaria, Jabalpur.

(25) Tamil Mandram

C/o Thiru. Narayanan (President),
Deputy Editor **Tribune**,
Chandigarh.

(26) Muthamil Mandram

Air Force High Ground,
Chandigarh - 3.

(27) Punitha Mari Annai Tamil Kazhagam

Papal Seminary,
Ramwadi,
Poona - 14.

(28) DELHI TAMIL ILAKKIYA MANRAM
(DELHI TAMIL ACADEMY)

4/45, W.E.A., Karol Bagh, New Delhi - 110005.

President :

Thiru **R. Mohanarangam, M.P.**
Rajya Shaba

Vice—Presidents :

Dr. K. Arumugam
University of Delhi

Thiru **SP. Singaram**
Ministry of Industry

Secretary :

Thiru **P. Balasubramanian**
University of Delhi

Jt. Secretary :

Dr. S. Bhashyam
D.A V. College

Treasurer :
Thiru T.N. **Gopalachari**
Food Corporation of India

(29) **Delhi Tamil Sangam**
Tamil Sangam Marg,
R. K. Puram,
New Delhi.

(30) **Thiruvalluvar Mandram**
3 - Base Repair Depot,
Chandigarh.

(31) **Air Force Tamil Mandram**
C/o Warant Officer Thiru. Durai Vembu,
Door No. 3187,
Sector - 31,
Chandigarh.

10. தமிழர் பேரவை, பம்பாய்

12 இலட்சம் தமிழர் வாழும் பம்பாயில் மதம், அரசியல், சாதி அடிப்படைகளிலேயே சங்கங்கள் இருந்து வந்திருக்கின்றன. தமிழர் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளத் தமிழர் முன் வந்ததில்லை. சாதி மதம் முதலிய வேறுபாடுகளை மீறியும் எந்த அரசியல் கட்சியினராக இருந்தாலும் அவர்களுக்கு இடம் உண்டு என்ற அளவில் தமிழ்மொழியைப் பேசும் மக்கள் அனைவரையும் ஒரே அணியில் திரட்டியவர் வள்ளல் திரு. மு. வரதராசனார் ஆவசர். பெரியவர் என்றும் மு. வ. என்றும் இவரைப் பம்பாய்த் தமிழர் குறிப்பிட்டுள்ளனர்.

'நாம் தமிழர், நம் தாய்மொழி தமிழ், நம் இனத்தின் ஒற்றுமைக்கு நாம் பாடுபடவேண்டும்' என்ற எண்ணங்களைக் குறிக்கோள்களாகக் கொண்டு பம்பாய் தமிழர் பேரவை 1982 நவம்பர் 15இல் தொடங்கப் பெற்றது.

பேரவையை நிறுவியவர். பெரியவர் மு. வ. பேரவைக்குத் தலைவராக இருப்பவர். திரு இராச பாண்டியன். இவர் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து 1955இல் பம்பாய்க்கு ஒரு சிறு கடையில் ஊழியராக வந்தவர். தம் விடா முயற்சியாலும் உழைப்பாலும் வாழ்க்கையின் இலட்சியங்களாலும் தொழிலிலும் பொது வாழ்க்கையிலும் உயர்ந்துள்ளார். பம்பாய் திருவள்ளுவர் மன்றம் பாண்டூப் பிரைட் உயர்நிலைப் பள்ளியின் ஆட்சிக்குழு ஆகியவற்றின் தலைவராக விளங்குகிறார்.

பம்பாய்ப் பெருநகர்ப் பகுதி எங்கும் தமிழர் பேரவைக்கு ஏறத்தாழ முப்பது கிளைகள் உள்ளன. உறுப்பினர் எண்ணிக்கை பல்லாயிரம் ஆகும். ஒவ்வொரு கிளையும் அவ்வப்பகுதி மக்களுடன் இணைந்து அவர்களுடைய சமய, பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முனைந்து செயல்படுகிறது.

பம்பாயில் ஆறு பகுதிகளுக்கு ஒவ்வொன்றும் ஒன்றரை இலட்சம் ரூபாய் மதிப்புள்ள ஆம்புலன்ஸ் வாகனங்களை வள்ளல் மூ. வ. வழங்கியிருக்கிறார். தமிழர் பலர் இரத்ததானம் செய்து, அது பேரவையின் இரத்த வங்கியில் (Blood Bank) சேகரித்து வைக்கப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்பு வழங்குதல், இலவசமாகச் சட்ட ஆலோசனை கிடைக்கச் செய்தல், குடிசைப் பகுதிகளில் வாழ்பவருக்குத் தேவையான சீரமைப்புத் திட்டம், கலப்பு மணம் செய்பவர்களை ஊக்குவிப்பது, ஏழை எளியவர்களுக்குப் பேரவைச் செலவில் திருமணம் செய்து வைப்பது, திக்கற்றவர்களுக்கு நல்வாழ்வு அளிப்பது போன்ற ஏராளமான திட்டங்களைப் பேரவை நிறைவேற்றி இருக்கிறது.

குறிப்பேடுகளை (Note Books) பேரவை அச்சிட்டுச் சலுகை விலையில் மாணவர்களுக்கு வழங்குகிறது.

பம்பாய் மாநகராட்சிப் பள்ளிகளிலும் பிற பள்ளிகளிலும் படிக்கும் 24 ஆயிரம் மாணவர்களுக்குப், பேரவை தமிழ்ப்பாட நூல்களை அன்பளிப்பாக வழங்கியிருக்கிறது. குடிசைப் பகுதிகளில் வாழும் குழந்தைகள் கல்வி பெற அம்பர்நாத், யோகேஸ்வரி, வகோலா பைப்லையன் ஆகிய இடங்களில் பேரவை, பள்ளிகளை நிறுவியிருக்கிறது.

பம்பாய்க்கும் பெங்களூருக்கும் இடையே நேரடி இரயில் போக்குவரத்து தொடங்கப் பெற்ற பிறகு, நீக்கப்பட்ட பம்பாய் ஜனதா விரைவு இரயிலை மீண்டும் புதுப்பிக்கவும் பேரவை நடவடிக்கை எடுத்து வருகிறது.

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தமிழ்நாடு அரசு வழங்கி வரும் சலுகைகள் மகாராட்டிரத்தில் வாழும் தமிழ் பேசும் ஆதி திராவிடர்களுக்கு மகாராட்டிர மாநில அரசு மூலம் கிடைப்பதற்கும் தமிழர் பேரவை பாடுபட்டு வருகிறது.

வெள்ள நிவாரணம்

1983 சூன் திங்களில் குசராத் மாநிலத்திலும் மகாராட்டிர மாநிலத்தில் கொங்கன் பகுதியிலும் பெரிய அளவில் வெள்ளம் ஏற்பட்டது. நூற்றுக் கணக்கான பேர் உயிரிழந்தனர். வீடுகளை இழந்து ஆயிரக்கணக்கான மக்கள் நடுத் தெருவில் நின்று உணவும் உடையும் இன்றித் தவித்தனர்.

வெள்ளத்தால் பிற மொழியினர் துயரப் பட்டால் அதனால் நமக்கென்ன என்று இருந்து விடாமல் அவர்களையும் இரத்தத்தின் இரத்தமாகவும் சதையின் சதையாகவும் கருதி, தமிழர் பேரவை வெள்ள நிவாரணப் பணியில் ஈடுபட்டது.

பேரவையின் தலைவர்கள், பம்பாய் மாநகரின் சில பகுதிகளில் பாதயாத்திரை சென்று மூன்று இலட்சம் ரூபாயையும் துணிமணிகளையும் உணவுப் பொருள்களையும் திரட்டினர். பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பேரவையின் குழுவினர் அப்பகுதிகளுக்குச் சென்று உணவையும் உடையையும் வழங்கினர். மூன்று இலட்சம் ரூபாய் மகாராட்டிர முதலமைச்சரிடம் கொடுக்கப் பெற்றது. இதனால் மாதச் சம்பளம் வாங்கும் மதராசிகள் என்ற எண்ணம் மாறி மகாராட்டிரத்தில் தமிழனின் மதிப்பு உயர்ந்திருக்கிறது.

இதழ்கள்

'மராத்திய முரசு' என்ற பெயரில் பம்பாயிலிருந்து வெளிவரும் நாளிதழ், தமிழர் பேரவைச் செய்திகளை அவ்வப்போது தெரிவித்து வருகிறது.

தமிழர் பேரவையின் குரலாக, 'தமிழின ஓசை' என்னும் வார இதழ் 1983 சூலைத் திங்களிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கிறது.

ஆறாவது உலகத் தமிழ் மாநாட்டைப் பம்பாயில் சிறப்பாக நடத்திக் கொடுக்கும் பொறுப்பைப் பம்பாய்த் தமிழர் பேரவை ஏற்றுக்கொள்ள முன்வந்திருக்கிறது.

o — o

11. தமிழ் இதழ்கள்

வட மாநிலங்களில் வெளிவரும் அல்லது வெளிவந்து நின்றுவிட்ட தமிழ் இதழ்களின் விவரங்களை இப்பகுதியில் தெரிவிப்போம்.

தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் இதழ்கள் எந்த அளவுக்கு வட மாநிலங்களில் விற்பனை ஆகின்றன, அவற்றின் தாக்கம் எத்தகையது என்பவற்றையும் ஆராய்வோம்

1 வட மாநிலத் தமிழ் இதழ்கள்

(1) நாள் இதழ்

மராத்திய முரசு

இது பம்பாயிலிருந்து 1980 முதல் வெளிவருகிறது. 1983இல் இந்த இதழ் சூடு பிடித்திருக்கிறது. 10,000 படிகள் விற்பனையாகின்றன.

ஆசிரியர் : திரு. மணி.

முகவரி : Marathia Murasu
Antop Hill Road
Koliwada, Bombay-37.

(2) வாரஇதழ்கள்

பம்பாய்

பம்பாய் வாழ்க்கையைத் தமிழ்நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்ல 1983 சூன் மாதம் தொடங்கி இது வெளிவருகிறது. தமிழ்நாட்டிலிருந்து வெளியாகும் வார இதழ்களைப் பின்பற்றி அமைந்தது.

தமிழின ஓசை

பம்பாய்த் தமிழ்ப் பேரவையின் குரலாக 1983 சூலை முதல் வெளிவருகிறது.

திங்கள் இருமுறை

சூரியோதயம்

பம்பாயிலிருந்து 1948இல் 6 மாத காலம் வெளிவந்தது. 6,000 படிகள் வரை விற்பனையாயின. ஆசிரியர் : திரு. சாரங்கன்.

திரு. மாயாவி எழுதிய ஜெய் மாதுங்கா என்ற தொடர் கதை இந்த இதழில் வெளிவந்தது. முற்றுப் பெறாது நின்றது.

தமிழகம்

பம்பாய்த் தாராவிலிருந்து 1954 முதல் மூன்று ஆண்டுகள் வெளிவந்து பம்பாய் வாழ் தமிழர்க்கு இலக்கிய உணர்வு ஊட்டிற்று.

ஆசிரியர் : திரு. கோவிந்தசாமி

துணை ஆசிரியர் : திரு. இராமசண்முகராசன்

பம்பாய் முரசு

1951இல் தொடங்கப்பெற்றது. ஓராண்டுக் காலம், மாதம் இருமுறையாகவும் பிறகு வார இதழாகவும் வெளிவந்தது. 2500 படிகள் (அந்தக் காலத்தில்!) விற்பனையாயின. பகுத்தறிவுக் கருத்துக்களை இந்த இதழ் வாயிலாகத் திரு. தொல்காப்பியர் பரப்பிவந்தார்.

ஏடு

பம்பாய்த் தமிழ்ச் சங்கம் இந்த இலக்கிய இதழைச் சில ஆண்டுகள் நடத்திற்று. (ஆசிரியர் : திரு. இராமதாசு)

நல்வழி

இது மருத்துவத்துறை பற்றிய தமிழ்த் திங்கள் இதழ். 1909 முதல் 1923 வரை லக்னோவிலிருந்து வந்தது. 1924 முதல் புனாவிலிருந்து தொடர்ச்சியாக வெளிவருகிறது. இதில் மொழிபெயர்ப்புக் கட்டுரைகளும் மூலக்கட்டுரைகளாகத் தமிழில் எழுதப் பெற்றவையும் இடம் பெறுகின்றன. மிகப் பெரிய பலமொழி அச்சகம் இந்த இதழுக்கு உள்ளது. விற்பனை பத்தாயிரம் படிகள்.

15 ஆண்டுகளாக ஆசிரியராக இருந்த திரு. ஜே. பி. மாசிலாமணி ஓய்வு பெற்ற பிறகு 1983 ஜுன் முதல் திருமதி. செகதீசன் ஆசிரியராக இருந்து வருகிறார்.

முகவரி : Editor, Nalwazhi,
Oriental Watchman Publishing Company,
Post Box : 35
Pune-411011.

விந்தியா

பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தை வளர்த்தவர்களில் ஒருவரான திரு. ரெ. முருகையா, இதை 1952 முதல் 1955 வரை சிறந்த முறையில் தரமான கட்டுரைகளுடன் நடத்தினார். 6,000 படிகள் விற்பனை ஆயின.

விளம்பரங்கள் திரட்டும் பொறுப்பை ஏற்படுத்திய திரு. ஆர். வி. இராகவன், இலண்டனுக்குச் சென்றதும் விளம்பரங்கள் குறைந்தன. ரூ. 48,000 இழப்புடன் 'விந்தியா' நிறுத்தப்பட்டது.

அறிவியல் அமுதம்

ஆசிரியர் : திரு. வீரராகவன்

அணுசக்தித் துறையிலுள்ள தமிழ் அறிஞர் 1974 முதல் 1979 வரை இதை ஆர்வமுடன் நடத்தினர்.

சங்கச் செய்தி

பம்பாய்த் தமிழ்ச் சங்கம் சில ஆண்டுகள் இதை நடத்தியது.

வார இதழ்கள் (தில்லி)

சைனிக் சமாச்சார்

(பாதுகாப்பு அமைச்சரகம், புது தில்லி) படை வீரர்க்காக வெளிவருகிறது.

பிற இதழ்கள்

அரசியல் கட்சி அடிப்படையிலும் சாதி அடிப்படையிலும் பம்பாயிலிருந்து இதுவரை அச்சிட்டு வெளிவந்த இதழ்கள் 50இற்கு மேல் இருக்கும். அவற்றின் செல்வாக்கும் பயனும் தாக்கமும் மிகவும் குறைவு. எனவே அவற்றைக் குறிப்பிடாது விடுகிறேன்.

தில்லியிலிருந்து வெளிவந்த திங்கள் இதழ்கள்

1. கணையாழி (இப்போது சென்னையிலிருந்து வெளியாகிறது.)
2. வெற்றிலை பாக்கு
3. South Indian Matrimonal News.

கையெழுத்து ஏடுகள்

(Manuscript Magazines)

வட மாநிலங்களில் தமிழில் எழுதக்கூடியவர்கள் பல நூறு பேர் உள்ளனர். தமிழ்நாட்டு இதழ்களில் அவர்களுக்கு வாய்ப்புக் கிட்டாததால் தங்கள் ஆர்வத்தைத் தணித்துக் கொள்ளவும், எழுத்துப் பயிற்சியை வளர்த்துக் கொள்ளவும் கையெழுத்து இதழ்களை நடத்துகின்றனர். நூற்றுக்கணக்கான கையெழுத்து இதழ்கள் வெளிவந்துள்ளன. இதோ சில :

தூது

(1974 முதல் 1976 வரை) வெளியிட்டோர் : 'டாட்டா இன்ஸ்டிட்டியூட் ஆஃப் ஃபண்டமென்டல் ரிசர்ச்'இல் பணிபுரியும் தமிழ் அறிவியல் அறிஞர் மற்றும் கணித வல்லுநரான தமிழர்.

விஞ்ஞான உலகம்

பம்பாய் அணுசக்தி நிறுவனத்தில் பணிபுரியும் அறிவியல் அறிஞர்.

சிலர்பு

சண்டிகர் வள்ளுவர் மன்றம் (வான்படைத் தமிழர்)

தேன் சுவை

(சபல்பூர், பாரதி தமிழ்ச் சங்கம்)

அரும்பு

தாராவிலுள்ள தமிழ் இளைஞர் சிலர் இதை இரண்டாண்டுகள் நடத்தினர்.

தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் இதழ்கள்

வட மாநிலங்களுக்குச் செல்லும் ஒவ்வொரு இதழையும் ஏராளமான பேர் படிக்கின்றனர், எனவே விற்பனையாகும் படிகளை நோக்க, வாசகர் எண்ணிக்கை பலமடங்கு ஆகும்.

சிறு நகரங்கள் (சான்று : சூரத்) தமிழ் இதழ்களை வாங்குவதற்குப் பலர் தயாராக இருக்கின்றனர். ஆனால் விற்பனை செய்

வதற்காக முகவர் ஒருவரும் முன்வரவில்லை. அஞ்சல் வழியில் வரவழைத்து முன்பணம் அனுப்பும் தனிப்பட்ட தமிழர் மிகக் குறைவாகவே இருக்கின்றனர். அத்தகைய இதழ்கள் சரியாக வந்து சேரவில்லை என்றும் கூறுகின்றனர்.

தமிழ் எழுதப் படிக்கத் தெரியாத குழந்தைகள் 'குமுதம்' இதழைக் கண்டதும் போட்டி போட்டுக் கொண்டு புரட்டிப் பார்க்கின்றனர். ஆறு வித்தியாசங்கள் உள்ள இரண்டு படங்களை வெளியிட்டு முதல் படத்திற்கும் இரண்டாவது படத்திற்கும் உள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடிக்கும் ஆர்வம் அந்த அளவுக்கு மொழி தெரியாதவர்களிடையேயும் பரவி உள்ளது.

துணுக்குகளைத் துருவித் துருவிப் படித்துத் தங்களுக்குச் சொல்லுமபடி சிறுவர்களும வயது வந்த மக்களும் அம்மாவைத் துளைக்கின்றனர்.

தமிழ் இதழ்கள் வாயிலாகவே வட மாநிலத் தமிழர், தமிழ்நாட்டு நடப்புகளை அறிந்து கொள்கின்றனர். அவர்களுக்குத் தெரிந்த தமிழ் மறக்காமல் இருப்பதும் தமிழ் இதழ்களால்தான்.

தமிழ் இதழ்கள் வட மாநிலங்களில் விற்பனையாகின்றன. இவற்றின் அளவை ஓரளவிற்குப் புரிந்து கொள்ள உதவியாக, தகவல் கிடைத்தவரை சில நகரங்களுக்குப் புள்ளி விவரங்கள் கொடுத்திருக்கிறோம்.

		செய்ப்பூர்	பம்பாய்	நாகபுரி	பரோடா	ஆமதாபாத்	சபல்பூர்	பிலாய்
1.	தினமணி	—	1800	—	10	—	10	—
2.	தந்தி	—	2750	—	25	60	20	100
3.	ஆனந்தவிகடன்	50	7000	500	225	200	200	200
4.	கல்கி	15	3800	300	55	70	200	100
5.	குமுதம்	50	11000	2000	300	315	250	300
6.	இதயம் பேசுகிறது	13	3000	500	80	70	100	—
7.	ராணி	10	9000	—	70	600	200	150
8.	தாய்	—	1700	—	20	50	—	—
9.	சுட்டி	2	200	10	—	—	—	—
10.	ஞானபூமி	10	3000	500	50	—	25	50
11.	தினமணிகதிர்	—	3000	50	20	35	—	—
12.	கலைமகள்	15	5000	—	80	80	25	—

		செய்ப்பூர்	பம்பாய்	நாகபுரி	பரோடா	ஆமதாபாத்	சபல்பூர்	பிலாய்
13.	அமுதசுரபி	—	3500	—	20	5	—	—
14.	குங்குமம்	—	3300	—	100	80	200	—
15	சாவி	—	2000	—	80	50	200	—
16	பொம்மை	—	750	—	30	—	200	—
17.	மங்கையர் மலர்	10	3000	—	50	40	100	—
18.	துக்ளக்	15	5000	100	100	85	100	—
19.	முத்தாரம்	—	1700	—	10	—	—	—
20.	கல்கண்டு	8	4000	—	—	105	—	—
21.	ஜுனியர் விகடன்	9	2000	—	—	35	—	—
22.	ஜெமினிசினிமா	—	600	—	25	15	—	—
23.	சினிமா எக்ஸ்பிரஸ்	—	1050	—	20	35	—	—
24.	பேசும் படம்	—	1500	—	—	—	—	—

		செய்ப்பூர்	பம்பாய்	நாகபுரி	பரோடா	ஆமதாபாத்	சபல்பூர்	பிலாய்
25.	கோகுலம்	—	1000	—	20	30	—	—
26.	அம்புலிமாமா	—	3000	—	—	20	—	—
27.	மங்கை	—	4000	—	50	25	—	—
28.	மணியன்	—	1500	—	—	—	—	—
29.	விடுதலை	—	80	—	—	—	—	—
30.	முரசொலி	—	300	—	—	—	—	—
31.	மக்கள் குரல்	—	300	—	—	—	—	—
32.	தினமலர்	—	350	—	—	—	—	—
33.	மாலை முரசு	—	500	—	—	—	—	—
34.	தினகரன்	—	750	—	—	—	—	—
35.	நீரோட்டம்	—	80	—	—	—	—	—
36.	அண்ணா	—	50	—	—	—	—	—
37.	தேவி	—	1000	—	—	—	—	—
38.	பாலமித்ரா	—	4200	—	—	—	—	—

இதழ்கள்

சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ள தமிழர்கள் தமிழ் மட்டுமே தெரிந்த காரணத்தால் தமிழ் இதழ்களையே படிக்கிறார்கள். விலைக்கு வாங்குபவருடைய இதழை அவரோ, மற்றவரோ படிக்கக் கேட்பவரோ பலர் எனலாம்.

பட்டதாரியாக உள்ள தமிழர் பொழுது போக்குக்காக இரண்டு தமிழ் வார இதழ்களையும், ஒரு தமிழ்த் திங்கள் இதழையும் வாங்குகின்றான்.

மராத்தி, இந்தி மொழியில் பாடங்களைப் படித்தவர்கள் மட்டுமே அந்த மொழி இதழ்களை வாங்குகின்றனர்.

சூரத்தில் நெடுங்காலமாக வாழ்ந்து வரும் தமிழர், குசராத்தி இதழ்களையே படிக்கின்றனர்.

பொதுவாக ஆங்கிலம் தெரிந்த தமிழர் அனைவரும், ஏனைய மொழியாளரைப் போலவே ஆங்கில இதழ்களையே படிக்கின்றனர். குறிப்பாகப் பின் வரும் இதழ்கள் அவர்களுடைய எண்ணங்களை உருவாக்குகின்றன.

Illustrated Weekly
Sunday
India Today
Week-End
Gentleman
Woman's Era
Eve's World
Femina
Film Magazines
Sports Magazines
Readers Digest
The Week

இந்து இதழை வட மாநிலங்களில் அந்த மாநிலத்தவரான வணிகர்தான் வாங்குகின்றனர். தமிழர் வாங்குவதில்லை.

பம்பாய், ஆமதாபாத், தில்லி, சண்டிகார் பதிப்புகள் வெளியாகும், இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழை வாங்குபவர்கள் கணிசமான பகுதியினர் தமிழரும் ஏனைய தென்னிந்தியரும் ஆவர்.

வடமாநிலத் தமிழரில் 35% மட்டுமே தங்களை வாக்காள ராகப் பதிவு செய்து கொண்டிருக்கின்றனர். பம்பாய் மாநகர் இதற்கு விதிவிலக்கு.

சிலைகளும் தெருப் பெயர்களும்

வட மாநிலங்களில் எந்தத் தமிழர் அல்லது தென் மாநிலத் தலைவர் பெயராலும் ஒரு வீதியோ குடியிருப்போ இல்லை. பாரதி நூற்றாண்டு விழாவின் போது சில நகரங்களில் பாரதியார் பெய ரால தெருக்கள் ஏற்பட்டு இருப்பது அத்தி பூத்தது போன்ற நிகழ்ச்சி யாகும்.

தமிழ்நாடும் தென் மாநிலங்களும் சுதந்திரப் போரில் பங்கெடுத்துக் கொண்ட விவரங்கள் வட மாநிலத்தாருக்குத் தெரிய வில்லை ஆதைத் தெரிவிப்பது தமிழக அரசின் கடமையாகும்.

எந்தத் தமிழ்த் தலைவருக்கும் வட மாநிலங்களில் சிலை வைக்கப்படவில்லை. அங்கு பிரபலமாகத் தெரிந்தவர் இராசாசி. அவர் 1942 போராட்டத்தில் ஒதுங்கி இருந்த காரணத்தால் அவரை வடநாட்டு மக்கள் மதிக்கவில்லை. கவர்னர் ஜெனரலாக இருந்தார் என்பதற்காக ஓரிரு பவனங்களுக்குள் அவர் சிலை வைக்கப்பட்டுள் ளது. தில்லியில் நாடாளு மன்றத்திற்கு அருகேயும் அவர் சிலை உளது.

12 ஆண்டுகளுக்கு முன் பெருந்தலைவர் காமராசருக்குத் தில்லியில் சிலை வைக்கத் தலைமை அமைச்சர் இந்திராகாந்தி தலைமையில் குழுஏற்பட்டது. சிலையும் தயாராகியுள்ளது. சிலையை எந்த இடத்தில் வைப்பது என்று குழு உறுப்பினர்களான தமிழர்களுக்குக் கருத்து வேறுபாடு நிலவி வருகிறதாம்.

சுதந்திரப் போராட்ட வரலாற்றுச் சின்னமாக சண்டிகரில் உள்ள National Portrait Galley-யில் கப்பலோட்டிய தமிழர் வ. உ. சி. போன்ற ஏராளமான தமிழ்த் தியாகிகள் மற்றும் கட்ட பொம்மன், மருது சகோதரர்கள், பூமித் தேவர் ஆகியோர் படங் களும் இடம் பெறச் செய்வதும் தமிழக அரசின் கடமையாகும். 1942 போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு என்ற ஒரு நூல் இந்தியிலும், ஆங்கிலத்திலும் வெளியிடப்பெற வேண்டும்.

பதிப்பகங்கள்

பம்பாயில் பாலன் பதிப்பகம் ஒன்று மட்டுமே உளது. இவர்கள் வெளியிட்ட நூல்கள் மூன்று.

ஆமதாபாதில், புதுச்சேரிக்காரர் சிலர் ஆர்வமுடன் தமிழ்க் கவிதை நூல்களைச் சிறு அளவில் படைத்துத் தாங்களே வெளியிட்டுவருகின்றனர்.

புனாவில் ஓரியண்டல் வாட்ச்மென் நிறுவனத்தார் மருத்துவத் துறையில் பெரிய அளவில் பல நூல்களைத் தமிழில் கொண்டு வந்திருக்கின்றனர்.

தில்லியிலிருந்து தமிழ் நூல்கள் வெளியிடும் நிறுவனங்கள்:

1. இந்திய அரசு வெளியீட்டுத் துறை
2. தேசிய புத்தக டிரஸ்ட்
3. சாகித்திய அகடமி
4. ஸ்ரீ இரமண கேந்திரம்
5. Asian Educational Services
6. Unani Medicine Publishers
7. National Arts Academy
8. தில்லி தமிழ்ச்சங்கத்தார் பல மலர்களும் ஆண்டு தோறும் சுடர் என்னும் சிறப்பு வெளியீடும் வெளியிட்டிருக்கின்றனர். கம்பராமாயணத்தை ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிட்டுள்ளனர்.

விளம்பர வருவாய்

தமிழ்நாட்டைவிட வடமாநிலங்களில், விளம்பரம் பெறுவது எளிது.

குறிப்பாகப் பம்பாய் நகரில் விளம்பரம் யார் கேட்பார்கள் அவர்களுக்குக் கொடுப்போம் என்ற நிலையிலும் வணிக நிலையங்கள் இருக்கின்றன. இந்தியாவில் செலவாகும் நுகர் பொருள்களில் (Consumer Products) 60 விழுக்காடு பம்பாய் மாநகரிலும் அங்கிருந்து 100 மைல் சுற்றளவிற்குள்ள தொழிற்சாலைகளிலும் உற்பத்தியாகின்றன. இது தவிர, வெளிமாநிலங்களின் தொழில் சாலைகளில் நடத்தும் பல நிறுவனங்களின் தலைமை அலுவலகங்கள் பம்பாயில் உள்ளன. மொத்தமாகப் பார்த்தால் வணிக நிறுவனம் இந்தியாவில் எல்லா மொழி நிறுவனங்களுக்கும் வழங்கும் விளம்பரங்களில் 100 ரூபாய்க்கு 70 ரூபாய் மதிப்புள்ள விளம்பரங்கள் பம்பாயிலுள்ள வணிக நிறுவனங்களிலிருந்து கொடுக்கப்படுகின்றன. இவற்றின் விளம்பரத்துறையில் தமிழர் பலர் உள்ளனர் எனவே, செம்மையாகவும் தொடர்ந்தும் தரமான தமிழ் இதழ்கள் பம்பாயிலிருந்து வெளியிடப்பட்டால் அவற்றைத் தக்கவைத்துக்கொள்ளத் தேவையான விளம்பர வருவாயைப் பெறலாம்.

12. கலைகள்

வட மாநிலத் தமிழர், தமிழ்க் கலைகளை நுகரவும் பயிலவும் ஆவல் உடையவர்களாகத் திகழ்கின்றனர். இவ்வகையில் அவர்களுக்கு உள்ள வாய்ப்புகளையும் பிரச்சினைகளையும் இங்கே காணலாம்.

இசை

பல வகையான இசை நிகழ்ச்சிகள் வடமாநிலத் தமிழர் வாழ்வில் இடம் பெறுகின்றன. தமிழ் மக்கள் மிகுதியாக உள்ள நகரங்களில் இவற்றை ஏற்பாடு செய்வதற்குத் தனி நிறுவனங்கள் இயங்குகின்றன. பிற நகரங்களில் தமிழ்ச் சங்கங்கள் இத்தகைய நிகழ்ச்சிகளைப் பொங்கல், நவராத்திரி, தமிழ்ப் புத்தாண்டு நாள்களில் நடத்துகின்றன.

பல நூறாயிரம் தமிழர் வாழும் நகரங்களில் கூட, குறிப்பிட்ட சில பகுதிகள் (Suburbs) மட்டுமே இசை, நடன நிகழ்ச்சிகள், பள்ளிகள் ஆகிய பயிர்கள் செழித்து வளரும் நிலங்களாகவும் ஏனைய பகுதிகள் எந்தப் பயிரையும் விளைவிக்க முடியாத தரிசுநிலங்களாகவும் கட்டாந்தரைகளாகவும் உள்ளன. அங்கு வாழும் தமிழர் பார்க்கும் வேலைகளின் தன்மையும், குடிசைகளை அவர்கள் கட்டிக் கொண்டிருக்கும் சூழ்நிலையும் இந்த நிலைக்குக் காரணமாகும்.

வானொலிப் பெட்டியில் தமிழ்த் திரைப்படப் பாட்டுகள் கேட்பதும் கோயில் திருவிழாக்களின் போது நடத்தப்படும் ஒருசில கச்சேரிகளுக்குச் செல்லுவதுமே அவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புக்கள் எனலாம். வடமாநிலங்களின் பெரும் பகுதிகளில் திருச்சி, சென்னை வானொலி நிலையங்களின் நிகழ்ச்சிகளைக் கேட்பதில்லை. அங்கெல்லாம் உள்ள தமிழர் இலங்கை வானொலியை மட்டுமே கேட்கின்றனர்.

வசதி படைத்தவர்கள் தமிழ் ஒலிப்பதி நாடாக்கள் ('காசட்'டுகள்) வாங்குகின்றனர். போதிய அளவில் அவை கிடைப்பதில்லை என்று தில்லியிலும் ஆமதாபாத்திலும் சிலர் என்னிடம் கூறினர்.

மகாராட்டிரம்

பம்பாய் மாநகரில் நாதசுரம் வாசிக்கும் 15 குழுக்கள் உள்ளன. இந்தக் குழுவினர் அனைவரும் திருநெல்வேலி மாவட்டத்தினர்.

தமிழர், கன்னடியர், மலையாளிகள் மற்றும் சித்தூர் மாவட்டத்து ஆந்திரர் பம்பாயில் தாங்கள் நடத்தும் திருமணங்களில் நாதசுரம் வாசிக்க ஏற்பாடு செய்கின்றனர். சுவாமி புறப்பாடு போன்ற நிகழ்ச்சிகளுக்கும் இந்த நாதசுரக் குழுக்களை அழைக்கின்றனர். ஒரு சில கோயில்களில் நாதசுரக்காரர்களைத் தங்கள் முழுநேர ஊழியர்களாக அமைத்துக் கொண்டிருக்கின்றன.

கருநாடக இசைப்பள்ளிகள் பம்பாயில் ஏராளமாக இருக்கின்றன. இவற்றில் சில பள்ளிகள், தமிழ்ப் பாட்டுப் பயில விரும்பும் மாணவர்க்கே ஒரு சில சாகித்யங்களைக் கற்றுக் கொடுக்கின்றன.

பம்பாயில் பயின்று கச்சேரி செய்யக் கூடிய ஆடவரும் பெண்டிரும் பம்பாய்த் தமிழர்களிலேயே பலர் உள்ளனர். தமிழ்நாட்டிலிருந்து கலைஞர்களை அழைத்துப் பெருமைப்படுத்துவதையே பம்பாயிலுள்ள சபைகள் விரும்புகின்றன. இப்போது ஓரிரு ஆண்டுகளாக உள்ளூர்க்காரர்களுக்கும் வாய்ப்புக் கொடுக்கப்படுகிறது.

சபைகள் நடத்தும் கச்சேரிகளில் தமிழ்ப் பாடல்களின் எண்ணிக்கை மிகக்குறைவு என்று சொல்லலாம்.

தரமான கச்சேரிகளுக்குப் பெரிய அளவில் கூட்டம் கூடும். மன்றங்கள் நிரம்பி வழிவதும் உண்டு. மயிலாப்பூர் அல்லது தியாகராய நகர் அல்லது தியாகராஜ சுவாமிகள் ஆராதனையின் போது திருவையாற்றில் இருப்பது போன்ற உணர்ச்சி உண்டாகும்.

எந்தக் கோயிலிலும் தேவாரம் பாடப்படுவது கிடையாது. பம்பாயில் ஓதுவார்களே இல்லை.

ஏறத்தாழ 15 சபைகள் உள்ளன. இவற்றுள் முக்கியமானவற்றின் பட்டியலை இந்தக் கட்டுரையின் இறுதியில் கொடுத்துள்ளேன். இவற்றுள் பெரும்புகழ் பெற்றது சண்முகானந்த நுண்கலை மற்றும் சங்கீத சபை ஆகும். இத்தகைய சபைகளுள் இதுவே இந்தியாவில் பெரியது. இச்சபையில் 5800 உறுப்பினர்கள் இருக்கின்றனர். புதிய உறுப்பினர்களாகச் சேரக் காத்திருப்பவர் சில ஆயிரம் பேர் உள்ளனர்.

பெரியதொரு இசைப் பள்ளியையும் இந்தச் சபை நடத்தி வருகிறது. சிதார், வீணை, வயலின், மிருதங்கம் ஆகிய கருவிகளில் இசைப்பதும் கருநாடக சங்கீதம், இந்துத்தானி சங்கீதம் ஆகியவை வாய்ப்பாட்டுக்கும் கற்பிக்கப்படுகின்றன. தமிழிசை ஆசிரியர் திரு. எசு. இராமச்சந்திரன் இப்பள்ளியிலும் தனியாகவும் தமிழ்ப் பாடல்களைச் சொல்லித் தருகிறார்.

இந்தச் சபையின் பெரிய சாதனை, சண்முகானந்த நுண்கலை அரங்கினைக் கட்டியிருப்பதாகும். 46 இலட்சம் ரூபாயில் 15 ஆண்டுகளுக்கு முன் இது கட்டி முடிக்கப்பட்டது. 3000 இருக்கைகள் உள்ள இந்தக் குளிர்சாதன அரங்கு, மாசுகோவிலுள்ள கலை அரங்குக்கு நிகரானது. ஆறு மாதங்களுக்கு முன்னதாகவே முயன்றாலும், நிகழ்ச்சிகளுக்கு இந்த அரங்கு கிடைப்பது அரிது. ஞாயிற்றுக் கிழமைகளில் மூன்று நிகழ்ச்சிகள் கூட இங்கு நடைபெறுகின்றன.

தமிழனுடைய சாதனைக்கும் செயல் திறனுக்கும் எடுத்துக் காட்டாக உள்ள இந்த மாமண்டபத்தைக் கட்டி, தமிழ் பேசும் மக்கள் எல்லோருக்கும் பெருமை சேர்த்தவர், மெய் வருத்தம் பாராது கண் துஞ்சாது அரும்பாடுபட்டவர், கலைக்காவலர், பத்மஸ்ரீ. பேராசிரியர் திரு. டி. வி. இராமானுசம் ஆவார். இவர் தஞ்சை மாவட்டம் திருக்கண்ணபுரம் நியாய வேதாந்த மகா வித்துவான் வரதாச்சாரிய சுவாமிகளின் மகனார் ஆவார்.

National Centre for the Performing Arts, Nariman Point, Bombay - 21.

டாட்டா அறக்குழுவினர் இந்த நிறுவனத்தை நடத்துகின்றனர். இசையறிஞர் முத்துசாமி தீட்சிதரைப் பற்றி இவர்கள் ஒரு நூல் வெளியிட்டிருக்கின்றனர்.

தற்காலத் தமிழ்நாட்டு ஓவியக் காட்சியைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்துடன் சேர்ந்து நடத்துவதற்கு இவர்கள் என்னிடம் விருப்பம் தெரிவித்தனர்.

நடனக் கலையரசி திருவாட்டி. பாலசரசுவதியைப் பற்றித் தமிழ்நாடு அரசும் இந்த நிறுவனமும் இணைந்து ஒரு திரைப் படத்தை 1977இல் எடுத்தன

இந்த நிறுவனம் நாட்டுப் பாடல்களையும் நாட்டுப்புற இசையையும் சில வடமாநிலங்களில் ஒலிப்பதிவு செய்திருக்கிறது. தமிழ்நாட்டிலும் இத்தகைய முயற்சியில் ஈடுபடவிரும்புகிறது.

1. வருங்காலச் சந்ததியினர்க்குப் பயன்படும் வகையில் பேணப்பட வேண்டிய, அதாவது ஒலிப்பதிவு செய்ய வேண்டிய நாட்டுப் பாடல்கள், நாட்டுப்புற இசை எவையெவை?

2. இவற்றை ஒலிப்பதிவுசெய்ய, தொடர்பு கொள்ள வேண்டிய இசைக் கலைஞர்கள் யார் யார்?

3 ஒலிப்பதிவு நடைபெற வேண்டிய இடங்கள் எவை? என்ற விவரங்களைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் தெரிவித்தால் அந்த ஆலோசனையை ஏற்று, தங்களுடைய பொறியியல் அறிஞர்களைத் தமிழ்நாட்டுக்கு அனுப்புவார்கள் அவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு வந்து மேலும் தகவல்களைச் சேகரிப்பார்கள். இசைக்கலைஞர்களைச் சந்தித்து ஒலிப்பதிவு செய்வதற்கு உரிய நாளையும் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய அன்பளிப்புத் தொகையையும் முடிவு செய்வர். அதன்பிறகு ஒலிப்பதிவுக் குழு தமிழ்நாட்டுக்கு வரும் என்று என்னிடம் தெரிவித்தார்கள்.

SRI RAMANUJA SABA

ஸ்ரீ இராமானுசர் சபை, 19, ராம் நகர், நாகபுரி - 10.

1976இல் ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள் இங்கு வந்த போது இந்தச் சபை தொடங்கப்பட்டது. ஒவ்வொரு ஆழ்வாரின் திரு நட்சத்திரத்தன்றும், ஸ்ரீவைஷ்ணவர்கள் நாலாயிரத் திவ்யப் பிர பந்தம் பாராயணம் செய்கின்றனர் மார்கழி மாதத்தில் திருப்பாவை பாராயணப் போட்டி நடைபெறுகிறது.

ஆச்சாரிய சுவாமிகள் சொல்லியும் கூட வட மாநிலங்களில் சில கோயில்களில் திருவெம்பாவைப் பாராயணம் இடம்பெறுவ தில்லை.

கார்த்திகேய பஜனை சமாஜம்

சீதாபுல்டி, நாகபுரி.

தைப்பூசத் திருவிழாவில் திருப்புகழ் பாட்டுப் போட்டி நடைபெறுகிறது.

கந்த சமாஜ்
மோதி பாக், நாகபுரி-3.

தமிழ்நாட்டிலிருந்து புகழ்பெற்ற நாதசுரக்காரர்களையும் பிற இசைக்குழுக்களையும் 'கந்தர் சஷ்டி' விழாவிற்கு அழைக்கின்றனர். தமிழ்நாட்டிலிருந்து பூ வரவழைத்து, தஞ்சாவூர் முத்துப்பல்லக்கு ஊர்வலம் நடைபெறுகிறது.

சர்வேசுவரர் கோயில், நாகபுரி.

கந்தர் சஷ்டி நாள்களில் திருமுருகாற்றுப் படை, கந்த புராணம் பற்றிய இசைச் சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன.

சவுத் இண்டியன் அசோஸியேஷன்
ரமர் நகர், நாகபுரி-10.

சங்கீத மும்மூர்த்திகளின் நாள்கள் கொண்டாடப் படுகின்றன. ஆண்டுக்கு ஒரு முறை பரத நாட்டியமும் கருநாடக இசை நிகழ்ச்சியும் நிகழ்கின்றன.

கலா ரசிகா, அவுரங்காபாத்.

இசை நடன நிகழ்ச்சிகள் மட்டுமே நடைபெறுகின்றன. சில தமிழர் இந்த அமைப்பைத் தமிழ்ச் சங்கம் என்று குறிப்பிட்டு வருகின்றனர்.

மத்திய மாநிலம்

இந்த மாநிலத்தில் கைரகார் மாவட்டத்தில் 'இந்திர கலா சங்கீத விசுவ வித்யாலயா' என்ற இசைப் பல்கலைக் கழகம் இயங்கி வருகிறது. இப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருப்பவர் டாக்டர்.எம். ஆர். கௌதம் என்ற தமிழர். தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதர், டைகர் வரதாச்சாரியார், வீணை தனம் அம்மாள் ஆகியோரிடம் இவர் இசை பயின்றவர்.

எஃகு நகராகிய பிலாயில் 15 தமிழ்ப் பெண்கள் சனிக்கிழமை தோறும் மாறிமாறி ஒவ்வொருவர் வீட்டில் கூடி தேவாரம், அபிராமி அந்தாதி, திருப்புகழ் பாடல்களை இசையுடன் பாடுகின்றனர். காதம்பரி என்ற இந்த அமைப்பின் உறுப்பினர்கள் கோயில் திருவிழாக்களிலும் பாடுகிறார்கள்.

குசராத்

120 ஆண்டுகளுக்கு முன் மராத்திய வமிசத்தினரான பரோடா கெய்க்வாட் அரச குடும்பத்திற்கும் தஞ்சாவூரை ஆண்டு வந்த

மராத்திய அரச குடும்பத்திற்கும் திருமண உறவு இருந்தது. தஞ்சாவூர் இளவரசியைப் பரோடாவுக்கு அனுப்பிய போது, இளவரசியுடன் சீர் வரிசையாக நாட்டியமாடும் பெண்மணிகள் இருவரும் மிருதங்க வித்துவான், வாய்ப்பாட்டு வித்துவான், நட்டுவனார் ஆகியோரும் அனுப்பப் பெற்றனர்.

அரண்மனை மரபுப்படி குறிப்பிட்ட நேரங்களில் தஞ்சாவூரிலிருந்து சென்ற கலைஞர்கள் மங்கலப் பாடல்கள் பாடியும் நாட்டியமாடியும் வந்தனர். பரோடா சமத்தானத்தின் ஆத்தான வித்துவான்களாக இவர்கள் விளங்கினர்.

நாட்டிய மங்கையராகச் சென்றவர்கள் கௌராபாயும் அவள் தங்கை காந்திமதியும் ஆவர். அவர்களுடைய உருவச் சிலைகள் பரோடா அருங்காட்சியகத்தில் உள்ளன. இவர்களுடைய வழியினர் அனைவர்க்கும் 'தஞ்சோர்க்கார்' (தஞ்சாவூரிலிருந்து வந்தவர்கள்) என்ற இறுதிச் சொல் வழங்கி வருகிறது.

சாரங்கி இசைப்பதில் வல்லுநராகத் திகழ்ந்த துளசிதாசு தஞ்சோர்க்கர் சில ஆண்டுகளுக்கு முன் காலமானார்.

நட்டுவாங்கத்திலும் வடநாட்டு இசையிலும் புலமை பெற்ற குபேர்நாத் தஞ்சோர்க்கர் மகராசா சயாசிராவ் பல்கலைக் கழகத்தில் இசைத்துறைத் தலைவராக இருக்கிறார்.

நட்டுவனாரும் திரைப்படஇசைக் கலைஞருமான சனார்த்தன தஞ்சோர்க்கர் இப்போது பம்பாயில் 'ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்' (HMV) திறுவனத்தில் இசை வல்லுநராகப் பணி புரிகிறார்.

நெடுங்காலமாகத் தஞ்சாவூருக்கும் பரோடாவுக்கும் இருந்து வரும் இசைத் தொடர்பால் தஞ்சாவூர் ஆபிரகாம் பண்டிதர், 1914இல் பரோடாவில் நடைபெற்ற அனைத்திந்திய இசை மாநாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். தமிழ் மக்களுடைய கான முறை உலக இசையிலேயே மேலானது என்பதை ஆபிரகாம பண்டிதர் தம் உரையில் நிலைநாட்டினார். அதன் தொடர்பாக 'கருணாமிர்த சாகரம்' என்னும் இசைத்தமிழ் நூலை அவர் படைத்தார்.

தில்லி

இந்நகரிலும் ஏராளமான இசைப் பள்ளிகளும் சபாக்களும் உள்ளன. தமிழ்நாட்டின் புகழ்மிக்க இசைக்கலைஞர்களின்கச்சேரிகள் அடிக்கடி தலைநகரில் நடைபெறுகின்றன.

கலைஞர்களின் சுற்றுலா

தமிழ்நாடு இயல் இசை நாடகக் கழகம், இது போன்று பிற மாநிலங்களில் இயங்கும் அமைப்புகள் வாயிலாக மாநிலத் தலைநகரங்களில் தமிழ்நாட்டு இசை, நடனம், நாடக நிகழ்ச்சிகளை நடத்துகிறது. ஒரு மாநிலத்தின் கலையைப் பிற மாநிலத்தாருக்கு அறிமுகப்படுத்துவதுதான் இந்த ஏற்பாட்டின் நோக்கமாக இருந்து வருகிறது. எனினும் தாங்களும் காண வசதியாகத் தமிழர் அமைப்புகளுக்கு இந்த நிகழ்ச்சிகளைப் பற்றிய முன்னறிவிப்பு செய்யப்பட வேண்டுமென்று ஆங்காங்கு உள்ள தமிழர் விரும்புகின்றனர். அந்தந்த நகரத்தில் விற்பனையாகும் தமிழ் வார இதழ்களுக்குள்ளும் நிகழ்ச்சிகளைப் பற்றிய அறிவிப்புத்தான் வைக்கப்பட்டால் தமிழர் பலருக்கும் செய்தி பரவும்.

நடன மணிகளான நடராசும் சகுந்தலாவும் 1983 ஏப்ரலில் மனுநீதி கண்ட சோழனின் வரலாற்றை நடனமாக மத்திய மாநிலத்தில் ஆடிக்காட்டினர். நிகழ்ச்சிக்குப் பிறகுதான் தமிழருக்கு இச்செய்தி எட்டியது.

பரத நாட்டியம்

வட மாநிலங்களெங்கும் பரத நாட்டியம் பரவியிருக்கிறது.

மகாராட்டிரம்

இந்த மாநிலத்திலிருந்து இலாவணியமும் அரிகதையும் தமிழ்நாட்டுக்குப் பரவின. அதற்கு மாற்றாகப் பரதநாட்டியம், குறிப்பாகப் பம்பாய் மாநகரில் ஏற்றம் பெற்றிருக்கிறது.

மராத்திய மக்களைப் பரத நாட்டியம் கவர்ந்துள்ள அளவுக்குக் கதகளி, யட்சகானா, குச்சுப்புடி ஆகியவை கவரவில்லை.

பம்பாயில் எல்லா மொழியினராலும் எல்லா மதத்தினராலும் பாராட்டப் பெறுகிற மற்றும் பயிலப்படுகிற அளவுக்குப் பரதநாட்டியக் கலையுணர்வு பரவியிருக்கிறது.

பம்பாய் தாராவில் கணேசர் சதுர்த்தியின் போது நடைபெறும் பரத நாட்டியத்தில் 'சின்னஞ்சிறு கிளியே', 'திக்குத் தெரியாத காட்டில்' போன்ற பாடல்களையும் பாரதிதாசன் பாடல்கள் சிலவற்றையும் பாடி ஆடும்போது பல்லாயிரக் கணக்கான பாமரத் தமிழர்களும் அந்த நிகழ்ச்சியைச் சுவைக்கின்றனர்.

பாரதியாரின் பாஞ்சாலி சபதம் பரத நாட்டிய நிகழ்ச்சியாகத் தயாரிக்கப்பட்டு, தொலைக் காட்சியில் ஒளி பரப்பப்பட்ட போது வட நாட்டுத் தமிழர்கள் அதனைப் பெரிதும் சுவைத்தனர்.

பம்பாயில் ஏராளமான பரத நாட்டியப் பள்ளிகள் உள்ளன. இவற்றுள் பெரிதும் புகழ் பெற்றது மாதுங்காவில் 1945 முதல் நடைபெற்று வரும் 'ஸ்ரீ இராசராசேசுவரி பரத நாட்டியக் கலா மந்திர்'.

இங்குப் பஞ்சாபி, குசராத்தி போன்ற பிற மொழி மாணவியர்க்கு ஒவ்வொரு தமிழ்ச் சொல்லுக்கும் அவர்கள் மொழியிலேயே விளக்கம் தருகின்றனர். 'குழல் இனிது; யாழ் இனிது' போன்ற திருக்குறள் பாக்களும், கம்பராமாயணப் பாடல்களும், சிலப்பதிகாரத்தில் குன்றக் குரவையும் மற்றும் தியாகராசர் கீர்த்தனைகளும், சாமா சாத்திரிகள், முத்துசாமித்தீட்சிதர், அருணாசலக் கவிராயர், கோபால கிருட்டிண பாரதியார், சுப்பிரமணிய பாரதியார், பாபநாசம் சிவன் பாடல்களும் கற்பிக்கப்படுகின்றன. இங்குப் பயின்ற மாணவிகள் முப்பது பேர் சேர்ந்து ஒரு குழுவாகச் சென்று நேபாளத்தில் திருக் குற்றாலக் குறவஞ்சியை நாட்டிய நாடகமாக ஆடிக் காட்டினர்.

இக்கல்லூரியில் பயின்றவர்கள் சரபேந்திர பூபாலக்குறவஞ்சி, ஆண்டாள் திருப்பாவை போன்ற நிகழ்ச்சிகளையும் தாள வாத்தியக் கச்சேரிகளையும் நடத்தியிருக்கின்றனர்.

திரைப்பட நட்சத்திரங்களாக மின்னும் சாந்தி கிருஷ்ணா, பூர்ணிமா ஜெயராம் ஆகியோர் இங்குப் பயின்றவர்களே.

இங்குப் பயிலும் பேறு பெற்ற நூற்றுக்கணக்கான இந்தியப் பெண்கள் அமெரிக்காவிலும் கனடாவிலும் இங்கிலாந்திலும் குடியுரிமை பெற்றுப் பரதநாட்டியக் கலையைப் பாரெங்கும் பரப்பி வருகின்றனர்.

இந்தக் கலா மந்திரை நடத்தி வருபவர்கள் சரபோசி மன்னரின் அரண்மனைப் புலவரான வெங்கடகிருஷ்ண நட்டுவனார், இராமநாதபுரம் சேதுபதிகளின் சமஸ்தான வித்துவானாக இருந்த பஞ்சாபகேச நட்டுவனார் ஆகியோருடைய வழியில் வந்த குப்பையா பிள்ளை குடும்பத்தார் ஆவர். திரு. குப்பையா பிள்ளை 1943இல் பம்பாய்க்கு வந்தார். 1945இல் இந்தக் கல்விக் கூடத்தைத் தொடங்கினார். தமிழ்நாட்டுக்கு வெளியே இவர் வாழ்ந்தும், தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றம் நட்டுவனார்களுக்குக் கலைமா மணிபட்டம் வழங்க முடிவுசெய்தபோது இவரையே முதலாவதாகத்

தேர்ந்தெடுத்துக் கௌரவித்தது. மேலும், சங்கீத நாடகஅகாடெமியால் பெருமைப் படுத்தப்பட்ட முதலாவது பரதநாட்டிய ஆசிரியரும் இவரே ஆவார்.

இவருடைய மகனாரான குருகல்யாணசுந்தரம் மற்றும் அக்குடும்பத்தைச் சேர்ந்த குரு கோவிந்தராசப் பிள்ளை, குரு மகாலிங்கம் பிள்ளை ஆகிய மூவரும் 1981இல் திரு. குப்பையா பிள்ளை காலமான பிறகு இந்த நிறுவனத்தைத் தொடர்ந்து சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

குசரத்

ஆமதாபாத் உசுமான்புராவில் திருமதி அம்மு சுவாமிநாதன் மகள் திருமதி. மிருணாளின் சாராபாய் தர்பணா என்ற பெயரில் நாட்டியப் பள்ளியை இருபத்தைந்து ஆண்டுகளாகச் சிறப்பாக நடத்தி வருகிறார்.

இதுவரை ஓராயிரம் குசரத்தியர் இங்குப் பரத நாட்டியம் பயின்றிருக்கின்றனர். இங்குள்ள ஆசிரியர்களுள் தமிழரான திரு. பத்தக்குடி இராமசாமி குறிப்பிடத்தக்கவர்.

தில்லி

புகழ்மிக்க நட்டுவனார் பரம்பரையில் வந்த திருமதி. சுவர்ண சராவதி 1954 முதல் சென்னையில் தாம் நடத்தி வந்த பரதநாட்டியப் பள்ளியை 1962ஆம் ஆண்டில் தில்லியிலிருந்து நடத்தி வருகிறார்.

இவரிடம் பயின்ற மாணாக்கர் பலர் ஆவர். தில்லித் தமிழர்களின் முயற்சியால் இவருக்கு இந்திய அரசு உரிய மரியாதை செய்துள்ளது. இவருடைய எழுபதாம் வயதில் 1977இல் தில்லித் தமிழர் இவருக்கு ரூ. 20,000 வழங்கினர்.

திரைப்பட நட்சத்திரம் ஹேமமாலினி, தில்லியில் பிறந்து வளர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இராசத்தான்

டோங்க் மாவட்டத்தில் 'வனஸ்தலி வித்யா பீட்' என்ற பரதநாட்டியப்பள்ளி நடைபெறுகிறது அங்குள்ள ஆசிரியர் வாரம் இருமுறை செய்ப்பூருக்கு வந்து பரத நாட்டிய வகுப்பு நடத்துகிறார். டோங்குக்கும் செய்ப்பூருக்கும் இடையே உள்ள தொலைவு 60மைல்.

மத்திய மாநிலம் :

இராய்ப்பூர் வானொலியில் செவ்வாய்க்கிழமைகளில் காலை 8-30 முதல் 9-00 வரை கருநாடக இசையும் தமிழ்ப் பாடல்களும் ஒலிபரப்பப்படுகின்றன. இராய்ப்பூர் தொலைக்காட்சியில் ஒலியும் ஒளியும் பகுதியில் சில சமயம் தமிழ்த் திரைப்படப் பாடல்கள் சேர்க்கப்படுகின்றன.

நாடகம்

வட மாநிலத் தமிழர் அனைவர்க்கும் நாடகத்தில் மிகுதியான ஈடுபாடு இருக்கிறது. தமிழ்நாட்டிலிருந்து புகழ் பெற்ற நாடகக் குழுக்களை வரவழைத்து, தொடர்ந்து சில நாள்களுக்கு அந்த நாடகங்களைக் கண்டு மகிழ்கிறார்கள். ஒவ்வொரு நகரத்துக்கும் நாடகக் குழுக்கள் தமிழ்நாட்டிலிருந்து வந்து தமிழ்நாட்டுக்குத் திரும்புவதால நாடகம் நடத்துபவர்களுக்கு ஏராளமான செலவாகிறது. வரிசையாக நாலைந்து நகரங்களுக்கு நாடகக்குழு செல்வதற்குத் திட்டமிடப்பட்டால் நாடகக் கலை ஆர்வத்தை இன்னும் மிகுதியாக வளர்க்க இயலும்.

நாடகங்களிலே நடிக்கும் ஆற்றல் மிக்கவர்கள் வடமாநிலத் தமிழரில் இளைஞர்களும் உள்ளனர்; முதியோர்களும் உள்ளனர் நாடகங்களை எழுத வல்லவரும் இருக்கின்றனர். அமெச்சூர் நாடகக் குழுக்களின் நாடகங்கள், அந்தந்த நகரத்துத் தமிழரின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டும் அவர்கள் அன்றாடம் பேசும் பேச்சுத் தமிழ் நடையில் அமைத்தும், பார்ப்பவர்களைப் பரவசப் படுத்துகின்றன.

வட மாநிலத் தமிழரில் நாடகக் கலைக்குப் பெருந்தொண்டு ஆற்றியிருப்பவர் நடிப்பிசைத் திலகம் திரு. எஸ். ஆர் சபாபதி. புனாவில் பணியாற்றிஓய்வு பெற்ற பிறகு அங்கு சரசுவதிவித்யாலயம் என்ற கல்விக் கூடத்தின் ஆட்சிப் பொறுப்பைத் தொடர்ந்து ஆற்றி வருகிறார் இவருக்குத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ஈராண்டுகளுக்கு முன கலைமாமணி பட்டம் வழங்கியிருக்கிறது.

பம்பாய்

பம்பாய்த் தமிழர்க்கு நாடகமோகம் மிகுதி. இந் நகரில் நடைபெறாத தமிழ் நாடகமோ, இங்கு வராத நாடகக் குழுவோ இல்லை.

பம்பாய்த் தமிழ்ச் சங்கம் ஆண்டுதோறும் நவம்பர், டிசம்பர்த் திங்கள்களில் நாடக விழாக்களை மிகப் பெரிய அளவில் நடத்தி வரு

கிறது. இந்த விழாக்களுக்கு என். எஸ். கிருஷ்ணன் குழுவினரும் டி.கே.எஸ். குழுவினரும் பலமுறை வந்து ஏராளமான நாடகங்களை நடித்துக் காட்டி, பம்பாய்த் தமிழர்களுக்கு நாடகப்பசியை உண்டாக்கியிருக்கிறார்கள். நாடக விழாக்கள் மூலம் பெரும் புகழையும் நாடகவிழா மலர்கள் வாயிலாக விளம்பர வருமானத்தையும் பம்பாய்த் தமிழ்ச்சங்கம ஈட்டியிருக்கிறது. சங்கக் கட்டடம் உருவாக நாடக விழாக்களும் துணைபுரிந்துள்ளன.

நாடகக் குழுவினரைக் கொண்டு செம்பூர்த் தமிழ்ச் சங்கம் பல நாடகங்களை நடத்தியிருக்கிறது. சங்க உறுப்பினர்களின் நாடகங்களும் அரங்கேற்றப்பட்டுள்ளன.

புனா

புனா கலைக் கழகம் பல ஆண்டுகள் அரும்பணியாற்றி 1976இற்குப் பிறகு ஓய்ந்து விட்டது. இந்தக் கழகம் புனா நகரிலும் மிராச் ரயில சந்திப்பிலும நாடகங்களைச் சிறப்பாக நடத்தியிருக் கிறது.

மத்திய மாநிலம்

திரு. சீதாராமன் முயற்சியால் பிலாய்த் தமிழ் நாடக மன்றம் ஆண்டுதோறும் சில நாடகங்களை நடத்தி வருகிறது.

சபல்பூரில் கமரியா நாடகக்குழு 1970 முதல் 72 வரை நல்ல நாடகங்களை மக்களுக்குப் பொழுதுபோக்காக அளித்தது. முதுகெலும்பாயிருந்த உறுப்பினர்கள் மாற்றலாகிச் சென்றதும் இந்தக் குழு செயலிழந்தது

குசராத்

பரோடா தமிழ்ச் சங்கம், சென்னை கலாக்ஷேத்ரா நடனக் குழுவினரையும் ஆமதாபாத் தர்ப்பண அகாடெமிக் குழுவினரையும் வரவழைத்து நடனங்களையும் பம்பாய், ஆமதாபாத், சென்னைக் குழுக்களை வரவழைத்து நாடகங்களையும் பல ஆண்டுகளாக நடத்தியிருக்கிறது.

நாட்டுப்புறக் கலைகள்

நாட்டுப்புறக் கலைகளுக்குப் பம்பாயில் 1982 முதல் ஒரு பொற்காலம் தொடங்கியிருக்கிறது. மராத்திய மக்களுக்குக் கணேச சதுர்த்தி ஒரு தேசியத் திருவிழாவாகும். மராத்திய மக்களும் தமிழரும் இரண்டறக் கலக்க உதவும் வகையில், பம்பாய் வாழ் தமிழர்

10 இலட்சம் ரூபாய் செலவில் கணேச சதுர்த்தி விழாவினைக் கொண்டாடுகின்றனர். அப்போது நடைபெறும் கச்சேரிகளும் கரக ஆட்டங்களும் கும்மி, ஒயில் கும்மி, கோலாட்டம், பொம்மலாட்டம், புரவி ஆட்டம், மயிலாட்டம் முதலியவற்றையும் தமிழரை மட்டுமன்றி எல்லா மொழியினரையும் ஈர்க்கின்றன.

புனா சோக்புரியில் வாழும் திரு. லாரன்ஸ் என்பவர் பொய்க்கால் குதிரை ஆட்டத்தைப் பெரிய தொழிலாக நடத்துகிறார். எல்லா மொழியினரும் திருமணங்களுக்கு இந்த நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கின்றனர்

வட மாநிலங்கள் எங்குமுள்ள மாரியம்மன் கோயில், முருகன் கோயில் விழாக்களில் நாட்டுப்புறக் கலைகளுக்குச் சிறப்பிடம் கொடுக்கப்படுகிறது.

ஆனந்த குமாரசாமி

இந்தியக் கலைகளின் சிறப்பையும் நடராச வடிவத்தின் அருமையையும் நானிலமெங்கும் அறிமுகப்படுத்திய ஈழத்தமிழர் கலாயோகி ஆனந்த குமாரசாமி பெயரால் ஒரு மண்டபம் (இந்தியாவில்) பம்பாயில் மட்டும் (பிரின்சு ஆப் வேல்சு மியூசியத்தில்) உள்ளது.

பம்பாயில் உள்ள இசை, நாடக, நடன அமைப்புகள்

1) **Sri Rajarajeswari Bharatha Natya Kala Mandir,**
2/394 E. Shradanand House,
Shradanand Road,
Matunga, Bombay - 19.

2) **Kalasadan Cultural Society,**
Sion, Bombay - 72.

3) **Rasika Ranjani Sabha,**
2/22, Savitri Kunj,
Garodia Nagar,
Ghatkopar East, Bombay - 400 077.

4) **Sri Shanmukhananda Fine Arts & Sangeetha Sabha,**
Bombay 400 022.

5) **The Bharatiya Music & Arts Society,**
Bhaudaji Road Extension,
Bombay - 400 022.

6) **The Fine Arts Society,**
1/20, Sarvodaya Hospital Estate,
Chembur, Bombay - 400 071.

7) **Mulund Fine Arts Society,**
1, Padmavathy,
Off. Valji Dadha Road,
Mulund West, Bombay - 400 080.

8) **Rangoli,**
Bombay - 57.

9) **Music Triangle,**
C/4 Sahakar 5th Road,
Santa Cruz East, Bombay - 400 055.

ஆமதாபாத்தில் நாடகக் குழுக்கள்

1. முத்தமிழ்க் கலைக்குழு
2. கலைவாணி ஆர்ட்ஸ்
3. அன்னை கலைக்குழு, கோக்கரா.
4. இளைஞர் நண்பர் குழு, அரி காலனி.

புனா

முத்தமிழ் மன்றம்,
C/o A. John,
College of Military Engineering,
Kirke.

சண்டிகர்

Friends Dramatic Association,
C/o Mr. Mahendran,
Punjab Alkalies Ltd.,
S C O / 25 / Sector - 17,
Chandigarh - 17.

நாகபுரி

Fine Arts Society,
West High Court Road,
Mani Memorial Hall,
Nagpur - 10.

Madarasi Association,
Sita Buldi,
Nagpur.

Ganesan Kalai Manram,
Sita Buldi,
Nagpur - 1.

சண்முகராசன் நாடகக் குழு

தமிழ் நெஞ்சம்,
1, மகாபீர் சால்,
சயான் — பாந்த்ரா லிங்க் ரோடு,
பம்பாய் - 17.

Matunga Dramatic Society,

Matunga,
Bombay - 19.
(S. R. Kasturi)

Bagyaraj Rachigar Mandram,

Hari Colony,
Khokhra,
Ahmedabad - 8.

Institute for Rewriting Indian History,

Shiva Sakti,
C/o Dr. Bedakar's Hospital,
Naupada,
Thana - 400 6C 2.

இந்த நிறுவனம் நடத்தும் இசைக் கருத்தரங்குகளிலும் இவர்களுடைய காலாண்டு இதழான 'Ithihas Patrika'விலும் தமிழ்நாட்டு இசைமரபுகள் இடம் பெறுகின்றன.

*'பாரதிய வித்யா பவன்' — பரத நாட்டியப் பள்ளி இல்லாத நகர்*களில் பாரதிய வித்யா பவன் இதற்குரிய வகுப்புகளை நடத்துகிறது.

'Theatre Tamilnadu' இந்த நிறுவனம் புதுடில்லியில் வாரந்தோறும் தமிழ்நாடகம் அல்லது தமிழ்த் திரைப்படம் ஏற்பாடு செய்கிறது.

13. திரைப்படங்கள்

திரைப்பட அரங்குகளின் எண்ணிக்கையில் இந்தியாவில் முதலிடம் வகிக்கும் மாநிலம் தமிழ்நாடு. மக்கள் தொகைக் கணக்குடன் அரங்குகளின் எண்ணிக்கையைப் பார்த்தாலும் இதில் பாதியளவுக்குக் கூட வடமாநிலங்களில் திரைப்பட அரங்குகள் இல்லை.

தமிழ்மொழியில் ஆண்டுதோறும் எடுக்கப்படும் படங்களின் எண்ணிக்கையும் பிற மொழிகளில் வெளிவரும் படங்களை நோக்க மிகுதியாகும்.

இந்தியாவில் பல மொழிகளிலும் திரைப்படங்கள், சென்னை மாநகரில் எடுக்கப்பெறுகின்றன.

தமிழில் எடுத்து, தமிழ்ப்படம் பார்ப்பவர்களின் போாதரவைப் பெற்று வெற்றிகண்ட படங்கள் இந்தியில் மொழி மாற்றம் செய்யப் படுகின்றன அல்லது அந்தக் கதையை அடிப்படையாக வைத்து இந்தியில் புதிய படம் எடுக்கப்படுகிறது.

தமிழ்ப் படங்களில் நடித்த நடிகரும் நடிகையரும் இந்திப் படங்களிலும் பங்கு கொண்டு பெரும்புகழ் பெற்றிருக்கின்றனர்

மேற்கண்ட பின்னணிகளின் காரணமாக வட மாநிலங்களில் வாழும் வேறு எந்த மொழியினரைக் காட்டிலும் தமிழர்க்குத் திரைப் படம் பார்க்க வேண்டும் என்கிற ஆர்வம் பல மடங்காக இருக்கிறது. பெரும்பாலான தமிழ் மக்களுக்குத் தமிழ்த் திரைப்படம் பார்ப்பது மட்டுமே வட மாநிலங்களில் பொழுது போக்காக அமைந்துவிட்டது. தாய்மொழி பேசப்படும் மாநிலத்திலிருந்து நெடுந்தொலைவில் பிற மொழியாளர்க்கிடையே வாழும் இவர்கள் செவிகளில் தமிழ்ச் சொற்கள் விழுவதற்குத் தமிழ்த் திரைப்படங்கள் உறுதுணை செய் கின்றன. மொழித் தொடர்பை உறுதிப்படுத்தும் பெரிய சாதன மாக விளங்குவது திரைப்படமே.

திரை அரங்குகள்

தமிழ்ப் படங்கள் திரை அரங்குகளிலும் தனிப்பட்ட மண்டபங்களிலும் பொது இடங்களிலும் வட மாநிலங்களில் காட்டப்படுகின்றன.

திரை அரங்குகளில் குறிப்பிட்ட காட்சிகளில் மட்டும் தமிழ்ப் படங்களும் பெரும்பாலான பிற காட்சிகளில் இந்தி முதலிய பிற மொழிப் படங்களும் காட்டப்படுகின்றன.

பம்பாய் மாநகரில் இரண்டு அரங்குகளில் நாள்தோறும்-365 நாள்களும்-தமிழ்ப் படங்கள் காலை 11-30 மணிக் காட்சியில் காட்டப்படுகின்றன. 'அரோரா' திரை அரங்கில் புதிய படங்களும், 'சிட்டி லைட்' திரை அரங்கில் பழைய படங்களும் திரையிடுகின்றனர். ஐந்து ரூபாய் கட்டணமுள்ள நுழைவுச்சீட்டு, கள்ளச் சந்தையில்15 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது. இந்த அளவுக்குப் பணம் செலுத்த விரும்பாமல், அந்தப் படங்களின் வீடியோச் சுருள்களை வாடகைக்கு அல்லது விலைக்கு வாங்கி வீட்டிலேயே போட்டுப் பார்த்துக் கொள்பவர்கள் மிகுதி. விலை அதிகமுள்ள வீடியோக் கருவிகளைச் சேரியில வசிக்கும் தமிழ்க் குடும்பங்களிலும் காணலாம்.

பம்பாயில் 40 திரை அரங்குகளில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் மற்றும் திருவிழா அரசு விடுமுறை நாள்களிலும் காலை 9 மணிக் காட்சியில் தமிழ்ப் படங்கள் காட்டப்படுகின்றன.

தில்லி, ஆமதாபாத், புனா போன்ற நகரங்களிலும் இவ்வாறே குறிப்பிட்ட நாள்களில் ஒரு காட்சி மட்டும் ஓரிரு அரங்குகளில் தமிழ்ப் படத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

படைவீரர்களுக்குத் தமிழ்ப்படம் காட்டும் ஏற்பாட்டைப் பாதுகாப்புத் துறையினர் நெடுங்காலமாகச் செய்து வருகின்றனர்.

தமிழர் தொகை அளவாக உள்ள நகரங்களில் மாதம் ஒரு முறை அல்லது இரு முறை தமிழ்ப் படங்கள் காட்டுவதற்காகவே பல இடங்களில் தமிழ்ச்சங்கங்கள் தொடங்கப் பட்டன.

இவ்வாறே தமிழ்ச் சங்கங்களோ வேறு அமைப்புகளோ ஏற்பாடு செய்யும் தமிழ்ப் படக் காட்சிகள், பள்ளிக்கூடம், திருமண மண்டபம், கோயில் போன்றவற்றில் காட்டப்படுகின்றன.

பட வழங்குநர்கள்

பல ஆண்டுகளுக்கு முன் ஜெமினி விநியோக நிறுவனம் அதனுடைய வடமாநிலக் கிளைகளை மூடிவிட்டது. ஏவிஎம் நிறு

வனமும் வடமாநிலங்களில் முன்னர் போன்று துடிப்புடன் செயல் படவில்லை தமிழ்ப்பட உற்பத்தியாளர்கள், வட மாநிலங்கள் எல்லாவற்றுக்கும் மொத்தமாகத் தங்கள் உரிமையை விற்றுவிடு கின்றனர்.

இவர்களிடமிருந்து படச்சுருளை வாங்கித் திரையரங்கில் காட்ட ஏற்பாடு செய்பவர் திரைப்படத் துறையில் முழுநேர ஈடுபா டுள்ளவர் அன்று. அரசு ஊழியர், ஆசிரியர், பொறியாளர் போன்ற தமிழர் சிலர்க்கு ஓய்வு நேரம் உள்ளது. இவர்களில் தமிழார்வமும் தமிழ்க் குடும்பங்களின் பொழுதுபோக்குக்கு உதவும் மனப்பான் மையும் உள்ளவர்கள் தமிழ்ப்படங்களைக் காட்ட முன்வருகின்றனர். தில்லி, பம்பாய், செய்ப்பூர், புஷாவல் நகரங்களிலுள்ள வழங்குநரைச் சந்தித்து, அவர்கள் குறிப்பிடும் தேதியில் தம் நகரில் படத்தைத் திரையிடுவதற்கு முயலுகின்றனர். ஞாயிற்றுக் கிழமைகளில்தான் நல்ல கூட்டம் வரும். அதற்கு ஏற்பத் திரைப்பட அரங்கை ஏற்பாடு செய்வது எளிதன்று. இரண்டு ஞாயிற்றுக் கிழமைகளாவது அந்தப் படத்தைக் காட்ட விரும்பி அருகே உள்ள மற்றொரு நகரில் திரை அரங்கை வாடகைக்குப் பிடிக்க வேண்டும். வேறு இடங்களில் நடத்தினால் அதற்கெனத் தனி இசைவு பெற வேண்டியிருக்கும். மாதச்சம்பளம் கொடுக்கப்பட்டவுடன் வருகிற ஞாயிற்றுக்கிழமை களில் தமிழ்ப் படம் காட்டப்பட்டால் வசூல் மிகுதியாக இருக்கிறது. வடமாநிலங்களில் தமிழர் எண்ணிக்கை பெருகிய வண்ணமாக இருந்தும் தமிழ்ப்படம் பார்ப்பவர் தொகை குறைந்து வருகிறது. அந்தந்த நகரில் ஏற்பாடு செய்பவர்களுக்கு உள்ள சிக்கல்களே இதற்குக் காரணமாகும். நாம் சுட்டிக்காட்டியிருக்கும் பிரச்சினை களில் தமிழ்ப்பட உற்பத்தியாளர்கள் கவனம் செலுத்தினால் வட மாநிலங்களில் தமிழ்ப்படங்களுக்கு எதிர்காலத்தில் வாய்ப்புக்கள் கூடும்.

தமிழ்ச் சங்கங்கள்

வருவாயைப் பெருக்க விரும்பும் தமிழ்ச் சங்கங்களுக்குத் தமிழ்த்திரைப்படம் காட்டுவது ஒரு பொற்சுரங்கமாகும். அதற்கான நேரத்தைச் செலவிடவோ தேவைப்படும் மூலதனத்தைப் போடவோ ஒருவரும் முன்வருவதில்லை.

சான்றாக, குசராத் மாநிலத்தில் உள்ள நிலைமையைச் சுட்டிக் காட்டுவேன்.

பதிவு செய்யப்பட்ட சங்கமோ வேறு அமைப்போ கட்டடம் கட்ட நிதி திரட்ட விரும்பி, திரைப்படம் காட்டினால், குசராத்

அரசு கேளிக்கை வரிவிலக்கு வழங்குகிறது. ஆனால், ஒரு நிபந்தனை உண்டு. திரை அரங்கு வாடகை, விளம்பரம், அனுமதிச் சீட்டு அச்சிடுவது போன்ற செலவுகள் மொத்த வசூலில் நூற்றுக்கு இருபது விழுக்காடு அளவுதான் இருக்க வேண்டும். எஞ்சிய எண்பது விழுக்காடு கட்டட நிதிக்கென்று ஒரு வங்கிக் கணக்கில் போட்டு வைக்கப்பட வேண்டும்.

இந்த மாநிலத்தில் ஒரு தமிழ்ச் சங்கத்திற்குக் கூட சொந்தக் கட்டடம் கிடையாது. ஆயினும் இவர்கள் இச்சலுகையைப் பயன்படுத்திக் கொள்ள முன்வரவில்லை.

படம் பார்ப்பவர்கள்

தமிழர் மட்டுமன்றி மலையாளிகளும் தமிழ்ப் படங்களைப் பார்க்கிறார்கள். குறிப்பாக எம். ஜி ஆர் அல்லது காலகாசன் நடிக்கும் படங்களைப் பார்க்க மலையாளிகள் தவறுவதில்லை. தமிழ்ப்படங்களுக்கு மலையாள மொழியிலும் சுவரொட்டிகள் அச்சிடப்படுகின்றன.

இந்திப் படங்களை எடுப்பவர்கள், தமிழ்ப்*படங்களை மொழி மாற்றம் செய்யவோ அந்தக் கதையை இந்தி மண்ணுக்கு ஏற்ற வாறு மாற்றியமைக்கவோ திட்டமிட்டு இவற்றைப் பார்க்கிறார்கள்.

இதே நோக்குடன் இவர்கள், இந்தியன் தியேட்டர் சென்டர்* திரு. கே. ஆர். பரமேசுவரன் நடத்தி வரும் புதுமையான நாடகங்களை, தமிழ் தெரியாவிட்டாலும், பார்த்துக் கதையின் போக்கைப் புரிந்து கொள்கிறார்கள், சில சமயங்களில் ஆத்திகமும் பல சமயங்களில் நாத்திகமும் இந்த நாடகங்களை ஆட்கொள்ளுகின்றன. மனித இயல்பை, மற்றவர் வெளிப்படையாக எழுதத் தயங்கும் உணர்ச்சிகளை நடைநயத்துடன் திரு. பரமேசுவரன் நாடகமேடையில் எடுத்துக் காட்டுகிறார். சிந்திக்க வைக்கும் கருத்துக்கள். வழக்கொழிய வேண்டிய சம்பிரதாயங்களைப் புது வேகத்துடன் பார்ப்பவர் மனத்தில் உறைக்கச் செய்கிறார்.

பம்பாய் போதார் கல்லூரித் தமிழ் மாணவர் நடிக்கும் அமெச்சூர் நாடகங்களை, இந்தி மொழி மாணவரும் பட உற்பத்தியாளரும் ஆதரிக்கின்றனர்.

Indian Theatre Centre (MADRAS)
Bldg. 'N' Flat 12, 2nd Floor,
Nensey Development Complex, Near Krishna Nagar,
Borivli (E) - Bombay - 400 066.

தமிழ்ப் படங்களைப் பார்க்க, வட மாநிலங்களிலேயே பிறந்த தமிழ்க் குழந்தைகள் அவ்வளவாக விரும்புவதில்லை. பெற்றோர்கள் தமிழ்ப் படத்திற்கு அழைத்தாலும், 'நீங்கள் மட்டும் போங்கள்; நாங்கள் இந்திப் படத்திற்குப் போகிறோம்', என்று சொல்லிவிடுகிறார்கள்.

வேறுபட்ட பல வேலைகளைச் செய்து வாரச்சம்பளமும் தினக் கூலியும் வாங்கும் தமிழர், குறிப்பிட்ட சில தமிழ்ப்படங்களை ஒரு முறைக்கு மேலும் பார்க்கிறார்கள். கமலகாசன், இரஜனிகாந்த், மாதவி, ரதி மற்றும் ஏனைய தமிழ் நட்சத்திரங்கள் நடிக்கும் இந்திப்படங்களை ஆவலோடு பார்த்து அவற்றின் மூலம் இந்தி தெரிந்து கொள்ளுகிறார்கள் இந்திப் படங்களில் நடிக்க அல்லது தமிழ்ப்படங்களின வெளிப்புறக் காட்சிகளுக்குத் தமிழ் நடிகர்கள் வட மாநிலங்களுக்குச் செல்லும்போது அங்குள்ள தமிழர் அவர்களை மொய்த்து விடுகின்றனர்.

மேலே குறிப்பிட்ட தமிழ் ரசிகர்கள் தமிழ்த் திரைப்படப் பாட்டுப் புத்தகங்களை வாங்குகிறார்கள். 'போனால் போகட்டும் போடா' - 'எட்டடுக்கு மாளிகையில் ஏற்றி வைத்த என் தலைவன் விட்டுவிட்டுச் சென்றானடி' போன்ற பாடல்களை உற்சாகத்துடன் பாடுவார்கள்.

எம். ஜி. ஆர். மன்றம்

தமிழ்நாட்டிலிருந்து கடந்த 15 ஆண்டுகளில் பம்பாய்க்கு வந்திருப்பவர் எம். ஜி. ஆர். மன்ற உறுப்பினர்களாக உள்ளனர். இவர்கள் எம். ஜி. ஆர். படங்களைக் காணத் திரளாக வருகின்றனர்.

திரைப்படச் சஞ்சிகைகள்

வட மாநிலங்களிலிருந்து வெளிவரும் இவ்வகை இதழ்கள் அனைத்திலும் தமிழர் திரைப்பட விமர்சனம் எழுதுகின்றனர். ஜெமினி சினிமாவில் எழுதும் திரு. ஜோதி வெங்கடேஷ் பம்பாய்த் தமிழரே.

தமிழ்நாடு அரசின் கடமை

வட மாநிலத் தமிழர்க்கு, தமிழ்நாட்டைப் பற்றி நன்கு தெரியச் செய்ய (1) சுற்றுலாத் தலங்கள் (2) கோயில்கள் (3) கல்வி, தொழில், போக்குவரத்து நெடுஞ்சாலை, வீட்டுவசதித்துறைகளில்

தமிழ்நாட்டின் வளர்ச்சி ஆகியவை பற்றி 16 எம்.எம். வண்ணப் படங்களை எல்லா நகரங்களிலும் திரையிடத் தமிழக அரசின் உரிய துறைகள் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

வயிறு வளர்க்க வட மாநிலங்களுக்குச் சென்றிருக்கும் நூறாயிரக் கணக்கான தமிழருக்கு ஊறு செய்கிறோம் என்பதைச் சிந்தியாது, சிலசமயம் அரசியல் தலைவர்கள் பேசுவது குறித்துப் பலர் மனம் புண்பட்டு என்னிடம் கூறினர். 1983 சூலை தொடக்கத்தில் தமிழக வருவாய்த்துறை அமைச்சர் கூறிய ஒரு கருத்து இந்தி மொழி நாளிதழ்களில் முழுப்பக்கச் செய்தியாக வெளி வந்தது. இந்தியில் படம் எடுக்கும் சிலர் தமிழ்க்கதைகளை மூலமாகக் கொள்கின்றனர் என்றும் தமிழ்ப் பண்பாட்டை இப் படங்கள் சிதைத்து விடுகின்றனர் என்றும் எனவே இந்தப் படங்களுக்கு இந்திய அரசின் தணிக்கைக் குழு இசைவு கொடுத்திருப்பினும் தமிழக அரசு மீண்டும் தணிக்கை செய்யும் என்றும் அமைச்சர் கூறியிருந்தார். இதைக்குறித்து இந்தி இதழ்கள் தலையங்கமும் எழுதின.

Shun Hindi films, says TN Minister

MADRAS, July 6 (PTI).

The Tamil Nadu Revenue Minister, Mr. S. D. Somasundaram, today appealed to the cinema theatre owners in Tamil Nadu 'not to screen Hindi films.'

In an informal chat with newsmen here today, he said Dravidian movement as such was opposed to Hindi.

Mr. Somasundaram said Hindi was being imposed through AIR and T.V. 'In the name of art', that is by screening more Hindi films.

14. நூலகங்கள்

வட மாநிலத் தமிழர்க்குத் தமிழ்மொழித் தொடர்பு தொடர்ந்து இருந்துவர, தமிழ் நூல்கள் உதவுகின்றன. புதிதாக வெளிவரும் தமிழ் நூல்களை உடனுக்குடன் வாங்கிப் படிக்க விரும்புபவர்களுக்குப் பயன்படச் செய்யும் நூலகங்கள் ஓரளவே உள்ளன; நூலகங்கள் இருந்தும் இல்லாத சூழ்நிலையும் காணப்படுகிறது.

என் பயணத்தில் நான் பார்க்க நேர்ந்த குறிப்பிடத்தக்க நூலகங்கள் பற்றிய விவரங்களை இப்போது தெரிவிப்பேன்.

மைய நூலகம்

(சென்ட்ரல் லைப்ரரி)

டவுன் ஹால், பம்பாய் - 23.

இது ஆர்னிமன் சர்க்கிளுக்கு அருகே உள்ளது. இந்தியாவின் தேசிய நூலகங்களுள் இது ஒன்று. அதாவது அச்சிடப்பட்ட அனைத்து நூல்களும் எந்த மொழியாக இருப்பினும் அன்பளிப்பாக இந்த நூலகத்துக்கு அனுப்பப் பெறுகின்றன. அரசினர் வகுத்துள்ள சட்டப்படி இவ்வாறு நூல்களைப் பெற உரிமை பெற்ற இந்தத் தேசிய நூலகம், அரசின்றால் நடத்தப் படவில்லை. இந்த நூலகம், ஆசியாடிக் சொசைட்டியின் பொறுப்பில் உள்ளது. அவர்கள் தங்கள் நூலகத்தோடு சேர்த்து இந்த நூலகத்தையும் கவனித்துக் கொண்டிருக்கின்றனர்.

12-5-1983 வரை இந்த "சென்ட்ரல் லைபரரி"க்கு 17,779 தமிழ்நூல்கள் வரப்பெற்றதாகப் பதிவேட்டில் 10-6-83இல் பார்த்தேன்.

அதன் பிறகு வந்த நூல்கள் அதுவரை பதியப்படவில்லை. 10 ஆண்டுகளுக்கு முன், தமிழ்ப் பகுதிக்குப் பொறுப்பாக ஒரு தமிழர் இருந்தார். அவர் வேலையை விட்டுச் சென்ற பிறகு, மலையாளப் பகுதிப் பொறுப்பாளரே தமிழ்ப் பகுதியையும் கவனிக்கிறார்.

நூலகத்தில் போதிய இடம் இல்லாததால், மொழி வாரியாக நூல்கள் அடுக்கி வைக்கப்படவில்லை. கட்டடத்தின் அடிப்பகுதியில் (Basement) நூல்கள் தரையில் தலைவிரி கோலமாகக் கிடக்கின்றன. யாருக்கும் தமிழ் நூல்கள் வழங்கப்படுவதில்லை. எந்தத் தமிழ் நூலையும் தேடி எடுக்க இயலாது.

இப்படிஒரு நூலகம் இயங்க வேண்டுமாஎன்று 27-7-1974இல் 'கரண்டு' (Current) வார இதழில் ஒரு கட்டுரை வெளிவந்தது. கட்டுரை வெளியாகி 10 ஆண்டுகளுக்குப்பிறகு நிலைமை இன்னும் மோசமாகியுள்ளது. 25-4-1983இல் மஹாராட்டா டைம்ஸ் (Maharatta Times) இதழிலும் இந்த நூலகத்தின் அவல நிலை படம் பிடித்துக் காட்டப்பட்டிருக்கிறது.

1981-1982ஆம் ஆண்டுக்கான ஆசியாடிச் சொசைட்டி அறிக்கையும் (பக்கம்-6) இந்த நிலைமையை ஒப்புக் கொண்டிருக்கிறது.

இந்திய அரசினரிடம் வற்புறுத்தி, இங்குள்ள தமிழ் நூல்கள் கொண்ட நூலகம் தமிழர் மிகுதியாக வாழும் பகுதியில் செம்மையாக இயங்கத் தமிழ்ப் பல்கலைக் கழகமும் தமிழக அரசும் தமிழ்ப் பதிப்பாளர்களும் எழுத்தாளர்களும் முயல வேண்டும்.

பம்பாய்ப் பல்கலைக் கழகம்

1963இல் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், தமிழ் நூல்கள் பலவற்றை வழங்கியதைத் தொடர்ந்து தென் இந்தியக் கல்விச் சங்கத்துக் (SIES) கல்லூரியில் தமிழ் நூலகம் ஒன்று அமைந்தது. குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா 50 நூல்களை வழங்கினார். பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தம், இன்றைய தமிழக முதல்வர் திரு எம் ஜி. இராமச்சந்திரனைச் சந்தித்து ரூ. 1,000/- நன்கொடை பெற்று அந்தத் தொகைக்குத் தமிழ் நூல்கள் வாங்கியனுப்பினார். தவத்திரு குன்றக்குடி அடிகளார் வழங்கிய நன்கொடை ரூ. 500/-இக்கும் நூல்கள் வாங்கப் பெற்றன. இவ்வாறாகக் கல்லூரியில் சேர்ந்த 813 நூல்களும் 25—11—1980இல் ஒரு விழாவில் பம்பாய்ப் பல்கலைக் கழகத்து நூலகத்துக்கு வழங்கப் பெற்றுள்ளன.

அதற்குப் பிறகு சில நூல்களை டர்பனிலுள்ள நேட்டால் தமிழ் வேத சங்கத்தினர் திரு. என். சி. நாயடு மூலம் அளித்துள்ளனர்.

பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறை இல்லாததால் தமிழ் நூல்களை எப்போதாவது ஒருமுறை ஓரிருவர் பயன்படுத்துகின்றனர்.

National Centre for performing Arts, Nariman Point, Bombay.

இங்குக் கருநாடக இசை, தமிழ் இசை பற்றிய தமிழ், ஆங்கில நூல்கள் சில உள்ளன. இசைவாணர் பலருடைய இசைஅரங்குகள் அடங்கிய ஒலிச்சுருள்களும் பேணப்பட்டு வருகின்றன.

Tamil Nool Nilayam

Reserve Bank of India,
C/o Secretary, 8th Floor,
NCOB, RBI, Bombay-23.

இது 1950 முதல் இயங்கிவருகிறது. ஓராயிரம் தமிழ் நூல்கள் உள்ளன. இப்பணியின் கீழ் கொலாபா, ஒர்லி (Worli), பைகுல்லா மற்றும் செம்பூர், சாந்தா க்ரூஸ், பிரபாதேவி, பம்பாய் சென்ட்ரல் ஆகிய இடங்களிலுள்ள ரிசர்வ் வங்கியின் வேலை பார்ப்போர் குடியிருப்புப் பகுதிகளிலும் கிளை நூல் நிலையங்கள் தொடங்கவும் முயற்சி நடைபெற்று வருகிறது.

பிற நூலகங்கள்

IDBI (Industrial Development Bank of India), RCF (Rashtriya Chemicals & Fertilisers), TIFR (Tata Institute of Fundamental Research) ஆகிய நிறுவனங்களிலுள்ள தமிழரும் இவ்வாறு தமிழ் நூலகங்கள் அமைத்துக் கொண்டிருக்கின்றனர்.

பாபா அணுசக்தி நிறுவனத் தமிழர், விஞ்ஞானத் தமிழ் நூலகம் ஒன்றை உருவாக்கியிருக்கின்றனர்.

பாண்டூப் திருவள்ளுவர் மன்றத்தார் திருக்குறள் பற்றிய நூல்களைச் சேகரித்து வைத்திருக்கின்றனர்.

தமிழ்ச் சங்கங்களின் நூலகங்கள்

தமிழ்ச் சங்கங்கள் நடத்தும் நூலகங்களுள் குறிப்பிடத்தக்கது பம்பாய்த் தமிழ்ச் சங்க நூலகம். இங்குத் தொடர்கதை, சிறுகதை நூல்கள் 4000, இலக்கிய நூல்களும், பிற நூல்களும் 4000 உள்ளன. ஏராளமான உறுப்பினர்கள் இவற்றை நன்கு பயன் படுத்துகின்றனர்.

கட்டடத்தை விரிவாக்கும் திட்டம் செயற்பட இருப்பதால் புத்தகங்கள் வைப்பதற்கு இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. புது நூல்கள் வாங்குவது ஒத்திப் போடப்பட்டது.

செம்பூர்த் தமிழ்ச் சங்கம் பல ஆண்டுகளாக நூல் நிலையம் நடத்தி வருகிறது. நூலகம் உள்ள கட்டடம் பழுதடைந்திருப்ப தால், உடனடியாக நூலகப் பணிகளை மேலும் விரிவுபடுத்த இயலவில்லை.

கோரேகான் தமிழ்ச் சங்கத்தின் நூலகமும் சிறு அளவினதே.

பாரதி கலா மன்றம், பம்பாய்

ஈராயிரம் நூல்கள் உள்ளன. பாரதி கலா மன்றத்திற்குக் கட்டப்பட்டுள்ள பெரிய கட்டடத்திற்கு நூல்கள் மாற்றப்பட்ட பிறகு உறுப்பினர்களுக்கு நூல்கள் வழங்கப் பெறும்.

புனா

கணேஷ் கிண்ட் பகுதியிலுள்ள ஸ்பைசர் கல்லூரியில் (Spicer College) ஓராயிரம் தமிழ் நூல்கள் இருக்கின்றன

டி. நோபிளி கல்லூரிவளாகத்தில் பேப்பல் செமினரியில் சிறிய தொரு தமிழ் நூலகம் இயங்குகிறது.

புனா கலைக்கழகம் 3000 தமிழ் நூல்களைச் சேகரித்துள்ளது. நூலகத்தைத் திறந்து பத்து ஆண்டுகளாகின்றன. நூல்கள் பாது காப்பாக சரசுவதி வித்யாலயத்தில் உள்ளன,

புனா தமிழ்ச்சங்கம், கோரப்புரி : 200 நூல்கள் உள்ளன.

ஓரியண்டல் வாட்சுமன் வெளியீட்டகம் : மருத்துவம், சுகாதாரம் தொடர்பாக வெளிவந்துள்ள தமிழ் நூல்கள் யாவும் இங்கு உள்ளன.

பொது மக்களுக்குப் பயன்படும் அளவுக்குப் புனாவிலோ சுற்றுப்புறத்திலோ தமிழ் இல்லாதது பெரிய குறையே.

நாகபுரி

15,000 தமிழ்க்குடும்பங்கள் வாழும் நாகபுரியில் குறிப்பிடத் தக்க தமிழ் நூலகம் இல்லை.

ஒரு நூலகத்துக்குத் தமிழக அரசின் நூலகத்துறையினர் ஆண்டுதோறும் 200 ரூபாய் நன்கொடை (Re-imbursement for books purchased) வழங்குவதாகக் கேள்விப்பட்டேன். இந்த நூலகம் சரிவரப் பயன்படுத்தப்படவில்லை.

மத்திய மாநிலம்

சபல்பூரிலுள்ள பாரதி தமிழ்ச்சங்கம் இலக்கிய நூல்கள் உள்பட 500 தமிழ் நூல்கள் கொண்ட நூலகம் வைத்திருக்கிறது. இடவசதி போதியதாக இல்லை.

கமரியாவில் வள்ளுவர் நூலகம் இயங்கி வந்தது. அந்த அமைப்பின் உறுப்பினர் அனைவரும் வேலை மாறுதலாகி வெளியூர்களுக்குச்சென்று விட்ட பிறகு நூல்கள் தமிழ் மன்றத்துக்கு வழங்கப்பட்டுப் பயன்படுத்தப்படாமல் உள்ளன.

பல்லாயிரம் தமிழர் உள்ளதும் செல்வம் கொழிக்கும் தொழில் நகரமுமான பிலாயில் தமிழ் நூலகம் இல்லை.

குசராத்

தங்களுக்குக் கட்டடமில்லாததால் தமிழ் நூலகம் நடத்த இயலவில்லை என்று சூரத், பரோடா நகர்களில் தமிழ்ச் சங்கத்தார் என்னிடம் கூறினர்.

ஆமதாபாத் மணி நகரில் உள்ள தமிழ் உயர்நிலைப் பள்ளியில் 800 தமிழ் நூல்கள் உள்ளன. இப்பள்ளிக் கட்டடத்தி லேயே கிருஷ்ணா வித்யாலயத்தின் பொது நூலகம் இயங்குகிறது. இதில் ஈராயிரம் தமிழ் நூல்கள் உள்ளன. அலமாரிகளை நிரப்ப மேலும் தமிழ் நூல்களை நன்கொடையாக எதிர்பார்க்கின்றனர்.

இராசத்தான்

செய்ப்பூர்த் தமிழ்ச்சங்க நூலகத்தில் 450 தமிழ் நூல்கள் உள்ளன. இந்த நூலகம் அவ்வளவாகப் பயன்படுத்தப்படவில்லை.

தில்லி

Regional Languages Library
Dept. of Culture
Govt. of India
Tolsi Sadan, Bahawalpur House
Bhagwan Das Road, New Delhi-110 001.

ஒரு நூறாயிரம் தமிழ் நூல்கள் இங்கு உள்ளன. (என்று சாகித்திய அகடமியில் பணிபுரியும் தமிழன்பர்கள் என்னிடம் கூறினர்.)

இதுதவிர இந்திய அரசின் தலைமைச் செயலக நூலகத்திலும் தமிழ்ப்பகுதி உண்டு.

சாகித்திய அகடமி, தில்லிப் பல்கலைக்கழகம், தேசிய புத்தக டிரஸ்டு, மற்றும் தமிழ்மொழி கற்பிக்கப்படும் ஐந்து கல்லூரிகள் ஆகியவற்றில் அவரவர் தேவைக்கேற்ற நூல்கள் யாவும் இடம் பெற்றுள்ளன.

கபர்ஸ்தான் வ.உ.சி. வாசகசாலையில் ஈராயிரம் தமிழ் நூல்கள் இருந்தன. எஞ்சிய ஒரு சில நூல்கள் மட்டும் திரு எம். எஸ். பி சண்முகம் இல்லத்தில் உள்ளன.

தமிழ் நூல் விற்பனை

தமிழ் நூல்களை வாங்க விரும்பும் தமிழர் வட மாநிலங்களில் உள்ளனர். ஆனால் இந்த விற்பனையில் ஈடுபடும் வணிகநிலையம் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கூட இல்லை.

தமிழ் இதழ்களை விற்கும் கடைகள் தையற்கலை, சமையல் கலை பற்றிய தமிழ் நூல்களையும் வார மாத இதழ்களின் வெளியீடுகளான மாதமொரு நூல்களையும் விற்பனை செய்கின்றன. (ராணிமுத்து, மாலைமதி, கலைக் கதிர் மற்றும் மர்ம நாவல்கள்)

பிற துறைகளில் வெளிவரும் தரமான நூல்களை வாங்க விரும்பும் வட மாநிலத் தமிழர்க்கு அதற்குரிய வாய்ப்பு அங்கே இல்லை. இந்தக் குறையை நீக்க 1980இல் தமிழ்நூற் காட்சி ஒன்று பம்பாயில் நடைபெற்றது.

தமிழ் நூற்காட்சி, பம்பாய் 1980
(Book Fair)

1977இல் சென்னையில் நடைபெற்ற நூற்காட்சியில் பம்பாய்-மாதுங்கா, பாலன் பதிப்பக உரிமையாளரும் எழுத்தாளருமான திரு. சங்கொலி பாலகிருஷ்ணன் கலந்துகொண்டார். அவருடைய ஆர்வத்தாலும் விடா முயற்சியாலும் பம்பாயில் தமிழ் நூற்காட்சி நடத்த பம்பாய்த் தமிழ்ச் சங்கமும் தமிழ்நாடு புத்தகப் பதிப்பாளர் சங்கமும் இணைந்து செயற்பட்டன. 1-8-1980 முதல் 11-8-1980 வரை இந்தக் காட்சி பம்பாய்த் தமிழ்ச் சங்கக் கட்டடத்தில் நடைபெற்றது.

காட்சியை மராத்திய மாநில நிதி அமைச்சர் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டிலிருந்து 16 நிறுவனங்களும், சாகித்திய அகடமியும் தேசிய புத்தக நிறுவனமும் இக் காட்சியில் பங்கு பெற்றன.

ஆயிரக்கணக்கான தமிழ் நூல்களை ஓரிடத்தில் ஒரே சமயத்தில் பார்த்துத் தேர்ந்தெடுத்து, குறிப்பிட்ட கழிவுத் தொகை நீக்கிய பணம் கொடுத்து வாங்கப் பம்பாய்த் தமிழர்க்கு இந்தக் காட்சி வாய்ப்பாக அமைந்தது. சில நூறாயிரம் ரூபாய்க்கு விற்பனை நடந்தது.

விற்பவர்களுக்கும் வாங்குபவர்களுக்கும் வசதி செய்து கொடுத்த ஒரு சிறந்த பணியைப் பம்பாய்த் தமிழ்ச் சங்கம் தமிழ் இலக்கியத்திற்குச் செய்த பெரும் தொண்டு என்று பலரும் பாராட்டினர். இந்த விழாவிற்காகச் சங்கம் 15,000 ரூபாய் செலவு செய்தது.

இத்தகைய விழாக்கள் தொடர்ந்து ஆண்டுதொறும் நடத்தப் படவேண்டும். பம்பாயில் நூற் காட்சி முடிந்ததும் புனா, பரோடா, ஆமதாபாத், செய்ப்பூர், தில்லி போன்ற நகர்களிலும் இந்தக் காட்சி நடத்தப்படுமானால், பதிப்பாளர்களுக்கு ஏற்படும் மொத்தச் செலவு குறைவாக அமையும். முன் கூட்டித் திட்டமிட்டு நான்கு மாதங்களுக்கு முன்னரே ஒவ்வொரு நகரிலும் தமிழரிடையே விளம்பரம் செய்தால் இந்தக் காட்சிகள் வாயிலாக வடமாநிலத் தமிழருக்கு உள்ள தமிழ்மொழித் தொடர்பு வலுப்படும்.

தொழில் நகரங்களான பிலாய், ஜாம்ஷெட்பூர், சிந்திரி, பொக்காரோ, போப்பால், சித்தரஞ்சன், ரௌர்கேலா ஆகியவற்றிலும் இந்தக் காட்சியை நடத்தலாம்.

இத்தகைய முயற்சியைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், வட மாநிலத் தமிழ்ச் சங்கங்களுடனும் தமிழ்நாடு பதிப்பாளர் சங்கத்துடனும் சேர்ந்து செய்வது பெரும் பயன் தரும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களும் தமிழக அரசின் பாடநூற் குழுவும் இந்தக் காட்சியில் பங்கு பெறுவது இன்றியமையாதது.

தமிழைப்பற்றி ஆங்கிலத்திலும் பிறமொழிகளிலும் வெளிவந்திருக்கும் நூல்களும் இத்தகைய காட்சிகளில் இடம் பெற வேண்டும்.

தமிழ்த் திரைப்படங்கள் காட்டப்படும் அரங்குகளிலும் தமிழ் கற்பிக்கப்படும் பள்ளிகளிலும் நூற்காட்சி பற்றிய முன் அறிவிப்புச் செயல்பட வேண்டும்.

15. அரசியல் உணர்வுகள்

வட மாநிலத் தமிழர்கள், தாங்கள் வாழும் இடத்து அரசியலைவிடத் தமிழ்நாட்டு அரசியலிலேயே அதிகமான ஆர்வம் காட்டுகிறார்கள். இவர்களுக்கு வாக்குரிமை தமிழகத்திலே இராது ; வாழும் மாநிலத்தில் தான் இருக்கும். என்றாலும் இவர்கள் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளுக்கே நிதி திரட்டி அனுப்புகிறார்கள்

வட மாநிலத் தமிழரிடையே திராவிட இயக்கங்களுக்கு ஆதரவான கருத்துடையவர்களும் உள்ளனர் அவற்றிற்கு முற்றிலும் மாறுபட்ட எண்ணங்களை உடையவர்களுக்கும் குறைவில்லை. ஆயினும் 90 விழுக்காட்டினர் தங்களுடைய அபிப்ராயங்களை வெளியிடாமல் தங்களுடைய பணியிலும் முன்னேற்றத்திலும் குடும்ப மேம்பாட்டிலுமே கண்ணும் கருத்துமாய் இருக்கிறார்கள்.

பொதுவான இந்தப் போக்கிலிருந்து வேறுபட்டிருப்பவர்கள் பம்பாய், தாராவி, சீதா காம்ப், கோலிவாடா, சிவாசிநகர்ப் பகுதிகளில் வாழும் தமிழர்.

ஆமதாபாத்தில் மணிநகர், கோக்ரா, சமால்பூர், பாபுநகர், நரோபி, பைபுரா பகுதிகளில் வாழும் 15,000 தமிழ்த் தொழிலாளரிடமும் அரசியல் ஆர்வம் மிகுந்துள்ளது.

புனா நகரத்தின் புறப் பகுதியான கிர்கியும் நெடுங்காலமாகத் திராவிடக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் கோட்டையாக இருந்திருக்கிறது.

இந்த மூன்று நகர்களிலும் மேலே குறிப்பிட்ட மக்கள் நெருக்கமான பகுதிகள் மட்டுமே தமிழக அரசியல் கட்சிகளுக்குக் களங்களாக இருக்கின்றன.

திராவிட முன்னேற்றக் கழகம்

பம்பாயில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை அலுவலகம் தாராவில் உள்ளது. திரு. பொற்கோ, திரு. எஸ். தியாகராசன், திரு. பெருமாள் ஆகியோருடைய சிறந்த உழைப்பாலும் தனிப்பட்ட செல்வாக்காலும் இந்தக் கட்சி பம்பாயில் வளர்ச்சி அடைந்திருக்கிறது. 16 கிளைக் கழகங்கள் உள்ளன இவற்றில் முழுநேரமும் கட்சிப் பணியாற்றும் ஊழியர் எண்ணிக்கை நூறு. பதிவு செய்து கொண்ட உறுப்பினர் 1200 பேர்.

தாராவி கிளைக் கழகத்தில் 2000 நூல்கள் உள்ள நூலகம் உள்ளது சீதா காம்ப் கிளைக் கழகத்திலும் 2000 நூல்கள் உள்ளன. ஏனைய 14 கிளைக் கழகங்களிலும் சிறிய அளவில் நூல் நிலையங்கள் உள்ளன.

கட்சிக் கூட்டங்கள் அடிக்கடி நடைபெறுகின்றன. பம்பாய்த் தி. மு. க. வின் இலக்கிய அணி இடையிடையே தமிழ்நாட்டிலிருந்து பேச்சாளர்களை வரவழைத்து அவர்களுக்கு நிதி வழங்குகிறது.

பம்பாயில் 'அண்ணா அறிவாலயம்' அமைக்க ஒரு திட்டம் திட்டப்பட்டுள்ளது. ஒன்பது இலட்சம் ரூபாய் கொடுத்து இடம் வாங்க முயற்சி நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு தேர்தல் சமயத்திலும் பம்பாயிலிருந்து கட்சிக்கு நிதி அனுப்பப்பெறுகிறது. குடும்பத்தைப் பட்டினி போட்டாவது அந்த மாதச் சம்பளம் முழுவதையும் தி.மு.க. வின் தேர்தல் நிதிக்கு வழங்கும் அளவுக்குக் கட்சிப் பிடிப்புள்ள பலர் பம்பாயில் இருக்கின்றனர்.

கூட்டத்தில் பேசத் தெரிந்த பலர் இருப்பதும் இந்தக் கட்சியின் பலத்துக்குக் காரணமாகும்.

திருநெல்வேலி, தஞ்சாவூர் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் தி. மு. க.வையே ஆதரிப்பதாகச் சொல்லப்படுகிறது.

நெடுங்காலமாகப் பம்பாயில் சில வட்டாரங்களில் ஓரளவு வளர்ந்துள்ள தந்தை பெரியாரின் சீடர்கள் இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவாளர்களாக இருந்து வருகின்றனர்.

ஆமதாபாத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு சொந்தக் கட்டடம் உண்டு. இருபது ஆண்டுகளுக்கு முன் டாக்டர்

கலைஞர் கருணாநிதி ஆமதாபாத்துக்குச் சென்றபோது தேர்தல் நிதியாக ரூ. 10,000 அவரிடம் வழங்கப்பட்டதாம்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்

அ.இ.அ.தி.மு.க.வுக்கும் பம்பாயில் நல்ல ஆதரவு இருக்கிறது. குறிப்பாகவும் சிறப்பாகவும் கோலிவாடா பகுதியில் எம். ஜி. ஆர். ரசிகர்கள் ஆயிரமாயிரம் பேர் உள்ளனர். அவர் வந்தால் உயிரையும் தியாகம் செய்யத் தயாராயிருக்கிறார்கள்.

பேச்சாளர்களோ முழு நேர ஊழியர்களோ அருகியிருப்பதால் கூட்டங்கள் குறைவாகவே நடைபெறுகின்றன. இக்காரணத்தால் கட்சிக்கு இருக்கும் ஆதரவு வெளிப்படையாகத் தெரியவில்லை. மாவட்ட அடிப்படையில் பார்த்தால் சேலம், கன்னியாகுமரி மாவட்டத் தமிழர் அ. இ. அ. தி. மு. க. வை ஆதரிப்பதாகச் சொல்லப்படுகிறது. மகாராட்டிர மாநில அ. இ. அ. தி. மு. க. செயலாளர் திரு. எஸ். எல். ஜான், சென்னை இராயப்பேட்டையில் உள்ளார்.

தி.மு.க., அ.தி.மு.க. இரண்டு கட்சிகளுமே மகாராட்டிர மாநிலத்தில் எந்தத் தேர்தல்களிலும் இதுவரை போட்டியிடவில்லை. இக் காரணத்தால் இந்தக் கட்சிகள் பலம் இவ்வளவு என்று அறுதியாகவும் உறுதியாகவும் எவராலும் கணிக்க முடியவில்லை.

ஆமதாபாத்தில் அ. இ. அ. தி. மு. க. வுக்குச் சொந்தக் கட்டடம உண்டு. கடந்த இரணடு மூன்று ஆண்டுகளில்தி.மு.க.வோ, அ. இ. அ. தி. மு. க. வோ ஆமதாபாத்தில் செயல்படவில்லை என்று தெரிகிறது. பம்பாய் மாதுங்கா லேபர் கேம்ப் பகுதியில இதயக்கனி எம்.ஜி.ஆர். மன்றம் அண்ணா தி.மு.க. வின் 11 ஆவது ஆண்டு விழாவை 1983 அக்டோபரில் பெரிய அளவில் கொண்டாடிற்று. தமிழகத்திலிருந்து சிறப்பு விருந்தினரை அழைத்தது.

திராவிடர் கழகம்

பம்பாயிலும் புனாவிலும் அரசியல் உணர்வுகள் மிகுதியாக உள்ளன எனறு நாம் குறிப்பிட்டிருக்கும் பகுதிகளில் வாழும் தமிழரில் ஒரு கணிசமான பகுதியினர் ஆதித்திராவிடர். இவாகளல் பெரும்பாலோர் தமிழ்நாட்டில் கிராமப் புறங்களில் உயர்சாதிக்காரர்களால் கொடுமைப்படுத்தப்பட்டவர்கள். செருப்பு அணியவும் குடை பிடித்துக் கொள்ளவும உரிமை மறுக்கப்பட்டவர்கள். ஓட்டு வீடும் பச்சு வீடும் கட்டிக் கொண்டதால் ஊரைவிட்டு விரட்டப்பட்ட

வர்கள். பரம்பரைத் தொழில் தவிர வேறு தொழில் செய்ய முயன்றபோது தடுக்கப்பட்டவர்கள். இக்காரணங்களால் இவர்கள் தந்தை பெரியாருடைய சாதி ஒழிப்பு இயக்கத்தால் கவரப்பட்டு அவருடைய கொள்கைகளை ஆதரித்து வந்திருக்கிறார்கள்.

டாக்டர் அம்பேத்காருடைய இயக்கமும் இவர்கள் கொண்டிருந்த கொள்கைகளை உறுதிப்படுத்த உதவியிருக்கிறது. தந்தை பெரியார் 1930 முதல் பலமுறை பம்பாய்க்கு வருகை புரிந்திருக்கிறார்.

இந்திரா காங்கிரசு

தமிழர் இருவர் இந்திரா காங்கிரசுக் கட்சியின் சார்பில் கட்சி வேட்பாளராய்ப் பம்பாய் மாநகராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.

தாலுக்கா காங்கிரசுக் குழுத் தலைவர் போன்ற பதவிகளில் தமிழர் சிலர் உள்ளனர். காங்கிரசுக் கட்சி ஆதரவு பெற்று Special Executive Magistrate என்ற கௌரவப் பதவி வகிப்பவர் பலர். பம்பாய்த் தமிழர் நூறு பேர் மகாராட்டிரக் காங்கிரசு அரசால் இந்தப் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகமும் சரி அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகமும் சரி-இந்த இரண்டு கட்சிகளுமே பம்பாயில் தேர்தல்களில் இந்திரா காங்கிரசை ஆதரித்திருக்கின்றன. தமிழ் வாக்காளருடைய ஆதரவால்தான் தாம் வெற்றி பெற முடிந்தது என்று இந்திரா காங்கிரசு வேட்பாளராக மகாராட்டிர மாநிலச் சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர். வி சுப்பிரமணியம், ஐ. ஏ. எசு. கூறியிருக்கிறார்.

பொதுவாக எல்லா மாநிலங்களிலும் மொழிவழிச் சிறுபான்மையினர் இந்திரா காங்கிரசுக் கட்சி பதவியில் இருப்பது தங்களுக்குப் பாதுகாப்பு என்று நினைக்கின்றனர்.

ஜனதா கட்சி

பம்பாயில் ஜனதா கட்சிக்குத் தமிழரில் 200 ஊழியர் உள்ளனர். தமிழரான டாக்டர். சுப்பிரமணிய சுவாமி, நாடாளுமன்றத்திற்குப் பம்பாயிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்தத் தொகுதியில் சட்டப் பேரவைக்குரிய ஆறு தொகுதிகள் அடங்கியுள்ளன. பம்பாய்த் தமிழர், கட்சி வேறுபாடு பார்க்காமல் ஜனதாவை ஆதரித்தனர். ஏனைய திராவிட மொழியினரும் அவருக்கு வாக்களித்தனர்.

பம்பாயில் ஜனதா கட்சியினருள் குறிப்பிடத்தக்க தமிழர் பெயர்கள் வருமாறு :

டாக்டர். திரு. சுப்பிரமணிய சுவாமி

திரு. A. C. நாராயண நாடார்

திரு. V. S. குணசீலன் (யுவ ஜனதா)

திரு. சகநாத நாடார்

திரு. இராமச்சந்திரன் (நகராட்சி உறுப்பினர்)

பஞ்சாப் மாதிலத்தில் மாநில ஜனதா கட்சித் தலைவராயிருந்தவர் ஒரு தமிழர். வழக்கறிஞர் திரு. ஏ. விசுவநாதன் என்பது இவர் பெயர் லூதியானா நகரத் தொகுதியிலிருந்து இவர் இரண்டு முறை பஞ்சாப் மாநிலச் சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இரண்டாண்டுகளுக்கு முன் இவர் காலமாகி விட்டார்.

காந்தி - காமராஜ் தேசிய காங்கிரசுக் கட்சி

இந்தக் கட்சிக்குப் பம்பாயில் ஓரளவு ஆதரவு இருக்கிறது. திரு குமரி. அனந்தன் அடிக்கடி பம்பாய்க்கு வருகிறார். தேர்தல் களின் போது அவருக்குத் தேவையான நிதி வழங்கப்படுகிறது. 1150 உறுப்பினர்களும் 8 கிளைக் கழகங்களும் உள்ளன. சில நூல்நிலையங்களும் வாசக சாலைகளும் நடத்தப்படுகின்றன. வணிகர்களின் ஆதரவு இந்தக் கட்சிக்கு உண்டு. திரு. ஜே. ஆல்ஃபிரட் என்பவர் இந்தக் கட்சியின் செயலாளர்.

பொதுவுடைமைக் கட்சிகள்

வலது, இடது பொதுவுடைமைக் கட்சிகள் இரண்டும் தாராவியில் சமபலத்துடன் இயங்குகின்றன. இக்கட்சிகள் ஒவ்வொன்றுக்கும் 300 ஊழியர் இருக்கின்றனர்.

இடது கம்யூனிஸ்டு கட்சியின் பிரச்சாரம் தீவிரமாக இருப்பதாகத் தெரிகிறது.

இந்தியக் குடியரசுக் கட்சி (RPI)

டாக்டர் அம்பேத்காரைத் தெய்வமாக மதிப்பவர்கள் பம்பாய் மாநகரில் வாழும் 35 இலட்சம் தாழ்த்தப்பட்ட மக்கள். இவர்கள் ஆதரிக்கும் குடியரசுக் கட்சி மூன்று பிரிவுகளாய்ப் பிரிந்திருக்கிறது.

முதல் பிரிவு கோபகாரே கட்சி :

தமிழரான திரு. பாலகிருஷ்ணன் இந்தக் கட்சியின் சார்பில் மகாராட்டிரச் சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இக் கட்சியின் 14 உறுப்பினர்களுக்குத் தலைவராய் அமர்ந்து பெரும் செல்வாக்குடன் திகழ்ந்தார். இப்போது இவர் பம்பாயில் உள்ள தமிழ்நாட்டு ஆதிதிராவிடர்களின் ஆதரவை இழந்து விட்டார்.

இரண்டாவது பிரிவு R. S. கவாய் கட்சி :

இந்தக் கட்சிக்குத் தமிழ்நாட்டு ஆதிதிராவிடர்களின் ஆதரவு இருக்கிறது.

மூன்றாவது பிரிவு காம்ளே கட்சி :

இந்தக் கட்சியைத் தமிழர் எவரும் ஆதரிக்கவில்லை.

எதிர் காலம்

அரசியல் கட்சி அடிப்படை எதுவாயினும், அரசியல் உணர்ச்சி மிகுந்த பம்பாய்த் தமிழர் வாழும் பகுதிகளின் முடிசூடா மன்னராக விளங்கும் பம்பாய்த் தமிழர் பேரவை நிறுவனர் திரு. மு. வ. ஆதரிக்கும் கட்சிக்கே பம்பாய்த் தமிழர் வாக்களிப்பர்.

16. தாராவி

இது, தமிழர் பெருந்தொகையினராக வாழும் பகுதி. பம்பாய் நகரத்திற்குரிய மூன்று பெரிய நெடுஞ்சாலைகளுக்கும் மூன்று இரயில் மண்டலங்களின் நிலையங்களுக்கும் ஊடே அமைந்தது. ஓரளவுக்குச் சதுப்பு நிலமாக, கடல் சார்ந்த பகுதியாக நூறு ஆண்டுகளுக்குமுன் இருந்த 2,000 ஏக்கர் பரப்பில் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் மகாராட்டிர மாநிலத்திலிருந்தும் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்தும் பெரிய அளவில் இங்கு வந்து குடியேறி, தூய்மை குறைந்த தோல் பதனிடு தொழிலில் ஈடுபட்டனர் பாந்திராவில் வெட்டப்படும் ஆடு மாடுகளின் தோல்களை வாங்கிச் சுத்தப்படுத்தி, சென்னைக்கும் கான்பூருக்கும் தோல் தொழிற்சாலைக்கு அனுப்பி இவர்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள்.

மக்கள் நெருக்கத்தின் மிகுதியாலும் செய்யும் தொழிலின் தன்மையாலும், தாராவி உலகத்திலேயே மோசமான சேரி என்றும் பெயர் பெற்றிருக்கிறது. வீட்டிலேயே குடிசைத் தொழிலாகத் தோல் பதனிடு தொழில் நடைபெறுகிறது. எந்தவிதமான உணர்ச்சியும் இன்றி அந்த இடத்திலேயே சமையல் வேலையும் நடைபெறுகிறது. குடும்பத்தாரின் எல்லாச் செயல்களுக்கும் களமாகவும் விளங்குகிறது.

புதிதாக இப்பகுதியை நோக்கி வருபவர்கள் நெடுந்தொலைவுக்கு முன்னரே, மூக்கைத் துளைக்கும் நாற்றத்தால் தாராவியின் மணத்தை நுகர்வர். மூக்கறுபட்ட சூர்ப்பனகை புண்ணியஞ் செய்தவள் என்ற முடிவுக்கு வருவர்.

தமிழர் தொகை

தாராவிப் பகுதியில் மட்டும் வாழுகின்ற தமிழ் மக்கள் இரண்டு இலட்சம் பேர் இருப்பர். இது உத்தேசமான கணக்குத்

தானே தவிர, தெளிவான கணக்கன்று! தெளிவான கணக்கு கூடுதலாக இருக்குமே தவிர, இதைவிடக் குறையாது!

பம்பாயின் எல்லாப் பகுதிகளிலுமே தமிழ் மக்கள் வாழ்ந்தாலும் ஒரு தொகுப்பாக, தமிழ் மக்கள் மிகுந்து வாழுமிடம் தாராவிப் பகுதியே.

இப்பகுதியில் வாழுகின்ற மக்களை அழுகிய பழத்தை மொய்த்தபடி இருக்கும் ஈக்களுக்கு ஒப்பிடலாம். காற்றுப் புகவும் இயலாத இடங்களில் தமிழர்கள் வாழ்கிறார்கள்.

மராத்தி மொழி பேசுவோர்க்கும் மற்றவர்களுக்கும் குத்து வெட்டுகள் நிகழ்ந்த போது, சேர்ந்து வாழ்ந்தால் எதிர்ப்புகளைத் தவிர்த்துத் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாமே என்று இப்பகுதிக்கு வர ஆரம்பித்ததாக வயது முதிர்ந்தவர்கள் கூறுகின்றனர் இன்றும் அதே எண்ணம் சிலரிடம் உள்ளது; ஆனால், இப்போது சச்சரவுகள் நடப்பதெல்லாம் தமிழருக்குள்ளாகவே!

புதிதாகப் பம்பாய்க்கு வருபவர்கள் இங்கு வருகின்றனர். உறவினர், நண்பர் எவருமில்லாவிட்டாலும் இப்பகுதியில் வசித்தால் மொழிப்பிரச்சினை கிடையாது. தமிழ்நாட்டு உணவு வகை கிடைக்கிறது. மிகக் குறைந்த மாத வாடகையில் திருமணமாகாதவர் தங்குவதற்கு அறைகள் கிடைக்கின்றன.

பாந்திரா பகுதியின் கழிவு நீர்க்கால்வாய் (திறந்த வெளி) தாராவிக்கு அருகேயுள்ளது. தாராவியின் சாலைகள் பள்ளமாக இருப்பதும் முக்கியமாகச் சுகாதாரச் சீர்கேட்டுக்கு மற்றுமொரு காரணமாகும்.

கழிவு நீர்க்கால்வாய்களில் சிலவிடங்களில் அடைப்பு ஏற்பட்டால், கழிவு நீர் சாலைவரை வந்து விடுகின்றது. அதை மாநகராட்சிக்குத் தெரியப்படுத்த ஒருவரும் முன்வருவதில்லை. அது தாராவியின் பரபு அன்று. சிலநாட்கள் அங்கேயே தேங்கித் தீ நாற்றம் எடுக்கும் வரை பொறுத்திருப்பர். தத்தம் பணியிலே கவனமாக இருப்பர்.

இல்லங்களுக்குள்ளும் முழங்காலளவு தண்ணீர் வந்துவிடும்; அது வற்றுவதற்கு 10 நாள்கள்கூட ஆகும். மழைநீர்மட்டும் தான் இல்லத்தினுள் புகுமென்பதன்று; மலமும் சேர்ந்து புகும்.

கழிப்பறைகள் தனிப்பட்ட வீடுகளில் கிடையாது. பொதுக் கழிப்பறைகள் மட்டுமே உள்ளன. அவற்றிற்குரிய ஊழியரும் தம் வேலைகளைச் செய்ய அஞ்சுவர்.

இந்தச் சூழ்நிலையில் சிறுதொழிற்சாலைகள் குறிப்பாகத் தோல் பதனீடு தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவுப் பொருட்களைஇவர்கள் தூரத்தில் எடுத்துச் சென்று போடுவதில்லை. அருகிலே போட்டு விடுவதால் கழிவுப்பொருட்கள், நச்சுக்காற்றுகள் குடலைப் பிடுங்குகின்ற தீ நாற்றத்தை உண்டாக்குகின்றன.

சுகாதார சீர் திருத்தங்களை இன்னமும் தமிழ் மக்கள் பெறாமலிருப்பதற்கு ஒட்டு மொத்தமான ஒரே காரணம், ஒற்றுமைக்குறைவே.

அரசினரிடமோ, மாநகராட்சியிடமோ எந்த விதமான இசைவும் பெறாமல், நினைத்த இடத்தில் குடிசை போட்டுக் கொண்டு சட்டவிரோதமான எல்லாச் செயல்களையும் செய்யக் கூடிய இடம்-அத்தகைய பழக்க வழக்கங்களையும் தொழில்களையும் உடையவர்களுக்குப் புகலிடமாக இருக்கும் பகுதி. தாராவி.

1935இல் 15,000 மக்கள் மட்டுமே வாழ்ந்த தாராவியின் மக்கள் தொகை 1947இல் ஓர்இலட்சமாகி இப்போது (1983இல்) பத்து இலட்சமாகிவிட்டது. தாராவிக்கு ஒரு நாடாளுமன்றத் தொகுதி தனியே ஏற்பட இருக்கிறது.

தாராவியில் மக்கள் கணக்கோ வாக்காளர் பட்டியலோ ஒழுங்காக எடுக்கப்படுவதற்கான சூழ்நிலை கிடையாது என்று பல அறிக்கைகளில் தெள்ளத் தெளியக் குறிப்பிடப்பட்டிருக்கிறது

தாராவியில் வாழ்பவர்களின் 60 விழுக்காட்டினர் தாழ்த்தப் பட்டவர்கள். 25 விழுக்காட்டினர் முசுலீம்கள். ஏனையோர் 15 விழுக்காட்டினர் என்று கூறலாம். தாராவியில் தமிழர் இரண்டு இலட்சம் பேர் இருக்கலாம் என்றும் இவர்களிலும் இந்த ஈவு நிலவுவதாகவும் நம்பப்படுகிறது. தாராவித் தமிழரில் 90 விழுக் காட்டினர் திருநெல்வேலி மாவட்டத்தார் ஆவர். முசுலீம்கள் வட ஆர்க்காடு மாவட்டம் ஆம்பூர்ப் பகுதியினர். இவர்களில் தோல் பதனிடு தொழிற்சாலை முதலாளிகளும் உள்ளனர்.

நாளும் ஈட்டும் வருவாயில் சாராயத்துக்கும் கள்ளுக்கும செலவிடுவதுபோக எஞ்சுவதைக் குடும்பத்திற்குக் கொடுத்து ஒருவாறு ஒவ்வொரு நாளையும் கழித்து, மறுநாளை எதிர்நோக்கு பவர்களே தாராவியில் பெரும்பான்மையினர். அதே சமயம், இங்கு இருப்பதால்தான் சிலர் பெரும் பொருள் ஈட்டி வருகின்றனர். இந்தக் காரணத்திற்காக இவர்கள் தாராவியைவிட்டு நகருவ தில்லை.

கடந்த மூன்று நான்கு ஆண்டுகளில் தாராவியில் வாகனங்கள் செல்லக்கூடிய ஓரிரு சாலைகள் போடப்பட்டுள்ளன. 15 அடி அகலமுள்ள சாலைகள் தாராவியில் அத்திபூத்தது போல இருக்கும்.

காவல்துறையினர் நுழைய இயலாத பகுதி என்றும் குற்ற வாளிகள் வாழ்வதற்காக ஏற்பட்ட பகுதி என்றும் தோல் பதனீடு சம்பந்தப்பட்ட தொழில்களும் மற்றும் பலவகைப் பொருள்கள் உற்பத்தி செய்யும் குடிசைத் தொழில்களும் உள்ள பகுதி என்றும் தாராவிக்குப் பெருமைகள் கூறப்படும்.

எலும்பைப் பொடி செய்து. மிருகக் கொழுப்பு ஆக்கும் தொழிலும் உண்டு. முருக்கு, கடலை மிட்டாய், இஞ்சி மிட்டாய், தேங்காய் மிட்டாய வணிகர்கள் சுமார் 200 பேர்கள் உள்ளனர். பாட்டில், கந்தல் துணி, கோணிப்பை, பிளாஸ்டிக், தகர டப்பாக்கள் என்று கழிவுப் பொருட்களைக் காசாக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆயிரத்துக்குக் குறையாத மக்கள் இருக்கின்றனர். குடிசைத் தொழிலாக, சோப்புத தயாரிக்கும் வேலையும் தாராவியில் நடக்கிறது.

பெயிண்ட் தயாரிப்பு நிலையங்கள் 50 இங்கு உள்ளன. இரும்பு, தகரப் பீப்பாய்கள் செய்யும் தொழில்கள் 150இற்கு மேல் இருக்கின்றன. கட்டடம் கட்டப் பயன்படும் கற்கள், ஓடுகள், சிமெண்ட் தகடுகள் விற்கிற நிலையங்கள், அனுமதி பெற்றும் பெறாமலும் நடக்கும் இரசாயனத் தொழிலகங்கள் என்று உலகத்தின் எல்லா வகைத் தொழில்களும் இங்குக் கொடி கட்டிப் பறக்கின்றன.

மண்பாண்டம் செய்யும் தொழிலில் 5000 பேர் உள்ளனர். ஒரு மிகப் பெரிய திறந்த வெளித் தொழிற் கேந்திரமாக - பேட்டையாக தாராவி காட்சி அளிக்கிறது,

சிறிதும் பெரிதுமாக எண்ணிக்கையில் ஓராயிரம் தொழிற் சாலைகள் உள்ளன. கோடிக்கணக்கான ரூபாய் புழங்கப்படுகிறது. ஆயினும் ஒரு வங்கிகூட (Bank) இங்கு இல்லை. இன்றியமையாத பாதுகாப்பு இன்மையால் எந்த வங்கியும் தாராவியில் கிளை திறக்க முன்வரவில்லை.

அஞ்சலகம், தண்ணீர், சுகாதார வசதிகள், காவல்நிலையம் ஆகியவை கூட இப்போதுதான் வரத் தொடங்கியுள்ளன. மருத்துவ மனையும், பல மொழிகளையும் கற்பிக்கும் மாநகராட்சிப் பள்ளி

களும் ஏற்பட்டுவிட்டன. ஆசியாவெங்கும் தாராவியைப் பற்றி விளம்பரப்படுத்தப்பட்டுவிட்டதால், மாநில அரசும் இந்திய அரசும் செயல்படத் தொடங்கியிருக்கின்றன. உலக வங்கியின் உதவியுடன் தாராவியை மாற்றியமைக்கத் திட்டமிடப்பட்டு வருகிறது. ஆனால், அது நடைமுறை சாத்தியமானதா என்பதைப் பற்றி ஐயப்பாடு உளது.

தி. மு. க., அ. தி. மு. க., தி. க., பார்வர்டு பிளாக், அம்பேத்கார் கட்சி, குடியரசுக் கட்சியிலிருந்து பிரிந்த பல கட்சிகள் ஆகிய அனைத்துக் கட்சிகளுக்கும் இங்கு ஆதரவு உண்டு.

வாழ்க்கை முரண்பாடுகளையே தங்களுடைய மூலதனமாகக் கொண்டு, அங்கேயே வாழும் செல்வர்களும் தலைவர்களும் உள்ளனர். அவர்கள் அங்கிருந்து வேறு பகுதிகளுக்குக் குடிபேறிவிட்டால், அவர்களுக்குத் தாராவித் தமிழரிடம் உள்ள பிடிப்புப் போய்விடும் புதிய தலைமை உருவாகிவிடும்.

இந்தத் தாராவிக்கு வராத தமிழ்நாட்டு அரசியல் தலைவர் எவரும் இல்லை. தந்தை பெரியார் இங்குப் பல முறை வந்து பகுத்தறிவு இயக்கத்தை வளர்த்துள்ளார். இன்றும் 5000 சீடர்கள் பெரியாரின் கொள்கைகளில் அழுத்தமான நம்பிக்கை கொண்டிருப்பதை இங்குக் காணலாம். அழகான பம்பாய் நகருக்கு மாசு உண்டாக்கும் தாராவியை வளர்த்த வரலாற்றில் தமிழர் பங்குப் பெரிது என்ற எண்ணம் நிலவுவதால் தமிழர் அனைவர்க்கும் இழிவான பெயர் ஏற்பட்டிருக்கிறது.

1983 மே-திங்களில் தமிழர் பேரவைத் தலைவர் பெரியவர் மு. வ. இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தியின் மகனும் அனைத்திந்திய காங்கிரசுச் செயலருமான திரு. ராஜிவ் காந்தியை, தாராவிக்குப் பாத யாத்திரையாக அழைத்து வந்து காட்டி, தாராவியின் பிரச்சினைகளை அவருடைய கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

பாம்பு மற்றும் உடும்புத் தோல் வியாபாரம் செய்பவர்களும் இங்கு உள்ளனர். காட்டிலுள்ள இந்த உயிரினங்களை இவர்கள் அழித்து வருவதால் இவ்வகை வணிகம் தடை செய்யப்பட்டிருக்கிறது.

தமிழர் அமைப்புகள்

தாராவிற்கு 1953இல் கலைவாணர் திரு. என். எஸ். கிருஷ்ணனும் திருமதி டி. ஏ. மதுரமும் வந்திருந்தனர்.

அவர்களுக்குத் தாராவியில் உள்ள 500 சங்கங்கள் தமிழில் வரவேற்பு இதழ்கள் வழங்கின. தாராவியில் தமிழருக்கு எத்தனை அமைப்புக்கள் நிலவுகின்றன என்பதை அறியும் நாளாக அந்த நாள் அமைந்தது.

தாராவியின் பல பகுதிகளுக்குத் தமிழர் வைத்துள்ள பெயர்களும் அவர்களுடைய இயக்கங்களும் தமிழனுடைய நிலையைப் படம்பிடித்துக் காட்டும்.

திராவிடரகத் திடல்
பாண்டியனார் பகுத்தறிவு மன்றம்
கருணாநிதி நற்பணி மன்றம்
எம்.ஜி.ஆர். மன்றம்
இளந்தாமணி அம்மையார் பகுத்தறிவு நிலையம்
பகுத்தறிவாளர் கழகம்
ராமர்வாடி (ராம ஐயர் என்ற கணக்கப்பிள்ளை பெயரால்)
வாழைக்கட்டை வாடி
காமராசர் நகர்
பெரியார் நகர்
அம்பேத்கார் நகர்
இந்திரா நகர்
கட்டபொம்மன் நகர்
லால் பகதூர் சாத்திரி நகர்
ராதாகிருஷ்ணன் நகர்
வ.உ. சிதம்பரனார் திடல்
கணேசர் திடல்

வருவாயும் செலவும்

மாதம் இரண்டாயிரம் ரூபாய் வருமானம்பெறும் குடிசைக்காரர்களே மிகுதியானவர். ஆனால், விலைவாசி ஏற்றத்தாலும் சில பழக்கவழக்கங்களாலும் அவர்கள் இரண்டாயிரம் ரூபாய் வருவாய்க்குத் தகுந்த வாழ்க்கை வாழவில்லை. அவர்களுடைய வாழ்க்கை முறை அப்படி அமைந்துவிட்டது. இதைப்போல ஐந்து மடங்கு

வருவாய் வந்தாலும் அவர்களால் ஃபிளாட்டில் வாழமுடியாது. நாள்தோறும் இரயிலில் பயணம் செய்பவனுக்குப் பட்டு மெத்தையில் படுத்தால் தூக்கம் வராது என்பர்; அதுபோன்றது தாராவி வாழ்நர் நிலை.

சாராயக் கடைக்குச் செலுத்தும் பணம்.

லாட்டரிச் சீட்டு வாங்கும் செலவு.

மட்கா என்ற நியூயார்க் பருத்தி விலைச் சூதாட்டத்திற்குக் கட்டும் கட்டணம்.

வொர்லி, ஜனதா, மெய்ன், கல்யாண் என்ற சூதாட்டங்கள்.

பதிவு பெறாமல் நடைபெறும் 'சிட்' நிதிகளுக்குச் செலுத்தும் பணம்.

இவ்வாறு பணம் போவதால், உணவுக்கும் உடைக்கும் செலவு செய்ய இவர்களால் இயலவில்லை.

சாதிகள்

தாராவியில் தமிழரைப் பார்க்க முடியாது—சாதிகளைத்தான் பார்க்க முடியும். சாதி வெறியை ஒழிக்க, தமிழர் சங்கம் 1951இல் ஏற்படுத்திய பிறகும் கலவரங்கள் மூண்டன. பின்னர் பஞ்சாயத்துக் குழுக்கள் அமைக்கப்பட்டன. சாதி ஒழிப்பு நாடகம் நடத்தப்பட்டது. இப்போது மீண்டும் அந்த முயற்சியைப் பம்பாய்த் தமிழர் பேரவை செய்து வருகிறது.

1913இல் தமிழ்நாட்டு ஆதிதிராவிடர் உண்டாக்கிய கணபதியை மாதுங்கா பிராமணர் உட்பட அனைவரும் வழிபட்டு வந்தனர் 1951இல் தேவர்கள் தனியே ஒரு பிள்ளையார் கோயிலையும், நாடார்கள் ஒரு மாரியம்மன் கோயிலையும் கட்டிக் கொண்டிருக்கின்றனர்.

''தமிழன் என்று சொல்லடா தலை குனிந்து நில்லடா'' என்று பாடத் தோன்றும்படியான பல செயல்களுக்கும் தொழில்களுக்கும் நிலைக்களனாக இருப்பது தாராவி.

தாராவி வாழ்க்கையின் ஒரு சிறப்புக்கூறு பொங்கல் வீடு.

பொங்கல் வீடு

பொங்கல் வீடு என்பது நெல்லை மாவட்டத்திலிருந்து பிழைப்புக்காகப் பம்பாய் வந்திருக்கின்ற தமிழர் ஒவ்வொரு சாதிக்காரர்க்கும் உரியது, தனித்தனியாகப் பிரிந்து குழுக்குழுவாகக் கூடித் தாராவியில பெரிய குடிசைகள் அமர்த்திக் கொண்டு அந்தக் குடிசைகளில 20 பேரோ முப்பது பேரோ ஒரு சமையல்காரரை வைத்துச் சமைத்து அவரவர்களும் அவரவர் தட்டுகளில் (இப்போது சத்துணவுத் திட்டத்தில் பரிமாறுவது போல்) வயிறு நிறையச் சாப்பிடுவர். அவரவர் தட்டுக்களை அவரவர்களே கழுவிச் சுத்தம் செய்து தம் படுக்கைக்கும் பெட்டிக்கும் இடையில் வைத்திருப்பார்கள.

சாப்பாட்டு நேரத்தில் குழுவில் ஒருவர் அல்லது இருவர் இல்லையெனறால் அவருக்குரிய சோறு, சாம்பார் எல்லாம் அந்தச் சோற்றிலேயே ஊற்றி அவரவர்கள் படுக்கைக்கு நேராக வைத்து விடுவது வழக்கம். இப்படிப்பட்ட பொங்கல் வீடுகள் நெல்லை மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு சாதிக்காரர்க்கும் உண்டு.

ஒரு பொங்கல் வீட்டில் அந்தச் சாதிக்காரர் தவிர, பிறசாதிக்காரர்களுக்கு எக்காரணத்தைக் கொண்டும் இடம் தரமாட்டார்கள். பம்பாய்த் தமிழரிடையே சாதிச் சண்டைகள் உருவாவதற்கு உள்ள எத்தனையோ காரணங்களில் இந்தப் பொங்கல் வீடும் ஒன்றாகும். இவை சாதி உணர்வை வளர்க்கின்றன.

சில நன்மைகளும் பொங்கல் வீட்டால் உண்டாகின்றன.

வருவாய்க்கு ஏற்ற செலவு. நான்கு ரூபாய்க்குச் சாப்பிட்டால்தான் ஒரு வேளைக்கு வயிறு நிறையும் என்றால் இந்தக் காலத்தில் கூடப் பொங்கல் வீட்டுச் சாப்பாட்டில் நான்கு ரூபாயில் மூன்று வேளையும் வயிறு நிறையும்.

ஒரு பொங்கல் வீட்டில் ஒரே சாதியினராக இருப்பதால் அண்ணன், தம்பி, மச்சான், மாமன் போன்ற உறவு முறைகளும் அங்குப் பரிமாறிக் கொள்ளப் படுகின்றன.

சில பொங்கல் வீடுகளில் எல்லோரும் சேர்ந்து செலவு செய்கின்ற மொத்தப் பணத்தைப் பங்கிட்டுச் சமையல் கூலியும் சேர்ந்து வீட்டுவாடகை உள்பட, பம்பாயில் ஒருவருக்கு மாதம் 175/-தான் ஆகிறது. (1983இலும்)

பொங்கல் வீட்டை நடத்துவது ஒரு தொழிலாகவும் சிலர் கொண்டுள்ளனர். சேர்ந்து நடத்துகின்ற பொங்கல் வீட்டுக்கும் தனியார் நடத்துகின்ற பொங்கல் வீட்டுக்கும் உள்ள வேறுபாட்டை மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்தால்தான் புரியும். பொங்கல் வீடு நடத்தியே இவர்கள் செல்வர் ஆகியிருக்கிறார்கள் என்றும் தெரிகிறது.

இம்மாதிரி பொங்கல் வீடு நடத்துவதன் மூலம் தம் சாதிக்காரர்கள் தத்தம் சொந்த ஊர்களிலிருந்து வந்து வேலை கிடைக்காமல் தேடி அலைந்தாலும் பொங்கல் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டு தங்குவதற்கு வசதியாக உள்ளது.

ஆனால், ஒவ்வொரு பொங்கல் வீடு இருக்கிற பகுதியும் மனிதர்கள் வசிக்க முடியாத அளவுக்குச் சாக்கடைகளும் கொசு முதலிய தொத்து நோய் பரப்பும் வாய்ப்புகளும் உள்ள "தாராவி" ஆகும்.

இங்குத்தான் பொங்கல் வீடுகள் என்ற சாதிப் புழுக்கள் நெளிகின்றன. இந்தப் பொங்கல் வீடுகளை இரவு நேரங்களில் சென்று பார்த்தால் மிகப் பெரிய போர்க்களங்களில் எதிரிகளால் தாக்கப்பட்டு வீழ்ந்து கிடப்பவர்களை வரிசைப்படுத்தி இருப்பது போல அவரவர்கள் தலைக்கு நேராக சிறுபெட்டியும் அல்லது பையும் ஓர் ஆள் மட்டுமே புரண்டு படுப்பதற்கு இடமான ஒரு படுக்கை விரிப்பும் ஒரு வரிசைக்கு இருபத்தைந்து முப்பது பேர் எதிர் எதிர் வரிசையில் படுத்திருப்பார்கள்.

Extract from CLARITY SUPPLEMENT, SUNDAY, APRIL 17,1983.

There are nearly 14 lakh Tamil speaking residents in Bombay, a big majority of whom are from backward communities. There is a big concentration of them in Dharavi and quite a sizeable section among them live in slums and hutment colonies.

o—o

17. வடமாநிலத் தமிழரும் பிற மொழியாளரும்

இந்தக் கட்டுரையில் தமிழர், தாங்கள் வாழும் மாநிலத்து மக்களுடன் எந்த அளவுககு இணங்கி வாழ்கிறார்கள்; தமிழரைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை விரிவாக ஆராயலாம். தென்னிந்தியரான ஏனைய மொழியினருடன் எந்த அளவுக்குத் தமிழர்கள் சேர்ந்து வாழ்கிறார்கள் என்பதையும் காண லாம். தமிழ்நாட்டுடன் இவர்களுடைய தொடர்பு எத்தகையது என்பதும் சுட்டிக் காட்டப்படும்.

தமிழர் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் மாதச்சம்பளக்காரர்க ளாகவே, வட மாநிலங்களில் இருக்கிறார்கள். இவர்கள் உழைத்துப் பிழைப்பவர்கள்; சுரண்டல்காரர்கள் அல்ல என்பது வட மாநிலத் தாருக்கு நன்றாகத் தெரியும். எவ்வளவுதான் அறிவுக் கூர்மை யுடையவராக இருந்தாலும் வணிகத் தந்திரங்கள் இன்னவை என்பதை உடனிருந்து பார்த்தாலும், எந்தத் தமிழனும் வட மாநிலத்தாரோடு போட்டி போட்டு ஒரு வணிகத்தைத் தொடங்க வோ, ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்கவோ மாட்டான் என்பதை அங்குள்ள அனைவரும் அறிவர்.

தமிழர் நம்பிக்கையானவர், கைச் சுத்தம் வாய்ச் சுத்த மானவர், திறமைமிக்க உழைப்பாளிகள் என்ற எண்ணம் இந்தியா வின் எல்லா மாநிலங்களிலும் உள்ள மக்களிடையே நிலவுகிறது.

ஆங்கிலேயருடைய ஆட்சியில் இரயில் பாதைகள், நெடுஞ் சாலைகள் போன்றவையும், நாடு உரிமை பெற்ற பிறகு அணைக் கட்டுக்கள், மாபெரும் தொழிற்சாலைகள் ஆகியவற்றையும் உருவாக்கியதில் தமிழ்ப் பொறியாளருக்கும், தமிழ்த் தொழிலாள ருக்கும் மிகுதியான பங்கு உண்டு.

திட்டமிட்ட நகரம் என்ற பெருமைக்குரியதாயும், காட்சிக்கு இனியதாகவும் உள்ள கவினுறு சண்டிகர் மாநகரை, பிரெஞ்சு நாட்டுச் சிற்பி ஒருவர் வடிவமைத்து, வரைபடம் போட்டுக் கொடுத்தது உண்மையே. அதை நிறைவேற்றி வைத்தவர்கள் தமிழ்நாட்டுப் பொறியாளரும் தொழிலாளருமே என்று தங்குதடையின்றிச் சொல்லலாம்.

இந்தி மொழியோ, உள்ளூர் மொழியோ தெரிந்து கொள்ளாதது சில சமயம் இக்கட்டான சூழ்நிலையை உண்டாக்குகிறது. ஆயினும் பல ஆண்டுகள் அங்கே இருந்தவர்கள்கூட இந்தியோ, உள்ளூர் மொழியோ படிக்காமல் காலத்தை ஓட்டி விடுகிறார்கள். நகரப் பேருந்தில் பயணம் செய்வது, சின்னஞ்சிறு உணவு விடுதிகளில் உண்பது, சிறு கடைகளில் பொருள் வாங்குவது, இரயில் பயணம் ஆகியவற்றுக்குத்தான் இந்தியோ உள்ளூர் மொழியோ தேவைப்படுகிறது. வேலை பார்க்கும் அலுவலுக்குத் தேவைப்படவில்லை.

சான்றாக, பம்பாய் நகரை எடுத்துக் கொள்வோம். தமிழர் பெருந்தொகையாகப் பல பகுதிகளில் வாழ்கிறார்கள். அந்தப் பகுதிகளில் காய்கறிக்காரன் தமிழன்; பால்காரன் தமிழன்; பலசரக்குக் கடைக்காரன் தமிழன்; பூக்காரன் தமிழன்; சடங்குகள் செய்யும் புரோகிதன் தமிழன்.

அந்தப் பகுதிகளில் தமிழர் அல்லாதார் நடத்தும் கடைகளிலும் டாக்டர் வீடு முதலியவற்றிலும் தமிழில் அறிவிப்புப் பலகை இருக்கிறது. ஏராளமான கடைகளில் தமிழ் தெரிந்த ஒரு பையனை வேலைக்குச் சேர்த்துக் கொள்கிறார்கள்.

பம்பாய், புனா நகரங்களில் பிறந்த தமிழ்க் குழந்தைகள் மராத்தியரைவிட நன்றாக மராத்தி மொழி பேசுகின்றனர். அவர்களில் சிலர் மராத்தி மொழியைக் கற்பிக்கும் ஆசிரியராகவும் சிறந்த சொற்பொழிவாளராகவும் திகழ்கிறார்கள். காதல் திருமணங்களும் இடையிடையே நடந்துகொண்டே இருக்கின்றன. குசரத் மாநிலத்திலும் பெரும்பாலும் இதே நிலைமை காணப்படுகிறது.

குறிப்பாக, சூரத் மாநகரில் வாழும் அலுவலகத் தமிழர், தமிழ்நாட்டுப் பழக்கவழக்கங்களைக் கைவிட்டு குசராத்திய உணவு முறைகளைப் பின்பற்றுகின்றனர். குசராத்தியர் கொண்டாடும் திருவிழாக்களையே கொண்டாடுகிறார்கள். அவர்கள் படிப்பதும், குசரத் மொழியில் வெளிவரும் நாளிதழ்களையே.

பஞ்சாப் மாநிலத்தில் வடநாட்டு மக்களுடன் பஞ்சாபியருக்குப் பல கருத்து வேறுபாடுகள் உள்ளன. இதன் விளைவாக உழவுத் தொழிலுக்கு, உத்திரமாநிலத்து உழவர்கள் வருவது இரண்டு, மூன்று ஆண்டுகளாகக் குறைந்து விட்டது. பஞ்சாபில் நிலவும் கடுமையான குளிரைத் தாங்கிக் கொள்ளக்கூடிய தமிழ் உழவர், வேளாண்மைப் பருவ காலத்துக்குப் பஞ்சாபுக்குச் செல்ல விரும்பினால் அவர்களுக்கு அங்கு நல்ல வரவேற்பு காத்திருக்கிறது.

இந்தி பேசும் மாநிலங்களிலும் தமிழர்மீது வெறுப்புக் கிடையாது. ஆனால், எல்லோரும் ஏற்றுக் கொள்கிற இந்தி மொழிக்குத் தமிழ்நாட்டில் ஏன் எதிர்ப்பு இருக்க வேண்டும் என்ற பிரச்சினை இடையிடையே தோன்றுகிறது. வடமாநிலக் கொள்ளைக் கூட்டங்கள், தமிழ்நாட்டிற்கு வந்து தங்கள் கைவரிசையைக் காட்டுவதுபோல, தமிழ்நாட்டிலிருந்து இத்தகைய குற்றவாளிகள் வட மாநிலங்களுக்குச் செல்லுகின்றனர். ஆனால் நம்மவர்கள் எப்போதும் எங்கேயும் சிறு அளவிலேயே செய்து மன அமைதி அடைவர். கூடுமானவரை அங்குள்ள நம்மவரையே இழப்புக்கு ஆளாக்குகின்றனர்.

இந்த விதிவிலக்குகளில் பிச்சைக்காரரும் இரயில் நிலையப் பகுதிகளில் குடிசைபோடும் தமிழரும் அடங்குர். இவர்களை மறந்துவிட்டுப் பார்த்தால், ஏனைய தமிழர் வட மாநிலத்தாரால் மிக்க மரியாதையுடன் நடத்தப்படுகின்றனர்.

சிந்தி மொழி பேசும் மக்கள் அனைவரும் பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகு குசரத்திற்கும் மகாராட்டிரத்திற்கும் இலட்சக் கணக்கில் குடிபெயர்ந்தவர்கள் ஆவர். அவர்கள் அனைவரும் உற்பத்தித் தொழில்களிலும் வணிகத்திலுமே ஈடுபட்டிருக்கிறார்கள். இலண்டனிலும் ஹாங்காங்கிலும் அவர்களுக்குப் பெரிய அளவில் தொழில்களும் வணிகங்களும் இருக்கின்றன. அந்த நிறுவனங்களுக்குப் பம்பாயிலுள்ள தமிழ் இளைஞர்களை வேலைக்குச் சேர்த்துக் கொள்வதில் பெருமை அடைகின்றனர்.

தமிழ்க் குழந்தைகள் தங்கள்வீட்டிலுள்ள தமிழ்மட்டும் தெரிந்த பெரியோர்களுடன் அமிர்தாபச்சனின் திரைப்படங்களைப் பற்றி மட்டுமே உரையாடுகிறார்கள். அந்த அளவுக்கு அவர்களுடைய அன்றாட வாழ்க்கை மாறுபட்டதாக இருக்கிறது தமிழ் இளைஞர்களுடைய பேச்சில் பிராகிருதச் சொற்கள் மிகுதியாக இருக்கும். பேசுகிற முறையிலும் இந்தி அல்லது மராத்தி, அல்லது குசராத்தி

மொழிப் பாணியின் தாக்கம் இருக்கும். ''அவன் சொன்னான், நான் வரமாட்டேன்''. என்பார்கள். இது இந்தி மொழியிலுள்ள வாக்கிய அமைப்பைப் பின்பற்றியது ''நான் வரமாட்டேன் என்று அவன் சொன்னான்'' என்று பொருள்.

பெரும்பாலான தமிழ்க் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடத்தில் கொடுக்கப்படும் பெயர், சுராஜ், கௌசியா, பிரிதா, பிரபு என்று இருக்கும் பாட்டன் பாட்டி வைத்த பெயர், சென்னை நகருக்கு இரயில் வந்த பிறகு தமிழ்நாட்டில் இருக்கும் காலத்தில் மட்டும் பயன்படுத்தப்படுப.

கலப்புத் திருமணங்கள் அவரவர்களுடைய அந்தஸ்துக்கு ஏற்றவர்களுடன் மட்டுமே நிகழ்ந்துள்ளன. சுய சாதிக்காரர்கள் திட்டுவார்கள் என்பதற்காக, பெற்றோர்கள், இந்தத் திருமணங்களை ஆதரிப்பதில்லை. ஆனாலும் வரதட்சணை, சீர்வரிசை, திருமணச் செலவுப் பிரச்சினைகள் தீர்ந்துவிட்டன என்று உள்ளூர மகிழ்ச்சியடைந்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அந்தத் திருமணத்தை ஏற்றுக்கொள்கிறார்கள்.

மராத்திய மொழி வகுப்புகள்

மகாராட்டிர மாநிலத்தில் பள்ளிகளில் படிக்கும் தமிழ்க் குழந்தைகள் எல்லோருக்கும் மராத்தி மொழியைப் பேசவும் படிக்கவும் எழுதவும் தெரியும்.

வயதுவந்த தமிழர் யாராவது மராத்தி மொழி படிக்க விரும்பினால் அத்தகைய வாய்ப்புகளைப் பம்பாய்த் தமிழ்ச் சங்கமும் செம்பூர்த் தமிழ்ச் சங்கமும் அவரவர் பகுதியிலேயே ஏற்படுத்தித் தருகின்றன.

இந்தப் பணி 'மும்பயி மராத்திய சாகித்ய சங்கத்'துடன் சேர்ந்து நடத்தப்படுகிறது. பிரவேசம், பரீக்ஷை, பிரபோத், ப்ரவீண் என்று இந்தப் படிப்பு நான்கு கட்டங்களாகக் கற்பிக்கப்படுகிறது. ப்ரவீண் தேர்ச்சி பெற்றவர்கள் மராத்தி இலக்கிய நூல்கள் அனைத்தையும் எளிதில் படிக்கும் தகுதியைப் பெற்று விடுகிறார்கள்.

பம்பாய் மாநகராட்சியிலும் மகாராட்டிர அரசின் அலுவலகங்களிலும் பணிபுரியும் தமிழர்கள் ஏராளமாக இந்த வகுப்புகளில் சேர்ந்து தேர்ச்சிபெற்றுத் தங்கள் அலுவலகங்களில் பதவி உயர்வு பெற்றிருக்கின்றனர்.

மராத்தி மொழி அறிஞர்களைத் தமிழ்ச் சங்கங்களும் தமிழரின் ஏனைய அமைப்புகளும் இடையிடையே அழைத்து அவர்களுடைய சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்து அவர்களுக்கு உரிய மரியாதையைச் செலுத்தி வருகின்றன.

இவ்வகையில் தமிழ்—மராத்தி மொழிகளுக்கிடையில் நல் லுறவு நாளும் வளர்ந்து வருகிறது.

மராத்தியருடைய லலித் இலக்கிய வட்டாரமும் பம்பாய்த் திருக்குறள் பேரவையும் இணைந்து மராத்திய மொழியில் திருக்குறளை எளிய நடையில் மொழி பெயர்க்கும் பணியைத் தொடங்கியிருக்கின்றன.

குசராத்தியரும் தமிழரும்

குசராத் மாநிலத்தில் வாழும் தமிழர் எவ்விதமான தொல்லையு மின்றி வாழ்கின்றனர். மொழித் தொடர்பான சிக்கல்களும் இல்லை. குசராத்தியர் தங்களைப் 'பஞ்சத் திராவிடர்' என்று கருது கின்றனர் குசராத்திய மொழிக்கும் தமிழ்மொழிக்கும் உள்ள பொதுவான சொற்களைப் பற்றியும் மொழியியல் தொடர்புகள் குறிததும் ஆராய்ச்சிகள் செய்யலாம் என்று குசராத்திய அறிஞர் ஒரிருவர் என்னிடம் கூறினர். தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் தொடங்கிய இயக்கங்களுக்கு அங்கு வாழ்ந்த தமிழர் உறுதுணை யாக இருந்ததையும் தமிழ் மொழியைக் கற்றுக் கொள்ளக் காந்தி யடிகள் விரும்பியதையும் குசராத் மக்கள் நன்கு அறிவர்.

குசராத் மாநிலத்தில் வாழும் தமிழரின் எளிய வாழ்வும் கடவுள் நம்பிக்கையும் முயற்சியும் மூளையும் குசராத் அரசியல்வாதிகளையும் வணிகர்களையும் கவர்ந்திருக்கின்றன. தமிழரிடையே நிலவும் சக்திவழிபாடு இந்துக்கள் அல்லாத குசராத்தியச் சமணரையும் இவர்கள்பால் ஈர்க்கிறது.

இந்தியா உரிமை பெற்றபின் தமிழ்நாட்டின் ஆளுநர்களாக இருந்தவர்களுள் மூவர் குசராத்தியர் — பவநகர் மகாராசா, திரு. கே. கே ஷா, திரு. பட்வாரி. இந்தத் தொடர்பும் தமிழரைப் பற்றி குசராத்தியர் அறிவதற்குப் பயன்பட்டிருக்கிறது.

முன்னாள் ஆளுநர் திரு. பிரபுதாசு பட்வாரி நாள்தோறும் நாழிகைதோறும்தமிழ்நாட்டு நலனைப் பேணுவதையும் குசராத் வாழ் தமிழர்களுக்கு உதவுவதையும் தம் இனிய கடமையாகக் கொண்டிருக்கிறார்.

இலங்கைத் தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைக் கண்டிக்க திரு. பட்வாரி, மிகப் பெரியதொரு கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

தங்கள் மாநிலத்துக்கு வந்தவர்களை வாழவைக்கும் பெருந் தன்மை, அகிம்சை வாதிகளான குசராத்தியரின் இயல்பாகும். எனினும் அவர்கள் சிந்தி மொழி பேசுபவர்களையோ இராசத்தான் மாநிலத்திலிருந்து வந்து தொழிலும் வணிகமும் செய்யும் மார்வாரி களையோ நம்புவதில்லை.

தமிழரும் குசராத்தியரும் ஒன்றியிருப்பதற்குரிய பெருமைக்கு, குசராத்தியரின் நற்பண்புகளே காரணம் என்று அங்கு வாழும் தமிழர் கூறுகின்றனர்.

இந்த மாநிலத் தமிழர் 200 பேர் கலப்புத் திருமணம் செய்து கொண்டிருக்கின்றனர். இவற்றுள் 100 திருமணங்கள் குசராத்திய ருடனும் மற்றும் 100 சிந்தி மொழியினருடனும் ஏற்பட்டவை.

ஆலைத் தொழிலாளரான தமிழர் நடத்தும் நாட்டுப் புறக் கலை நிகழ்ச்சிகளும் குசராத்தியரைக் கவர்ந்திருக்கின்றன.

1969ஆம் ஆண்டில் ஆமதாபாதிலும் குசராத்தின் வேறுசில நகரங்களிலும் இந்து-முசுலீம் கலவரங்கள் நடைபெற்றன. அவற் றில் தமிழர் சம்பந்தப் படவில்லை. இதுகுறித்து ஆமதாபாதிலுள்ள 'Gujarat Institute of Area Planning' என்னும் நிறுவனம் வெளி யிட்டுள்ள 'Historical and Economic Outline of Gujarat' என்ற நூலில் சஞ்சார் கோகில், அரீஷ் ஜோஷி என்னும் ஆசிரியர்கள் இருவரும் 28ஆம் பக்கத்தில் பின்வருமாறு கூறியிருக்கின்றனர் :

"The Initiators and carriers of communal riots were non-Gujaratis, particularly the conservative North Indian Labour".

இந்து முசுலிம் கலகத் தொடர்பாக ஒரு தமிழரின் வரலாற்றை இங்கே தெரிவிக்க வேண்டும்

தென்னார்க்காடு மாவட்டம் நெல்லிக் குப்பத்திற்கு அருகே யுள்ள சென்னப்ப நாயக்கன் பாளையத்தைச் சேர்ந்த திரு. அரா. அப்துல் அசீஸ் என்பவர் 20 ஆண்டுகளுக்கு முன் ஆமதாபாத் சென்று ஆலைத் தொழிலாளர் ஆனார். இந்து-முசுலிம் கலவரம் ஏற்பட்ட தும் தமிழரான இந்துக்கள் அவரைக் காப்பாற்றிப் பாதுகாப்பாகத் தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைத்தனர். ஓராண்டு வரை தமிழ்நாட்டில்

தங்கி முயன்றும் அவருக்கு இங்கு வேலை கிடைக்கவில்லை. மீண்டும ஆமாதாபாத் சென்றார். ஏற்கெனவே அவர் வேலை பார்த்த ஆலையினர் உடனே அவரை வேலையில் சேர்த்துக் கொண்டனர்.

சில ஆண்டுகளுக்குப் பின் இவர் தொழிலாளர் தலைவரானார். சொந்தமாக ஆட்டோ-ரிக்ஷா விலைக்கு வாங்கித் தொழிலும் நடத்துகிறார்.

1976ஆம் ஆண்டில் இந்தியாவெங்கும் நெருக்கடி நிலை பிரகடனப் படுத்தப்பட்டது. ஆமதாபாத்தில் தொழிலாளர் தலைவர்கள் சிறைவைக்கப்பட்டனர். திரு. அசீஸ் கைது செய்யப் படுவதற்கு முன் அவர் தமிழ்நாட்டிற்கு வந்துவிட்டார்.

பல மாதங்கள் இங்கே தங்கியிருந்தும் வேலை கிடைக்க வில்லை. மீண்டும் ஆமதாபாதுக்குச் சென்றார். அங்குத் தொழில் செய்யும் தமிழ்ச் சங்கப் பணிகளைச் செய்தும் வருகிறார். பல மொழிகளைப் பேசும் ^0,000 தொழிலாளர்களுக்குத் தலைவராக உள்ள தமிழர் திரு. சிதம்பரம் என்பவருடைய வலக்கரமாக திரு. அசீஸ் விளங்குகிறார்.

வெள்ள நிவாரண நிதி

தமிழ்நாட்டில் 1977-78இல் புயலும் வெள்ளமும் மக்களை வாட்டியபோது வடமாநிலத் தமிழர் தனித்தனி அமைப்புக்கள் மூலம் தங்கள் பகுதிகளுக்கு நிதி அனுப்பினர்.

தமிழக அரசுக்கு அனுப்பியவர்களும் உள்ளனர். இவ்வகையில் குறிப்பிடத்தக்கது ஆமதாபாத் தமிழ்ச் சங்கம் 5 - 1 - 1978இல் ரூ. 5001உம், 7-2-1978இல் ரூ. 5001உம் ஆக ரூ. 10,002ஐத் தமிழக முதல்வருக்கு அனுப்பியதாகும்.


இதுபோல் புதுச்சேரி மாநில முதல்வருக்கும் ரூ. 1001 அனுப்பி வைத்தனர்.

தாங்கள் வாழும் மாநிலங்களில் இயற்கையின் சீற்றங்கள் ஏற்படும் போதும் அந்த மக்களின் துன்பத்தில் தமிழர் பங்குகொள்கின்றனர். சில மாதங்களுக்கு முன், மகாராட்டிர மாநிலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பம்பாய்த் தமிழர் பேரவை


செய்திருக்கும் உதவிகளை இந்த ஆய்வின் பிற்சேர்க்கையில் குறிப்பிட்டிருக்கிறேன்.

1977ஆம் ஆண்டில் இராசத்தான் மாநிலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது அந்த அரசின் நிவாரண நிதிக்கு, செய்ப்பூர் தமிழ்ச்சங்கம் ரூ. 2035 வழங்கிற்று.

இராசத்தான் மாநில அரசின் சமூக நலத்துறை நடத்திவரும் 'விகலாம் சமிதி' என்ற அமைப்பு உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கு நிதி சேர்த்தது. அந்த நிதிக்கு 1981 நவம்பரில் செய்ப்பூர் தமிழ்ச் சங்கம் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறது.


NOT INSURED
No. 1830
Amount of Stamps affixed Rs.
Received a Registered
Addressed to
Received a Registered/Insured Letter, Postcard, Packet, Parcel
No. 182
M.G. Ramachandran,
CHIEF MINISTER
Govt., of Tamilnadu,
Madras.
Signature of addressee
Scor... out ... not required.
JUNIOR P.A. ...
OF TAMIL ...
NOT INSURED
Letter/Postcard, Packet, Parcel
No. 142
Mr. S. Ramaswamy
Chief Minister
Govt. of Pondicherry
...CHERRY.
Signature of addressee
not required.
only.
7/4/78

1) 11-2-78இல் அவர்களுக்கு ரிஜிஸ்டர் செய்த ரசீது.
2) தமிழ்நாட்டு முததிரை அவர்கள் பெற்றுக் கொண்டது.
3) பாண்டிச்சேரி முதகிரை. அவர்கள் பெற்றுக் கொண்ட ரசீது.
தமிழகம் - பாண்டி.
பெற்றுக்கொண்டு, நன்றி சொல்லி எழுதிய, கடிதம் தேடி அனுப்பு கிறேன், தேவைப்பட்டால்.



இது தமிழ்நாட்டுக்கு அனுப்பியது, தேனு பேங்கில் டிராப்டு எடுத்து மெட்ராஸ் சீப் மினிஸ்டர் பண்டில் மாற்றம் செய்தது. எல்லா பணமும் தமிழகத்திற்கும் பாண்டிச்சேரிக்கும் A.R. அப்துல்அஜீஸ் என்ற பெயரில்தான் அனுப்பி உள்ளேன். தமிழகம் M.G.R. 10000/- பத்தாயிரம். பாண்டி S. ராமசாமி 1000/- ஒரு ஆயிரம்.

47226 இது பாண்டிச்சேரிக்கு அனுப்பியது.

தமிழ்நாடு முதல் தவணை	5 - 1 - 78	ரூபாய்	5001
,, இரண்டாவது தவணை	7 - 2 - 78	,,	5001
பாண்டி ஒரேதரம்	2 - 3 - 78	,,	1001

ஆகமொத்தம் பதினோராயிரத்து மூன்று ரூபாய் அனுப்பி உள்ளேன்

தென்னிந்தியர்களுடன் உறவு

எல்லா மாநிலங்களிலும் மலையாளம், கன்னடம், தெலுங்கு பேசும் மக்களும் பெரிய தொகையினராக இருக்கிறார்கள். எண்ணிக்கையில் முதலிடம் தமிழருக்கே உரியது.

மலையாளிகள், தமிழரைவிட உயர்ந்த பதவிகளில் உள்ளனர். சிறு கடைகளையும் ஏராளமாக வைத்திருக்கிறார்கள். திரு. வி. கே. கிருஷ்ணமேனன், இந்திய அரசில் அமைச்சராக இருந்தபோது மேற்கொண்ட சில நடவடிக்கைகளால் இந்தியாவெங்குமுள்ள இந்தியன் காபி ஹவுசு நிறுவனங்கள், மலையாளிகளின் உடைமையாய் ஒவ்வொரு ஊரிலும் நடத்தப்படுகின்றன.

ஏனைய தென்னிந்தியர்களைவிட, மலையாளிகள் துணிச்சலுடையவர்களாகவும அரசு ஆதரவு பெற்றவர்களாகவும் இருக்கிறார்கள். நாகபுரியில் 30 ஏக்கர்ப் பரப்புள்ள இடம் வாங்கி மிகப் பெரிய அளவில் ஐயப்பன் கோயில் கட்டியிருக்கிறார்கள். எல்லா மொழியினரிடமும நன்கொடை வசூலித்திருக்கின்றனர். குறைந்த நன்கொடை 3,000 ரூபாய். தமிழர் நிதி திரட்டினால், இந்த அளவு நன்கொடை கேட்கவே பயப்படுவார்கள்.

வட கன்னட மாவட்டம் பழைய பம்பாய் மாநிலத்தில் சேர்ந்திருந்தது. அந்தக் காலம் முதல் கன்னடம் பேசுபவர், இன்றைய மகாராட்டிர, குசரத் பகுதிகளில் காலூன்றிக் கொண்டனர். இன்றும் மங்களூரிலிருந்து பமபாய்க்கு ஒரு மணி நேரத்துக்கு ஒரு பேருந்து புறப்படுகிறது. பெங்களூர்-பம்பாய் இரயில் இணைப்பும் இந்தப் போக்குக்கு உதவியாக இருக்கும்.

தெலுங்கு மொழி பேசுபவர், அலுவலகப் பணிகளுக்கு அத்தி பூத்தது போல்தான் செல்கிறார்கள் வட மாநிலங்களிலுள்ள ஆந்திரர் பெரும்பாலும் அடுக்கு மாடி கட்டடங்களுக்கு அடித்தளம் போடும் பணியிலும் நெடுஞ்சாலைப் பணியிலும் சுரங்க வேலைகளிலுமே காணப்படுகின்றனர்.

பொதுவாக, தென்னிந்திய மக்களுக்கிடையே பூசலோ, தகராறோ ஏற்படுவதில்லை. மகாராட்டிரத்தில் சிவசேனை இயக்கம் வேகமாக இருந்தபோது, திராவிட மொழிகளைப் பேசுபவர் அனைவரும் ஐக்கிய முன்னணி அமைத்து இன்னும் நெருக்கமாயினர். நாடாளுமன்றத் தொகுதிகளுக்கோ, மாநகராட்சித் தொகுதிகளுக்கோ, தென்னிந்திய மொழி பேசுபவர் யார் தேர்தலுக்கு நின்றாலும் ஏனைய தென் மொழியினரும் அந்த வேட்பாளரை ஆதரித்து வந்திருக்கின்றனர்.

தமிழரைத் தவிர ஏனைய திராவிட மொழியினர், தங்கள் மொழிக்காகச் சங்கம் வைத்துக் கொள்வதோ, தங்கள் மொழியின் பெருமை பற்றிப் பேசுவதோ கிடையாது.

வட மாநிலங்களில் தென்னிந்தியருடைய பொதுவான நிகழ்ச்சிகள் யாவும் மத அடிப்படையில் அமைந்தவையே. எல்லாத் தென்னிந்தியர்களும் சேர்ந்து செம்பூரில் துவங்கிய அரிஅரபுத்ர சமாஜ், ஒரு கோயில் கட்டுவதற்காக நிதி சேர்த்தது. இப்போது அந்த நிதியைக் கொண்டு ஒரு மருத்துவமனை உருவாகி வருகிறது.

தமிழ்நாட்டிற்கு உதவி

வட மாநிலங்களில் வாழும் தமிழர், அவர்களால் இயன்ற அளவு தமிழ்நாட்டில் திரட்டப்படும் பொதுநிதிகளுக்கு உதவி வருகின்றனர். இதை இன்னும மிகுதிப்படுதத இயலும்.

தங்கள் மாவட்டங்களிலும் தங்களுடைய சிற்றூர்களிலும் நடைபெறும் பல செயல்களுக்கு வட மாநிலத் தமிழர் தாங்களே உதவியும் பிறரிடம் வசூல் செய்தும் அனுப்பியவண்ணமாக இருக்கின்றனர்.

எடுத்துக்காட்டாக ஒரு சிலவற்றை மட்டும் கூறுவோம் :

திருநெல்வேலி மாவட்டம் பத்தமடையைச் சேர்ந்தவர்கள் பல சாதியினர் ஓராயிரம் பேர் உள்ளனர். அவர்கள் அனைவரும் சேர்ந்து, தங்கள் ஊர் இராமசேஷைய உயர்நிலைப்பள்ளிக்கு நன்கொடை வழங்கியிருக்கின்றனர்.

வடக்கன் குளத்துக்கு அருகேயுள்ள பத்திநாதபுரம் என்னும் ஊரினர் 100 பேர் சேர்ந்து பத்திநாதபுர முன்னேற்றச் சங்கத்தைப் பம்பாயில் அமைத்துள்ளனர். அவர்கள் அனுப்பிய நன்கொடை, சத்துணவு மையக் கூடத்திற்கு இடம் வாங்கிக் கட்டடம் கட்டப் பயன்பட்டது. பம்பாயில் வசூலிக்கப் பட்ட நன்கொடையைக் கொண்டு அவ்வூரில் கத்தோலிக்க தேவாலயம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

காலவ் கிணறு என்னும் ஊரினர் பல நூறு பேர் பம்பாயில் இருக்கின்றனர். எல்லாச் சாதியினரும் சேர்ந்து அனுப்பிய பணத்தில் அவ்வூரில் பேருந்து நிலையம், தலைவர் காமராசர் சிலை ஆகியவை உருவாகியுள்ளன. 'வாலிபால் பந்தயம்' நடப்பதற்கும் பம்பாயில் பணம் அனுப்புகிறார்கள்.

நெல்லை மாவட்டம் மூலக்கரைப் பட்டி ஊரினர் 120 பேர் பம்பாயில் உள்ளனர். இவர்களுக்கென்று ஊர்ப்பொதுவுக்கு ஒரு சங்கமும் மூலக்கரைப்பட்டி இளைஞர் சங்கமும் இயங்கி வருகின்றன. தம் ஊரில் இந்து-கிறித்தவர்கள் ஓராண்டுக்கால மாகப் பகைவர்களாக இருந்த நேரத்தில் இங்குள்ள இளைஞர்கள் கூட்டறிக்கை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு கண்டனர். தமிழாசிரியரின் வறுமை தீர்க்க நிதியுதவியும் செய்துள்ளனர்

களக்காடு வட்டார விவசாய மகாசன சங்கத்துக்கும் பம்பாயிலிருந்து தொடர்ந்து பணம் அனுப்பப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டம் வடிவீசுவரத்தில் திருமண மண்டபம் ஒன்று கட்ட, பம்பாயில் பணம் வசூலிக்கப் பெற்றது. அவ்வூரார் 200பேர் சேர்ந்து தலைக்கு ரூ. 10 வீதம் ரூ 2000/ ஐ ஊராட்சிமன்றத்திற்கு அனுப்பினர். அதைக் கொண்டு சுடு காட்டுக்குக் கூரை போடப்பட்டது.

இவை போன்ற நூற்றுக்கணக்கான வசூல்கள், குறிப்பாகப் பம்பாயில், திருநெல்வேலி கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள ஒவ்வொரு ஊருக்கும் ஏதாவது ஒரு பொதுச் செயலுக்குத் திரட்டப்பட்ட வண்ணமாக இருக்கிறது.

சென்னைக்கு இரயில் போக்குவரத்து

மட மாநிலத் தமிழரில் தமிழ்நாட்டுத்தொடர்பைத்தொடர்ந்து வைத்துக் கொண்டு, வேலை பார்ப்பதற்காக மட்டும் அங்கே வாழ்பவர் பெரும்பகுதி ஆவர். இவர்களில் திருமணம் ஆகாதவர் ஒரு கூட்டத்தார். திருமணம் ஆகியும் குடும்பத்தைத் தமிழ்நாட்டில் இருக்கச் செய்து, அடிக்கடி தமிழ்நாட்டுக்கு வந்து போகிறவர் இரண்டாவது கூட்டத்தார். குடும்பத்துடன் வட மாநிலங்களில் வாழ்ந்து, அங்கே கடுமையாக இருக்கும் கோடைக்காலத்துக்கு மட்டும் தமிழ்நாட்டிற்கு வந்து போகிறவர் மூன்றாவது கூட்டத் தார். இம் மூவகையினரும் மிகுதியாகத் தமிழ்நாட்டிற்கு வருபவர் எனலாம்.

வட மாநிலங்களிலேயே சொந்தவீடு கட்டிக்கொண்டு நிலையாக வாழும் தமிழரும சில நூறாயிரப்பேர் உள்ளனர். ஓய்வு பெற்ற பின்னரும் அவர்களுக்கு அங்கேயே எப்படியாவது நல்லதொரு வேலையும் வருமானமும் கிடைத்து வருகிறது. இந்த வகையினரும் உறவினர் திருமணம் முதலியவற்றுக்காகவும்

தலயாத்திரையாகவும் தாங்கள் பார்க்கும் அலுவல் தொடர்பாகவும் தமிழ்நாட்டிற்கு வர நேருகிறது.

இக்காரணங்களால் சென்னைக்கும் தாங்கள் வாழும் நகரங்களுக்கும் நேரடியான, வேகமான இரயில் போக்குவரத்தை விரும்புகின்றனர்.

ஆமதாபாத்துக்குல் சென்னைக்கும் இடையே 'நவஜீவன் விரைவு வண்டி' விடப்பட்டிருப்பது மகாராட்டிரத்தின் வடகோடியிலும் குசராத்திலும் உள்ள தமிழர்க்கு மனநிறைவைத் தந்திருக்கிறது. இந்த இரயிலிலேயே மத்திய மாநிலத்தைச் சேர்ந்த இந்தூர் அல்லது உச்சயினிக்கு-இயலுமானால்-ஒரு பெட்டியை இணைக்கலாம்.

பம்பாய்க்கும் சென்னைக்கும் பல ஆண்டுகளாகச் சென்று வந்த 'ஜனதா எக்ஸ்பிரஸ்' கடந்த சில மாதங்களாக நிறுத்தப்பட்டிருப்பதால் பம்பாய்த் தமிழர் பல அல்லல்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர். ஆண்டுதோறும் நூறாயிரக் கணக்கில் பம்பாயிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தமிழர் தொகை மிகுந்து வரும்போது புதிய இரயில்களை விடுவதே நியாயமாகும். மாறாக ஏற்கெனவே இயங்கி வந்த இரயிலையும் நிறுத்துவது ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் போட்டது போலாகி விட்டது.

பம்பாயிலுள்ள தமிழர்களில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கணிசமான பகுதியினர் ஆவர். தமிழக அரசு பம்பாயிலிருந்து திருநெல்வேலிக்குப் பேருந்து விட்டால் அதில் செல்லவும் அங்குள்ளோர் தயாராயிருக்கின்றனர். இரயிலில் நெருக்கடியும் சென்னையில் இரயில் மாற வேண்டியதால் ஏற்படும் இக்கட்டும் சொல்லுந்தரமன்று.

மத்திய மாநிலம் சபல்பூரில் வாழும் தமிழர் 12000 பேரில் 8000 பேர் அடிக்கடி தமிழ்நாட்டுக்கு வந்து செல்கின்றனர். இவர்களில் பெரும் பகுதியினர் படைக்கலத் தொழிற்சாலைப் பணியில் இருப்பதால் அவர்களுக்குக் கிடைக்கும் இரயில்வே வாரண்டு சலுகையை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். சபல்பூரிலிருந்து சென்னைக்கு வருவதற்குப் பயன்படும் இரயில் 'கங்கை காவிரி எக்ஸ்பிரஸ்' மட்டுமே. வாரம் இருமுறையாகச் செல்லும் இந்த இரயில் நாள்தோறும் ஓடவேண்டுமென்று இவர்கள் இந்திய அரசின் இரயில்வே அமைச்சகத்தை அணுகிய முயற்சிகள் பயனளிக்கவில்லை.

தில்லியிலிருந்து சென்னைக்குச் செல்லும் 'தமிழ்நாடு எக்ஸ்பிரஸ்' இடார்சி இரயில் சந்திப்பில் நிறுத்தப்படவேண்டும் என்றும் சபல்பூருக்குக் குறிப்பிட்ட இடவசதி (Jabalpur Quota Ex-Itarsi) ஒதுக்கப்பட வேண்டும் என்றும் தமிழக அரசு இரயில்வே அமைச்சகத்துடன் இதுகுறித்துப் பேசி ஆவன செய்ய வேண்டும் என்றும் சபல்பூர் தமிழர்கள் விரும்புகிறார்கள்.

நாகபுரி இரயில் சந்திப்பைப் பயன்படுத்தும் தமிழர் ஒரு நூறாயிரம் பேர் ஆவர். இவர்கள் சென்னை வருவதற்குப் பயன் படுத்தக் கூடிய இரயில்கள் யாவும் நிரம்பி வழிகின்றன. நாகபுரியி லிருந்து சென்னைக்கு ஒரு தனிப்பெட்டி (Separate Coach) இணைக்க வேண்டும் என விரும்புகின்றனர்.

மாபெரும் உருக்காலை உள்ள பிலாயிலும் அதன் சுற்றுப் புறத்திலும் துர்க், இராய்ப்பூர், பிலாஸ்பூர் மாவட்டங்களிலும் 30,000இற்கு மேற்பட்ட தமிழர் உள்ளனர். 'துர்க்' இரயில் சந்திப்பிலிருந்து சென்னைக்கு நேரடியான இரயில்வசதி கிடையாது.

துர்க்குக்கும் வால்டேருக்கும் இடையே இப்போது இயங்கும் 229ஆம் எண்ணுள்ள இரயில் துர்க்குக்கும் சென்னைக்கும் இடையே விரைவு வண்டியாக மாற்றப்பட வேண்டும்.

இராய்ப்பூர்க்கும் வால்டேருக்கு மிடையே செல்லும் 'லிங்க் எக்ஸ்பிரஸ்' நாள்தோறும் துர்க்குக்கும் சென்னைக்கும் இடையே விரைவு வண்டியாகச் செல்ல வேண்டும்.

'கங்கை காவேரி இரயில் நேரத்துக்கு நாகபுரி போய்ச்சேரும் படியாக, 'பிலாஸ்பூர்—இராய்ப்பூர்—துர்க்—நாக்பூர்' இரயில் விடப் பட்டு இந்தப் பெட்டிகள் கங்கை காவேரி இரயிலுடன் இணைக்கப் படவேண்டும்.

மேற்கண்ட வேண்டுகோள்களைப் பிலாய்த் தமிழர் இந்திய இரயில்வே அமைச்சகத்திற்கு அனுப்பியுள்ளனர். தமிழக அரசு முயன்றால்தான் பயன் ஏற்படும் என்று கருதுகின்றனர்.

வடமாநிலத் தமிழர் அடிக்கடி தமிழ்நாட்டிற்கு வந்தால் தமிழ்நாட்டுப் பொருள்கள் மிகுதியாக விற்பனையாகும். தமிழ்நாட்டுக் கோயில்களின் வருமானமும் பெருகும். அவர்களின் தமிழ்மொழித் தொடர்பும் மேலும் வலுப்படும்.

இவற்றைக் கருத்தில் கொண்டு ஒரு சில கோரிக்கைகளை யாவது நிறைவேற்ற தமிழக அரசு முயலலாம்.

தொலைக்காட்சியில் தமிழ்த் திரைப்படங்கள்

வட மாநிலங்களில் உள்ள தொலைக்காட்சி நிலையங்கள் சிலவற்றில் மூன்று நான்கு மாதங்களுக்கு ஒருமுறையே தமிழ்ப் படங்கள் காட்டப்படுகின்றன. இந்த இடைவெளி குறைக்கப்பட வேண்டுமென்று விரும்புகின்றனர்.

BHILAI THIRUVALLUVAR PADAŚALAI

(A Tamil Cultural Association)

(Regd. No. 1756)

BHILAI

Ref. No. 12/BTP/82

Date 16-9-1982

T. A. Narayanaswamy
PRESIDENT
10, Motilal Nehru-Nagar, Bhilai-1 (MP)

T. R. Subramanian
VICE-PRESIDENT
Qr. 7A. St. 38,
Sector - V, Bhilai - 1

GENL. SECRETARY

TREASURER

To
The Hon. Minister for Railways
Government of India
Rail Bhavan
New Delhi.

Respected Sir,

Sub : Requirement of a direct train from Durg (SE Rly.) to Madras.

Bhilainagar is an important town in Madhya Pradesh due to the location of a Steel Plant at Bhilai. People from different states are working in the Steel Plant and the town has therefore acquired a cosmopolitan character. Thousands of employees in the Plant are from Tamil Nadu. The local ancilliary industries and opportunities for business have also attracted a sizeable Tamil speaking people in and around Bhilai. People from other southern states Viz: Kerala, Karnataka and Andhra Pradesh form considerable proportion of the total population in this area.

Right from the project stage of the Plant in 1956 the people of Tamil Nadu working in Bhilai are denied of the facilities of a direct train from Durg to

Madras. The two routes available to them are via. Nagpur and via. Waltair and the quota of IInd class berths at Bhilai City Booking Agency and Durg Railway Station put together by these two routes is about 10 which is totally inadequate to cater to the needs of all persons going to South India While direct train facilities are provided from Durg to important cities like Amritsar, New Delhi, Allahabad, Varanasi, Ahmedabad etc. there is no direct link from Durg to Madras. The three steel plant townships in the eastern region of the country viz : Bokaro, Jamshedpur and Rourkela, though not located in the southern trunk route, are connected by a direct train to Madras (Bokoro Steel City Express). DespiteBhilai's preeminent position in the steel sector, this basic facility is denied to the people from southern states, thousands of whom have already spent almost the entire period of their career to bring this proud national asset to this stage.

Keeping in view the above, we request your honour to consider the case for the introduction of a daily direct train to Madras from Durg. In this connection the following suggestions are submitted for favour of immediate consideration and implementation.

1. The 229 UP Durg-Waltair passenger may be run as an express Train from Durg to Madras daily.

2. The link Express running between Raipur & Waltair may be run as an Express from Durg to Madras daily.

3. The 140 Ganga Kaveri Express may be routed via. Durg or this may be run with additional carriages via. Bilaspur-Raipur-Durg-Nagpur.

We trust that your honour would get the request examined for favourable decision and early implementation preferably from 14-1-83 which is the Pongal Day - an important festival for the people of South India.

Thanking you,

Yours faithfully,
for Bhilai Thiruvalluvar Padasalai
(T. A. Narayanaswamy)
President

Copy to :-

1. Shri R. Venkataraman
Hon. Minister for Defence
Government of India
New Delhi.

2. Shri M. G. Ramachandran
Hon. Chief Minister of Tamil Nadu
Madras.

3. Chairman
Railway Board
Rail Bhawan
New Delhi.

4. Divisional Railway Managar
   S. E. Railway
   Bilaspur MP.

5. Collector
   District Durg
   Durg MP.

6. Managing Director
   Bhilai Steel Plant
   Bhilai MP.

(Sd.) T.A. Narayanaswamy

(T.A. Narayanaswamy)

President

Bhilai Thiruvalluvar Padasalai

வானொலி

வட மாநிலங்கள் எல்லாவற்றிலும் கேட்கக்கூடிய தமிழ் நிகழ்ச்சிகள் தில்லி வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளே. நாள்தோறும் 45 மணித்துளிகள் மட்டுமே இந் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன. இந்த நேரத்தை மேலும் 30 மணித்துளிகளாவது நீட்டிக்க வேண்டுமென்று வட மாநிலத் தமிழர் விரும்புகின்றனர்.

வட மாநிலங்களில் தமிழ் மாதம், தேதி தெரிவிக்கும் நாள்காட்டி கிடைப்பதில்லை. வானொலியில் நாள்தோறும் ஒலி பரப்பாகும் காலைத் தமிழ்ச் செய்தியில் தமிழ்த்திங்களும் தமிழ்த் தேதியும் சொல்லவேண்டுமென்று வட மாநிலத் தமிழ்ப் பெண்கள் விரும்புகின்றனர். பல ஆண்டுகளுக்கு முன்னரே இத்தகைய வேண்டுகோளைத் தென்கிழக்கு ஆசியத் தமிழ்நேயர்கள் அனைத்திந்திய வானொலிக்கு அனுப்பியிருக்கின்றனர். தமிழக அரசு இந்த முயற்சியையும் செய்ய வேண்டும்.

கூடுதலான அக்கறை

வட மாநிலத் தமிழர் தங்களுக்கு அந்தந்த மாநில அரசு கொடுத்துவரும் பாதுகாப்பைக் குறித்து மனநிறைவு அடைகின்றனர். இந்திய அரசால் தங்களுக்கு எந்தத்தொல்லையும் இல்லை என்றும் கூறுகின்றனர்.

தமிழ்நாடு அரசு, வட மாநிலத் தமிழர் நலத்தில் சற்றுக் கூடுதலான கவனம் செலுத்த வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

வட மாநிலங்களில் மழைக் காலத்தில் மழை மிகுதி; குளிர் காலத்தில் குளிர் மிகுதி; வெய்யில் காலத்தில் வெய்யில் மிகுதி. ஆனால், எவ்வளவு பெரு மழை பெய்தாலும் அதைக் காரணமாகக் காட்டி அலுவலகங்களுக்கோ, பள்ளிக்கூடங்களுக்கோ விடுமுறை விடுவது இல்லை. கோடைக் காலத்தில்தான் விடுமுறை உண்டு. பிற மாநிலங்களில் சுற்றுப் பயணம் செய்வது அல்லது மலை வாசஸ் தலங்களுக்குச் செல்லுவது என்பது தமிழருக்குக் கட்டுப்படியாகாது. ஒரு மாதத்திற்காவது தமிழ்நாட்டுக்கு வந்துவிட்டுப் போகிறார்கள். இரயில் வசதி பெருக வேண்டும் என்பது அவர்களுடைய முக்கியமான கோரிக்கை.

வேலை வாய்ப்பு

வட மாநிலங்களில் வேலை கிடைப்பது எளிது. தங்கள் மக்களுக்கு அங்கேயே வேலை தேடிக் கொடுப்பதில் அவர்களுக்கு

ஒரு சிக்கலும் இல்லை. அதற்கு அடிப்படைத் தகுதியான படிப்புப் பெற தமிழ்நாட்டில் இடம் கிடைக்கவில்லை என்பது அவர்களுடைய கவலையாகும். "நேட்டிவிட்டி சர்ட்டிபிகேட்" என்ற சான்றிதழ் பெற அல்லற்படுவதாகப் பலர் கூறினர்.

கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு

வட மாநிலங்களில் தேர்வு, மதிப்பெண் அடிப்படையில் இருந்த இடத்திலிருந்தே கல்லூரிகளில் இடம்பெற இயலுகிறது. தமிழ்நாட்டிலும் இவ்வாறு எதிர்பார்க்கிறார்கள்.

வட மாநிலங்களில் இவர்கள் தங்கள் பிள்ளைகளைச் சேர்க்காமல் தமிழ்நாட்டில் படிக்க விரும்புவதற்குக் காரணம், பெரும்பாலான படிப்புகள் இங்குத் தரமாக இருப்பது ஒன்று; செலவு குறைவாக இருப்பது மற்றொன்று.

ஐம்பது ஆண்டுக் கால வரலாற்றுப் பின்னணியால் தமிழ்நாட்டிலும் பழைய சென்னை இராசதானியில் தமிழ்நாட்டோடு சேர்ந்திருந்த பகுதிகளிலும் பிற்பட்ட சாதிகள் என்ற பட்டியல்களின் அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டு அதனால் இதுவரை பின்தங்கியவர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைந்து வருகிறார்கள். ஆதி திராவிடர்கூட இடம் கிடைக்காத அளவுக்கு மிகுதியாக மேல் படிப்புகளுக்கு விண்ணப்பம் செய்கிறார்கள்.

வட மாநிலங்களில் படிக்க வேண்டும் என்ற எண்ணம் இப்போதுதான் உருவாகி வருகிறது. பிற்பட்டோர் பட்டியலே அங்கு இல்லை. அரிசனங்கள், மலைவாழ் மக்கள் ஆகியோருக்கு ஒதுக்கப்படும் இடங்கள் பாதி அளவுகூட நிரப்பப்படாமல் அவையும் மற்றவர்களுக்குக் கிடைக்கின்றன. (general pool)

வேலைக்குப் போக வேண்டும் அரசுப் பதவிகளைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணங்கள் இப்போதுதான் அரும்பத் தொடங்கியிருக்கின்றன.* மண்டல் கமிஷன் அறிக்கை வெளிவந்த பிறகு,

---

* **Delhi Union Teritory**

For 1564 seats reserved for Harijans & STs. in various courses, only 690 applied. Balance seats went to meritorious candidates irrespective of caste.

— Hindustan Times
July 31, 1983.

Those who look beyond their own country for future advancement can be placed in two broad categories. The

தமிழ்நாட்டில் நிலவி வருகிறது போன்ற ஏற்பாடு செய்ய வேண்டும் என்று வற்புறுத்தும் கிளர்ச்சிகள் தொடங்கி இருக்கின்றன.

பயிற்சி மொழி

தமிழிலேயே தொழிற்கல்வி கற்பிக்கப் பட்டால் மூளை உள்ளவர்கள் தமிழ்நாட்டுக்கு வெளியே போகமாட்டார்கள் என்று தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் இடையிடையே கூறி வருவதை வடமாநிலத்தமிழர் வரவேற்கவில்லை.

பள்ளிகளில் இந்தி

குறிப்பிட்ட எந்த ஒரு அரசியல் கட்சியாவது தங்கள் கட்சி ஆட்சியில் இருக்கும் வரை பள்ளிகளில் இந்தி கற்பிக்கப்படுவதற்கு இடம் கொடோம் என்று அரசியல் தலைவர்கள் மேடைகளிலே முழங்குகின்றனர். இவை பெரிய அளவில் வடமாநிலச் செய்தித் தாள்களில் விளம்பரப்படுத்தப்பட்டு வெளியிடப்படுவதால், மேடை முழக்கங்களைக் குறைத்துக் கொள்ளக் கூடாதா என்று வட மாநிலத் தமிழர் வினவுகின்றனர்.

ஆர்ட் சில்க் புடைவை

சூரத் நகரில் உற்பத்தியாகும் ஆர்ட் சில்க் புடைவைகளில் 100க்கு 25 விழுக்காடு, தமிழ்நாட்டில்தான் விற்பனையாவதாகத் தெரிகிறது. தமிழ்நாட்டிலேயே நைலான் தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க இயலுமானால் இந்தத் தொழிலை நம் மாநிலத்திலேயே தொடங்கலாம். இதுகுறித்து, தமிழக அரசு சிந்திக்கலாம்.

வடமாநிலத்தில் நிலையாக இருக்க விரும்புவது ஏன் ?

வட மாநிலங்களுக்குச் செல்லும் தமிழர் தொகை மிகுதிப் பட்ட வண்ணமாக இருக்கிறது. அங்கு ஏற்கெனவே இருக்கும்

---

first category represents people of "Nobel calibre", like Hargobind Khorana and S. Chandrashekhar, for whom the right opportunities do not exist in India. In the second category are those who have difficult in finding a suitable opening within the country on the strength of their qualifications. Because of the emotional nature of the subject brain drain is wrongly consideredu nnatural, anti-national and unpatriotic......As long as economic sense prevails, people will continue to migrate within their own country and outside.—**THE TRIBUNE, Chandigarh.**

தமிழர் நிலையாகத் தமிழ்நாட்டுக்குத் திரும்புவது அரிதாக உள்ளது. இந்த நிலைக்குக் காரணம் என்ன?

முதல் காரணம், வடமாநிலங்களில் காலை முதல் நள்ளிரவு வரை ஓயாத வேலையோ, பொழுது போக்கோ இருக்கிறது. அந்த வாழ்க்கையில் பழகிப் போனவர்கள், தமிழ்நாட்டுக்கு வந்தால் அவர்களுக்குப் பொழுது போவதில்லை.

இரண்டாவது காரணம் அங்கு அரிசி, கோதுமை, பால், இறைச்சி. உருளைக் கிழங்கு, தக்காளி, காய்கறி யாவும், தமிழ்நாட்டைவிட விலை மலிவு.

பொதுவாக யாருமே இன்னொருவர் மீது பொறாமைப் படுவதில்லை.

எல்லோருக்குமே குறைந்த செலவில் வைத்திய வசதி கிடைக்கிறது. அரசு மருத்துவமனைக்கு நோயாளி சென்றால், "நான் தனியே—இன்ன இடத்தில் நடத்தும் கிளினிக்குக்கு வா" என்று எந்த அரசு மருத்துவரும் சொல்லுவது இல்லை.

அரசு ஊழியர் ஒருவர் சொந்தமாகத் தம் மனைவி பெயரில் ஒரு சிறு தொழிற்சாலை தொடங்கினால், அவர்மீது ஒருவரும மனுப் போடுவது இல்லை. நாட்டின் உற்பத்தியைப் பெருக்குகிறான் என்று அவர் வேலை பார்க்கும் நிறுவனத்திலுள்ள அனைவரும் வெளிப்படையாகவே அவருக்கு உதவி செய்கிறார்கள். இந்த மனப்பான்மையால் பயனடை யும் தமிழர் பலர் வடமாநில நகரங்கள் அனைத்திலும் உள்ளனர்.

வந்த வருமானத்தைத் தவறான வழிகளில் செலவிட்டிருப்பதால், தங்கள் வறுமையைத் தமிழ்நாட்டிலுள்ள உற்றார் உறவினரிடம் காட்டிக் கொள்ள வெட்கப்பட்டு, தமிழ்நாட்டிற்கு வராமல் இருப்பவர்களும் சிலர்.

வளமாக இருப்பவர்களிலும் ஒரு சிலர், தமிழ்நாட்டுக்கு வந்தால் சுற்றத்தார் கேட்கும் கடன் கொடுத்து அது வராமல் போனால் பணம், உறவு இரண்டும் இழப்பாகி விடுமே என்பதற்காக வருவதில்லை. தங்களுடைய வளமான நிலை, தமிழர்க்குத் தெரிந்து விடுமோ என்று அஞ்சி வட நாட்டு வங்கியிலேயே இவர்கள் வரவு செலவு செய்கிறார்கள். மாதச் சம்பளம் வாங்கி அதை ஒழுங்காகச் செலவு செய்து, தமிழ்நாட்டிலுள்ள குடும்பத்தார்க்கு வரவோலை

(Draft) அனுப்புபவர்கள் மட்டுமே தமிழ்நாட்டு வங்கிகளான இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பாங்க் ஆப் மதுரை, கரூர் வைஸ்யா வங்கி, பாங்க் ஆப் தஞ்சாவூர் முதலியவற்றின் வட மாநிலக் கிளைகளில் கணக்கு வைத்துள்ளனர்.

தமிழக அரசு, இலங்கைத் தமிழருக்கும் அமெரிக்கக் குடியுரிமை பெற்ற தமிழருக்கும், தமிழ்நாட்டுக் கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு செய்திருப்பதுபோல் வட மாநிலங்களில் வாழும் தமிழருக்கும் அருள்பாலிக்க வேண்டுமென்று அவர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

18. பழக்க வழக்கங்கள்

வட மாநிலத் தமிழர், தமிழ்நாட்டில் உள்ள தமிழரைநோக்க, பழக்க வழக்கங்களில் மாறுபட்டுக் காணப்படுகின்றனர்.

முதலாவது மாறுதலைப் பெரும்பாலானவருடைய உடையில் பார்க்கிறோம்

ஆடவரில் வேட்டி கட்டும் தமிழர் மிகவும் குறைவு. தப்பித் தவறி வேட்டி கட்டியவர், புதிதாகத் தமிழ்நாட்டிலிருந்து வேலை தேடி வந்தவராக இருக்கக்கூடும்.

பெண்டிரில் வயதானவர்கள், மற்றும் தமிழர் நிறைந்த பகுதி களில் (சான்று : ஆமதாபாத்தில் ஆலைப்பகுதி, புது தில்லியில் கரோல் பாக்) வாழ்பவர் தமிழ்நாட்டில் உள்ள தங்கள் உறவினரைப் போன்றே உடை உடுத்துகின்றனர்.

இளந் தலைமுறையினரில் சிலர் பாவாடை, சட்டை, தாவணி அணிகின்றனர். பெரும்பாலோர் பஞ்சாபியரைப் போல சல்வார்-கமீஸ், பைஜாமா போன்ற கால்சட்டை முழுக்கையுடன் கூடியதும் முழங்கால்வரை தொங்குவதுமாகிய சட்டை, மேல்துண்டு-என்ற உடை வகைகளையே விரும்பி மகிழ்ச்சியுடன் பயன் படுத்துகின்றனர்.

இதற்கு ஒரு காரணமும் உண்டு. பொது இடங்களில் காம வெறியன் எவனாவது பஞ்சாபியப் பெண்ணையோ மராத்தியப் பெண்ணையோ தொட்டால் அல்லது வம்புக்கு இழுத்தால் அவனை அந்தக் கணத்திலேயே கன்னம் சிவக்க அறைந்து விடுவார்களே தவிர, குய்யோ முறையோ என்று அழ மாட்டார்கள். தாங்களும் பஞ்சாபியப் பெண்களைப்போல உடை உடுத்தினால், பிறருடைய தாக்குதலினின்றும் அவமானப்படுத்தப் படுவதினின்றும்

பாதுகாத்துக் கொள்ளலாம் என்பதற்காக, சல்வார்—கமீஸ் பழக்கத்தை ஏற்றுக் கொண்டு தமிழ்ப் பெண்கள் வடநாட்டுப் பெண்களைப் போலக் காட்சியளிக்கிறார்கள்.

ஆடவர் பயன்படுத்தும் 'பேண்ட்' உடையை உடுத்தும் தமிழ்ப் பெண்களும் பிறமொழிப் பெண்களும் ஏராளமாக உள்ள னர். இதில் ஒரு வசதி, அவசரத்துக்கு தம்பி அல்லது அண்ண னுடைய 'பேண்ட்'-ஐ அணிந்து கொண்டு செல்லலாம்.

கல்லூரிகளில் படிக்கும் தமிழ்ப்பெண்கள் திருமணமான பிறகே, சேலை உடுத்துகின்றனர். அதுவும், கணவனுடன் வெளியே செல்லும் போது மட்டுமே பயன்படுத்தப்படும். அந்தச் சேலை பெரும்பாலும் நைலான் புடைவையாகவே இருக்கும். சூரத் முதலிய சில குசராத்திய நகரங்களில் தமிழ்ப் பெண்கள், உடைகளுக்குமேல் House Coatடும் போட்டுக் கொள்ளுகின்றனர்.

அணிகலன்

வட மாநிலப் பெண்கள் மிகுதியான நகைகளை அணிவ தில்லை. அணியும் நகைகளும் விலை மிக்கதாக இருப்பதில்லை. கழுத்துச் சங்கிலியும வளையலும் மூக்குத்தியுமே முக்கியமான நகைகளாக இருக்கும். வளையல் விலை குறைவானதாக பல வகைப் பொருள்களில் செய்யப்பட்ட, பொன் நிறமாகவோ வயிரம் போன்றோ பளபளப்பாகத் திகழ்கின்றன. மூக்கைக் குத்தாமல் ஸ்குரு மூக்குத்தி அணிவதும் பரவி வருகிறது.

நகை அணிய வாய்ப்பு இல்லாத சாதாரணத் தமிழ்ப் பெண்கள் வட மாநிலத்தார் போலவே காட்சியளிக்கிறார்கள். வசதி உள்ள தமிழ்ப் பெண்களும் திருமண நாள் போன்ற சில சந்தர்ப்பங்களில் மட்டுமே தமிழ்நாட்டில் உள்ள பெண்களைப் போல, தங்கள் ஆடவர் ஈட்டிய சேமிப்பைப் பொன்னாக்கி அதைத் தாங்கும் பாத்திரங்களாக மிளிர்வர்.

அலுவலகங்களுக்கும் பிற பணிகளுக்கும் செல்லும்போது, வசதியான குடும்பங்களைச் சேர்ந்த பெண்களும் தங்களுடன் பணி செய்யும் ஏனைய இனத்தாரைப் பின்பற்றியே அணி கலன்களைப் பாவிக்கின்றனர்.

உணவு

(உணவுப் பழக்கங்களில் வடமாநிலத் தமிழர் மிகுதியாக மாறியிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. ஏழையும் சரி

செல்வரும் சரி, குறைந்த நேரத்தில் சமையல் வேலையை முடித்துக் கொள்ளத் துடிக்கிறார்கள்.

சோறு, சாம்பார், இரசம், மோர் ஆகியவை இல்லாமல் தமிழரால் சாப்பிட இயலாது. பொதுவாகச் சொல்ல வேண்டு மானால், அரிசி உணவு சற்றுக்குறைவாக உள்ளது. கோதுமை ரொட்டி (சப்பாத்தி) மிகுதியாக இடம் பெறுகிறது.

இட்டலி, மசால் தோசை, வடை, சாம்பார் ஆகிய தமிழ்நாட்டுச் சிற்றுண்டிகள் வடக்கே பெரிதும் பரவியுள்ளன. வட மாநிலத்து மக்கள் அனைவரையும் இவற்றை விரும்பி உண்ண, உணவுக் கடைகளுக்குச் செல்லுகின்றனர். பஞ்சாபியர் சிந்திக்கார் போன்றோர் நடத்தும் உணவுக் கடைகளிலும் ஒரு வகையான இட்டிலியும் தோசையும் வடையும் சாம்பாரும் கிடைக் கின்றன. உடுப்பிக்காரரும் மலையாளிகளும் நடத்தும் உணவுக் கடைகளில் இந்த வேலைகளுக்குத் தமிழரைப் பயன்படுத்து கின்றனர். நான்கு நட்சத்திர ஐந்து நட்சத்திர உணவு விடுதிகளில் இட்டலி அவிக்கவும் மசால் தோசை சுடவும், சாம்பார், வடை ஆகியவற்றை நன்றாக ஆக்கவும் தெரிந்த தமிழனுக்கு உடனே வேலையும் சாப்பாடும் தங்குமிடமும் கிடைத்து விடுகின்றன. ஆறுமாதங்கள் இவற்றில் பணிசெய்து, அதற்கிடையே மொழியைக் கற்றுக்கொண்டும் வாடிக்கையாளருடன் பழகியும் அலுவலகப் பணிகளுக்குச் சென்ற தமிழர் ஏராளமான பேர் ஆவர். இந்த விடுதிகளில் இரண்டு இட்டிலிக்கு விலை ஆறு ரூபாய் முதல் 16 ரூபாய் வரை. மசாலா தோசையின் விலை சின்னஞ்சிறு விடுதியில் கூட மூன்று ரூபாய் ஆக இருக்கிறது. எந்த விடுதி யிலும் சாம்பாருக்குத் தனி விலை உண்டு. வட நாட்டார், நாம் தண்ணீர் குடிப்பதுபோலச் சாம்பாரைக் குடித்து விடுகிறார்கள்.

இட்டலி அவிப்பது எப்படி என்றும் தோசையில் புள்ளிகளை உண்டாக்குவது எப்படி என்றும் கேள்வி கேட்கத் தமிழர் இல்லங்களுக்குப் பிற மொழியாளர் வருகின்றனர். அவர்களுக்கு விளக்கம் சொல்லுவதற்காக, சமையற்கலை நூல்களைத் தமிழ்ப் பெண்கள் வாங்குகிறார்கள்.

பேசும் மொழி

தமிழ்ப் பையன்களும் பெண்களும் தங்களுக்குள் பேசிக் கொள்ளும்போது கூட ஆங்கிலத்திலேயே பேசுகின்றனர். தப்பித் தவறி கையிலே 'குமுதம்' இதழை அல்லது பெற்றோர்களுக்காக

வாங்கிப் போகிற 'ஞானபூமி' அல்லது 'ராணி' இதழை வைத்திருப்பதிலிருந்துதான் இவர்கள் தமிழர் என்று முடிவு செய்ய இயலும்.

வீட்டு வாழ்க்கை

ஃபிளாட்களில் வாழும் தமிழ்க் குடும்பங்களில் புதிய தலைமுறையினர் வளர்ந்து வருகிற முறை நமக்கு வேடிக்கையாக இருக்கும். வேலை பார்ப்பவர் சிலர் இரவுப் பணிக்குச் (Night Shift) செல்லுவது வழக்கம்; அதற்குக் கூடுதலான சம்பளம் கொடுக்கப்படுவதால், சிலர் இரவில் வேலை பார்ப்பதையே விரும்புகின்றனர். தங்கள் தகுதியை வளர்த்துக் கொள்ள, ஏதாவது ஒரு படிப்பைப் பகுதி நேரமாகப் படிப்பது நடைமுறையாகிவிட்டது. இந்தப் பள்ளிகளிலிருந்து இரவு 11 மணி 12 மணிக்கு வீடு வந்து சேரும் பையன்களுக்கும் பெண்களுக்கும் குறைவில்லை. சின்னஞ்சிறு வயதுக் குழந்தைகளுக்கான பள்ளிகள் காலை 7 மணிக்கு வகுப்புத் தொடங்குவதும் உண்டு. இக் காரணங்களால், எந்த நேரமும் யார் வேண்டுமானாலும் தாங்களாகவே கதவைத் திறந்துகொண்டு வீட்டுக்குள் வர வசதியாக, குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரிடமும் சாவி இருக்கும். இத்தகைய காட்ரெஜ் பூட்டுகள், கதவுகளில் பொருத்தப்பட்டிருக்கின்றன. உள்ளேயும் பூட்டிக்கொள்ளலாம். வெளியேயும் பூட்டிக் கொள்ளலாம். யார் எத்தனை மணிக்கு வந்து தூங்கினார்கள், சாப்பிட்டார்கள் என்று ஒருவரும் விசாரித்துக் கொள்வதில்லை.

கூட்டுக் குடும்பம்

அலுவலகங்களுக்குச் செல்லுபவர்கள் கூடுமானவரை அலுவலகத்திலுள்ள உணவகங்களிலேயே உணவு உட்கொள்ளுகின்றனர். அங்குப் படைக்கப்படும் உணவு பல வகையாகவும், சுவையாகவும், மிகவும் மலிவாகவும் (Subsidised) உள்ளது.

வயது வந்த பையன்களும் பெண்களும் பெரும்பாலான நேரத்தை வீட்டுக்கு வெளியேதான் செலவிடுகின்றனர். வருமானத்தை அவர்களாகவே ஈட்டிக் கொள்ளுகின்றனர். எனவே பெற்றோருடைய கட்டுப்பாடு கிடையாது. குறிப்பிட்ட பண்பாட்டில் வளர்க்கப்பெறுவதில்லை; பெற்றோர்களுக்கும் அதற்கு நேரம் இல்லை.

தமிழ்நாட்டில் வளரும் குழந்தைகளுக்குப் பிரிவினையாகாத இந்துக் குடும்பம் என்னும் ஆலமரம் நிழல்தருகிறது. தாயோ

தந்தையோ கோபித்துக்கொண்டால் பத்து நாள்களுக்குப் பாட்டன்-பாட்டி வீட்டுக்குப் போயிருக்சலாம். சித்தப்பா, சிறிய தாயார். பெரிய தாயார், அத்தை, மாமன் வீடுகளில் உள்ள ஒத்த வயதுடையவர்களுடன் பழக இயலும். இதனால் பாசமும் பற்றும் வளர்கின்றன. வட மாநிலங்களில் குடும்பக் கட்டுப்பாடு செய்துவிட்ட குடும்பங்களில், இளைஞர்கள் பழகுவதற்கு, விளையாடுவதற்கு, செல்லமாகத் தூக்குவதற்கு வீட்டுக்குள் குழந்தைகள் இல்லை. இந்தச் சூழ்நிலைகளின் விளைவாக, பணவசதியிருந்தும விரக்தி அடைந்த பையன்களையும் மன நோயால் பாதிக்கப்பட்டவர்கள் போன்ற பெண்களையும் பார்க்க நேருகிறது.

19. முடிவுரை

வட மாநிலங்களில் இலட்சக்கணக்கான தமிழர் வாழ்கின்றனர். தமிழகத்தின் எல்லாப் பகுதியினரும் தமிழரில் எல்லா உட்பிரிவினரும் காணப்படுகின்றனர்.

'வாழ, வடக்கே செல்' என்ற எண்ணத்தால் உந்தப்பட்டு இன்னும் வடக்கு நோக்கிச் செல்லுவது தமிழரின் இயல்பாக உள்ளது. 1931இல் பம்பாய் மாநகரின் மக்கள் தொகை 27 இலட்சமாக இருந்தபோது தமிழர் 27,000 பேர் மட்டுமே இருந்தனர். 1983இல் மக்கள் தொகை 82 இலட்சமாகவும் தமிழர் எண்ணிக்கை 13 இலட்சமாகவும் இருக்கிறது. பம்பாய் மக்களின் ஈவில் தமிழா 1%இலிருந்து 15% ஆக அதாவது 15 மடங்கு அதிகரித்துள்ளனர். பிற நகரங்களில் இந்த அளவுக்கு இல்லாவிட்டாலும் அங்கும் தமிழர் தொகை கூடிய வண்ணமாக உள்ளது.

இதைத் தடுக்க இயலாது, தடுக்கவும் வேண்டியதில்லை. ஆனால் பிச்சைக்காரராகவும் குஷ்டரோகியாகவும் தமிழர் சிலர் வெளி மாநிலங்களில் திரிவது தமிழ்நாட்டுக்கு இழுக்கு. இந்த மாசு அகற்றப்பட வேண்டும்.

தமிழர் தங்கள் மொழியை மறந்து ஆங்கிலோ இந்தியர் போல ஆகி விடாமல் பார்த்துக் கொள்ளவும் வேண்டும்.

வெளி மாநிலத் தமிழர்களுக்கும் தாய்த் தமிழ்நாட்டுக்கும் உள்ள கலை மற்றும் பண்பாட்டுத் தொடர்புகள் மிகுதியாக வேண்டும்.

விதர்பாப் பகுதியில் பேசப்படுகிற கோண்டு மொழி மற்றும் பஸ்தார் ஜகதூல்புர் மாவட்டங்களில் பேச்சு வழக்கிலுள்ள திராவிட மொழிகள் ஆகியவற்றுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்புகள் ஆராயப்பட வேண்டும்.

இசுரேல் நாடு மிகச் சிறியதாக இருந்தாலும் உலகெங்கும் வாழும் யூதர் அந்த நாட்டுக்குப் பக்க பலமாக, உறுதுணையாக இருந்து வருகின்றனர். வட மாநிலத் தமிழரைத் தக்கவாறு பயன் படுத்திக்கொண்டு தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் திட்டமிடுவது தமிழக அரசின் கடமை ஆகும்.
